மாஸ்கோவி லிருந்து லண்டன் வரை

ம.பொ.சிவஞானம்

இன்ப நிலையம்

மயிலாப்பூர், : : சென்னை-4.

முதற் பதிப்பு, 1972 – ஜனவரி, 8.
தமிழரசுக் கழக வெள்ளி விழா நாள்.
உரிமை ஆசிரியருக்கு.

விலை ரூபாய் ஐந்து

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

பதிப்புரை

பிரயாண நூல் எழுதுவது ஒரு தனிக் கலை. அந்த நூலைப் படிப்பவர்கள் தாமே பிரயாணம் செய்ததைப் போன்ற உணர்ச்சியை புத்தகத்தைப் படித்து முடித்ததும் பெறவேண்டும். சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி. அவர்கள் இந்தக் கலையிலும் சிறந்த தேர்ச்சியுடையவர்கள்.

"மாஸ்கோவி லிருந்து லண்டன் வரை" என்னும் இந்த நூலைப் படிப்பவர்கள் மிகவும் பயனுள்ள பல கருத்துக்களைத் தெரிந்துகொள்ளும் விதத்தில் தமக்கே உரித்தான பாணியில் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி. அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

இந்நூலையும் வெளியிடும் நல்வாய்ப்பை எனக்கு அளித்த சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி. அவர்களுக்கு என் நன்றியும் வணக்கமும் உரியதாகும்.

சென்னை,
6-1-1972

சோம சுவாமிநாதன்,
இன்ப நிலையம்.

நுழை வாயில்

ஐரோப்பிய நாடுகளில் யான் செய்த சுற்றுலா எனது வாழ்க்கையில் நான் மேற்கொண்ட புதிய முயற்சியாகும். 1956-ல் பர்மாவில் 18 நாட்களும், பின்னர் 1964ல் மலாசியாவில் ஒரு மாத காலமும் சுற்றுலாச் செய்திருக்கிறேன். இரண்டாவது முறையாகவும் 1965ல் மலாசியாச்சென்றிருக்கிறேன். சிங்கப்பூருக்கும் இருமுறை சென்றிருக்கிறேன். இலங்கைக்கு எத்தனையோ முறை சென்றிருக்கிறேன். அந்த நாடு முழுவதிலும் பட்டி தொட்டி களிலெல்லாம் சுற்றுலாச் செய்திருக்கிறேன். ஆனால், ஐரோப்பாவுக்கு ஒரு முறைகூட நான் சென்றதில்லை. முதன் முறையாக 1970 ஜூலைத் திங்களில்தான் சோவியத் ஆப்பிரிக்காசிய ஒற்றுமைக் குழு விடுத்த அழைப்பை ஏற்று ருஷ்ய நாட்டில் சுற்றலாச் செய்தேன். தமிழக அரசு என்னைத் தேர்ந்தெடுத்ததன் பேரில், மூன்றுவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு பிரெஞ்சு நாட்டுக்கும் சென்றேன். இந்த இரு பயணங்களையும் தொடர்ந்து பிரிட்டனுக்கும் சென்றேன்.

மாஸ்கோவி. லிருந்து பாரிஸ் வரும் வழியில் விமானத்தில் இருந்தபடியே போலந்து நாட்டின் தலைநகராகிய வார்சாவையும் கண்டு களித்தேன். வார்சா விமான நிலையத்தில் இறங்கி சோஷலிசம் தழைக்கும் அந்த நாட்டின் மண்ணை மிதிக்கும் பேற்றினையும் பெற்றேன்

எனது ஐரோப்பியச் சுற்றுலாவை முடித்துக் கொண்டு லண்டனிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பும் போது வழியில் மேற்கு ஜெர்மனியின் தொழில் நகரமான பிராங்க்பர்ட் நகரையும், இத்தலியின் தலைநகரமாகிய ரோம் நகரையும், லெபனான் நாட்டின் தலைநகரமான பெய்ரூட் நகரையும் கண்டுகளித்தேன்.

ஜூலை 8 ஆம் தேதி தொடங்கி 23-ஆம் தேதி வரை மொத்தம் 16 நாட்கள் ஐரோப்பிய நாடுகளில் சுற்றலாச் செய்தேன். சுமார் 15 ஆயிரம் மைல்கள் வான வெளியில் விமானத்தின் மூலம் பயணம் செய்தேன். இந்த நீண்ட பயணத்தைத் தன்னந் தனியாகத்தான் மேற்கொண்டேன். துணைக்கு ஒருவர் என்னோடு இருந்திருப்பின், எனது சுற்றுலாவின்போது மேலும் அதிக இன்பத்தை நான் அடைந்திருக்க முடியும். இன்னும் அதிக நாட்கள் சுற்றுலாச் செய்து, அதிக விவரங்களையும் நான் சேகரித்திருக்க முடியும்.

ஐரோப்பியச் சுற்றுலாவில் மூன்று நர்டுகளின் தலைநகரங்களில் பல நாட்கள் தங்கி, அந்த நகரங்களின் அழகைக் கண்டு களித்தேன். மக்களுடைய பழக்க வழக்கங்களையும் ஆராய்ந்து அறிந்தேன்.

போலந்து, மேற்கு ஜெர்மனி, இத்தலி, லெபனான் ஆகிய நான்கு நாடுகளின் பிரதான நகரங்கள் நர்ன்கையும் பொதுவாக ஒரு பார்வை பார்த்து மனநிறைவெய்தினேன். ரோம் நகரில் ஒன்றிரு நாட்களேனும் தங்கி, அந்த நாட்டின் கலையழகை—கலாச்சாரச் செல்வங்களை—வரலாற்றுச் சின்னங்களைக் கண்டு மகிழவேண்டுமென்ற பேராவல் எனக்கிருந்தது. சரியான துணையில்லாத காரணத்தால், அந்த ஆவல் இந்தப் பயணத்தின்போது நிறைவேறவில்லை.

ஜூலை 8ஆம் தேதி தொடங்கி 14 ஆம் தேதி பகல் வரை சோவியத் நாட்டில் இருந்து விட்டு, அன்று மாலை பாரிஸ் நகருக்குச் சென்றேன். அங்கிருந்து 18 ஆம் தேதி மாஸ்கோ திரும்ப முதலில் திட்டமிட்டிருந்தேன். பின்னர், பாரிஸில் திடீரென்று உடல் நலம் பாதிக்கப் பட்டதால், உலகத்தமிழ் மாநாடு முடிந்த பின்னரும் இரண்டு நாட்கள் அங்கு தங்கிச் சிகிச்சை பெற்றேன். உடல் தேறிய பிறகு பாரிஸ்—மாஸ்கோ—டில்லி பாதையில் பயணம் செய்கின்ற திட்டத்தை மாற்றிக் கொண்டு பாரிஸ்—லண்டன்—பம்பாய் வழியில் பயணம் செய்து தாயகம் வந்து சேர்ந்தேன்.

எனது ஐரோப்பியச் சுற்றுலா பற்றி ஒரு விஷயத்தை நான் தெளிவுப்படுத்த வேண்டும். ஒரு நாட்டின் தலை நகரை மட்டுமே பார்த்து விட்டு அங்கும் ஒரு சில நாட்கள் மட்டுமே தங்கியிருந்து விட்டு, நாடு முழுவதையும் பற்றி விமர்சனம் செய்வதென்பது முறையாகாது. கிராமங்களைப் பார்த்து, அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறையோடு நகர மக்களின் வாழ்க்கை முறையை ஒப்பிட்டு விமர்சிப்பதே முறையாகும்.

நான் சோவியத் நாட்டில் இருந்த ஏழு நாட்களில் ஐந்து நாட்கள் மாஸ்கோ நகரிலேயே இருந்து விட்டேன். இரண்டு நாட்கள் 'கஜக்ஸ்தான்' மாநிலத்தின் தலையிட மான 'அல்ம—அதா' நகரிலிருந்தேன். கிராமங்களுக்குப் போவதற்கான வாய்ப்பினைப் பெற்றேனில்லை. பிரான்சின் தலைநகரான பாரிசில் ஆறு நாட்கள் இருந்தே னென்றாலும், முதல் நான்கு நாட்களில் உலகத் தமிழ் மாநாட்டு நடவடிக்கைகளில் தவறாமல் கலந்து கொண்ட தாலும், மற்றுள்ள இரண்டு நாட்களில் நோய்ப்பட்டு விட்டதாலும் கிராமப்புறங்களுக்குச் செல்வதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. பிரிட்டனிலும் இதே

நிலைதான். லண்டனிலிருந்த இரண்டு நாட்களில் அந்த நகரை மட்டுமே ஓரளவு சுற்றிப் பார்க்க முடிந்தது. ஆகவே, இந்நூலில், ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளின் தலைநகரங்களைக் கண்ட அளவில் யான் தெரிந்துகொண்டவற்றை மட்டுமே விமர்சித்திருக்கிறேன். நான் பார்க்காதவற்றைப் பார்த்து விட்டது போல விமர்சிக்கவில்லை.

சோவியத் ஆட்சியின் விருந்தினனாக—சோவியத் அரசுக்குச் சொந்தமான "ஏரோ ப்ளோட்" விமானத்தில் இந்தியாவை விட்டுப் புறப்பட்ட நான், இந்திய அரசுக்குச் சொந்தமான "ஏர் இந்தியா" விமானம் மூலமாக தாயகம் வந்து சேர்ந்தேன். ஆம்; என்னை சோவியத் அரசு கூட்டிச் சென்றது; இந்திய அரசு என்னை 'மீட்டு' வந்தது!

நான் சென்ற ருஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய மூவேறு நாடுகளும், மூவேறு விதமான அரசியல் தத்துவங்கள் நடைமுறையிலிருப்பவை யாகும். பிரிட்டன், முடியரசு நடக்கும் முதலாளித்துவ நாடு; பிரான்ஸ், குடியரசு நடக்கும் முதலாளித்துவ நாடு; சோவியத் ருஷ்யா, சோஷலிசக் குடியரசு நாடு.

இப்படி, மூவேறு விதமான அரசியல் நாடுகளை நான் பார்த்து வந்ததால், ஒன்றோடொன்றை ஒப்பிட்டு நோக்கி விமர்சிப்பதற்கான நல்ல வாய்ப்பினைப் பெற்றேன்.

நான் பிரிட்டனுக்குச் சென்றது என் மனத்துள் புதிய விதமான ஒரு உணர்ச்சியை ஏற்படுத்தியது. ஆம்; எந்த ஒரு நாட்டின் வல்லரசு என் வாழ்நாளில் என்னை ஆறுமுறை சிறைப் படுத்தியதோ, அந்தச் சிறை வாழ்வு காரணமாக உலராத பெரும் புண் என் குடலுக்குள் உருவாகக் காரணமாக இருந்ததோ, அந்த வல்லரசு

நாட்டின் தலைநகருக்கு, அதனுடைய முன்னாளையக் கைதியாகிய நான் சென்றது என் வாழ்வில் ஒரு புதுமை தானே! லண்டனிலிருந்த நாட்களில் நான் கண்ட ஒவ்வொரு காட்சியும் எனது வாழ்க்கையின்—என் தாய் நாட்டு வரலாற்றின்—கடந்த கால நிகழ்ச்சிகளை என் மனக் கண் முன் நிறுத்திக் காட்டின. அதனால், எனக்குப் பெரும் பயன் ஏற்பட்டது.

பொதுவாக, ஐரோப்பாவில் நான் செய்த சுற்றுலா, சொந்தத்தில் எனக்கு மட்டுமேயன்றி, எனது தாய் வீடான தமிழகத்திற்கும், தாய் நாடான பாரதத்திற்கும் பயன் அளிக்குமென்றே நான் கருதுகிறேன்.

எனது ஐரோப்பியச் சுற்றுலாபற்றி 'மறவன் மடல்' வார இதழில் தொடர் கட்டுரை எழுதிவர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளப்பட்டேன். அதன்படி, 1970 ஆகஸ்டு 16 ஆம் தேதி இதழ் தொடங்கி, 1971 ஏப்ரல் 11 ஆம் தேதி இதழ் வரை தொடர்ந்து 8 மாத காலம் "மறவன் மடலி"ல் எழுதி வந்தேன். அதைத்தான் இங்குமங்குமாக சில சிறிய மாறுதல்கள் செய்து நூல் வடிவில் வெளியிட்டுள்ளேன்.

இதுவரை யான் எழுதிய நூல்களையெல்லாம் வெளியிட்டு வந்த 'இன்ப நிலையத்' தாரே இந்த நூலையும் வெளியிட முன் வந்தது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. சிறந்த முறையில் இந்நூலை வெளியிட்டுள்ள இன்ப நிலைய உரிமையாளர் திரு. சோம. சாமிநாதன் அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக.

சென்னை
24-9-71

ம. பொ. சிவஞானம்

வீடும் நாடும்

சோவியத் ருஷ்யாவிடம் எனக்கு இளமை முதலே மிகுந்த மதிப்புண்டு. அந்த நாட்டைப் பற்றி நான் முதன் முதலாக அறிந்து கொண்டது அது சோஷலிச நாடாக மாறிய பிறகுதான். அதுவும், பாரதியார் பாடியுள்ள 'புதிய ருஷ்யா' என்ற கவிதையின் வாயி லாகத்தான்.

ஜார் ருஷ்யாவின் வீழ்ச்சியை—சோவியத் ருஷ்யா வின் எழுச்சியை வரவேற்கும் பாரதியாரின் பாடல், நான் நெட்டுருச் செய்து நெஞ்சில் பதிய வைத்துள்ள பாடல்களுள் ஒன்றாகும். அந்தப் பாடலை முதன் முதலா கப் படித்தது 1930-ல் ஆகும். நான் கையுழைத்துப் பிழைத்த அச்சுத் தொழிலாளி. நானென்ன, என் அப்பன், பாட்டன், முப்பாட்டன், அவன் பாட்டன்—எனத் தலைமுறை தலைமுறையாக என் குடும்பம் பாட்டாளி களைக் கொண்டதாகும். அதனால், உலக நாடுகளில் ஒரு நாட்டிலே—ருஷ்யப் பெரு நாட்டிலே—பாட்டாளிகளின் ஆட்சி மலர்ந்தது என்ற செய்தியை நான் முதன் முதலாக அறிந்தபோது, அதையும் உணர்ச்சி மிக்க—சுவை மிகுந்த கவிதை வாயிலாகத் தெரிந்து கொண்ட போது எனது உள்ளம் பூரித்தது.

புரட்சியிலே பூத்த புதிய ருஷ்யாவை வரவேற்றுப் பாரதியார் பாடியிருப்பதுபோல, அந்தப் புரட்சியைக் கண்ணால் கண்ட—புரட்சியில் பங்கு கொண்ட ருஷ்யக்

கவிஞர்களில் எவரேனும் பாடியிருக்க முடியுமா என்ற ஐயம் எனக்கு உண்டு. தமிழகத்தின் மகாகவியான பாரதியார், ஞான ரதத்திலேறி, வான வெளியில் உலாவி, தன் அகக் கண்களால் ருஷ்யப் புரட்சியைக் கண்டு பாடினரோ என்று கூட எண்ணத் தோன்று கின்றது. அவ்வளவு இதய எழுச்சியோடு பாட்டாளிகள் ஆட்சி மலர்ந்ததைப் பாரதியார் பாடியுள்ளார்.

பாரதியாரின் "புதிய ருஷ்யா"வைப் படித்த நாள் தொட்டே சோவியத் சோஷலிசக் குடியரசுச் சமுதா யத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை என் உள்ளத் தில் தோன்றி, அது நாளொரு மேனியாக வளர்ந்து கொண்டே வந்தது.

சோவியத் ருஷ்யாவைப் பற்றிய நூல்களை, வாய்ப்பு நேர்ந்தபோ தெல்லாம் வாங்கிப் படித்து வந்தேன். சோவியத் சமஷ்டியிலே மாநிலங்களுக்கு—மத்தியி லிருந்து பிரிந்து போகும் உரிமையோடு—பூரண சுயாட்சி வழங்கப்பட்டிருப்பதை முதன் முதலில் நான் அறிந்த போது சோவியத் செல்ல வேண்டுமென்ற எனது ஆசை மேலும் சுடர்விட்டெரிந்தது.

சோவியத் நாட்டிலே ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித் தனியே அரசியல் சட்டமுண்டு; தனித் தனியே ராஜ்யக் கொடியுமுண்டு; உக்ரேன், பைலோ ருஷ்யா என்ற இரண்டு மாநிலங்கள் ஐ. நா. மன்றத்திலே அங்கம் வகிக்கும் அந்தஸ்தையும் பெற்றிருக்கின்றன. இவற்றை நூல்கள் வாயிலாக அறிந்தபோது நான் விரும்பும் நவ பாரத்தை, புதிய தமிழகத்தைப் படைப்பதற்கு சோவியத் ருஷ்யா எனக்கு வழி காட்டுவதாக நான் உறுதியாக நம்பினேன். இதனாலும், சோவியத் ருஷ்யாவைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை என்னுள் அதிகரித்து வந்தது.

சோவியத் ஆப்பிரிக்காசிய உறவுக்கழகத்திடமிருந்து எனக்கு அழைப்பு வந்தபோது நீண்ட காலமாக எதிர் பார்த்துக்கொண்டிருந்த ஒன்றை அடைந்து விட்டது போன்ற உணர்ச்சியை நான் பெற்றேன்.

என்ன வியப்பு! 25 வயது இளைஞனாக இருந்தபோது என்னுள் தோன்றிய ஆசை நிறைவேற 65 வயதுக் கிழவனாகி விட்ட நேரத்தில் எனக்கு அழைப்பு வந்தது.

1970 ஜூலை 5ம் தேதியன்று நடுப்பகலில் மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து புதுடில்லிக்குப் புறப்பட்டேன். விமான நிலையத்தில் தமிழரசுக் கழகத் தோழர்களும், தி. மு. க. நண்பர்களும், மற்றும், என்பால் பேரன்பு கொண்ட அரசாங்க உயர் அதிகாரிகளும், நகர பிரமுகர் களும் நூற்றுக்கணக்கில் கூடியிருந்து என்னை வாழ்த்தி வழியனுப்பிய காட்சி என்னால் என்றும் மறக்க முடியாத தாகும். நான் விமானப் படிக்கட்டில் ஏறி நின்று கொண்டு, என் எதிரே நின்ற மக்கள் கூட்டத்தைப் பார்த்தபோது, தமிழரசுக் கழகத் தோழர்களில் சிலர், எனது பிரிவாற்றாமையால் கண்கலங்கியதைக் கண் டேன். 'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்' என்ற குறள் மொழி நினைவுக்கு வந்தது.

என் மனைவி இராஜேசுவரி, முன்னர் எத்தனையோ முறை நான் சிறை சென்ற காலங்களிலும், பர்மா—இலங்கை—மலாசியா—சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்ற காலங்களிலும் எனது பிரிவைத் துணிவோடு ஏற்றிருக்கிறாள். போலீசார் என்னைக் கைது செய்து போலீஸ் வானில் தூக்கிப் போட்ட கொடுமையையும் அவள் தன் கண்களால் கண்டிருக்கிறாள். சிறைச்சாலை யில் கைதி உடையிலே என்னைக் காணும் அவலத்தையும் அவள் பல முறை பார்த்திருக்கிறாள். 119 பவுண்டு

உடல் நிறையோடு சிறை புகுந்து 88 பவுண்டாக உடல் இளைத்த நிலையிலே மரணப் படுக்கையில் நான் வீடு திரும்பியதைக் கண்ட வேதனையையும் அவள் அனுபவித்திருக்கிறாள். அப்போதெல்லாம் அவள் கண்கலங்கி நான் கண்டதில்லை. ஆனால், ஜூலை 5-தேதி மீனம்பாக்கம் விமானத் திடலிலே நான் விமானப் படிக்கட்டுகளில் நின்று கொண்டு, எனது வலது கையை மேலே உயர்த்தி அசைத்து மக்களிடம் நான் விடைபெறுவதைக் கண்டு அவள் என்ன நினைத்தாளோ, தன் கண்களில் நீரைத் தளும்பவிட்டு, நான் விடை பெறும் காட்சியைக் காண விரும்பாதவள்போல, தன் பார்வையை மறைத்துக் கொண்டுவிட்டாள். பிரிவுத் துன்பமென்பது காதலர்க்கு முதுமையிலும் உண்டு போலும்!

இதெல்லாம், 'இன்பத்திலேயும் துன்பத்திற்குத் தொடர்புண்டு' என்ற தத்துவத்தையே அன்று எனக்கு உணர்த்தின. நான் என்னவோ மகிழ்ச்சியோடுதான் விடைபெற்றுக் கொண்டு விமானத்திற்குள் புகுந்து மக்கள் பார்வையி லிருந்து மறைந்தேன். என்னுடன் தமிழரசுக் கழகச் செயலாளர் திரு. ம. சீ. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் பயணமானார். டில்லியில் என் பயணம் சம்பந்தமான வேலைகளைக் கவனிப்பதற்காகவே அவர் என்னுடன் வந்தார்.

விமானம் விண்ணை நோக்கி உயர்ந்து வடதிசையில் ஊர்ந்து சென்றபோது என் கண்கள் மண்ணை நோக்கின. அந்த மண்—என் சொந்த மண்—நான் போற்றும் செந்தமிழ் வழங்கும் மண்—விமானம் மேலே செல்லச் செல்ல என் பார்வையி லிருந்து மறைந்து விட்டது. சற்று முன் என் கழகத் தோழர்களும், என்னுடைய மனைவியும் கண்கலங்கக் கண்டும் கலங்காத என் மனம், ஏதனாலோ தமிழ் மண் என் பார்வையிலிருந்து மறைந்த

போது மட்டும் கலங்கியது. எப்படியும் இறைவன் திருவருளால் தமிழ் மண்ணைத் திரும்பவும் காண்போம் என்ற உறுதி எனக்கிருந்ததால் மனக் கலக்கத்தைத் தவிர்த்தேன்.

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தன" எனப் பாரதியார் பாடிய வரிகள் அப்போது என் இதயத்தில் ஒலித்தன. வாழ்க தமிழ் நாடு!

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் என் பிரிவால் கண் கலங்கிய கழகத் தோழர்களையும் மனைவியையும் கண்டு மனமுருகியவனாகி, நான் விமானத்துக்குள் நுழைந்தேனாதலால், என் எதிரேயுள்ள இருக்கைகளில் அமர்ந்திருந்த சக பிரயாணிகளைக் கண்டும் காணாதவனானேன். விமானம் மீனம்பாக்கத்தை விட்டு வானம்பாக்கத்தில் பறந்து சென்று கொண்டிருந்தபோது, என் அருகிலிருந்த தமிழரசுக் கழகச் செயலாளர் தோழர் ம. சீ. கிருஷ்ணமூர்த்தி, எனக்கு முன்னே அமர்ந்திருந்த ஒரு கனவானைச் சுட்டிக் காட்டினார். கோட்டும் சூட்டும் தலைப்பாகையும் அணிந்து கொண்டிருந்த அந்தப் பெரியவர், சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் ஆ. இலட்சுமணசாமி முதலியார் ஆவார். அவரைப் பார்த்ததும் எனது இருக்கையிலிருந்து எழுந்து போய் அவருக்கு வணக்கம் செலுத்தினேன். அந்தச் சான்றோர் என்னைக் கண்டதுமே தன் கைத்தடியை ஊன்றிக் கொண்டு எழுந்திருந்து பதிலுக்கு வணக்கம் செலுத்தினார். அவர் பைந்தமிழைப் பயிலாமல் பரங்கி மொழியில் புலமை பெற்றவராயிருந்தாலும், மிகுந்த பண்பு உடையவர். அந்த வகையில் அவர் தமிழ்ப் பண்பாட்டையே பிரதிபலிக்கிறார். இந்தப் பணிவையும் பண்பையும் டாக்டர்

முதலியாரைச் சந்தித்த ஒவ்வொரு சமயத்திலும் அவரிடம் நான் கண்டு வருகிறேன்.

முன்னம் ஒருமுறை சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் தற்செயலாக அவரைச் சந்திக்க நேர்ந்தபோது, பல்கலைக் கழகப் பயிற்சி மொழி பற்றி நீண்ட நேரம் அவருடன் விவாதித்திருக்கிறேன். கருத்து வேற்றுமைக்குரிய அந்த விவாதத்தின் போதுகூட அந்தப் பெரியவர் மிகுந்த பணிவையும் பண்பையும் வெளிப்படுத்தி என்னிடம் உரையாடினார். இவ்வளவு பண்பாளர் தம் தாய்மொழிக் கெதிராக ஆங்கில ஆதிக்கத்தைத் தாம் ஆதரிப்பதிலுள்ள தவறை உணரமாட்டேன் என்கிறாரே என்று அவரைச் சந்தித்த ஒவ்வொரு நேரத்திலும் நான் எனக்குள்ளே சிந்தித்ததுண்டு.

டாக்டர் முதலியாரிடம் உரையாடிவிட்டு என் இருக்கைக்குத் திரும்பியதும், மற்றொரு சக பிரயாணி என்னை அணுகி, எனது ஐரோப்பியப் பயணம் வெற்றிபெற வேண்டுமென்று வாழ்த்தினார். அவர் மத்திய அரசின் உள்துறைத் துணை அமைச்சராக இருந்து வரும் மாண்புமிகு கே. எஸ். இராமசாமி ஆவார்.

இவருடைய தந்தையார் கே. கே. சுப்பண்ணக் கவுண்டர் அவர்களும் நானும் சிறைத் தோழர்களாவோம். அதனால், துணை அமைச்சர் பதவியில் உள்ள மாண்புமிகு இராமசாமி அவர்களும் தம்முடைய தந்தையைப் போலவே என்னை மதித்து என்னிடம் மிகுந்த அன்பு காட்டி வருகிறார்.

மாண்புமிகு அமைச்சர் இராமசாமி அவர்கள் என்னிடம் உரையாடிக் கொண்டிருந்தபோது, விமானத்துள் ஒலி பெருக்கியின் வாயிலாக, "சீமான்களே!

சீமாட்டிகளே! விமானம் டில்லியை நெருங்கிக்கொண் டிருக்கிறது. இன்னும் பதினைந்தே நிமிடங்களில் நாம் டில்லியில் இறங்கப் போகிறோம்" என்று அறிவிக்கப் பட்டது. இதைக் கேட்டபோதுதான் நான் எனது வீட்டை விட்டேனே ஒழிய, இன்னமும் எனது நாட்டை விடவில்லை என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. தாய் நாட்டின் தென்கோடியிலிருந்து வடகோடிக்கு வந்திருக் கிறோம் என்ற தெளிவும் எனக்கு ஏற்பட்டது. வாழ்க, பாரதம்!

தாயகத்தின் தலைநகரிலே!

டில்லி பாலம் விமான நிலையத்தில் டில்லித் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகிகள் இருவர் மலர்ந்த முகங் காட்டி மகிழ்ச்சியோடு என்னை வரவேற்றனர்.

டில்லி, பம்பாய், கல்கத்தா ஆகிய பெரு நகரங்களிலே தமிழ்ச் சங்கங்கள் நன்கு பணியாற்றி வருகின்றன. தாய் வீடான தமிழ் நாட்டிலிருந்து வருகின்ற என் போன்றவர்களை வரவேற்பதிலே இந்தச் சங்கங்களின் நிர்வாகிகள் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். 'டில்லிக்கு ராசாவானாலும், தல்லிக்குப் பிட்டதான்' என்ற தமிழும் தெலுங்கும் கலந்த மணிப் பிரவாளப் பழமொழி ஒன்று உண்டு. அதுபோல, டில்லியிலே வாழும் தமிழருடைய சிந்தையெல்லாம் செந்தமிழ் நாட்டிலேதான்! பம்பாய் தமிழ்ச் சங்கத்தைப் பின்பற்றி டில்லித் தமிழ்ச் சங்கமும் தனக்கென சொந்தமாக ஒரு அழகிய கட்டிடத்தைப் பெற்றிருக்கிறது. மிகப் பெரிய நூல் நிலையம் ஒன்றையும் அது வளர்த்து வருகிறது. அந்தப் புதிய கட்டிடத்திலே என்னை வரவேற்று வழியனுப்ப கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருப்பதனை பாலம் விமான நிலயத்தில் என்னை வரவேற்க வந்திருந்த தமிழ்ச் சங்க நிர்வாகிகள் கூறினர்.

டில்லியிலே தமிழக அரசின் சொந்தக் கட்டிடம் ஒன்றிருக்கிறது. முன்பு அதன் பெயர் 'மெட்ருஸ் ஹவுஸ்' என்பதாகும். தமிழகத்திலே தி. மு. க. ஆட்சி

அமைந்த பின்னர் 'தமிழ் நாடு இல்லம்' என அதன் பெயர் மாற்றப்பட்டு விட்டது. அங்கு ஐ. ஏ. எஸ். அதிகாரி ஒருவரும், துணை அதிகாரி ஒருவரும், அவர்களுக்குத் தேவைப்படும் சாதனங்களோடு அமர்த்தப் பட்டுள்ளனர். அந்தத் தமிழ் நாடு இல்லத்தின் சார்பில் என்னை அழைத்து வரப் பாலம் விமான நிலையத்துக்குக் கார் அனுப்பப்பட்டிருந்தது. இன்னும் நான் ஐரோப்பா செல்லும் வழியில்தான் இருக்கிறேனாதலால், டில்லிப் பாலம் விமான நிலயத்தைக் கண்டபோது அதனை மிகப் பெரிய விமான நிலயமென்று கருதி மகிழ்ந்த வண்ணம் தமிழ்நாடு இல்லத்துக்குச் சென்றேன். உண்மையில் மீனம்பாக்கம் விமான நிலயத்தை விடவும் டில்லி பாலம் விமான நிலயம் பெரியதுதான்! ஆனால், மாஸ்கோ, பாரிஸ், லண்டன் விமான நிலயங்களோடு ஒப்பிடுகையில்...! அந்த ஒப்பு நோக்குதலை ஐரோப்பா சென்ற பின் வைத்துக் கொள்வோம்.

டில்லி தமிழ்நாடு இல்லத்திலே குளிர்சாதன அறை ஒன்று எனக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. டாக்டர் ஏ. எல். முதலியாரும் அந்த இல்லத்தில் வேறொரு அறையில் தங்கினர். எங்களுக்கு முன்பே தமிழக அமைச்சர் திருமதி. சத்தியவாணிமுத்து அவர்கள் தமிழ்நாடு இல்லத்தின் மேல்மாடி அறையில் முகாம் செய்திருந்தார். டில்லியிலே இந்திய மாநில அரசு ஒவ்வொன்றும் தன் தனக்கென்று சொந்தமாக ஒவ்வொரு மாளிகை வைத்திருக்கின்றன. ஆம்; அந்தந்த மாநிலத்தின் பெயராலேயே அத்தனை மாளிகைகளும் சாணக்கியபுரி என்னும் பிரதேசத்திலே அமைக்கப்பட்டுள்ளன. அதிகாரங்கள் எல்லாம் டில்லியிலேயே குவிக்கப்பட்டுள்ளமையால், மாநிலங்களின் முதல்வர்களும், இதர அதிகாரிகளும் அடிக்கடி டில்லிக்குப் போகவேண்டி

இருக்கின்றது. அதனுல்தான் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனி மாளிகையும் தேவைப்படுகிறது டில்லியிலே!

தமிழரசுக் கழகம் கோருகின்றபடி மாநிலங்கள் சுயாட்சி பெற்றுவிட்டால், டில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லம் போன்ற அனைத்து மாநிலங்களின் மாளிகைகளும் வேறு நல்ல காரியங்களுக்குப் பயன்படலாம்.

இப்போதைக்கு நானும் தமிழ்நாடு மாளிகையில் தமிழக அரசினரின் விருந்தினனுக இருக்க வேண்டியது அவசியம்தானே! இந்த மாளிகையிலே நான் செல்வதற்கு முன்பே எனக்காகக் காத்திருந்த திரு. எம். எஸ். பி. சண்முகம் என்னை மிகுந்த பரிவோடு வரவேற்ருர். இவர், மதுரை கருமுத்து தியாகராச செட்டியாரால் வெளியிடப்பட்டு வந்த 'தமிழ்நாடு' நாளிதழின் ஆசிரியராக இருந்தவர். இப்போது டில்லியில் உள்ள வேளாண்மைத் துறையின் அதிகாரியாக இருந்து வருகிருர்.

அன்று இரவு 7 மணிக்கு டில்லித் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற வழியனுப்புக் கூட்டத்திலே கலந்துகொண்டேன். டில்லித் தமிழ்ச் சங்கத்தினர், சாதி—சமய—கட்சி வேற்றுமையின்றித் தம் குடும்பத்தைச் சார்ந்த ஒருவனை வரவேற்று வழியனுப்பும் உணர்வோடு, அந்தக் கூட்டத்திலே திரண்டிருந்தனர். வேடிக்கை பார்க்க வந்த உணர்வு அங்கு குழுமியிருந்த ஒருவர் முகத்திலேயும் வெளிப்படவில்லை. அகத்தின் மகிழ்ச்சியை முகத்திலே காட்டி ஆனந்தமாகக் குழுமியிருந்தனர்.

டில்லித் தமிழ்ச்சங்கக்கூட்டத்தில் பேசியபின்னர்நான் 'தமிழ்நாடு மாளிகை'க்குத் திரும்பினேன். அங்கு நான் எதிர்பாராத வண்ணம் எனக்காக ஒருசெய்தி காத்திருந்தது. மாளிகையின் அதிகாரி திரு. சம்பத் அவர்கள், குடி

யரசுத் தலைவரின் செயலாளரால், அரசாங்க முத்திரை யோடு எனக்கு அனுப்பப்பட்டிருந்த கடிதம் ஒன்றை என்னிடம் தந்தார். உறையை உடைத்துப் பார்த்தபோது நான் வியப்பும் மகிழ்ச்சியு மடைந்தேன். ஒரிசா மாநிலத்தில் சுற்றுலாச் செய்து கொண்டிருந்த குடியரசுத் தலைவர் டாக்டர் வி. வி. கிரியவர்கள், டில்லி யிலுள்ள தம்முடைய செயலாளர் மூலம் எனக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

"தங்களுடைய மாஸ்கோ—பாரிஸ் பயணம் வெற்றி பெறக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரியவர்கள் தம் முடைய வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறார்" என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நான் எதிர்பாராத வகையில் குடியரசுத் தலைவரிட மிருந்து கிடைத்த இந்த வாழ்த்து எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. திரு. கிரியவர்களும் நானும் தொழிற்சங்க இயக்கத்திலும், விடுதலைப் போராட்டத் திலும் சேர்ந்து உழைத்திருக்கிறோம்.

நான் தண்டையார்ப்பேட்டையில் குடியிருந்த காலத் திலே டாக்டர் வி. வி. கிரியவர்கள், திருவொற்றியூர் விம்கோ தீக்குச்சித் தொழிலாளர் சங்கப் பொதுக் கூட்டங்களுக்குச் செல்லுங்கால், வழியில் தண்டையார்ப் பேட்டைக்கு வந்து, என்னைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு செல்வார். இப்படி, அவர் எத்தனையோ முறை என் வீட்டிற்கு வந்திருக்கிறார். பெரம்பூர் ரயில்வே தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் நடைபெற்ற போதெல்லாம் நான் அவருடன் சேர்ந்து கூட்டங்களில் பேசியிருக்கிறேன்.

ஆகஸ்டுக் கிளர்ச்சியின்போது நானும் அவரும் இரண்டு வாரங்கள் வேலூர் சிறையிலும், பின்னர்

ஓராண்டு காலம் அமராவதி (மராத்தி மாநில)ச் சிறையிலும் சக கைதிகளாக இருந்து பரஸ்பரம் நெருங்கிப் பழகி வாழ்க்கை நடத்தினோம். அந்தப் பழைய நட்பினை மிகப் பெரிய பதவியில் அமர்ந்துள்ள இந்த நேரத்திலும் டாக்டர் வி. வி. கிரியவர்கள் மறக்க வில்லை.

தமிழ் எழுத்தாளர் மாநாடு அண்மையில் சென்னை யில் நடந்தபோது, அதிலே தாம் நிகழ்த்திய சிறப்புரை யிலும் எங்களுடைய நட்புறவைப் பெருமைப்படுத்தும் வகையில் குறிப்பிட்டார். அந்த மாநாடு முடிந்ததும் என்னை அருகே அழைத்து அணைத்துக் கொண்டு உடல் நலம் விசாரித்தார். அந்தப் பெருந்தன்மையான உணர்ச்சியோடுதான் புதுடில்லி வழியாக நான் மாஸ்கோ செல்வதை அறிந்ததும் தாமாகவே வலுவில் எனக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பினார். பெரியவர் களிலே இப்படியும் ஒன்றிருவர் இருப்பதால்தான் என் போன்ற எளியவர்கள் பொது வாழ்க்கையிலே இன் னமும் நிலைத்திருக்க முடிகின்றது.

ஜூலை 6, 7 தேதிகளில் புது டில்லியில் என் பயணம் சம்பந்தப்பட்ட அலுவல்களை எல்லாம் என்னுடன் வந்திருந்த திரு. ம. சீ. கிருஷ்ணமூர்த்தி அலுப்புச் சலிப்பின்றிக் கவனித்தார். அவர் என்னுடன் புது டில்லிக்கு வந்திராவிட்டால் அந்த அலுவல்களை எல்லாம் நானே கவனித்திருப்பது சாத்தியமில்லை. பொது வாழ்க்கையிலே ஈடுபடுபவர் அதிகம் விளம்பரமாகி விட்டால், அவரது சொந்த அலுவல்களை அங்குமிங்கு மாக ஓடியாடிக் கவனிப்பது சாத்தியமில்லாமல் போய் விடுகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு திரு. ம. சீ. கிருஷ்ண மூர்த்தியைப் போன்ற நம்பிக்கைக்குரிய நண்பர்கள் தேவைப்படுகிறார்கள். எத்தகைய கைம்மாறும் கரு

தாமல் அன்பர் கிருஷ்ணமூர்த்தி எப்போதும் என்னுடன் இருந்து என் அலுவல்களைக் கவனித்து வருகிறார்.

தமிழ்நாடு மாளிகை அதிகாரி திரு. சம்பத் அவர்கள் என் பயணத்துக்கான அன்னியச் செலாவணியை வாங்கித் தருவதிலும், பிறவற்றிலும் அயராது உழைத்து மிகுந்த அன்போடு உதவி புரிந்தார். ஒரு சமயம், அந்நியச் செலாவணி காலத்தோடு கிடைக்க முடியாத நிலை ஏற்பட்டபோது, எனது பாரிஸ் பயணமே தடைப்பட்டு விடுமோ என்று பயந்தேன். அந்நிலையில் திரு. சம்பத் அவர்கள் தமிழக அரசோடு தொடர்பு கொண்டு காரியத்தை வெற்றிகரமாக முடித்துத் தந்தார்.

ஜூலை 7 ஆம் தேதியன்று மாலை புதுடில்லியில் உள்ள வித்தல்பாய் பட்டேல் மாளிகையில் இந்திய ஆப்பிரிக்காசிய உறவுக் குழுவின் சார்பில் எனக்கும், என்னுடன் ருஷ்யச் சுற்றுலாவில் கலந்து கொள்ளவிருந்த வேறு மூவருக்கும் தேனீர் விருந்து தரப்பட்டது.

அந்த மூன்று நண்பர்கள் சையத் அலி ஜாகிர், இராதா ராமன், பட்டீல் ஆகியோராவர். திரு. சையத் அலி ஜாகிர் குழுவின் தலைவராவார். இவர், நாடு சுதந்திரம் பெறும் தருவாயில், நேருவின் தலைமையில் அமைந்திருந்த இடைக்கால அமைச்சரவையில் துணை அமைச்சராகப் பதவி வகித்தவர். பின்னர், ஈரான் நாட்டில் இந்தியத் தூதுவராக இருந்திருக்கிறார். 72 வயதை அடைந்துள்ள இவர் மிகவும் அன்பும் பண்பும் உடையவர். இஸ்லாத்தில் நம்பிக்கை உடையவராயினும், இந்திய தேசியத்திலே மிகுந்த பற்றுடையவராகவும் காணப்படுகிறார்.

திரு. இராதாராமன், டில்லிப் பிரதேச காங்கிரசின் தலைவர். திரு. சையத் அலி ஜாகிரும், திரு.

இராதாராமனும் இந்திரா காங்கிரசைச் சார்ந்தவர்கள். எங்கள் குழுவின் செயலாளர் திரு. பட்டேல் வலது கம்யூனிஸ்டுக் கட்சியைச் சார்ந்தவர். எங்கள் நால்வரையும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி வைக்கும் சடங்கு வித்தல்பாய் பட்டேல் மாளிகையில் நடைபெற்றது. முதன் முதலில் சையத் அலி ஜாகிருக்கு நான் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அந்த முதியவர் என்னைத் தன் இரு கைகளாலும் கட்டி அணைத்துத் தழுவிக் கொண்டு பின் வருமாறு கூறினர்:

"தமிழ் நாட்டாராகிய நீங்கள் அதிருஷ்ட சாலிகள். உங்கள் மாநிலத்திலே நிலையான அமைச்சரவை இருந்து வருகிறது. எனது உத்தரப் பிரதேசத்திலே ஒவ்வொரு மந்திரி சபையாகக் கவிழ்ந்து, இன்றிருக்கும் மந்திரி சபையும் என்றைக்குக் கவிழ்ந்து விடுமோ என்ற நிலையிருக்கிறது. நாங்கள் துரதிருஷ்ட சாலிகள்."

இப்படி, சையத் அலி ஜாகிர் கூறியபோது; அவருடைய குரலிலே வெட்கமும் வேதனையும் எதிரொலித்தன. நான்கூட, அவர் கூறிய பின்னர்தான் நமது மாநிலத்தின் பெருமையைச் சரியாக உணர்ந்து கொண்டேன். ஆம்; இந்திய மாநிலங்களிலேயே "ஐந்தாண்டு காலத்திற்கு யாராலும் அசைக்க முடியாது" என்ற நிலையில் ஒரு அமைச்சரவையைப் பெற்றுள்ள மாநிலம் ஒன்று உண்டென்றால், அது தமிழ் மாநிலந்தானே! அதையும் தமிழராகிய நாமே சொல்லிக் கொள்வதைவிட, பிற மாநிலத்தவர் சொல்லிக்கேட்பதில்தானே இன்பம்!

திருமதி. அருணா ஆசப் அலியையும் வித்தல்பாய் பட்டேல் மாளிகையில் சந்திக்க நேர்ந்தது. ருஷ்யா செல்லும் குழுவினருக்காக நடத்தப்பட்ட தேனீர்

விருந்தில் கலந்து கொள்ளத்தான் அவர் வந்திருந்தார். ருஷ்யத் தூதரக உயர்தர அதிகாரிகளும் வந்திருந்தனர். திரு. ம. சீ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், அருணு ஆசப் அலி அவர்களுக்கு என்னை அறிமுகப்படுத்தியபோது, அந்த வீராங்கனை மிகுந்த முக மலர்ச்சியோடு, "ஓ! நான் கிராமணியாரை, நன்ருக அறிவேனே! நாங்கள் விடுதலைக்காக ஒரே பாசறையிலிருந்து போரிட்டவர்கள் தானே!" என்று மிகுந்த பெருமிதத்தோடு கூறினுர். அப்போது, பத்தாண்டுகட்கு முன்பு மறைந்து போன என் அன்னையை நினைத்துக் கொண்டேன். 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்ருேன் எனக் கேட்ட தாய்' என்ற குறளும் எனது நினைவுக்கு வந்தது.

ஜூலை மாதம் 7-ஆம் தேதியன்று பகல் உள் துறைத் துணை அமைச்சர் திரு. கே. எஸ். இராமசாமி அவர்கள் தனது இல்லத்தில் நான் என்றும் மறக்க முடியாத அளவில் எனக்கு விருந்தளித்தார். எதிர்பாராத வகையில் புதுவை தி. மு. க. அரசின் உள்துறை அமைச்சர் மாண்புமிகு இராமசாமி அவர்களும் வந்திருந்து கலந்து கொண்டார்.

அன்று மாலை 6 மணிக்கு மத்திய கல்வி அமைச்சர் திரு. வி. கே. ஆர். வி. ராவ் அவர்களின் அழைப்புக் கிணங்க, அவரது அலுவலகம் சென்று அவரைச் சந்தித்தேன். பிறப்பால் கன்னடராயினும், தமிழில் அருமையாகப் பேசுகிருர். தமிழிடத்துப் பற்றுடையவராகவும் காணப்படுகிருர். மிகுந்த அன்போடு எனக்கு சிற்றுண்டியும் தேனீரும் அளித்து, "உங்கள் ஐரோப்பியப் பயணம் வெற்றி பெற வாழ்த்துகிறேன். சோவியத் ருஷ்யாவிலே பொது மொழிப்பிரச்னையும் போதனு மொழிப்பிரச்னை

யும் தீர்க்கப்பட்ட விதத்தினைத் தெரிந்து கொண்டு வாருங்கள்" என்று கூறினார்.

ஜூலை 8-ஆம் தேதி எனது வாழ்க்கையிலே குறிப் பிடத்தக்க நன்னாள். ஆம்; அன்றுதான் ஆசியக்கண்டத் துக்• குடிமகனாகிய நான் ஐரோப்பாக் கண்டத்துக்குச் சென்றேன். நான் ஏறியிருந்த விமானம் பாலம் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டபோது என் கண்களில் நீர் தளும்பியது. கவலையால் அல்ல; களிப்பு மிகுதியால். செயலாளர் ம. சீ. கிருஷ்ணமூர்த்தியுடன் டில்லி பாலம் விமான நிலையத்தை அடைந்து, அயல் நாட்டுப் பயணத் திற்குரிய சடங்குகளை எல்லாம் முடித்துக் கொண்டு, அவரிடம் விடை பெற்று மாஸ்கோவிற்குப் பயண மானேன்.

சோவியத் ருஷ்யாவின் விருந்தினனாக நான் செல்வ தால், அந்த நாட்டிற்குச் சொந்தமான 'ஏரோப்ளோட்' விமானம் என்னை அழைத்துச் சென்றது. விமானத்தில் சுமார் 180க்கு மேற்பட்ட பிரயாணிகள் இருந்தனர். நான் அங்கம் வகிக்கும் குழுவின் தலைவரையும், மற்றிரு நண்பர்களையும் என்னிடமிருந்து பிரித்து, என் பார்வை யில் படாத வேறோர் பகுதியில் அவர்களுக்கு இடம் தந்திருந்தனர் விமான அதிகாரிகள். விமானத்தில் நான் அமர்ந்திருந்த பகுதியில் சுமார் 40 பேர் இருந் தனர். அவ்வளவு பேரும் வெள்ளையர்கள். அவர்கள் ருஷ்ய மொழியிலேயே பேசிக்கொண்டார்கள். ஆதலால் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பது எனக்குப் புரிய வில்லை. எனக்கு ருஷ்ய மொழி தெரியாததால், அவர், களுடன் பேசவும் என்னால் முடியவில்லை. இதனால், காதிருந்தும் செவிடனாய், வாயிருந்தும் ஊமையனாய் ஐரோப்பியர் நாற்பது பேர் மத்தியிலே சிறைப்பட்ட நிலையில் பயணம் செய்தேன்.

இமாலயக் காட்சி

நான் பயணஞ் செய்த 'ஏரோப்ளோட்' போயிங் விமானத்தில், மொழியால் மட்டுமின்றி, நிறத்தாலும் உடையாலும் பழக்க வழக்கங்களாலும் வேறுபட்ட ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் என்னைச் சூழ்ந்திருந்தனர். நான் முற்றிலும் ஒரு புதிய உலகத்தில் இருப்பதாக எண்ணினேன்.

சக பயணிகளும் என்னை—நான் வேட்டி கட்டிக் கொண்டு, மொய்த்த மீசையுடன் காணப்பட்டதால்—தங்கள் மத்தியிலுள்ள ஒரு விசித்திர மனிதனாகவே கருதினர் என்பது அவர்களில் சிலர் என்னை அடிக்கடி பார்த்துத் தங்களுக்குள் ருஷ்ய மொழியில் ஏதோ பேசிக் கொண்டதால் புலப்பட்டது.

ஒருகால், என் தோற்றம் ருஷ்யர்களாகிய அவர்களுக்கு மார்ஷல் ஸ்டாலினை நினைவூட்டியதோ என்னவோ!

இதனால், சுற்றுச் சூழ்நிலையை மறந்து, விமானச் சாளரத்தின் வழியாக வானத்தையும், நிலத்தையும் மாறி மாறிப் பார்த்து இயற்கையழகிலே மனதை ஈடுபடுத்தினேன்.

டில்லியை விட்டுப் புறப்பட்ட சிறிது நேரத்துக் கெல்லாம் விமானம் இமயமலை மீது பறந்து தெற்கிலிருந்து வட மேற்கை நோக்கிச் சென்றது. இதனால், சுமார் இரண்டரை மணி நேரம் இமயமலைக் காட்சிகளைக்

கண்டுகளிக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. முன்னர் நான் மலேசியாவிற்குச் சென்றபோது அலைமகளை (கடல் பரப்பை)க் கண்டு மகிழ்ந்தேன். மலைமகளைப் பார்ப்பது இப்போதுதான் முதன் முறையாதலால், என்னை மறந்து அவளது பேரழகில் ஈடுபட்டேன். ஆகா! என்ன அழகான காட்சி!

''—ஞாலத்துள்
வெற்பொன்றும் ஈடிலதாய் விண்ணில் முடிதாக்கும்
பொற்பொன்று வெள்ளைப் பொருப்பு''

என்று பாரதியார் பாடியது எவ்வளவு பொருத்தம்! உண்மையிலேயே உலக மலைகளிலே உயர்ந்த மலை இமயப் பெருமலை தானே! அந்த மலை இந்திய நாட்டின்—என் தாய் நாட்டின் சொந்த மலை என்பதனை நினைத்தபோது,

''மன்னும் இமயமலை யெங்கள் மலையே!
மாநில மீததுபோற் பிறி திலையே!''

என்று பாரதியார் பாடியுள்ள வரிகளை என் வாய் முணு முணுத்தது.

முன்பு எப்போதோ, குமரிதொட்டு இமயம் வரை தமிழர் பரவி வாழ்ந்திருந்தனர் என்று, சிந்துவெளி நாகரிகத்தை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் அறிவித் துள்ளனர். அதன்படிப் பார்த்தால், இமயமலை தமிழ் இனத்திற்குப் பாட்டன் வழிச் சொத்தாகிறது. இதனாற் றான், தமிழ் மன்னன் சேரலாதன், 'இமய வரம்பன்' என்ற சிறப்புப் பெயர் பெற்றான் போலும்! ஆம்; வட வேந்தரிலே எவருக்கும் 'இமய வரம்பன்' என்ற சிறப்புப் பெயர் இருந்ததாக வரலாறு கூறவில்லை யல்லவா!

சைவ சமயம், தமிழினத்தாருக்கே உரியதென்பர் சமயவாதிகள். அந்தச் சைவத் தமிழர்களின் தெய்வ மான சிவபெருமான் உறையுமிடம் இமயந்தானே!

தமிழக மன்னர்களும், தமிழ்ப் புலவர்களும் வடக்கிருந்து உயிர் விடுவதனைச் சிறப்பாகக் கருதினரென்று இலக்கிய ஏடுகள் கூறுகின்றன. அதற்குக் காரணம், வடக்கில் இமயமலை இருப்பதுதான் போலும்!

தமிழ் மூவேந்தர்கள் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு, இமயப் பிடரியிலே தத்தம் கொடிச் சின்னங்களைப் பொறித்தார்களே, எதற்காக? இமயம் தமிழினத்தாரின் பாட்டன் சொத்து என்பதனைப் பதிவு செய்யத்தான் போலும்!

இப்படி, என் மனம் இமயமலையோடு ஆதித் தமிழருக்கிருந்த தொடர்புகளையெல்லாம் நினைந்து நினைந்து மகிழ்ந்து கொண்டிருக்க, என் கண்கள் இமயமலைப் பரப்பில் எதையோ தேடின. எதையோ என்ன; தமிழ் மூவேந்தர்களின் கொடிச் சின்னங்களைத்தான் தேடின! என்றோ ஒருநாள், இமயப் பிடரியிலே பாண்டியன் மீன் சின்னத்தைப் பொறித்தான்; சேரன் விற்சின்னத்தைப் பொறித்தான்; சோழன் புலிச் சின்னத்தைப் பொறித்தான் என்றெல்லாம் இலக்கிய ஏடுகளில் நான் படித்து வைத்திருக்கிறேனாதலால், 'அந்தச் சின்னங்களைக் காட்டு' என்று என் கண்கள் என்னைக் கேட்டன! எங்கு தேடிக் காட்டுவேன்? அவை காலத்தால் அழிந்தனவோ! ஒருகால் சீனன் படையெடுத்தபோது, அவன் கால் பட்டே அழிந்தனவோ! யாரறிவார்?

இமயச் சிகரத்தினை 'வெள்ளிப் பனிமலை' யென்றனர் புலவோர். அது எவ்வளவு பொருத்தமான வருணனை! நான் பார்த்த பகல் நேரத்திலே வெண்ணிற மேகங்கள் பரந்தும், அதனூடே கதிரவனொளி பாய்ந்தும் காணப்பட்டதால், வெள்ளிப் பனிமலையாகவே காட்சியளித்தது.

'வெள்ளிப் பனி மலையின் மீதுலவுவோம்' என்று பாடினார் பாரதியார். நான் வெள்ளிப் பனி மலையின்

மீது கால் வைத்து உலவாவிட்டாலும் கண்வைத்த வண்ணம் வான வெளியில் உலாவினேன்.

ஒளவையாரும், திலகவதியாரும் தமிழினத்துக்குப் பெருமை தேடிய பெருமாட்டிகளாவர். அவர்களிருவரும் இமய மலையிலுள்ள கயிலாயஞ் சென்று சிவபெருமானை வழிபட்டார்களென்று கதையுண்டு. நான் கயிலாயஞ் செல்லா விட்டாலும் அந்தப் பிரதேசத்தின் வழியாகச் சென்றேன்.

விமானச் சாளரத்தின் வழியாகப் பார்த்தபோது, எப்புறத்தும் இமயத்தின் எல்லை என் கண்களுக்குத் தெரியவில்லை நிலப்பரப்பு முற்றிலும் மறைந்து, மலைப் பரப்பே காணப்பட்டது. அவ்வளவு அகன்று, உயர்ந்து அமைந்திருக்கிறது இமயம்! அதனை இரண்டரை மணி நேரம் பார்த்து மகிழ்ந்தபோது என்னுள் ஏற்பட்ட இன்ப உணர்ச்சியை—கற்பனையாகத் தோன்றிய கருத்துக்களை எழுதிக் காட்ட யான் கற்ற தமிழ் போதுமானதாக இல்லையே!

இயற்கையழகில் ஈடுபடும்போது கவிதை தானே வருமென்கிறார், கவிஞர் பாரதியார்.

> "நமது நாட்டில் வேத காலத்து ரிஷிகள் பிரகிருதியின் சௌந்தர்யங்களைக் கண்டு மோஹித்துப் பரமானந்த மெய்தியவர்களாய்ப் பல அதிசயமான பாடல்கள் பாடியிருக்கிறார்கள். பிரகிருதியின் அழகைக் கண்டு பரவசமெய்திக் காளிதாசன் முதலிய பெருங் கவிகள் அற்புதக் கவிதைகள் செய்திருக்கின்றனர்."

இது பாரதியாரின் கருத்து. விந்தியத்தையும். இமயத்தையும் பார்த்துப் பரவசமடைந்து அந்த

மலைகள் மீது மேகக் கூட்டங்கள் ஊர்ந்து செல்லும் காட்சியைக் கண்டு இதய எழுச்சிகொண்டு 'மேகதூதம்' என்ற இறவாப் பேரிலக்கியத்தைப் படைத்தான் காளி தாசன்.

காளிதாசன் என்னைப் போன்று 30 ஆயிரம் அடி உயரத்தில் வான வெளியிலே விமானத்திலிருந்து கொண்டு மலைக் காட்சியைக் கண்டவனல்லன். அவன் காலத்தில் வானூர்தி இல்லையல்லவா! ஒருகால், ஞான ரதத்தின் மீதேறி வான வெளியில் உலாவினானோ என்னவோ!

பாரதியாரும், அந்தி வானத்தைப் பார்த்து மோகித்த தலைவன், தன் தலைவிக்கு அதன் அழகை வரு ணித்துக் கூறுவதுபோலப் பாடியுள்ளார். அப்பாடலின் சில வரிகளைப் பார்ப்போம்:

பாரடியோ! வானத்திற் புதுமை யெல்லாம்,
பண்மொழீ! கணந்தோறும் மாறி மாறி
ஓரடிமற் றோரடியோ டொத்த லின்றி
உவகையுற நவநவமாத் தோன்றுங் காட்சி;
யாரடியிங் கிவைபோலப் புவியின் மீதே
யெண்ணரிய பொருள்கொடுத்து மியற்ற வல்லார்?
பார்! சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட் டெரிவன! ஓகோ!
என்னடீ யிந்த வன்னத் தியல்புகள்!
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள்!—செழும் பொன் காய்ச்சி
விட்ட வோடைகள்!—வெம்மை தோன்றுமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள்!—பாரடீ!
கருஞ் சிகரங்கள்!—காணடி, ஆங்கு
தங்கத் திமிங்கிலம் தாம்பல மிதக்கும்

இருட்கடல்! ஆஹா! எங்கு நோக்கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வன்னக் களஞ்சியம்!

(பாஞ்சாலி சபதம்)

ஒரு நாள் அந்தி வானத்தைக் கண்டு சொக்கிப் போய் அந்த மயக்கத்திலே பாரதியார் உரை நடையில் தீட்டிய வருணனை வருமாறு:

"பார்! ஸூர்யனைச் சுற்றி மேகங்களெல்லாம் தீப்பட்டெரிவது போலத் தோன்றுகிறது. ஆஹா! என்ன வர்ணங்கள்! எத்தனை வித வடிவங்கள்! எத்தனை ஆயிர விதமான கலப்புகள்! அக்கினிக் குழம்பு! தங்கம் காய்ச்சி விட்ட ஓடைகள்! எரிகின்ற தங்கத் தீவுகள்!

"நீல ஏரிகள்! கரும் பூதங்கள்! எத்தனை வகை நீலம்! எத்தனை விதச் செம்மை! எத்தனை வகைப் பசுமை! எத்தனை வகைக் கருமை! நீல ஏரியின்மீது மிதக்கும் தங்கத் தோணிகள்! எரிகின்ற தங்க ஜரிகைக் கரைபோட்ட கரிய சிகரங்கள்! தங்கத் திமிங்கிலங்கள் மிதக்கும் கருங்கடல்! எங்கு பார்த்தாலும் ஒளித் திரள், வர்ணக் களஞ்சியம். போ, போ, என்னால் அதை வர்ணிக்க முடியாது."

[பாஞ்சாலி சபதம்—பொருள் விளக்கமும் குறிப்புக் களும்.]

நான் கிட்டத்தட்ட நல்ல சூரிய ஒளியில்தான் இமயமலையின் இயற்கை அழகைக் கண்டு இன்ப மெய்தினேன். அந்த மலையிலேதான் எத்தனை எத்தனை சிற்றாறுகள்! எத்தனை எத்தனை சுனைகள்! எத்தனை எத்தனை நீர் நிலைகள்! மலையோடு மலை கை கோத்து அணி அணியாக நிற்பன போன்ற மலைக்கூட்டங்கள் எத்தனை!...

இதற்குமேல் வருணிக்க எனக்கு வார்த்தை கிடைக்க வில்லை. அந்தி வானத்தைப் பார்த்த மகாகவி பாரதியே "போ, போ, என்னால் அதை வருணிக்க முடியாது" என்பதாகச் சலித்து ஓய்ந்து விட்டாரென்றால், யான் எம்மாத்திரம்?

இமயத்தின் மீது மேகங்கள் பரந்து—படர்ந்து அப்பெருமலையை மூடி மறைத்திருந்தபோது, இமயத் தாய் வெள்ளாடை உடுத்தி யிருப்பதுபோல் எனக்குத் தோன்றியது.

இப்படி, இயற்கை அழகில் ஈடுபட்டிருந்ததன் விளை வாக என்னை மறந்தேன். என் வாய் மணிவாசகப் பெரு மான் பாடிய திருவாசகத்தில் உள்ள சிவ புராணத்தை ஓதியது. பொது உடைமைப் பூங்காவான சோவியத் ருஷ்யாவுக்குச் செல்லும் வழியிலே, சோவியத் அரசுக் குரிய விமானத்திலே, ருஷ்யர்கள் மத்தியில் இருந்து கொண்டு திருவாசகம் ஓதினேன்! ஆம்; முணுமுணுத்த குரலிலே! சமயமுளபடிக்கெல்லாம் பொய் கூறி, அறங் கொன்றவர்களைச் சாய்த்த பாட்டாளி வர்க்கத்தின் புரட்சியிலே பூத்த பொது உடைமை நாட்டை இனித் தானே பார்க்கப் போகிறேன்!

மணிவர்மனும் சோமுவும்

நான் இமய மலையின் இயற்கை அழகில் ஈடுபட்டிருந்த நேரத்திலே, விமானப் பணிப்பெண் என்னை அணுகி, பகல் உணவு வழங்கப் போவதாக அறிவித்தாள் ருஷ்ய மொழியிலே! புரியாத மொழியில் கூறினுலும், நேரத்தையும், கூறிய நங்கையின் முக பாவத்தையும் பொறுத்து அவள் கூறியதனைப் புரிந்துகொண்டு உணவு கொள்ளத் தயாரானேன்.

இந்திய விமானங்களிலே பயணம் செய்தால் உணவு நேரம் வருகிறபொழுது, "நீங்கள் சைவமா? அசைவமா?" என்று கேட்பது வழக்கம். ஆனுல், அயல் நாட்டு விமானங்களிலே அப்படிக் கேட்பது அநேகமாக வழக்கமில்லை.

ஐரோப்பிய உணவுக்கு நான் புதியவனுனதாலும், இயற்கையாகவே எனது வீட்டில் பத்திய உணவையே உண்டு வருபவனுதலாலும், 'என்ன உணவு வழங்கப்படுமோ?' என்று நான் மிகுந்த கவலையோடு இருக்கையில், உணவுப் 'படையல்' வந்தது. அத்துடன், கரண்டி, கத்தி, முள் ஆகிய ஆயுதங்களும் வந்தன. சுகாதாரத்தின் பொருட்டு ஒவ்வொரு பண்டமும் விதவிதமான காகிதத்துக்குள் பதுக்கப்பட்டிருந்தன. சர்க்கரை, வெண்ணெய், தயிர், சோறு ஆகியவெல்லாம் பார்சலுக்குள்ளேதான்! மொத்தமாக ஒரே பார்சலில் அல்ல; ஒவ்வொன்றும் தனித் தனிப் பார்சலிலே!

பண்டங்கள் எல்லாம் பார்சலுக்குள்ளே பதுக்கப் பட்டிருந்ததாலும், பார்சலுக்கு மேலே பொறிக்கப்பட்டிருந்த பெயர் ருஷ்ய மொழியில் இருந்தமையாலும், எந்தப் பார்சலுக்குள்ளே எது இருக்கும் என்று தெரியாமல் அவற்றைத் திறப்பதற்கே தயங்கினேன்.

தட்டுத் தடுமாறி, கத்தியைப் பிடிக்க வேண்டிய கையில் முள்ளைப் பிடித்துக் கொண்டும், முள்ளைப் பிடிக்க வேண்டிய கையில், கத்தியைப் பிடித்துக் கொண்டும்; வெட்டியும், குத்தியும், கிழித்தும் எனக்குப் பிடித்தவற்றை உண்ண முயன்று கொண்டிருந்தேன். என் அருகிலிருந்த பத்து வயது ருஷ்யச் சிறுமி எனது நிலையைப் புரிந்து கொண்டாள். ஐரோப்பாத் தனத்தில் பழக்கமில்லாத எனது அப்பாவித்தனத்தைப் புரிந்து கொண்டு, எனக்கு உதவி புரியத் தானாகவே அந்தச் சிறுமி முன் வந்தாள். அதனை நான் விரும்பவில்லை என்றாலும், மறுக்கவும் எனக்குத் துணிவில்லை. ருஷ்யச் சிறுமி கற்றுக் கொடுத்த முறையில் அரைவயிறு உணவு கொண்டேன்.

'சோவியத் நாட்டில் இருக்கும் நாட்களிலே, இந்த உணவு வகையைத்தானா, சிறுமி கற்றுத் தந்த முறையில் தானா உண்ண வேண்டும்?' என்ற கவலையும் எனக்குத் தோன்றியது.

நான் பயணம் செய்த 'ஏரோப்ளோட்' விமானம் டில்லியிலிருந்து புறப்பட்ட ஐந்து மணி நேரத்திற்குள் சோவியத் ருஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவை அடைந்தது. விமானத்தை விட்டு இறங்கி சோவியத் நாட்டின் மண்ணை மிதித்ததும் ஏதோ ஒருவித இன்பகரமான தூய உணர்ச்சி என் மனத்துள் பொங்கி எழுந்தது.

என் வாழ்க்கையிலே ஆசியாக் கண்டத்து வாசியான நான் அன்றுதான் முதன் முதலாக ஐரோப்பாக் கண்டத்தில் காலடி வைத்தேன். முதன் முதலாகக் கண்டம் விட்டுக் கண்டம் வந்திருக்கிறேம் என்பதால் என் உள்ளத்தில் இன்பம் பொங்கியது. அத்துடன், வழி வழி பாட்டாளி வர்க்கத்தில் தோன்றி, பாட்டாளி யாகவே வாழ்க்கை நடத்திய நான் பாட்டாளி வர்க்க ஆட்சி நடக்கும் நாட்டின் மண்ணை முதன் முதலாக மிதிக்கிறேன் என்ற உணர்வாலும் என் இதயத்தில் இன்ப உணர்ச்சி பொங்கி வழிந்தது.

நான் மாஸ்கோவை அடைந்தபோது அந்த நாட்டின் கடிகாரப்படி இரவு 7 மணி. ருஷ்யாவில் பகல் நேரம் மிகுந்தும், இரவு நேரம் குறைந்தும் இருப்பதால், சிறிது சூரிய ஒளி இருந்த நேரத்திலேயே-அதாவது, நம் நாட்டு இலக்கிய வருணனைப்படி, பகல் முடிந்து இரவு துவங்காத அந்தி மாலை நேரத்திலே நான் மாஸ்கோவை அடைந்தேன்.

என்னுடன் வந்த நண்பர்கள், நாங்கள் மாஸ்கோவை அடைந்ததும் தங்கள் கடிகாரத்தைஐந்து மணி நேரம் முன்னேக்கித் தள்ளி வைத்துக் கொண் டார்கள். இந்தியக் கடிகாரத்துக்கு ருஷ்ய கடிகாரம் (டில்லி—மாஸ்கோ நேரத்தில்) ஐந்து மணி நேரம் முன்னேடியாக இருக்கிறது. ஆனால், நான் கையில் கடிகாரம் கட்டிக் கொண்டிராததால், அதனைத் திருத்தி வைத்துக்கொள்ளும் அவசியம் எனக்கு ஏற்படவில்லை.

விமான நிலையத்திலே மாஸ்கோ ஆப்பிரிக்காசிய உறவுக் குழுவின் செயலாளர் திரு. கிரிகோரி ஐயோனி ஸான் என்பவரும், வேறு சிலரும் இந்தியக் குழுவினரை வரவேற்க வந்திருந்தனர். நாங்கள் ருஷ்ய அரசின் விருந்தினராதலால், அதற்குரிய மரியாதைப்படி எங்களை

வரவேற்று, விமான நிலையத்தில் உள்ள மிகவும் முக்கிய மான பிரமுகர்கள் தங்கும் இடத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு எங்களுக்குத் தேனீர் அளித்தனர்.

நாங்கள் அயல் நாட்டிற்குச் சென்றிருந்ததால், எங்களுடைய இந்திய பாஸ்போர்ட்டுகள், ருஷ்ய விசாச் சீட்டுகள், மருத்துவச் சான்றிதழ்கள் ஆகிய வற்றை எங்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, எங்களை வரவேற்க வந்தவர்களே சோதனைச் சடங்குகளைக் கவனித்துக் கொண்டார்கள். எனக்கு மிகவும் சலிப்புத் தரக்கூடிய ஒரு நிகழ்ச்சி இந்தச் சோதனைகளே. நல்ல வேளையாக, மாஸ்கோவில் இதில் நேரடியாக ஈடுபட வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படாததால், நான் மிகவும் ஆறுதல் அடைந்தேன்.

மாஸ்கோவில் விமானத்திலிருந்து இறங்கி நடக்கத் தொடங்கியதுமே என் கண்கள் ருஷ்யத் தமிழர் இருவரைத் தேடின. ருஷ்யாவில், தமிழரல்லாதவர் களிலே நண்பர் எவரும் எனக்கில்லை. ஆனால், மாஸ்கோ வானொலியின் தமிழ்த் துறையில் பணி புரிந்துவரும் திரு. சி. ஜி. எஸ். மணிவர்மன், திரு. பி. சோமு ஆகிய தமிழர்கள் எனக்கு அறிமுகமானவர்கள். அவர்கள் பல ஆண்டுகள்களாக ருஷ்யாவில் இருந்து வருகிறார்கள் என்பதோடு, இருவருமே ருஷ்யப் பெண்களை மணந்து கொண்டு மாஸ்கோவில் தங்கி வாழ்க்கை நடத்தி வரு கின்றனர்.

திரு. சி.ஜி. எஸ். மணிவர்மன், குமரிமாவட்டத்தைச் சார்ந்தவர். தாயகத்திலிருந்த காலத்தில் தமிழரசு இயக்கத்தில் ஈடுபட்டு,கழகத்தின் முன்னணிப்பேச்சாளர் களில் ஒருவராகத் திகழ்ந்தவர். அவர் ருஷ்யா செல் வதற்கு ஜாமீன் கொடுத்தவனே நான்தான். அவர் தமது ருஷ்ய மனைவியின் மூலம் ஒரு பெண்ணையும்

பெற்று, அதற்குத் தகப்பனுகி விட்டார். பன்னிரண்டு வயதுடைய அந்தச் சிறுமி, இந்தோ-சோவியத் உறவுக்கு ஒரு சான்ருக வளர்ந்து வருகிருள்.

நண்பர் சோமு, நான் மாஸ்கோ செல்வதற்கு முன்பூ எனக்கு நேரில் அறிமுகமில்லே. ஆயினும், எனக்கு முன்பு சோவியத் ருஷ்யா சென்று திரும்பிய புதுமைப் பதிப்பக உரிமையாளர் திரு. அ. லெ. நடராசன் அவர்கள், திரு. சோமுவின் நற்குணங்களேப் பற்றியும், விருந்தோம்பும் பண்பு பற்றியும் என்னிடம் நிறையச் சொல்லி வைத்திருந்தார். அதனுல், நான் மாஸ்கோவுக்குச் செல்லும் வழியில் புதுடில்லியில் இரண்டு நாள் தங்கியிருந்தபோது நண்பர் சி.ஜி.எஸ். மணிவர்மனுக்கு எனது வருகை பற்றித் தந்தி மூலம் அறிவித்த போது, நண்பர் சோமுவுக்கும் தகவல் தந்திருந்தேன்.

இந்த நண்பர்களுக்கு அனுப்பிய தந்திச் செய்தியிலே, விமான நிலேயத்துக்கு வருமாறு அவர்களேக் கேட்டுக் கொண்டிருந்தேன். அதனுல், விமானத்தை விட்டு இறங்கியதும் அந்த இரு தமிழர்களேயும் என் கண்கள் தேடின. ஆனுல், விமானத்தை விட்டு இறங்கி அரை மணி நேரம் வரை அவர்கள் என் பார்வையிலே படவில்லே. அதனுல், சோர்வு ஏற்பட்டது. ஆம்; சோவியத் ருஷ்யாவிலே இவர்களேத் தவிர எனக்குப் பழக்கமானவர் ஒருவர்கூட இல்லாத தால், இவர்களிடமே என்மனம் தஞ்சம் புகுந்திருந்தது. அதனுல், விமான நிலேயத்தில் அவர்களேத் தேடியும் காணுதபோது என் மனம் சஞ்சலமடைந்தது. ஆனுல், வி. ஐ. பி. (மிகவும் முக்கியமானவர்) பகுதியிலே என்னுடன் வந்த இந்திய நண்பர்கள் மூவரோடும், எங்களே வரவேற்க வந்திருந்த ருஷ்யப் பிரமுகர்களோடும் நான் உரையாடிக் கொண்டிருந்த நேரத்தில், என் கண்கள்

தேடிக்கொண்டிருந்த இரண்டு நண்பர்களும் திடீ ரென்று என் எதிரில் தோன்றி, "ஐயா! வணக்கம்" என்று தமிழிலே கூறினார்கள்.

அவர்களைப் பார்த்ததும், அவர்கள் தமிழில் 'வணக்கம்' என்று சொன்னதைக் கேட்டதும், ஏதோ இரண்டு புதையல் பொருள்களைக் கண்டுபிடித்தவனுக்கு ஏற்படுவது போன்ற இன்ப உணர்ச்சி என் மனத்துள் ஏற்பட்டது.

நானும் பதிலுக்கு வணக்கம் கூறி, தாமதத்திற்குக் காரணம் கேட்டேன். அவர்கள், என்னோடு விமானத்தில் வந்த சக பயணிகள் மத்தியிலே என்னைத் தேடியதாகவும், அங்கு என்னைக் காணமல் அவர்கள் ஏமாற்றமடைந்ததாகவும், பின்னர்தான் நான் வி. ஐ. பி. பகுதியில் இருப்பதை அவர்கள் அறிந்ததாகவும், தாமதமாக வந்து சந்தித்ததற்கு இதுதான் காரணம் என்றும் கூறினார்கள்.

ஆம்; ஒருவர் சாதாரணக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து காலப்போக்கில் மிகவும் முக்கியமான பிரமுகர் ஆகி விடுவாராகில், இளமை தொட்டே பழகிய நண்பர்கள் அவரை எளிதில் அணுகுவது இயலாததாகிவிடுகிறதல்லவா!

விமான நிலையத்தில் வரவேற்பு முடிந்ததும் நானும் என்னுடன் வந்த மூவரும் ஒரு மோட்டாரில் விமான தளத்திலிருந்து இருபது கிலோமீட்டர் தொலைவிலுள்ள மாஸ்கோ நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். வழிக்காட்சிகள் என் கண்களுக்கும் மனத்துக்கும் விருந்தாக அமைந்தன. விமான தளத்தை விட்டதும் சுமார் பத்து அல்லது பதினைந்து கிலோ மீட்டர் வரை இருபுறமும் வயல்கள் பச்சைப் பசேலென்று காட்சி அளித்தன.

ஒவ்வொரு பண்ணையும் மிகவும் நீண்டும், அகன்றும் இருந்தன. நம்முடைய நாட்டில், சமுதாயத்திலே சாதிப் பிரிவுகள்—அவற்றில் ஒவ்வொன்றுள்ளும் உட் பிரிவுகள் இருக்கின்றன. அதனால், தமிழர் சமுதாயம் துண்டு துண்டாகப் பிரிந்து கிடக்கின்றது. இதேபோல, வயல் வெளிகளும், சிறிது சிறிதாகத் துண்டு படுத்தப்பட்டு, ஒவ்வொரு துண்டு நிலத்திற்கும் வரப்பு எழுப்பப் பட்டுக் காட்சி அளிக்கின்றன.

சோவியத் ருஷ்ய சமுதாயத்திலே சாதி மதப் பிரிவு கள் அந்தச் சமுதாயத்தைப் பிளவுபடுத்த முடியாத வகையில் சோஷலிசம் அமுல் நடத்தப் படுவதுபோல, அந்த நாட்டு வயற் புறங்களும் சிறிய அளவில் துண்டு படுத்தப் படாமல், நீண்டும் அகன்றும், டிராக்டர்களால் பண்படுத்தப்பட்டும், பச்சைப் பசேலென்று காட்சி அளித்தன. இந்த வயல் பிரதேசத்தை விட்டு நகரை அணுகியதுமே உயர்ந்து வானளாவ வளர்ந்திருந்த கட்டி டங்கள் காட்சியளித்தன. சென்னை நகரிலே பதினன்கு அடுக்குகள் கொண்ட எல். ஐ. சி. கட்டிடத்தை நான் பார்த்திருக்கிறேன். அதுதானே நமது நகரிலுள்ள மிக உயர்ந்த கட்டிடம்! ஆனால், அதைவிடவும் உயரமான அதிக அடுக்குகள் நிறைந்த கட்டிடங்கள் மாஸ்கோவை அணுகிய நிலையிலேயே என் கண்களுக்குத் தெரிந்தன.

நகரின் எல்லையிலேயே இரண்டாவது பெரும் போரில் சோவியத் ருஷ்யா அடைந்த மகத்தான வெற்றியின் நினைவுச்சின்னம் எங்களை வரவேற்றது. முந்தைய தலை முறையினரின் சரித்திர ரீதியான சாதனையை பிந்திய தலைமுறையினருக்கு நினைவூட்டும் சின்னங்களை அழகுற அமைப்பதிலே சோவியத் சோஷலிச ஆட்சிக்குள்ள ஆர்வத்தை இனி அடுத்து வரும் நாட்களிலே அதிக அளவில் அறிந்துகொள்ளப் போகிறேன். அதற்கு

முன்னோடியாக நகரின் நுழைவாயிலில் இருந்த வெற்றிச் சின்னம் எனது பார்வையில் பட்டது.

நகரின் பிரதான பகுதியில் இருந்த ஓட்டல் உக்ரேன் என்ற சர்வதேசப் பயணிகளுக்கான ஓட்டலுக்கு நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம். அங்குதான் சோவியத் அரசின் விருந்தினர்களாகிய நானும் என்னுடன் வந்தவர்களும் தங்கியிருக்க அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. உக்ரேன் ஓட்டல் இருபத்தேழு மாடிகளைக் கொண்ட, அழகிய வேலைப்பாடமைந்த மிகவும் உயரமான கட்டிடம். மாஸ்கோ நகரிலுள்ள இரண்டு பெரிய ஓட்டல்களில் இதுவும் ஒன்று. இந்த ஓட்டலின் எதிரே மிகவும் அழகிய மாஸ்கோ நதி செல்கின்றது.

இந்த ஓட்டலிலே அயல் நாட்டுப் பயணிகள்தான் அதிக அளவிலே இடம் பிடித்துக் கொள்ளுகின்றனர். உணவு கொள்வதற்கும் அயல் நாட்டுப் பயணிகளுக்கெனத் தனியாக இடம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. மாடிகளைக் கடப்பதற்கு ஆறு 'லிப்ட்'கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. எங்களுக்கு ஐந்தாவது மாடியில் அறைகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன. எனது அறையின் எண் 571. 'ஒரு ஓட்டலிலே 571 அறைகளா?' என்று வியக்காதீர்கள்! இன்னும் சில நூறு அறைகளும் இந்த ஓட்டலிலே இருக்கின்றன. ஆம்; அவ்வளவு பெரிய ஓட்டல்! இதற்கு முன்பு இவ்வளவு பெரியதும், அழகியதும், அயல் நாட்டாரே தங்கியிருப்பதுமான ஓர் ஓட்டலிலே தங்கி வாழ்க்கை நடத்திய அனுபவம் எனக்குக் கிடையாததால் இந்த ஓட்டலைக் கண்டதும் வியப்பும் மகிழ்ச்சியும் என்னை ஒரு சேர ஆட்கொண்டன. ஓட்டலுக்குள் நுழைந்ததும் எனக்கென ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்றபோது, வழக்கம்போல;

வழியில் என்னைக் கண்டவர்கள் வியப்புடன் நோக்கினர். வேறொன்றுமில்லை; வேட்டியும் மீசையும்தான் அவர்களுடைய வியப்புக்குக் காரணம்.

நாங்கள் ஒட்டல் உக்ரேனை அடைந்ததுமே, எங்களை வரவேற்று அந்த ஒட்டலுக்கு அழைத்து வந்த ருஷ்ய நண்பர்கள் எங்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார்கள். அதற்குள் பகல் நேரத்துக்குரிய வெளிச்சம் முற்றிலும் மறைந்து, இரவு நேரத்துக்குரிய இருள் மாஸ்கோவைச் சூழ்ந்து கொண்டிருந்தது. அப்போது நேரம் 8 மணி. இந்த இடத்தில் மாஸ்கோவைப்பற்றி முன்கூட்டியே வாசகர்களுக்கு சில தகவல்களைத் தந்து வைப்பது பின்னால் நான் தரும் விளக்கங்களைப் புரிந்து கொள்வதற்குப் பயன்படுமென்று நம்புகிறேன்.

அழகிய மாஸ்கோ!

மாஸ்கோ, சோவியத் நாட்டின் தலைநகர் மட்டுமல்ல; உலகிலுள்ள மிகப் பெரிய நகரங்களில் ஒன்றாகும். அந்த நகரின் மக்கள்தொகை 65 லட்சம். நமது சென்னை நகரின் நடுவே கூவம் நதியைக் காண்கிறோமல்லவா? அதுபோல, மாஸ்கோ நகரின் நடுவே 'மாஸ்கோ நதி' ஓடுகின்றது. கூவத்தில் முடை நாற்றம் வீசுகிறது; மாஸ்கோ நதியிடம் அது இல்லை.

நான் அழகிய மாஸ்கோ நதியைப் பார்த்ததுமே, முடை நாற்றம் வீசும் நமது கூவம் நதி எனது நினைவுக்கு வந்தது போல, அதனுடைய நாற்றத்தைப் போக்கி அதனை அழகுபடுத்தவும் அதற்கு மணமூட்டவும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி மேற்கொண்டு வரும் பகீரத முயற்சிகளும் எனது நினைவுக்கு வந்தன.

சோவியத் ருஷ்யா, நிலப் பரப்பில் இந்தியாவை விடவும், ஏழு பங்கு பெரியது. தெற்கு வடக்காக 4500 கிலோ மீட்டரும், கிழக்கு மேற்காக 10,000 கிலோ மீட்டரும் உள்ளது. அதன் எல்லை ஓரத்தில் பன்னிரண்டு நாடுகள் உள்ளன.

சோவியத் நாட்டின் எல்லைக் கோடு அறுபதாயிரம் கிலோ மீட்டர் கொண்டதாகும். மூன்று பெருங் கடல்களும், வேறு பன்னிரு கடல்களும் அதன் எல்லையில் உள்ளன.

"தூர கிழக்கு நாடுகளிலுள்ள மக்கள், காலையில் வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருக்கும் நேரத்தில், பைலோ ரஷ்ய மக்கள் இரவு நேரத்துக்குரிய நாடகம் பார்ப்பதற்காக ஆடைகளை மாற்றிக் கொண்டிருப் பார்கள்" என்று ருஷ்ய அரசு வெளியிட்டுள்ள ஒரு நூல் தகவல் தருகின்றது. கடிகார நேரத்தில் தூர கிழக்கு நாடுகளுக்கும் பைலோ ரஷ்யாவுக்கும் இடையே அவ் வளவு வேற்றுமை இருக்கிறது.

சோவியத் ருஷ்யா இயற்கைச் செல்வங்களால் செழித்து வளர்கின்றது. உலோகங்களும், எரி பொருள் களும் இங்கு மிகுதியாகக் கிடைக்கின்றன. ஒரு லட்சத் திற்கு மேற்பட்ட ஆறுகள் சோவியத் ருஷ்ய மண்ணை செழுமைப் படுத்தி, அந்த நாட்டு மக்களுக்கு வாழ்வு தருகின்றனவாம். அந்த ஆறுகளின் நீளம் முப்பது லட்சம் கிலோ மீட்டராம். ஏரிகளின் எண்ணிக்கை 2,70,000. சோவியத் ருஷ்யாவின் மக்கள் தொகை 23 கோடி. மக்கள் தொகையிலே உலக நாடுகளில் சீனு வுக்கும் இந்தியாவுக்கும் அடுத்த இடத்தில் இருக்கிறது ருஷ்யா. தத்துவத்திலோ, அது தலைமை பெற்றுள்ளது. உலகில் முதன் முதலாக அமைந்த சோஷலிசப் பூங்கா ருஷ்யா தான்!

1917 அக்டோபரில் நடந்த வர்க்கப் புரட்சிக்கு முன் ஜார் அரச பரம்பரையினர் ஆட்சி ருஷ்யாவில் நடந்து வந்தது. அதனுல் அந்தக் காலத்தை 'ஜார் ருஷ்யா' என்றும், புரட்சிக்குப் பின்னுள்ள காலத்தை 'சோவியத் ருஷ்யா' என்றும் வருணிக்கின்றனர் ருஷ்ய வரலாற்று ஆசிரியர்கள். ருஷ்ய நாட்டைப் பற்றி இப்போதைக்கு இவ்வளவு தகவல்களைத் தந்ததே போதும்.

உக்ரேன் ஓட்டல்

"சோஷலிசம்' என்றாலே, 'வறுமையைப் பங்கு போட்டுக் கொள்வதுதான்" என்று கேலியாக வருணிக்கின்றனர், தனிவுடைமைக்கு ஆதரவு காட்டுவோர். இது எவ்வளவு பொய் என்பதனை நான் மாஸ்கோவில் நுழைந்து, அந்நகரின் விசாலமான வீதிகளின் வழியாக உக்ரேன் ஓட்டலுக்குச் சென்று கொண்டிருந்தபோதே உணர்ந்தேன். ஓட்டலுக்குள் நுழைந்து ஐந்தாவது மாடியை அடைந்து, அங்கு எனக்கென ஒதுக்கப்பட்டிருந்த 571-வது எண்ணுள்ள அறைக்குள் புகுந்ததும், சோவியத் நாட்டின் தலைநகரில் வறுமை பங்கிடப் படவில்லை என்பதனை உணர்ந்தேன். ஒவ்வொரு துறையிலும் வளத்தைப் பெருக்கி, பெருக்கிய வளம் மக்களுடைய உழைப்புக்கும் தேவைக்கும் ஏற்பப் பிரித்துக் கொடுக்கப்படுகிறதென்பதனை அறிந்தேன்.

உக்ரேன் ஓட்டலிலே அயல் நாட்டுப் பயணிகளே அதிக அளவில் தங்குகின்றனர். மனித சமுதாயத்திலே எத்தனை நிறத்தவருண்டோ அத்தனை நிறத்தவரையும் உக்ரேன் ஓட்டலில் கண்டேன். ஆம்; கன்னங் கரேலென்ற நீக்ரோவர்கள், மஞ்சள் நிறத்தவரான ஜப்பானியர், அப்பட்டமான வெள்ளை நிறத்தவரான ஐரோப்பியர் ஆகியோரை உக்ரேன் ஓட்டலிலே நான் பார்க்க முடிந்தது.

இப்படி, வண்ணங்களால் வேறுபட்டவர்களை ஒரே இடத்தில்—ஒரே நேரத்தில் நான் காண்பது இதுதான் முதன் முறையாதலால், அந்தக் காட்சி எனக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் அளித்தது.

மாஸ்கோவில் நுழைந்த முதல் இரவிலே நண்பர் மணிவர்மன் தனது இல்லத்திற்கு என்னை விருந்துண்ண அழைத்துச் சென்றார். உக்ரேன் ஓட்டலிலிருந்து தமது காரிலேயே அவர் என்னை அழைத்துச் சென்றார். அவரது இல்லம் மாஸ்கோ பல்கலைக் கழகப் பிரதேசத்தில் இருக்கிறது. அதனால், போகும் வழியிலே—பகற் பொழுது மறைந்து கொண்டிருக்கும் அந்தி மாலை நேரத்திலே—அழகான, அமைதியான சூழ்நிலையில் உள்ள பல்கலைக் கழகத்தைப் பார்த்து மகிழ்ந்தேன். கோடை விடுமுறைக்குப் பல்கலைக் கழகம் மூடப்பட்டிருந்ததால் நான் பல்கலைக் கழகத்தின் வெளிப்புறத்தைத்தான் பார்க்க முடிந்தது. உட் பகுதிகளில் சென்று பார்க்கவும், மாணவர்களோடு பழகவும் எனக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. இந்தியாவிலே நான் பார்த்த எந்த ஒரு பல்கலைக் கழகமும் மாஸ்கோ பல்கலைக் கழகத்தைப் போன்று இருக்கவில்லை. உயர் கல்வி பயிலும் மாணவர்களின் உள்ளங்களைச் செம்மைப்படுத்துவதிலே சோவியத் அரசு காட்டும் அக்கரைக்கு மாஸ்கோ பல்கலைக் கழகப் பிரதேசத்தின் சூழ்நிலை மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

அன்றிரவு நண்பர் மணிவர்மன் மிகவும் எளிய முறையில்—ஆனால், எனக்குப் பிடித்தமான வகையில் உணவு தயாரித்துக் கொடுத்தார். அவருடைய ருஷ்ய மனைவிக்கு அரிசிச் சோறு, குழம்பு, ரசம், காய்கறி பதார்த்தம் ஆகியவற்றைத் தயாரிக்கத் தெரியாது.

அதனால், அவரே சமைத்து உணவளிக்க வேண்டியிருந்தது!

நண்பர் மணி, தன் ருஷ்ய மனைவிக்கு இந்திய உணவு தயாரிப்பதற்கோ, தமிழ் மொழி பேசுவதற்கோ பயிற்சி கொடுக்கவில்லை. தமிழ் நாட்டு உணவை விட்டுவிடவும் அவரால் முடியவில்லை. அதனால், அவர் தமக்குத் தேவைப்படும் தமிழர் உணவை, தினமும் தாமே தயாரித்துக் கொள்கிறார். அவருடைய மனைவியார் வழக்கம் போல, ருஷ்ய உணவையே—அதாவது, ஐரோப்பிய உணவையே உண்டு வருகிறார். நிற, மொழி, உணவு வேறுபாடுகளுக்கிடையேயும் அவர்கள் மனமொத்த தம்பதிகளாகவே இன்பமாக வாழ்கிறார்கள். திரு மணியின் மனைவியாருக்கு தமிழ் அறவே தெரியாதென்றாலும், மணிக்கு ருஷ்ய மொழியிலே நன்றாக எழுதவும் படிக்கவும் தெரியுமாதலால், அந்த மொழியைக் கொண்டு அவர்கள் தாம்பத்ய வாழ்க்கை நடத்த முடிகின்றது.

ருஷ்யப் பெண்ணை மணந்து வாழும் மற்றொரு தமிழரான திரு. சோமுவின் நிலையும் இதுதான். ஏனோ நம் தமிழர்கள் தங்களைச் சார்ந்தவர்களைப் பின்பற்றி வாழ்வதன்றி, அவர்கள் தங்களைப் பின்பற்றி வாழுமாறு செய்யத் தவறிவிடுகின்றனர். பர்மா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளிலும் தமிழர் நிலை இதுதான். பர்மியப் பெண்களையும் சீனப் பெண்களையும் மணந்து வாழும் தமிழர்கள், அவர்களுக்குத் தங்கள் மொழியைப் பயிற்றுவிக்காமல், தாங்கள் அவர்களுடைய மொழியைப் பயின்று அவர்களோடு வாழ்கின்றனர். இதனைத் தமிழரிடமுள்ள ஒரு குறையாகவே நான் கருதுகின்றேன்.

ருஷ்யா சென்ற முதல் இரவிலேயே என்பால் பேரன்பு கொண்ட நண்பர் ஒருவர் இல்லத்தில் எனக்குப்

பிடித்தமான பத்திய உணவு கிடைத்ததிலே நான் மகிழ்ச்சி அடைந்தேன். நான் மாஸ்கோவி லிருக்கும் நாட்களிலே தினம் ஒரு வேளையேனும் எனக்கு உணவு தந்து உதவுவதாக நண்பர்கள் மணியும் சோமுவும் எனக்கு உறுதி கூறி, அப்படியே உதவியும் செய்தனர்.

மறுநாள் காலையில் இட்டலிச் சிற்றுண்டிக்கும் மணி யிடம் வாக்குறுதி பெற்று, இரவு 11 மணிக்கு உக்ரேன் ஓட்டலுக்குத் திரும்பினேன். நள்ளிரவு நேரத்தில் அந்த ஓட்டலில் காணப்படும் அமைதி "பயங்கரமான" தாக இருந்தது. ஆம்; ஊசி விழுந்தாலும் சப்தம் கேட்கக் கூடிய அளவுக்கு ஆள் நடமாட்டமில்லாத பரிபூரண அமைதி. எவ்வளவு துணிச்சலுள்ளவர்களுக்கும் தம் அறையை விட்டு வெளியே வந்து நடமாட விருப்ப மிராது

நான் ஓரளவு தூங்கியபின் திடீரென்று கண் விழித் துப் பார்த்தேன். கண்ணாடிச் சன்னல் வாயிலாகக் கதிர வன் ஒளி நன்றாகத் தெரிந்தது. ஆனால், கண்களிலே தூக்கம் இருந்தது. கதிரவன் ஒளியைப் பார்த்தால், பொழுது விடிந்து நெடுநேரமாகி விட்டது போலத் தோன்றியது. கண்ணில் தூக்கமிருந்ததால், பின்னிரவு நேரமோ என்ற ஐயம் பிறந்தது.

கதிரவன் அடிவானத்திலிருந்து மேலே உயர்ந்து கொண்டிருந்ததால், பொழுது விடிந்து நெடு நேரமாகி விட்டதாகவே முடிவு செய்துகொண்டேன். என்னிடம் கடிகாரம் இல்லை. நண்பர் மணிக்குப் போன் செய்து, இட்டலி கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டேன். அவர் சிரித்துக் கொண்டே, "இப்போது இரவு மூன்றரை மணி ஆகிறது. நீங்கள் போய்ப் படுத்து உறங்குங்கள். காலை 8 மணிக்குள் நான் இட்டலி கொண்டு வரு

கிறேன்," என்ருர். அப்போதுதான், மாஸ்கோவிலே பகல் அதிகம் என்றும், இரவு குறைவென்றும் முதல் நாளன்றே நான் கேள்விப்பட்டிருந்தது எனது நினை வுக்கு வந்தது. நள்ளிரவு நேரத்தில் தொலைபேசியில் அழைத்து நண்பர் மணியைத் தொல்லை கொடுத்ததற் காக அவரிடம் மன்னிப்புக் கோரினேன். திரும்பவும் படுத்து நெடுநேரம் உறங்கிவிட்டேன்.

இராமலிங்க அடிகள், இராப்பகலில்லா விடத்தே தாம் வாழ விரும்புவதாகப் பாடியுள்ளார். அப்படிப் பட்ட இடம் சொர்க்கம்தான் என்று அவர் கருதினுர். நானே, இராப்பகல் தெரியாத ஐரோப்பாக் கண்டத் திலே அகப்பட்டுக் கொண்டு 'அல்லல்' பட்டேன்.

மாஸ்கோ சென்ற இரண்டாவது நாள் காலை சோவியத் சுற்றுலா பற்றிய அதிகார பூர்வமான திட்டம் எங்கள் கையில் தரப்பட்டது. இரண்டே வாரங்கள்தான் எங்களுடைய சோவியத் சுற்றுலா அமைக்கப்பட்டிருந் தது. டில்லியிலேயே ஆசிய ஆப்பிரிக்க ஒற்றுமைக் குழு வின் இந்தியச் செயலாளர் திரு. கலிமுல்லா அவர்கள், சுற்றுலாவின் கால அளவு குறைக்கப்படலாமென்று சூசகமாகச் சொன்னபோது அதனை நான் நம்பவில்லை. மாஸ்கோவில் அது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர்தான் எனது நிலைமை சங்கடமானது.

சங்கடமென்னவென்ருல், நான் மாஸ்கோ சென்ற ஒரு வாரத்திற்குப் பின்னர், பாரிசில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற இருந்ததுதான். நான் ஆகஸ்டு 8ஆம் தேதி மாஸ்கோ சென்றேன். 9ஆம் தேதிதான் சுற்றுலாத் திட்டம் செயல்படத் தொடங்கியது. 14 ஆம் தேதியே நான் மாஸ்கோவை விட்டுக் கிளம்பி, பாரிஸ் செல்ல வேண்டியவனுக இருந்தேன்.

நான்கு நாட்கள் பாரிசில் தங்கிய பின்னர், ஐந்தாவது நாள் மாலையில்தான் நான் மாஸ்கோ திரும்ப இயலுமென்றாலும், அதற்கு மறுநாளே சோவியத் சுற்றுலா முடிவடையக்கூடிய வகையில் அது வகுக்கப்பட்டிருந்தது.

நான் பாரிசுக்குச் செல்வதைத் தவிர்த்தாலொழிய சோவியத் சுற்றுலாத் திட்டத்தை முழு அளவில் நிறைவேற்றி வைக்க இயலாதென்று அறிந்தேன். உலகத் தமிழ் மாநாட்டிற்குத் தமிழக அரசின் பிரதிநிதிகளில் ஒருவனாக நான் நியமிக்கப்பட்டு விட்டதால், அந்த நியமனத்தையும் ஏற்றுக்கொண்டு, நான் பாரிஸ் செல்லப் போவதாக தமிழக மக்களுக்கு அறிவித்து விட்டதால், பாரிஸ் பயணத்தைத் தவிர்ப்பது பற்றி நினைத்துப் பார்க்கக்கூட என்னால் முடியவில்லை.

சோவியத் சுற்றுலாத் திட்டத்திலே, மாஸ்கோ, அல்ம்—அதா (கஜக் மாநிலத் தலைநகர்), லெனின்கிராட் ஆகிய மூன்று நகரங்களே சேர்க்கப்பட்டிருந்தன. முதல் நான்கு நாட்கள் மாஸ்கோவிலும், அடுத்து இரண்டு நாட்கள் அல்ம்—அதாவிலும், அதனை அடுத்து மூன்று நாட்கள் லெனின்கிராடிலும் அலுவல்கள் வகுக்கப்பட்டிருந்தன. கடைசி இரண்டு நாட்கள் மாஸ்கோவில் தங்கி, தாயகம் திரும்புவதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக அவகாசம் தரப்பட்டிருந்தது.

சோவியத் சுற்றுலாத் திட்டத்தின் காலத்தை நீட்டிக்க நான் மாஸ்கோவில் எடுத்த முயற்சி பலன் தரவில்லை. ஆகவே, பாரிஸ் செல்வதற்கு முன்பு லெனின்கிராட் செல்வதற்கான வகையில் சுற்றுலாத் திட்டத்தைத் திருத்துவதற்கு முயற்சி எடுத்தேன். அதுவும் பயன் தரவில்லை.

லெனின்கிராட் நகரத்தைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை என் மனத்தை நிறைத்துக் கொண்டிருந்தது. சோவியத் மக்கள் லெனின்கிராடை மாஸ்கோவை விடவும் புனித நகரமாகக் கருதுகிறார்கள். இரண்டாவது உலகப் பெரும் போரின்போது லெனின்கிராட்தான் நாஜிகளின் கடுமையான தாக்குதலை எதிர்த்து நின்று வீரப்போர் நடத்தியது. அதனாலும், அந்த வீரத் திருநகரைப் பார்க்கவேண்டும், அதன் மண்ணை மிதிக்க வேண்டும், அங்கு நாட்டப்பட்டுள்ள யுத்தகால நினைவுச் சின்னங்களைப் பார்த்து மகிழ வேண்டும் என்றெல்லாம் ஆவலுடையவனாக இருந்தேன்.

சோவியத் நாட்டிற்குச் சென்றும் லெனின்கிராட் நகரைப் பார்க்காமல் திரும்புவது ஒரு பெரும் குறைதான். ஆயினும், பாரிசிலிருந்து திரும்பியதும் லெனின்கிராடைப் பார்த்து மகிழலாம் என்றெண்ணி ஆறுதலடைந்தேன்.

நான் மாஸ்கோவுக்குச் சென்ற இரண்டாவது நாள் காலை 10 மணிக்கு சோவியத் ஆப்பிரிக்காசிய உறவுக் குழுவின் அலுவலகத்திற்கு—என்னுடன் வந்திருந்த மூவருடன்—அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு அந்தக் குழுவின் தலைவர் எங்களுக்குப் பேட்டி அளித்தார். சுமார் 60 வயதைக் கடந்தவராகக் காணப்பட்ட அந்தப் பெருந் தலைவர், ருஷ்ய மொழியில்தான் எங்களோடு உரையாடினார். சிப்பந்தி நிலையில் உள்ள மற்றொருவர் அதனை ஆங்கிலத்தில் எங்களுக்காக மொழி பெயர்த்தார்.

சோவியத் ருஷ்யாவில் பெரிய பதவிகளில் இருப்போரில் மிகப் பெரும்பாலோருக்கு ஆங்கிலம் தெரியாதென்றால் படிப்பவர்கள் வியப்படையக் கூடும். பெருந் தலைவர்கள் என்ன, விஞ்ஞான-தொழிலியல் விற்பன்

னர்களிலும் பலருக்கு ஆங்கிலம் தெரியாது. 50 வயதுக்கு மேற்பட்ட வயதை அடைந்துவிட்டவர்களிலே மிகச் சிலர்தான் ஆங்கிலந் தெரிந்தவர்களாக இருக்கின்றனர். 'ஆங்கிலம் தெரியாதவர்கள்' என்ருல், 'கல்வியறிவில்லாதவர்கள்' என்றுதான் இந்த நாட்டில் உள்ளவர்கள் எண்ணுகிருர்கள். ஆம்; நாம் வளர்ந்துள்ள சூழ்நிலை அப்படி! இருநூறு ஆண்டுக் காலம் நாம் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்தோமாதலால், ஆங்கிலம் ஒன்றே அறிவு மொழியாக நம்மீது திணிக்கப்பட்டுவிட்டது. ஆங்கிலேயர் அகன்ற பின்னரும் அந்தத் திணிப்பு நீடிக்கிறது. அதனுல், 'படித்தவர்' என்ருலே, 'ஆங்கிலத்தின் மூலம் கல்வி பயின்று பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்' என்று இங்கு பொருள் கொள்ளப் படுகிறது.

சோவியத் ருஷ்யா, நீண்ட நெடுங்காலமாகச் சுதந்திரமாக இருந்து வருகிறது. அரை நூற்ருண்டுக்கு மேலாக, அநீதிகளுக்கெல்லாம் முடிவு கட்டி, சோஷலிச நாடாகவும் இருந்து வருகின்றது. ஆகவே, அந்த நாட்டில் பொது மொழியான ருஷ்ய மொழியும், மாநிலந்தோறும் அந்தந்த மாநில மொழியுமே அறிவு மொழிகளாக இருந்து வருகின்றன.

நாங்கள் சந்தித்த பெருந் தலைவரும் அவருடைய நாட்டு மொழியில் நிறைந்த விஞ்ஞான அறிவைப் பெற்றவர். இந்திய நாட்டைப் பற்றி நிறைய ஞானம் உடையவர். அண்மையில் இந்தியாவுக்கு வந்து சென்றவர் என்றும் சொல்லப்பட்டார். இலக்கியத் துறையிலே ஆழ்ந்த புலமை உடையவர் என்றும் எங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார்.

நாங்கள் சந்தித்த அப்பெருந் தலைவர் இந்தியாவின் தற்கால அரசியல் நிலை பற்றி எங்களிடமிருந்து அறிந்து

கொள்ள முயன்ருர். நான் கலந்து சென்ற குழுவின் தலைவர் முஸ்லிமாக இருந்ததாலோ என்னவோ, அந்த ருஷ்யத் தலைவர் இந்தியாவில் உள்ள முஸ்லிம்களின் நிலை பற்றியே அதிகமாக விவாதித்தார். குறிப்பாக, அண்மையில் ஆமதாபாத்திலும், பம்பாயிலும் நடந்த வகுப்புக் கலவரங்களால் சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள் அடைந்த இன்னல்கள் பற்றி மிகுந்த அனுதாபத்துடன் விசாரிக்கலானுர்.

இந்தியா விடுதலை பெற்று கால் நூற்ருண்டு காலமாகியும் குறைந்தபட்ச சாதனையாக இந்து-முஸ்லிம்களிடையே நல்லுறவுகூட ஏற்படாததற்காக அவர் மிகுந்த வருத்தம் தெரிவித்தார். இந்தியக் குழுவின் தலைவர், குழுவிலுள்ள எல்லோரையும் அந்த ருஷ்யத் தலைவருக்கு அறிமுகப்படுத்தியபோது, நான் தமிழ் நாட்டிலிருந்து வந்திருப்பதாகக் கூறினுர். அதைக் கேட்டதுமே அந்த ருஷ்யர் மிகுந்த உற்சாகத்துடன் என்னுடன் கை குலுக்கினுர்.

என் குழுவில் உள்ள மற்ற மூவரும் ஆங்கிலத்தில் தத்தம் கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். நான் கருத்துரைக்கும் நேரம் வந்தபோது அந்த ருஷ்யத் தலைவர் மிகுந்த பூரிப்புடன் "நீங்கள் தமிழிலே பேசுங்கள்; என் காதுகள் தமிழைக் கேட்கட்டும்" என்று சொன்னுர். அதைக் கேட்டபோது என் உடம்பு புல்லரித்தது. ஆனுல், துரதிருஷ்ட வசமாக இந்தச் சந்திப்பின்போது தமிழ்-ருஷ்ய மொழி பெயர்ப்புக்கு ஆளில்லை.

சோவியத்துக்கு வருமாறு நான் அழைக்கப்பட்டபோதே தமிழ்—ருஷ்ய மொழி பெயர்ப்பாளர் ஒருவர் சுற்றுலாக் காலம் முழுவதும் என்னோடு இருக்க வேண்டுமென்று நான் கேட்டிருந்தேன். தமிழறிந்த ருஷ்யர்

பலர் சோவியத்தில் இருக்கிருர்கள் என்பதையும் நான் அறிவேன். தமிழ்-ருஷ்ய மொழி பெயர்ப்பாளர் ஒரு வரை எனக்கு ஏற்பாடு செய்யுமாறு தாம் மாஸ்கோ வுக்கு எழுதியிருப்பதாக டில்லியிலுள்ள திரு. அலிமுல்லா அவர்கள் நான் சென்னையிலிருந்தபோதே எனக்குத் தகவல் தந்திருந்தார். சென்னையில் உள்ள திரு. கவேரின அவர்களும் எனது விருப்பத்தை மாஸ்கோவுக்கு எழுத்து மூலம் அறிவித்திருப்பதாக என்னிடம் சொன்ஞர். ஆனுல், நான் மாஸ்கோவில் இருந்த நாட்களில் அத் தகைய மொழி பெயர்ப்பாளர் ஒருவர் எனக்குத் தரப் படவில்லை. மாஸ்கோ, லெனின்கிராட் பல்கலைக்கழகங் களிலுள்ள தமிழறிந்த மாணவர்கள் ஒய்வுக்காகக் கிராமப்புறங்களுக்குச் சென்று விட்டனரென்றும், அத ஞல் தமிழ்-ருஷ்ய மொழி அறிந்த மொழி பெயர்ப் பாளரை உதவ முடியவில்லை என்றும் எனக்கு சமா தானம் சொல்லப்பட்டது. ஆனுல், எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தின் மூலமே நான் சோவியத் மக்களோடு தொடர்பு கொள்ள முடிந்தது.

நாங்கள் சந்தித்த ருஷ்யத் தலைவர் தமிழ்நாட்டின் அரசியல் பற்றியும் என்னிடம் சிறிதுநேரம் உரையாடி ஞர். எங்கள் குழுவின் தலைவர் உ. பி. மாநிலத்தைச் சேர்ந்தவராதலால், அவரைப் பார்த்து "உங்கள் மாநிலத்தைப் போலில்லாமல் இவருடைய மாநிலத்தில் ஒரு நிலையான அமைச்சரவை இருக்கிறது" என்று குறிப்பிட்டார். எங்கள் குழுவின் தலைவரும் அதனை ஆமோதிப்பவர் போலத் தலையை அசைத்தார்.

இந்தப் பேட்டி. முடிந்ததும் நாங்கள் லெனின் சதுக்கத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

லெனின் வழிபாடு

லெனின் சமாதியைக் காணும் விருப்பம் எனக்கு நீண்ட நெடுங்காலமாகவே இருந்து வந்தது. உலகப் பெரியார்களிலே காந்தியடிகளுக்கு அடுத்தபடியாக நான் பெரு மதிப்பு வைத்திருக்கும் பெரியார் தோழர் லெனின் அவர்களேயாவார். சோஷலிசப் புரட்சியின் தளபதி என்ற வகையில் அவரிடம் எனக்குத் தனி மதிப் புண்டு. சோவியத்துக்கு செல்லும் முன்பே அவருடைய வாழ்க்கை வரலாற்றையும், ஜார் ருஷ்யாவில் அவர் தலைமையில்நடந்த சோஷலிசப் புரட்சியின் வரலாற்றை யும், புரட்சிக்குப் பின் லெனின் தலைமையில் அமைந்த சோவியத் ஆட்சியின் சாதனைகளையும் ஓரளவு நான் படித்து வைத்திருந்தேன். இதனாலும், இந்திய விடு தலைப் போரில் எனக்கு வழி காட்டியாக விளங்கிய காந்தியடிகளும் ஜவகர்லால் நேருவும் மாவீரர் லெனினைப் பெரிதும் புகழ்ந்துள்ளமையாலும் அவர் மீது எனக்குப் பற்று வளர்ந்தது. ஆகவே, செஞ்சதுக்கத்தில் உள்ள லெனின் சமாதிக்குச் செல்லும்போது என் மனத்தில் வருணித்துக் காட்ட இயலாத ஒரு புதிய எழுச்சியும், மகிழ்ச்சியும் தோன்றின.

நாங்கள் செஞ்சதுக்கத்தை அடைந்தபோது பகல் 12 மணியிருக்கும். ருஷ்யாவில் அது கோடைக் கால மாதலால் வெய்யிலும் கடுமையாகத்தான் இருந்தது. அந்த நிலையிலும் ஐயாயிரத்திலிருந்து எட்டாயிரம்வரை மதிப்பிடக் கூடிய மக்கள் கூட்டத்தை செஞ்சதுக்கத்

திலே கண்டேன். அவர்களிலே பெரும்பாலோர் ருஷ்ய நாட்டைச் சாராத அயல் நாட்டவராவர். அவ்வளவு பேரும் உறங்குவதுபோன்று பள்ளிகொண்டிருக்கும் லெனின் உருவத்தைப் பார்த்து, அந்த மாவீரனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவே அங்கு குழுமியிருந்தனர். அவர்கள் கியூ வரிசையில்தான் லெனின் சமாதியிருக்கும் மண்டபத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர். அவர்களிலே ஆண்களும் பெண்களும் கிட்டத்தட்ட சம எண்ணிக்கையில் இருந்தனரெனலாம். போலீசார் போக்குவரத்தை ஒழுங்கு செய்து கொண்டிருந்தனர். அவர்களுடைய முயற்சி தேவையில்லாமலே மக்கள் ஒழுங்காகத்தான் சென்று கொண்டிருந்தனர். முன் எச்சரிகையாகவே அங்கு போலீசார் இருந்தனர் என்று சொல்ல வேண்டும்.

லெனின் சமாதி இருக்கும் மண்டபத்திற்கு வெளியே ஒரு குறிப்பிட்ட இடத்தில் நான் உட்பட இந்திய தூதுக் குழுவிலுள்ள நால்வரும் ஆளுக்கொரு மலர்வளையத்தை வைத்து மாவீரர் லெனினுக்கு அஞ்சலி செலுத்தினோம். அதன் பிறகே மண்டபத்திற்குள் சென்றோம்.

நாங்கள் சோவியத் அரசாங்கத்தின் விருந்தினராக இருந்தும், வரிசை வரிசையாக நகர்ந்து கொண்டிருந்த கூட்டத்தினரோடு சேர்ந்துதான் நாங்களும் லெனினைக் காணச் செல்ல வேண்டியிருந்தது. ஆம்; "பெரிய மனிதர்கள்" என்பதற்காக, செஞ்சதுக்கத்திலே விசேஷ சலுகை எதுவும் இருக்கவில்லை. கியூவில் நின்று நகர்ந்து செல்வது எனக்குச் சிரமமாகத்தான் இருந்தது. ஆயினும், இந்த ஏற்பாடு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. "மக்களிலே அனைவரும் சமம்" என்ற சமத்துவத்தை விரும்பி வரவேற்கத்தானே வேண்டும்.

தமிழ் நாட்டுக் கோயில்களுக்கு நான் செல்லும் போதெல்லாம் அங்கு குருக்கள்மார்களும் நிர்வாக அதிகாரிகளும், குழுமியுள்ள மற்ற பக்தர்களை ஒதுக்கி விட்டு எனக்கு விசேஷ மரியாதை காட்டி, கடவுள் சன்னதியிலேயே என் கழுத்தில் பெரிய மாலைகளை அணிவித்து, என்னைக் கவுரவிக்கிறார்கள். இது எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. இப்படி நேரும்போதெல்லாம் என் மனம் வேதனை அடைவதுண்டு. ஆயினும், இதனை மறுக்க எனக்குத் துணிவு ஏற்படவில்லை.

மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் லெனின் சமாதியைக் காணச் செல்லும் பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியிலே-பலவேறுபட்ட கியூ வரிசையிலே—ஒருவனாக நான் நின்று கொண்டிருந்த போது, உடல் வருத்தமிருந்ததென்றாலும், உள வருத்தம் இல்லை. உள்ளம் மகிழ்ச்சியே அடைந்தது. இந்த சமத்துவ நிலை 'பெரிய மனிதர்'களுக்குத் தனிச் சலுகை காட்டும் நம் நாட்டில் என்று ஏற்படுமோ! ஒருகால் என்றுமே ஏற்படாமலே போய் விடுமோ!

லெனின் சமாதி யிருந்த மண்டபத்துக்குள்ளே விளக்கொளி மங்கலாக இருந்தது. லெனினுடைய உடல்-அவர் வழக்கமாக உடுத்திய உடையோடு—திறந்த பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது. அந்த உருவம் கண்ணில்பட்டபோது அதைக் கண்ட மக்களுடைய உணர்ச்சியை நான் கூர்ந்து கவனித்தேன். பக்திப் பரவசம் அவர்கள் ஒவ்வொருவருடைய முகத்திலேயும் வெளிப்பட்டது.

லெனின், உறங்குவது போன்று காணப்பட்டார். அதைக் கண்டபோது, "உறங்குவதுபோலும் சாக்காடு" என்னும் குறள் வாக்கு என் நினைவுக்கு வந்தது. மண்ட

பத்தில் விளக்கொளி மங்கலாக இருந்தாலும், லெனின் உருவத்தின் மீது மட்டும் போதிய வெளிச்சம் போடப் பட்டிருந்தது. அதனாலும், மக்கள் அமைதியாகவும் வரிசையாகவும் சென்று கண்டதாலும், அவருடைய உருவத்தை எல்லோரும் நன்றாகக் காண முடிந்தது.

தோழர் லெனினுடைய வாழ்க்கை புரட்சி மய மானது, துன்பமயமானதுங்கூட. உலகப் பெருந் தலை வர்களிலே அவரைப் போன்று துன்பங்களை அனுபவித்த இன்னொருவர் இருப்பாரா என்பது ஐயப்பாடே. அவர் பலமுறை நாடு கடத்தப்பட்டோ, தாமாகவே நாட்டை விட்டு வெளியேறியோ ஆண்டுக் கணக்கில் அயல் நாடு களில் காலங் கழித்தார். மனிதனுக்கு இதைவிடவும் வேறு துன்பம் வேண்டுமோ?

லெனின் தலைமை தாங்கிய சோஷலிசப் புரட்சிக்கு எதிர்ப் புரட்சி நடத்தியோர், அவரை இரண்டு முறை சுட்டுக் கொல்ல முயன்றனர். அந்த விபத்துக்களி லிருந்தும் அவர் உயிர் தப்பினார். ஐம்பத்து நான்கு வயது அளவே அவர் வாழ்ந்தார். ஆயினும், பொது உடைமைப் புது உலகைப் படைத்த நவீன 'பிரம்மா' வாக வரலாறு அவரை வருணிக்கிறது. காந்தியடிகள் அகிம்சையில் அழுத்தமான பற்றுடையவர்; வன் முறையை விரும்பாதவர். அப்படியிருந்தும், அவர்கூட தோழர் லெனின் அவர்களுடைய சாதனைகளுக்காக அவரை வாயாரப் புகழ்ந்திருக்கிறார்.

இயற்கையாகவே மார்க்சீயத்தில் அழுத்தமான பற்றும், பொதுவுடைமைப் பூங்காவான சோவியத் ருஷ்யாவிடம் எல்லையற்ற மதிப்பும் கொண்டிருந்த நேருவும் மாவீரர் லெனினை மனமாரப் புகழ்ந்திருக்கிறார். அது வருமாறு:

"ருஷ்யப் புரட்சியை இரண்டாவது உலகப் பெரும் போரின் விளைவு என்று கூறுவதைவிட, கீழ்க் கண்டவாறு கூறுவது இன்னும் பொருத்தமாக இருக்கும்.

"ருஷ்யாவின் பொருளியல், சரித்திர நிலைமைகள் என்னும் மரத்திலே புரட்சியானது பூத்துக் காய்த்தது; உலகப் பெரும் போரினால் ருஷ்யாவுக்கு ஏற்பட்ட மகத்தான கஷ்ட நஷ்டங்கள் அக்காயைக் கனிவித்தன; பேரறிஞரும் புரட்சி மேதையுமாகிய லெனின் என்னும் கெட்டிக்காரர் அக்கனியைப் பக்குவமறிந்து பறித்து ருஷ்யர் கையிலே கொடுத்தார்."

—['உலக வரலாறு'; பக்கம்; 72.]

"லெனின்—அவருடைய அறிவு மிகவும் தெளிவு பெற்றது; அதில் ஐயம், திரிபு, மயக்கம் எதற்கும் இடம் கிடையாது. அவருடைய கண்களின் கூரிய பார்வை மக்களின் மன நிலைகளை அவ்வப்போது உணர வல்லதா யிருந்தது. அவருடைய புத்தியோ நன்கு சிந்தித்துத் தெளியப்பட்ட தத்துவங்களை மாறி வரும் நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றி அமைத்துப் பயன் படுத்தக்கூடியதாயிருந்தது. அவருடைய இதயமோ வஜ்ஜிரத்தை ஒத்தது; தான் வகுத்துக் கொண்ட நெறியினின்றும் மயிரிழை கூடப் பிறழாதது."

[உலக வரலாறு; 3-வது பாகம்; பக்கம். 86.]

காந்தியடிகளின் தலைமையையேயன்றி, அகிம்சையோடு பின்னிப் பிணைந்துள்ள காந்தியத் தத்துவத்தையும் ஏற்றுக் கொண்டவர் பண்டித நேரு. அவரே தோழர் லெனினுக்குப் புகழ்மாலை சூட்டினார் என்றால்,

அந்த உலகப் பெரு வீரனின் புகழை நான் வருணிக்க வார்த்தை ஏது?

லெனின் அப்பட்டமான கம்யூனிஸ்டு. வன்முறையை மனமார விரும்பியவரல்லவென்றாலும், வர்க்கப் புரட்சியிலே அது தவிர்க்க முடியாதது என்ற எண்ணமுடையவர். அதற்கேற்ற வரலாற்றையும் படைத்தவர். அவருடைய தியாகத்தையும் தீரத்தையும் சாதனைகளையும் புகழ்கின்ற ஒருவர் கம்யூனிஸ்டாகத் தான் இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. வரலாறு மாறுகின்ற போது—வர்க்கப் புரட்சி நடைபெறும் களம் மாறுகிறபோது-காலமும் மாறுகிறபோது புரட்சி முறையும் மாறலாம். மாறியதையும் கண்டு வந்திருக்கிறோம். ஆகவே, லெனின் சமாதியை கம்யூனிஸ்டு அல்லாத வனாகிய நான் கண்ணுற்றபோது, அந்த மாவீரனுடைய உருவம் என் மனத்துள் நிலையான ஒரு இடத்தைப் பெற்று விட்டது. மெய்ம் மறந்தவனாக அந்த வீரனுக்கு அஞ்சலி செலுத்தினேன்.

உண்மையான ஆத்திகர்கள் தங்கள் வழிபடு தெய்வத்திடம் எந்த அளவுக்குப் பக்தி செலுத்துகிறார்களோ, அதை விடவும் அதிக அளவில் சோவியத் மக்கள் மாவீரர் லெனினிடம் பக்தி செலுத்துகிறார்கள்.

லெனினுடைய உருவச் சிலையோ, உருவப் படமோ, அவரது பொன் மொழியோ மாஸ்கோவில் பார்த்த இடமெல்லாம் நம்முடைய பார்வையில் படுவது இயற்கை. வீதிகளிலே நடமாடுங்கால் லெனின் நினைப்பை நம்முடைய நெஞ்சிலே புகுத்துகின்ற ஏதாவது ஒரு சின்னம் நம்முடைய பார்வையில் படத்தான் செய்யும். அந்த அளவுக்கு லெனின் பக்தி வளர்க்கப் படுகிறது. இதனை, 'தனி நபர் வழிபாடு' என்று சொல்

வதற்கும் இடமுண்டு. மார்க்ஸிய தத்துவத்தில் தனி நபர் வழிபாட்டுக்கு இடமில்லை என்றும் சிலர் நம்பு கின்றனர்.

ருஷ்யப் புரட்சி நடந்த காலத்திலேயும், புரட்சிக் குப் பின்னர் புதிய ருஷ்யாவைப் படைப்பதிலேயும் முன் னணியிலிருந்து பாடுபட்டு மறைந்து போனவர்களுக் கும் லெனின் சதுக்கத்தில் சமாதிகள் இருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் தனித்தனி சமாதியிருக்கிறது. ஒவ் வொருவருடைய சமாதியின் மேலும் அவரவருடைய முக உருவம் வைக்கப் பட்டிருக்கிறது. பொதுவாகச் சொன்னால், லெனின் சதுக்கமானது புரட்சி வீரர்களின் சமாதிச் சதுக்கமாகக் காணப்படுகின்றது.

தோழர் லெனின் சமாதியின் அருகிலே, அவருக்குப் பின் சோவியத் ருஷ்யாவின் பிரதமராக இருந்து முப்ப தாண்டு காலம் புதிய ருஷ்யாவை உருவாக்கப் பாடு பட்ட தோழர் ஸ்டாலின் உடலும்—அவர் உறங்குகின்ற பாவனையிலே முன்னர் வைக்கப்பட்டிருந்ததாம். பின் னர் அது அங்கிருந்து அகற்றப்பட்டு விட்டதாகச் சொல்லப் படுகின்றது. அதற்கான காரணத்தை நான் அறியேனாதலால், என்னுடனிருந்த ருஷ்யர்களிடம் விளக்கம் கேட்க நான் விரும்பவில்லை.

தோழர் லெனினுடைய சகாக்களின் சமாதி வரிசை யிலே ஒரு இடத்தில் தோழர் ஸ்டாலினுடைய சமாதியும் இருக்கிறது. அதன் மேலே அவருடைய முக உருவத் தையும் கண்டேன். அதுகூட, குருஷேவ் பிரதமராக இருந்த காலத்தில் எடுக்கப்பட்டு, திரும்பவும் அங்கே வைக்கப்பட்டதாம். அது சோவியத் நாட்டின் உள் நாட்டு அரசியலாதலால், அதுபற்றி இங்கு விமர்சிக்க நான் விரும்பவில்லை.

லெனின் வழிபாட்டைப் பொறுத்த வரையில் அதனை ஒரு தனி நபர் வழிபாடாக மட்டும் சோவியத் மக்கள் கருதவில்லை. தத்துவ வழிபாடாகவும் கருது கின்றனர். ஆம்; தத்துவம் வேறு, தலைவன் வேறு என்று அவர்கள் எண்ணவில்லை. தலைவனின்றித் தத்துவமில்லை; தத்துவமின்றியும் தலைவனில்லை. தத்துவத்திற்கும் தலை வனுக்கும் மக்கள் துணையின்றி வெற்றி இல்லை. தத்து வம்—தலைவன்—மக்கள் ஆகிய மூன்றும் கலந்ததுதான் மனித சமுதாயத்தின் வரலாறு. சோவியத்தின் பொது வுடைமைப் பூங்காவின் வரலாறும் இதற்கு விலக்காக இருக்கவில்லை.

விஞ்ஞான சோஷலிசத்தின் கர்த்தாக்களான கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் ஏங்கல்ஸ் ஆகியோரின் வரிசை யிலே மூன்ருவது இடத்தைத் தோழர் லெனின் பெற்று விட்டார். அவருடைய முழுப் பெயர் விளதிமீர் இலியிச் உல்யானேவ் லெனின் என்பதாகும்.

நம் நாட்டிலே தாழ்குடியில் பிறந்து, தனது சொந்த முயற்சியினுல் முன்னேறி, தலைவனுக்குரிய தகுதியை ஒருவன் அடைவதென்பது அவ்வளவு எளி தானதன்று. அவன் ஒவ்வொரு அங்குலம் அங்குலமாகப் போராடிப் போராடித்தான் முன்னேற வேண்டும். ஏனெனில், இந்திய சமுதாயம் மேடு பள்ளங்கள் நிறைந் ததாகும் இங்கு தலைமையானது மேட்டுக்குடி மக்க ளுக்கே ஏக போகமென்று எண்ணப்படுகின்றது. பிறப் பால் உயர்வு தாழ்வு கருதப்படும் நம் நாட்டிலே 'லெனின்கள்' தோன்றுவது கஷ்டந்தான். ஆனுல், அந்த நாளும் வந்தே தீரும். தோழர் லெனின் நடுத்தர வர்க்கத்தில்தான் பிறந்தார். மிகவும் அல்லல்பட்டு முயன்று, உயர்தரக் கல்வி கற்றுப் பட்டம் பெற்ருர். படிப்பின்றியே அவர் தலைவராகி விடவில்லை. கணிதம்,

பொருளாதாரம் ஆகிய உயர் கலைகளிலே அவர் பேரறிவு பெற்றார். புரட்சியின்போதும் புரட்சிக்குப் பின்னும் அவர் எழுதிய நூல்கள் எண்ணற்றவை. அவை அவ்வளவும் அறிவுக் களஞ்சியங்கள். லெனின் சிறந்த கலா ரசிகர். இசையில் தனி அன்பு செலுத்தியவர். இலக்கியங்களிலே நல்ல ஞானமுள்ளவராக இருந்தார். இத்தனை தகுதிகளையும் கொண்டுதான் அவர் மனித சமுதாயத்தின் மாபெருந் தலைவரானார். ஆம்; அவர் நடுத்தர வர்க்கத்தில் பிறந்தாலும், பட்டதாரி; சிறந்த எழுத்தாளர்; நூலாசிரியர்; நாவலர்; இத்தனைக்கும் மேலாக எண்ணியதை முடிக்கும் செயல் வீரர்!

லெனின் வழிபாடு, செஞ்சதுக்கத்திலே நான் கண்ட அளவிலே மத ரீதியில் அமைந்ததன்று. சமாதி யருகே சடங்கு ஏதும் நிகழவில்லை. ஒரு லட்சியவாதியை —புரட்சி வீரனை-சாதனைகள் புரிந்த சரித்திர நாயகனை மக்கள் எப்படி வழிபட வேண்டுமோ அப்படித்தான் செஞ்சதுக்கத்திலே லெனின் வழிபாடு நடைபெறு கின்றது. ருஷ்ய மக்கள் லெனினை ஒரு புதிய தெய்வ மாக்கிவிட வில்லை. மனித குலத்தின் மாணிக்கமாகவே கருதி அஞ்சலி செலுத்துகின்றனர்.

சோவியத் மக்கள், தலைவன் வழிபாடு எப்படி நிகழ வேண்டுமென்பதற்குப் பிற நாடுகளுக்கும், பிற கட்சி களுக்கும் வழிகாட்டிகளாக விளங்குகின்றனர். ஆனால், சோவியத் நாட்டில் நான் இருந்தபோது ஒரு குறைபாடு என் பார்வையில் பட்டது. லெனின் எந்தத் தத்துவத் திற்கு வெற்றி தேடினாரோ, அந்தப் பொதுவுடைமைத் தத்துவத்தின் கர்த்தாக்களான கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கல்ஸ் ஆகியோருக்கு மாஸ்கோவில் அதிக அளவில் நினைவுச் சின்னங்கள் இல்லை. இங்கொன் றும் அங்கொன்றுமாகத்தான் இருந்தன.

தோழர் லெனின் மறைந்தபோது, அவர் சார்ந் திருந்த கட்சியின் மத்தியக் குழு, உழைப்பாளி மக்கள் அனைவருக்கும் ஒரு செய்தி விடுத்தது. அதில் லெனினைப் பற்றிய வருணனை வருமாறு:

"மார்க்சுக்குப் பிறகு தொழிலாளி வர்க்கத் தின் விடுதலை இயக்க வரலாற்றிலே காலஞ்சென்ற நமது தலைவரை-ஆசானை-நண்பரைஒத்த மாமனி தர் எவரும் தோன்றவில்லை. தொழிலாளி வர்க்கத் திடம் உண்மையிலேயே மகத்தானதாயும், வீரஞ் செறிந்ததாயும் விளங்கும் அஞ்சா நெஞ்சம், எஃகுப் போன்று உறுதி வாய்ந்த மனம், வளைந்து கொடுக்காத போக்கு, எல்லா இடையூறுகளையும் வெற்றி கொள்ளும் திறன், அடிமைத்தனத்தின் மீதும் ஒடுச்குமுறையின் மீதும் கொழுந்துவிட்டெரி கின்ற முடிவிலா வெறுப்பு, பெருமலைகளையும் அசைய வைக்கும் புரட்சிகரமான எழுச்சி, பொது மக்களின் ஆக்க ஆற்றல்களின்மீது கங்கு கரையில் லாத நம்பிக்கை, ஸ்தாபன அமைப்பில் பேரறிவு ஆகியவற்றின் உருவமே லெனின்."

இந்த வருணனையிலே பகுத்தறிவுக் கொவ்வாதது ஒன்றுமில்லை என்பதனை உணரலாம்.

மாவீரர் லெனின் தன்னை ஒரு 'நாத்திகர்' என்றே கூறிக் கொண்டார். மத நம்பிக்கை அற்றவராகவே வாழ்ந்தார். அந்த வகையில், மிகப் பெரிய சமூக சீர் திருத்த வாதியாகத் திகழ்ந்தார். ஆகவே, செஞ்சதுக் கத்தில் நடைபெறும் லெனின் வழிபாடு அவருடைய சமூக சீர்திருத்தக் கொள்கைக்கு முரண்பட்டதாக இல்லை. அப்படி நடைபெறவும் சோவியத் அரசு அனு மதிக்காது.

லெனின் வழிபாடு முடிந்து செஞ் சதுக்கத்தை விட்டு நாங்கள் வெளியேறியபோது பகல் இரண்டு மணி இருக்கும். கியூவரிசையில் சென்று லெனின் வழிபாட்டை முடிக்கச் சரியாக இரண்டு மணி நேரம் பிடித்தது. என் கால்கள் சோர்ந்து விட்டன. ஆனால், என் மனத்திலே ஏற்பட்ட புதிய தெம்பும், சுமார் அரை நூற்றுண்டுக்கு முன்பு மாண்டுவிட்ட ஒரு மாவீரனை உறங்கும் கோலத்தில் கண்ட உற்சாகமும் உடற் சோர்வைச் சமாளிக்க உதவின.

இதற்குப் பின், நாங்கள் இஸ்லாமியர் தொழுகை நடத்தும் ஒரு மசூதியைப் பார்த்தோம். அதனைப் பார்ப்பதிலே எனக்கு தனி ஆர்வம். சோவியத் நாட்டிலே தெய்வ வழிபாட்டிற்கும் மதத்திற்கும் எந்த அளவு மதிப்புத் தரப்படுகின்றது என்பதனை அறிந்து கொள்ளும் ஆர்வத்துடனும் நான் மாஸ்கோ சென்றே னல்லவா! அதைப் பற்றிக் கொஞ்சம் விரிவாகவே விமர்சிக்க விரும்புகின்றேன்.

மதங்களும் மக்களும்

சோவியத் ருஷ்யாவிலே, மக்கள் எந்த அளவில் மதம் அல்லது மதங்களோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்பதனை அறிய முயன்றேன். அதற்காக, பாதிரிகள், மௌல்விகள் போன்ற மதவாதிகளோடு தொடர்பு கொள்ள வேண்டுமென்றும் விரும்பினேன். முயன்றால், அவர்களை நான் சந்திப்பதற்குத் தடை எதுவும் இருக்கவில்லை என்பதே எனது நம்பிக்கை. ஆயினும், அதற்குப் போதிய அவகாசம் எனக்கு இருக்கவில்லை. மேலும், மொழிச் சிக்கல் வேறு. இந்த முயற்சியிலே, ருஷ்ய—தமிழ் மொழிகள் தெரிந்த ஒருவரின் துணையைப் பெறுவதும் இயலாததாக இருந்தது. அதனால், சுற்றுலாவின்போது என்னுடனிருந்த ஆப்பிரிக்காசிய உறவுக் குழுவைச் சார்ந்த ருஷ்யர்கள் வாயிலாகவே அறிந்துகொள்ள முயன்றேன். மாஸ்கோவிலுள்ள தமிழ் நண்பர்களும் இத்துறையில் எனக்கு உதவி புரிந்தனர்.

கம்யூனிஸ்டுக் கட்சிக்குத் தெய்வ நம்பிக்கையோ, மத நம்பிக்கையோ கிடையாதென்று சோவியத் பிரசுரங்கள் ஒளிவு மறைவின்றிக் கூறுகின்றன.

"கம்யூனிஸ்ட் கட்சி நாத்திக வாதத்தைப் போதிக்கிறது. கடவுள் விருப்பம் என்று கூறப்படுவ

தால் எதுவும் நடப்பதில்லை என்று பிரச்சாரம் செய்கிறது என்பது உண்மைதான்.''

[நிகொலாங் மிகைலோய் எழுதிய ''லெனின் பற்றிய கதைகள்''; பக்கம்: 72.]

''மத சம்பந்தமான தன் கருத்துக்களைக் கம்யூனிஸ்டுக் கட்சி என்றுமே மறைத்ததில்லை. அது மட்டுமல்ல; மதத்தை எதிர்த்துப் போராடுவது அவசியம் என்றும் கருதுகின்றது. ஆனால் இந்தப் போராட்டம் மனத்தை மாற்றும் போராட்டமாக இருக்க வேண்டுமே தவிர, வன்முறைப் போராட்டமாக இருக்கக்கூடாது. அதுவும் முற்றிலும் சித்தாந்தப் போராட்டமாக இருக்க வேண்டும் என்றும் கட்சி விரும்புகிறது. அத்துடன், ஆத்திகர்களின் மத நம்பிக்கைகளையும், மத உணர்வுகளையும் எவ்வகையிலும் புண்படுத்திவிடக் கூடாது என்பதில் கண்ணுங் கருத்துமாக இருக்கிறது.''

[''சோவியத் யூனியனில் மத வழிபாடு''; பக்கம்: 31]

இந்தச் சான்றுகளைக் கொண்டு பார்த்தால், சோவியத் ருஷ்யாவிலுள்ள ஆளுங் கட்சி நாத்திக உணர்வுடையதுதான் என்பதில் ஐயமில்லை. தெய்வ—மத நம்பிக்கையுடைய ஆத்திகர்கள், வாய்மையை மதிக்கக் கூடியவர்களானால், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியினரின் நாத்திக நெறியை ஏற்காவிடினும், அதனை ஒளிவு மறைவின்றி அவர்கள் ஒப்புக் கொள்வதனைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றனர்.

மார்க்சிய வாதிகள்—அதாவது, கம்யூனிஸ்டுகள், கடவுள் நம்பிக்கையற்றவர்களாக இருப்பதற்கு லெனின் காரணம் கூறுகிறார். அது வருமாறு:

"கடவுளின் கட்டளைகளை—நீதி நெறிகளின் ஆதாரமாக அமைத்த முதலாளித்துவம் இவற்றுக்கு வழங்கியுள்ள பொருளில் இவற்றை நாம் நிராகரிக்கிறோம். இதுபற்றி எமக்குக் கடவுளிடத்தில் நம்பிக்கை கிடையாதென நாம் கூறுகிறோம். சமய குருக்கள, நிலவுடைமையாளர்கள், முதலாளித்துவ வர்க்கத்தினர் ஆகியோர் தாம் சுரண்டுவோர் என்ற முறையில் தம்முடைய நலன்கள் மேலும் பெருகுவதற்காகவே கடவுளின் பெயரை வழிபடுகின்றனர் என்பதனை நாம் நன்கறிவோம்.

"மனித இயல்புக்கு அப்பாற் பட்டவற்றை அல்லது வர்க்கக் கருத்துக்களுக்கு அப்பாலானவற்றை அடிப்படையாகக் கொண்ட இந்த ஒழுக்கத்தையும் நாம் நிராகரிக்கிறோம். இது நிலச் சொந்தக்காரர்கள், முதலாளிகள் நலனுக்காகத் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் மோசடி செய்வது, வஞ்சிப்பது, பயனற்றவர்களாக்குவது என்று நாம் கூறுகிறோம்."

["இளைஞர் பிரச்னை குறித்து லெனின்"; பக்கம்: 31]

லெனின், "கடவுள் கட்டளைகளை முதலாளித்துவம் வழங்கியுள்ள பொருளில் நாம் நிராகரிக்கிறோம்." என்றுதான் கூறுகிறார். இது, ஆத்திகர்களுக்கு ஆறுதலளிப்பதாகும். உண்மையில் முதலாளித்துவ—நிலப்பிரபுத்துவ வர்க்கங்களும், அவர்களைச் சார்ந்து வழி வழியே மூட நம்பிக்கைகளை வளர்த்து வந்துள்ள மதவாதிகளும் கடவுளை எப்படி எப்படியெல்லாமோ பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். ஒருவன் இருந்துண்பதற்கும் இன்னொருவன் இரந்து திரிவதற்கும் கடவுளின் கட்டளை

தான் காரணம் என்கிறது புரோகித மதம். ஆனால், இது ஆன்ம ஞானிகள் அங்கீகரித்ததன்று. வள்ளுவர்,

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்,
பரந்துகெடுக உலகியற்றி யான்"

என்கின்றார். இந்தக் குறள் லெனின் அவர்களின் கவனத்துக்குச் சென்றிருந்தால், "வள்ளுவர் கூறும் பொருளில் நானும் கடவுளை நம்புகின்றேன்" என்று அவர் சொல்லியிருக்கலாம்.

இது எப்படியாயினும் சரி; மதத்தின் பெயரால் மக்கள் சுரண்டப் பட்டார்கள் என்பதனை அகில உலகக் கண்ணோட்டத்தில், ஆராய்ச்சி ரீதியில் கண்டறிந்ததன் விளைவாகவே, சோஷலிசத்தின் மூலவரான காரல் மார்க்ஸ் கூட மத நம்பிக்கைக்கும் கடவுள் நம்பிக்கைக் கும் எதிரியானார். வள்ளற் பெருமான் கூட,

"கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டிய பல்சமயக்
கூட்டமும், அக் கூட்டத்தே கூவுகின்ற கலையும்
கள்ளமுறும் அக்கலைகள் காட்டியபல் கதியும்
காட்சிகளும் காட்சிதரும் கடவுளரும் எல்லாம்
பிள்ளைவிளை யாட்டு..."

என்று பாடினார். உண்மையிலேயே மதம் மக்களுக்கா கவே பயன்படுமானால், அந்த மதத்தை சோஷலிச நாட் டிலும் வளர்ப்பதில் தவறில்லை. வளர்க்கவும் சோவியத் நாட்டில் தடை போடவில்லை. ஆனால், சொத்துரிமை யோடு கூடிய மத நிறுவனங்களோ, இறை வழிபாட்டுத் தலங்களோ சோவியத் ருஷ்யாவில் இருக்கவில்லை.

"குருமார்கள், பழங்காலக் குருமார்களைப் போல, பக்தர்கள் அளிக்கும் நன்கொடைகளைக் கொண்டு, ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை வாழ

வேண்டும் என்கிறார், கம்யூனிசத்தின் மூலவரான காரல் மார்க்ஸ். எல்லா மதச்சின்னங்களும், உருவச் சின்னங்களும், சித்தாந்தங்களும் பிரார்த்தனைகளும்—வேறு விதமாகச் சொன்னால், தனி மனிதனது மத நம்பிக்கை சம்பந்தப்பட்ட யாவும் பள்ளிக் கூடங்களிலிருந்து அகற்றப்பட வேண்டுமென்று பாரிஸ்கம்யூனிலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது."

["சோவியத் யூனியனில் மதவழிபாட்டுச் சுதந்திரம்"; பக்கம் 20.]

இது, ஒரு சமயத்தில் பாரிசில் சோஷலிச ஆட்சி தோன்றியபோது, அங்கு கல்விக்கும் மதத்திற்கும் சம்பந்தமில்லாத வகையில் சோஷலிச அரசு எடுத்த நடவடிக்கை பற்றி ஏங்கல்ஸ் எழுதியதாகும்.

உண்மையில், சோவியத் ருஷ்யாவில் மத சுதந்திரம் முழு அளவில் வழங்கப் பட்டிருப்பதாகவே சொல்லப் படுகிறது.

"அரசைப் பொறுத்த வரையில் மதம் தனி நபர்களின் சொந்த விவகாரம் என்று நாம் கருதுகிறோம். மத விஷயத்தில் அரசாங்கம் அக்கறை காட்டக்கூடாது. சமய நிறுவனங்களுக்கும், அரசாங்க நிறுவனங்களுக்கும் எத்தகைய தொடர்பும் இருக்கக் கூடாது. எவரும் தம் விருப்பப்படி எந்தச் சமயத்யையும் பின்பற்றுவதற்கோ, அல்லது மத நம்பிக்கை இல்லாத நாத்திகராக இருப்பதற்கோ முழு அளவு உரிமை இருக்க வேண்டும். மத நிறுவனங்களுக்கு மானியங்கள் அளிப்பதோ, அலவன்ஸ் வழங்குவதோ கூடாது. மத நம்பிக்கை உள்ளவர்கள், சுய விருப்ப அடிப்படையில் அரசுக்கு சம்பந்தப்

படாமல் அமைத்துக்கொள்ளும் சுதந்திர நிறுவனங்களாக மத ஸ்தாபனங்கள் விளங்க வேண்டும்."

என்பது, ருஷ்யாவில் சோஷலிச ஆட்சி அமைந்தபோது லெனின் விடுத்த பிரகடனமாகும்.

['சோவியத் யூனியன்—மத வழிபாடு'; பக். 21]

ருஷ்யாவில் சோஷலிச ஆட்சி அமைந்து அரை நூற்றாண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இந்த நீண்ட கால அனுபவத்தைக் கொண்டு சோவியத் யூனியனில் இறை வழிபாடோ, மத அனுஷ்டானமோ தடுக்கப்படவில்லை என்று மதவாதிகளே கூறுகின்றனர். சோவியத் யூனியனிலே சர்ச்சுகளும் மசூதிகளும் உள்ளன. மாஸ்கோவிலும், கஜக்ஸ்தான் மாநிலத் தலைநகரான 'அலம்—அதா' விலும் நான் மசூதிகளைக் கண்டேன். நான் அவற்றைக் கண்ட நேரம் வழிபாட்டு நேரமல்லவாதலால், எவ்வளவு மக்கள் சென்று அந்தத் தெய்வத் தலங்களில் வழிபாடு நிகழ்த்துகிறார்கள் என்பதைக் கண்ணாரக் காண வாய்ப்பில்லை. ஆயினும், மத நம்பிக்கை உடையவர்கள் நாள் தோறும் தொழுகை ஸ்தலங்களில் கூடி இறைவழிபாடு நிகழ்த்துகிறார்கள் என்பதை மாஸ்கோவிலுள்ள தமிழர்கள் மூலம் அறிந்து கொண்டேன்.

மதம் மக்களிடையே ஒழுக்கத்தை வளர்க்கும் ஒரு சாதனமாகத்தான் தோன்றியது. அதற்காகவே அது இனியும் தேவைப்படுவதாக நாம் நம்புகின்றோம். இனியும் என்ன, என்றென்றைக்குமே மதம் இல்லாமல் மக்கள் ஒழுக்க வரம்புக்குள் காலூன்றி நின்று வாழ்க்கை நடத்த முடியாதென்று நம் நாட்டில் மிகப் பெரிய அறிவாளிகள் கூட உண்மையாகவே நம்புகின்றனர். ஆனால், லெனின், விஞ்ஞான சோஷலிசத்தின் அடிப்படை

யில் வேறு விதமான வாதத்தை மனித சமுதாயத்தின் முன்பு வைத்திருக்கிறார்:

"கம்யூனிஸ்டுகள் ஒழுக்க நெறிகள் அனைத்தையும் நிராகரிக்கிறார்கள் என்று திரும்பத் திரும்ப முதலாளித்துவ வர்க்கம் நம் மீது குற்றம் சாட்டுகிறது. இது தொழிலாளிகள், விவசாயிகள் கண்களில் மண்ணைத் தூவி, பிரச்னையைக் குழப்பும் உபாயம்தான்.

"நாம் எந்த வகையான பொருளில் ஒழுக்கத்தையும் நீதி நெறியையும் நிராகரிக்கிறோம். மனித இயல்புக்கு அப்பாற்பட்டவற்றை அல்லது வர்க்கக் கருத்துக்களுக்கு அப்பாலானவற்றை அடிப்படையாகக் கொண்ட எந்த ஒழுக்கத்தையும் நாம் நிராகரிக்கிறோம்.

"நமது ஒழுக்க நெறியானது தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்திற்கு முற்றிலும் கீழ்ப்பட்டதாகும். நமது ஒழுக்க நெறி தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்ட நலன்களிலிருந்து தோன்றுவதாகும்."

["இளைஞர் பிரச்னைகள் குறித்து லெனின்"; பக்கம். 31]

காந்தியடிகள், பொருளாதார ரீதியிலான விஞ்ஞான சோஷலிசத்தை அப்படியே ஏற்றுக் கொண்டார். வன்முறையல்லாத சாத்வீக முறையில் சோஷலிச சமுதாயம் படைப்பதற்கான புரட்சியையும் அவர் ஆதரித்தார். ஆனால், தெய்வ நம்பிக்கையின் அடிப்படையில்தான் சோஷலிச சமுதாயம் அமைய வேண்டுமென்பதில், அவர் உறுதி காட்டினார். அடிகளின் தெய்வ நம்பிக்கையோ, மத நம்பிக்கையோ முதலாளித்துவ

சக்திகளுடைய தெய்வ—மத நம்பிக்கைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தென்பதை இங்கு நாம்நினைவில் கொள்ள வேண்டும்.

மாஸ்கோவில் மக்களிடையே மிகச் சிறந்த ஒழுக்க முறை நடைமுறையிலிருக்கக் கண்டேன். உண்மையி லேயே மத நம்பிக்கையின் மூலம்தான் மக்களிடையே ஒழுக்கத்தை வளர்க்க முடியும் என்பதில் எனக்கு உள்ள உறுதியைத் தளர்த்திவிடக் கூடியதாயிருந்தது மாஸ் கோவில் எனக்கேற்பட்ட அனுபவம்.

'செக்ஸ்'—அதாவது, வரம்பு மீறிய காம உணர்ச்சி மாஸ்கோ நகரில் என் கண்ணில் படவில்லை. பாரிசுடனும் லண்டனுடனும் ஒப்பிடுங்கால், மாஸ்கோவில் மக்களு டைய வாழ்க்கை ஒழுக்கத்தோடு உறவு கொண்ட தாகவே இருக்கிறது. இது எனக்கு ஒரு வகையில் வியப் பைத் தந்ததென்றே நான் இங்கு கூற வேண்டும். வரம்பு மீறிய காம உணர்ச்சி இல்லாத ஒழுக்கத்தை மட்டு மின்றி, பொய்—களவு முதலியவற்றிலும் பாரிசையும் லண்டனையும் விடவும் மாஸ்கோ நகர மக்கள் தூய்மை மிகுந்தவர்களாக இருக்கக் கண்டேன்.

சோவியத் ருஷ்யாவில் நாத்திகப் பிரச்சாரம் செய் வதற்கு உரிமை வழங்கப் பட்டிருக்கிறது என்று ஏற்க னவே சொன்னேன். ஆனால், ஆத்திகர் நெஞ்சங்களைப் புண்படுத்தும் வகையில் நாத்திகரோ, நாத்திகர் நெஞ்சங்களைப் புண்படுத்தும் வகையில் ஆத்திகரோ பிரச்சாரம் செய்வது கிரிமினல் குற்றமாக்கப் பட்டிருக் கிறது. அத்தகைய குற்றத்திற்குக் கடுமையான தண் டனையுண்டு. ஆத்திகர்களின் நெஞ்சங்கள் புண்படும் படிப் பிரச்சாரம் செய்ததற்காகப் பலர் தண்டனை பெற் றிருக்கிறார்கள் என்றும் சோவியத் பிரசுரங்கள் கூறு கின்றன.

"உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்துள்
அலகையாய் வைக்கப் படும்."

என்னும் குறளின் கருத்தும், "நாத்திகம் சொல்கின்ற வர்தம் நாக்கு முடை நாக்கு, நாக்கு ருசி கொள்ளு வதும் நாறிய பிண்ணுக்கு" என்ற அருட்பாக் கருத்தும், "ஆத்தமானார் அயலவர் கூடி, நாத்திகம் பேசி நாத் தழும் பேறினர்" என்ற மணிவாசகரின் திருவாசகமும் சோவியத் நாட்டில் சட்ட விரோதமானவை போலும்!

ஒன்றை மட்டும் நான் இங்கு சொல்லியாக வேண்டும். ருஷ்யாவில் சோஷலிச ஆட்சி அமைந்த பின்னர், மூட நம்பிக்கையோடு கூடிய—சுரண்டல் வாதி களின் கருவியாக விளங்கிய மத உணர்வு முடிவுக்கு வந்து விட்டது. முற்றிலும் ஆன்மீக உணர்வோடு கூடிய மதம் அங்கு நீடித்தும் நிலைபெற்றும் இருக்கிறது.

மத உணர்ச்சியிலே வேறு எந்த மதத்தவரை விடவும் இஸ்லாமியர்கள் மிகுந்த உறுதியும் உண்மைத் தன்மையும் உடையவர்கள் ஆவர். அப்படிப்பட்ட வர்கள், சோவியத் நாட்டிலே எந்த அளவில் மதத்தைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதனை ஆராய்வது மிகவும் பயன் தருவதாகும்.

நான் சோவியத் நாட்டிலிருந்த ஏழு நாட்களிலே, இரண்டு நாட்களை கஜக் குடியரசிலே கழித்தேன். அந்தக் குடியரசில், பூர்வ குடிகளான கஜாக்கியர்களே மிகப் பெரும்பான்மையோர். இவர்கள் இஸ்லாமியப் பாரம்பரியத்தைச் சார்ந்தவர்களாவர். அதனால், அந்த மாநிலத்திற்கு நான் சென்றபோது, அங்கு என்னுடன் தொடர்பு கொண்ட ஆப்பிரிக்காசிய உறவுக் குழு நிர்வாகிகளுடன் உரையாடி, இஸ்லாமியர்களின் மத உணர்ச்சிபற்றி அறிந்து கொள்ள முயன்றேன்.

சோவியத் யூனியனில் இஸ்லாத்தைப் பின்பற்று பவர்கள் கஜக் குடியரசில் மட்டுமின்றி, வேறு பல குடி யரசுகளிலும் வாழுகின்றனர். முஸ்லிம்களிடையே சுன்னி, ஷியா என்னும் இருவேறு பிரிவுகள் இருக் கின்றன. ஆனால், அவர்கள் கருத்தொருமித்து வாழ் கின்றனர். அவர்களிடையே பிளவு எதுவும் இல்லை. முஸ்லிம் போர்டுகள் மத சம்பந்தமான நிர்வாகக் காரியங்களைக் கவனித்து வருகின்றன. முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளின் காங்கிரசே இந்த போர்டுகளைத் தேர்ந் தெடுக்கின்றன. அந்தக் காங்கிரஸே மிக உயர்ந்த அதிகாரம் படைத்த அமைப்பாகும்.

சோவியத் நாட்டில் உள்ள உஸ்பெக்குகள், தாஜிக் குகள், துருக்மென்கள், கிர்கிசுகள், கஜாக்குகள் தத்தார்கள், பட்சீர்கள், அஜர்பைஜானியர்கள் ஆகிய தேசிய இனங்களைச் சார்ந்தவர்களிலே மிகப் பெரும் பான்மையினர் இஸ்லாமிப் பாரம்பரியத்தினராவர்.

ஜார் ஆட்சிக் காலத்திலே ருஷ்ய நாட்டில் மதங் களிடையே சமநீதி இருக்கவில்லை. கிறித்துவத் திருச்சபை களுக்கே ஜார் ஆட்சி மிகுதியான சலுகைகள் காட்டி வந்தது. இஸ்லாம் உள்ளிட்ட பிற சமயங்கள் புறக் கணிக்கப்பட்டு வந்தன. ஜார் ஆட்சி வீழ்ந்து சோவியத் ஆட்சி தோன்றிய பின்னர், மதச் சுதந்திரம் வழங்கப் பட்டது அதனால், கிறித்துவத் திருச்சபைகளுக்கிருந்த விசேஷ சலுகைகள் மறைந்தொழிந்தன. இது, சோவியத் இஸ்லாமியர்களுக்கு மன ஆறுதலைத் தந்தது. இத்துடன், இஸ்லாம் உட்பட ஜார் ஆட்சியில் ஒடுக்கப் பட்ட கிறித்துவம் அல்லாத மதங்களுக்கு சோவியத் அரசு கீழ்வருமாறு அறிவித்தது:

"இப்போது முதல் உங்கள் மதமும் பழக்க வழக்கங்களும் தேசிய கலாசார நிறுவனங்களும்

சுதந்திரமானவைகளாக, மீறக் கூடாதவைகளாக அறிவிக்கப்படுகின்றன. இது உங்கள் உரிமை. எல்லா ருஷ்ய தேசிய இன மக்களின் உரிமைகளைப் போலவே உங்கள் உரிமைகளும், புரட்சி அரசால் --தொழிலாளர்கள், படை வீரர்கள், விவசாய மக்களுடைய பிரதிநிதிகளின் சோவியத்தால் பாது காக்கப்படுகின்றன என்பதை மறந்துவிட வேண் டாம்,"

[சோவியத் யூனியனில் மத வழிபாடு: பக்கம் 16]

ஏழு அல்லது எட்டாவது நூற்றுண்டில் எழுதப் பட்டதாகக் கருதப்படும் உஸ்மானின் திருக்குரான் சோவியத் ஆட்சி அமைந்ததும், முஸ்லிம்களுக்குத் திருப் பிக் கொடுக்கப்பட்டது. இப்போது அந்தத் திருக்குரான் தாஷ்கண்டில் அதற்காகவே விசேஷமாக கட்டப்பட்ட ஒரு கட்டிடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

சோவியத் யூனியனிலுள்ள கத்தோலிக்கக் கிறித் துவர்களிடையேயும், புராடஸ்டண்ட் கிறித்துவர்களிடை யேயும் பிற முதலாளித்துவ நாடுகளிலுள்ளது போன்ற பூசல் அல்லது கருத்துப் போர் இருந்து வரவில்லை. ஒருமைப்பாடு நிலவுகின்றது. இரு சாராரையும் சம நிலையிலே நடத்துகின்றது சோவியத் அரசு.

சோவியத் யூனியனில் யூத சமயத்தினரும் வாழ் கின்றனர். அவர்கள் மற்ற சகோதர சமயங்களைச் சார்ந்த மக்களுடன் ஒரு சோஷலிச சமுதாயத்திற்குரிய பரஸ்பர அன்புணர்வோடு உறவு கொண்டிருக்கின்றனர். சோவியத் யூனியனில் யூதக் கோவில்கள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டதால் நான் மாஸ்கோவிலிருந்த போது, அவற்றைப் பார்க்க மிகுந்த ஆர்வம் கொண் டேன். ஆனால், நிகழ்ச்சிகள் அமைந்திருந்த முறையிலே

அதற்கான அவகாசத்தைப் பெற என்னால் இயலவில்லை. சோவியத் நாட்டில் சிறந்த விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், ஓவியக் கலைஞர்கள், இசைவாணர்கள் போன்றோர்களில் பலர் யூதர்களாம். பொதுவாக, ஐரோப்பாவில் சில நாடுகளில் இருந்து வரும் யூத எதிர்ப்பு மனப்பான்மை சோஷலிச நாடான சோவியத்திலே இருக்கவில்லை.

சோவியத் யூனியனில் உள்ள இஸ்லாமியர்களில் சமயப் பற்றுடையோர் ஆண்டுதோறும் சவூதி அரேபியாவுக்குப் புனித யாத்திரை செல்கின்றனர். நபிகள் நாயகத்தின் சமாதியையும் இதர புனித இடங்களையும் தரிசித்து விட்டுத் திரும்புகின்றனர். அதற்குத் தடை எதுவும் இல்லை.

அப்படியே, சோவியத் கத்தோலிக்கத் திருச்சபையைச் சார்ந்த கிறித்துவர்கள் போப்பாண்டவரின் ஆன்மீக மேலாணையை ஏற்றுக் கொண்டு அவரைப் பெரிதும் போற்றி வருகின்றனர். புத்த மதத்தைச் சார்ந்தவர்களும் சோவியத் நாட்டில் இருக்கின்றனர். மற்ற மதங்களைச் சார்ந்தவர்களைப் போல அவர்களிலும் விருப்பமுடையோர் தம் சொந்த மதத்தைப் பின்பற்றி ஆன்மீக நெறிகளில் ஈடுபட்டு வாழ்கின்றனர்.

சோவியத் நாட்டில், நாத்திகர்களால் தரக் குறைவாகத் தாக்கப்படாதவாறு ஆத்திகர்களுக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு இருந்து வருகிறது. அக்டோபர் புரட்சிக்கு முன்பு ஜார் ஆட்சியில் இருந்த அளவுக்கு மத நம்பிக்கையோ, மதப் பழக்க வழக்கங்களோ இப்போது மக்களிடையே இருக்கவில்லை என்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது. இதற்குக் காரணம், மக்களிடையே விஞ்ஞான ரீதியான அறிவியக்கம் வளர்ந்து வருவது தான் என்று சோவியத் பிரசுரங்கள் கூறுகின்றன.

பொதுவாக, நம் நாட்டிலே மதச் சடங்குகள் அறிவுக்குப் பொருந்தாதவையாக இருக்கின்றன; மக்களுடைய வாழ்க்கைக்கு எந்த வகையிலும் பயன் படாதவையாக இருந்து வருகின்றன என்ற எண்ணம் உயர் தரக் கல்வி கற்ற ஆத்திகர்களிடையேயும் இருந்து வருகின்றன. தெய்வ வழிபாடுகூட ஆத்திகர்களில் மிகப் பெரும்பாலோர் விஷயத்தில் வெறும் பாசாங்காகி விட்டது.

சோவியத் யூனியனில் ஆத்திகர் எவ்வளவு பேர் நாத்திகர் எவ்வளவு பேர் என்ற புள்ளி விபரத்தை அறிய முயன்றேன். எனக்குத் தரப்பட்ட ஒரு நூலிலே அதுபற்றிக் காணப்படும் குறிப்பு வருமாறு:

> "சோவியத் யூனியனில் எத்தனை ஆத்திகர்கள் இருக்கிறார்கள்; எத்தனை நாத்திகர்கள் இருக்கிறார்கள் என அடிக்கடி கேட்கப்படுகிறது. இது குறித்துத் துல்லியமான புள்ளி விவரங்கள் தருவதற்கு இயலவில்லை. ஏனெனில், அரசாங்க தஸ்தாவேஜுகளில் குடி மக்களின் மதச் சார்பு குறிக்கப்படுவது கிடையாது. மேலும், எவரிடமும் அவரது மதக் கருத்துக்களைப் பற்றிக் கேட்பதற்கு எந்த அதிகாரிக்கும் உரிமையில்லை. ஆயினும், ஒன்றுமட்டும் நிச்சயமாகக் கூறலாம். சோவியத் நாட்டில் மத நம்பிக்கை கொண்டோரின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருகிறதே தவிர, அதிகரிக்கவில்லை."
>
> ['சோ. யூ. மத வழிபாடு'; பக்கம். 33]

சோவியத்தில் மத நம்பிக்கை குறைந்து வருவதற்குக் கீழ்வருமாறு சமாதானம் கூறப்படுகின்றது:

> "கோயிலுக்குப் போக வேண்டுமென்ற கட்டாயம் அகற்றப்பட்டு விட்டதால் சோவியத் ஆட்சிக்

காலத்தில் திருச்சபையின் ஆதரவாளர்கள் எண்ணிக்கை குறைந்துவிட்டது. இலாப நோக்கத்தோடு கோயிலுக்குச் சென்று வந்தவர்கள், அரசாங்கத்திலிருந்து மதத்தைப் பிரித்த பிறகு அதைக் கைவிட்டுவிட்டனர்.

"மத குருமார்களும், மெய்யான மதநம்பிக்கை உள்ளவர்களும் மட்டுமே நீடித்து திருச்சபையிடம் விசுவாசமாக உள்ளனர்."

தமிழக அரசின் கீழ் இந்து சமய அறத்துறை இயங்கி வரக் காண்கின்றோம். சோவியத் அரசிலும் இது போன்ற ஒரு துறை இருந்து வருகின்றது.

"சோவியத் அமைச்சரவையின் கீழ் தனியாக ஒரு மதத்துறை இருக்கிறது. 'மத விவகாரங்கள் கவுன்சில்' என்று இது அழைக்கப்படுகிறது. சமயச் சட்டங்கள் சரிவரக் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதனை இந்தத் துறை கண்காணிக்கின்றது. மத நம்பிக்கை உள்ளவர்களின் சமய ரீதியான தேவைகளைப் பூர்த்திசெய்வது சம்பந்தமான பிரச்னைகள் பற்றியும் முடிவெடுக்கிறது.

"மத நிறுவனங்கள் எழுப்பும் பிரச்னைகள் சம்பந்தமாக சோவியத் அரசு தக்க முடிவுகள் எடுப்பதற்கு உதவிகரமாக இந்தக் கவுன்சில் அப்பிரச்னைகளைப் பற்றி ஆராய்கிறது.

"கோயில்களும் மத சித்தாந்தப் பள்ளிகளும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வதற்கும், பழைய கோயில்களைப் பழுது பார்ப்பதற்கும், அவற்றையும் சமய சம்பந்தமான இதர கட்டிடங்களையும்

புதிதாகக் கட்டுவதற்கு வேண்டிய கட்டிடப் பொருள்களை வழங்குவதற்கும், மெழுகு வர்த்திகள் போன்ற வழிபாட்டுப் பொருள்களைத் தயாரிப்ப தற்கு வகை செய்வதற்கும், மத நூல்களை வெளி யிடுவதற்கும், வெளிநாடுகளில் சுற்றுலாச் செய்ய விரும்பும் மத குருமார்களுக்கு அன்னியச் செலா வணி வசதி செய்து தருவதற்கும் இந்த மத விவ காரங்கள் கவுன்சில், மத நிறுவனங்களுக்கு ஒத்தாசை செய்து வருகிறது.''

['சோ. யூ. மத வழிபாடு'; பக்கம்: 20]

பொதுவாகப் பார்க்குமிடத்து, சோவியத் ருஷ்யா முழுக்க முழுக்க நாத்திக நாடாகி விடவில்லை என்பது மட்டும் உண்மை.

உலகில் முழுக்க முழுக்க உண்மையான ஆத்திகர் களையே கொண்டது என ஒரு நாடு இல்லாதது போலவே, முழுக்கமுழுக்க நாத்திகர்களையே கொண்டது எனவும் ஒரு நாடு இதுவரை தோன்றவில்லை. இது, இயற்கையின் விதி. இந்த விதிக்கு சோவியத் ருஷ்யாவும் விலக்கன்று.

உண்மையான ஆத்திகர்களும் உறுதியான நாத்தி கர்களும் சோவியத் யூனியனில் கலந்து வாழ்வதால், அங்கு, ஆத்திக—நாத்திகர்களிடையே கடுமையான கருத்துப் போர் நிலவுகிறதென்ற ஒரு எண்ணம் உலகில் இருந்து வருகின்றது. அப்படி ஒரு நிலை ஏற்படுவதற்கு சந்தர்ப்பமில்லாமல் சோவியத் அரசு சட்ட திட்டங்களை வகுத்து சமுதாயத்தை சமாதான வழியில் நடத்திச் செல்லுகிறது.

சமுதாய ஒற்றுமைதான் சோஷலிசத்தின் வெற்றிக்கு அடிப்படை என்பது மார்க்ஸீய வாதிகளின் நம்பிக்கை.

ஆகவே, மத வெறுப்புக் காரணமாகவோ, நாத்திகத்தில் கொண்ட நம்பிக்கை காரணமாகவோ கூட, சோவியத் மக்களிடையே பூசலும் போராட்டமும் தோன்ற அவர்கள் அனுமதிப்பதற்கில்லை அல்லவா!

இதோ, மதம் பற்றிய மார்க்ஸிய வாதிகளின் கண்ணோட்டத்திற்கு இன்னொரு சான்று எடுத்துக் காட்டுகிறேன்:

"நாத்திகர்கள் என்ற வகையில் கம்யூனிஸ்டுகள் மத அடிப்படையில் மக்களிடையே சண்டையும் சச்சரவும் ஏற்படுவதை எக்காலத்திலும், அணுவளவும் ஆதரிப்பவர்கள் அல்லர். பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கட்சி, பரிபூரண மனச்சாட்சிச் சுதந்திரத்திற்காகப் பாடுபடுவதுடன், வன்முறை மூலமோ, ஏமாற்று மூலமோ எய்தப் பெருத மெய்யான மத நம்பிக்கைகளை முற்றிலும் மதிக்கிறது என்று லெனின் கூறினர்.

"சோவியத் யூனியனது பலம் அதன் தேசிய இன மக்களுடைய ஒற்றுமையிலும் கூட்டுறவிலும் தான் அடங்கியிருக்கிறது மதக்கோட்பாடு வேற்றுமைகளுக்கேற்ப மக்களைப் பிரிப்பது சோவியத் யூனியனது பகைவர்களுக்குத்தான் சாதகமாக இருக்கும்."

[சோ. யூ. மத வழிபாடு; பக்கம்; 31, 33]

லெனின் வாழ்ந்த காலத்திலேயே சோஷலிச சமுதாய ஆட்சியிலே, மதத்தைத் தடை செய்துவிட வேண்டும் என்ற கொள்கையுடையோர் இருந்து வந்தனர். அதனை அவர்கள் உறுதியாக வலியுறுத்தியும் வந்தனர். ஆனால், அவர்களுடைய கருத்தை லெனின் ஏற்கவில்லை. உறுதியாக எதிர்க்கவும் செய்தார்.

மதத்தை மறுப்பதைவிட, மக்கள் அதனை மறக்கும்படி செய்வதனுலேதான் அறிவுக்குப் புறம்பான மூட நம்பிக்கைகளிலிருந்து மக்களை மீட்க முடியுமென்று லெனின் நம்பினுர்.

1919-ல் நடைபெற்ற கம்யூனிஸ்டுக் கட்சியின் 8-வது காங்கிரசில் ஏற்கப்பட்ட ஒரு தீர்மானம் கூறுவதாவது:

> "சோவியத் அரசின் சட்டம் குடிமக்கள் எல்லோருக்கும் முழு அளவு மத வழிபாட்டுச் சுதந்திரத்தை உத்தரவாதம் செய்கிறது. இந்த உரிமையைக் கட்டுப்படுத்துவதோ, அல்லது மத விவகாரங்களில் நிர்ப்பந்தம் கொண்டுவருவதோ அனுமதிக்கத் தக்கதல்ல என்பதை காங்கிரஸ் கவனப்படுத்துகிறது. மனச்சாட்சிச் சுதந்திரத்திலும் மத வழிபாட்டுச் சுதந்திரத்திலும் தலையிடுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்."
>
> ['சோ. யூ. மத வழிபாடு'; பக்கம்: 55—56]

சோவியத் ஆட்சி அமைந்த பின்னுள்ள அரை நூற்றுண்டு காலத்திலே மத வழிபாட்டுச் சுதந்திரத்தில் தலையிட்ட குற்றத்திற்காகப் பலர் தண்டிக்கப்பட்டுள்ளனர் என்று சோவியத் பிரசுரங்கள் கூறுகின்றன.

சோவியத் நாட்டிலே கண்டவற்றையும் கேட்டவற்றையும் சோவியத் நாட்டைப் பற்றிப் படித்தவற்றையும் வைத்துக் கொண்டு, ஒன்றை மட்டும் நான் உறுதியாகக் கூற முடியும். அதாவது, சோவியத் அரசு, மத நம்பிக்கை இல்லாத நாத்திகர்களாக வாழ விரும்புவோருக்கு வழங்கியுள்ள மனச்சாட்சிச் சுதந்திரத்திற்கு உண்மையாகவே பாதுகாப்பளித்து வருவதுபோல, மத வழிபாட்டுச் சுதந்திரத்திற்கும் உண்மையாகவே பாது

காப்பளித்து வருகிறது. சோவியத்திலே நாத்திகர் எவரும், "கடவுளை நம்புபவன் முட்டாள், காட்டு மிராண்டி." என்று பொது இடத்தில் பொறித்து வைத்துப் பிரச்சாரம் செய்ய முடியாது. அப்படிச் செய்வது கிரிமினல் குற்றம். அது போல, ஆத்திக மேடைகளிலே, நாத்திகர்களை வாய்க்கு வந்தபடி வசை பாடுவதும் கூடாது. அது தண்டனைக்குரிய குற்றமாகும். இதிலிருந்து யாரும் தப்பிவிட முடியாது.

சோவியத் நாட்டில் என்னைக் கவர்ந்த ஒரு முக்கியமான அம்சம் என்னவென்றால், அங்கு சட்டங்கள் அமுல் நடத்தப்படுவதற்காகவே இயற்றப்படுகின்றன. உண்மையாக அமுல் நடத்தவும் படுகின்றன. பட்டப் பகலிலே சட்டம் மீறப்படுகின்றபோது—மீறுவோர் தப்பித்துக் கொள்ளுகின்ற அநாகரிகம் அங்கு இருக்கவில்லை; இருக்க மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். அந்த அளவுக்கு சோவியத் மக்களிடையே விழிப்பும் விவேகமும் வீரமும் வளர்ந்திருக்கின்றன. இந்த மறுமலர்ச்சிதான் அந்தச் சோஷலிச சமுதாயத்திலே நான் கண்ட புதுமை—புரட்சி.

சோவியத் பிரசுரங்களின் வாயிலாக என் பார்வையில் பட்ட பகுத்தறிவுப் பிரச்சாரக் கருத்துக்கள் சிலவற்றை இங்கு தருவது நல்லதென்று நினைக்கிறேன்.

> "அன்றாட வாழ்விலும், நடைமுறை வாழ்விலும், மக்களிடையேயும், மனிதனுக்கும் இயற்கைக்குமிடையேயும் தெளிவான அறிவுக்குகந்த உறவுகள் நிலவும்போதுதான் மெய்யான உலகைப் பற்றிய மத ரீதியான மாயை மறையும்"—மார்க்ஸ்.
>
> "மதத்தின் மீது யுத்தந்தொடுப்பது, அது சாவதைத் தடுத்து, அதற்குப் புத்துயிரளிக்கிறது"
> —ஏங்கல்ஸ்.

"மதத்தை அறவே தடை செய்து நாத்திகத்தை ஒரு கட்டாய சித்தாந்தமாகப் பிரகடனப்படுத்துவது கடவுள் நம்பிக்கையை அதிகப்படுத்தவே துணை செய்யும்.

"மதத்தின்மீது தாக்குதல் தொடுப்பது அதற்கு 'தியாகி' என்று மகுடம் சூட்டி, அதன் ஆயுள் நீடிப்பதற்கு வழி செய்துவிடும்"

—ஏங்கல்ஸ்.

"நாத்திகர்கள் எல்லாம் தீமையை விலக்கி நன்மையைச் செய்யத் தூண்டும் ஒழுக்க நெறிகள் இல்லாதவர்கள் என்று கூறுவது சோவியத் மக்களையும், உலகெங்கணும் கடவுள் நம்பிக்கையற்றவர்களாக உள்ள லட்சோப லட்சக் கணக்கான மக்களையும் பழிப்பதாகும். அவதூறு செய்வதாகும்.

"சமயங்கள் தோன்றுவதற்கு முன்பே ஒழுக்க நெறிகள் நிலவி வந்துள்ளன. மதம் இல்லாமலேயே மனிதன் ஒழுக்கத்தோடு இருக்க முடியும். நீதியும் இன்பமும் நிலவும் சமுதாயத்தைக் கட்டுவதற்குப் பாடுபட்டுவரும் மக்களே மனித குலம் முழுவதன் ஒழுக்க முன்னேற்றத்துக்கு வழி காட்ட முடியும்."

—லெனின்.

வள்ளலாரும் காந்தியடிகளும் தெய்வ உண்மையை ஒப்புக்கொண்டு, அதனை வழிபட்டு வாழ்வதன் மூலம் மதம் அல்லது மதங்கள் இல்லாமலேயே சமுதாயம் ஒழுக்க நெறியில் செல்ல முடியுமென்று நம்பினர். அந்த நம்பிக்கையை மற்றவர்களுக்கும் போதித்தனர். இது இந்திய சமுதாயத்தின் பாரம்பரியத்திற்கும், பண்பாட்டிற்குமேற்ற பகுத்தறிவுப் பிரச்சாரமாகவே சோவியத் நாட்டைப் பார்த்து விட்டு வந்த பின்னரும் நான் கருதுகிறேன்.

மதம் தோன்றிய காலத்தில் மக்களுக்கு நன்மை பயப்பதாகவே இருந்திருக்கலாம். ஆனால் காட்சிக்குப் புலனாகாத கடவுளர்களும், அறிவுக்குப் பொருந்தாத பழக்க வழக்கங்களும், பெருகிக் கொண்டே வந்தமையால், பிற்காலத்தில் மக்களுக்குத் தீமை பயப்பவையாகவே அமைந்துவிட்டது. உருவவழிபாடும், இந்தக் கதியிலேயே முடிந்தது. இந்நாளிலே மதத்தின் தேவையை, உருவ வழிபாட்டின் நற்பலன்களை எவ்வளவுதான் திறம்பட எடுத்துச் சொன்னாலும், அவற்றிற்குத் தத்துவார்த்தங்கள் கூறினாலும், அவை அறிவு மேடையில் எடுபடவில்லை.

மதத்தின் பெயரால் இற்றை நாளில் மக்களுக்கு— குறிப்பாக, சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள பாமரர்களுக்கு இழைக்கப்பட்டுவரும் கேடுகளுக்குச் சான்று வேண்டுமானால், சென்னை தி. நகரில் தோன்றிய திடீர் பிள்ளையாரையே காட்டலாம். இந்த விஞ்ஞான சகாப்தத்திலே-ஒரு மாநிலத்தின் தலைநகரிலே, அங்கும் படித்தவர்கள் மிகுதியாக வாழும் வட்டத்திலே, "பூமியை வெடித்துக் கொண்டு பிள்ளையார் புறப்பட்டார்" என்று கதைகட்டி விடுவதும், அந்தத் திடீர் பிள்ளையாருக்கு சாமான்ய மக்கள் சில நாட்களிலே முப்பதாயிரம் ரூபாய்களைக் கொட்டிக் கொடுப்பதும் வேதனைக்குரியவையாகும்.

வடக்கே ராஜஸ்தான் மாநிலத்திலே, ஆசிரியர் ஒருவரின் கழுத்தை அறுத்து காளிதேவிக்கு நரபலி கொடுத்ததாக 15-10-70ல் சென்னை நாளிதழ்களில் ஒரு செய்தி வெளியாகி யிருக்கிறது. இதைப் படித்தபோது என் மனம் அடைந்த வேதனையானது எழுத்தால் வருணிக்க இயலாததாகும்.

இப்படிப்பட்ட கொடுமைகள் இஸ்லாமியர் மத்தியிலோ, கிறித்தவர் மத்தியிலோ நடைபெற்றிருக்குமானல், அந்தந்த மதத்தின் அதிகாரிகள் அல்லது அதிகார ஸ்தாபனங்கள் பொறுப்பேற்று மக்களுடைய அறியாமையைப் போக்க முன்வந்திருக்கக் கூடும். ஆனல், இந்து மதத்தில் இதற்கு சந்தர்ப்பமே இல்லை. மதத்தின் பெயரால்—தெய்வத்தின் பெயரால் ஏழை எளிய மக்கள் ஏமாற்றப்படுங்கால், அந்தக் கொடுமைகளிலிருந்து அவர்களை மீட்பதற்காக மடாதிபதிகளோ, மதத் தலைவர்களோ முன்வருவதே இல்லை. பத்திரிகைகளின் நிலையும் இதுதான். திடீர் பிள்ளையார் மோசடியை தமிழக அரசு அம்பலப்படுத்திய போதேனும், அதுபற்றித் தலையங்கம் எழுதி, மக்களுக்கு அறிவு புகட்ட பத்திரிகைகள் முன்வந்திருக்க வேண்டும். ஆனல் ஒரு பத்திரிகைகூட இந்தக் கடமையைச் செய்ய முன்வரவில்லை. சோவியத் ருஷியாவிலே, ஸ்தாபனங்களும் தேவாலயங்களும் இருக்கின்றன என்ருலும், இங்கு நாம் காணுகின்ற பொய்களும் புரட்டுகளும் அங்கு நடைபெற முடியா. இதனை நேரில் கண்டறிந்த போது, நம் நாட்டின் நிலையை நினைந்து வெட்கமும் வேதனையும் அடைந்தேன்.

சோவியத் யூனியனிலே தனி நபர்களுக்கு மட்டுமல்லாமல், கடவுளுக்குக்கூட சொத்துரிமை கிடையாது ஆம்; அக்டோபர் புரட்சிக்குப் பின்! புரட்சிக்கு முன்பு. அங்கு நிலைமை வருமாறு:

> "ஜார் ஆண்ட ருஷ்யாவில் மத ஸ்தாபனங்களுக்கு ஏராளமான சொத்துக்கள் இருந்தன. நிலமும் ஆலைகளும் வணிக நிறுவனங்களும் பாங்குகளில் பங்குகளும் இருந்தன. புரட்சிக்கு முன்பு ருஷ்ய சத்திய சமய கிறித்துவத் திருச்

சபைக்கு 55 லட்சம் ஏக்கர் நிலம் சொந்தமாக இருந்தது. அதில், 67 மத குருமார்கள் 1,30,000 ஏக்கரும்—அதாவது, ஆளுக்கு 194 ஏக்கருக்கு அதிக மாகவும்; 589 குருமார்கள் 270 முதல் 2700 ஏக்கரும் —அதாவது, சராசரியாக மிகவும் செல்வாக்கு வாய்ந்த 26 குருமார்கள் ஆளுக்கு சராசரி 5000 ஏக்கர் வீதமும் பெற்றிருந்தார்கள். ஆனல், இந்த நிலங்களை உழைப்பாளி மக்களே உழுது பயிரிட்டனர்."

[சோவியத் யூனியனில் மதவழிபாடு";
பக். 24-25]

புரட்சிக்குப் பின்னர் அமைந்த சோஷலிச அரசு மத ஸ்தாபனங்கள் பெற்றிருந்த சொத்துக்களைப் பறிமுதல் செய்து விட்டது. அதனை, சாதாரணப் பொது மக்கள் மனநிறைவோடு வரவேற்றனர்.

இதுபற்றி சோவியத் பிரசுரமொன்று தரும் தகவல் வருமாறு:

"1917 நவம்பர் 8-ல் பிறப்பிக்கப்பட்ட நிலச் சட்டமானது மத நிறுவனங்கள் நிலம் வைத்துக் கொள்வதைத் தடை செய்தது. கோயில்களுக்கும் மடாலயங்களுக்கும் சொந்தமாக இருந்த எல்லா நிலங்களும் மக்களுக்கு வினியோகிக்கப்பட்டன. அரசிலிருந்தும் கல்வி நிலையங்களி லிருந்தும் மதத்தைப் பிரிப்பதற்கான சட்டமானது மத ஸ்தாபனங்களின் சொத்துக்கள் அனைத்தையும் மக்கள் சொத்துக்களாகப் பிரகடனம் செய்தது.

"பொதுவாக, சோவியத் யூனியனிலே சொத்துக்களைப் பெற்றிருக்க மத நிறுவனங்களுக்கு உரிமையில்லை.

"மதப் பொருள்களை விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்திலிருந்தும், சமயச் சடங்குகளை நடத்துவதன் வாயிலாகக் கிடைக்கும் வருவாயிலிருந்தும், மத நம்பிக்கையுள்ளவர்கள் தங்கள் விருப்பத்தின் பேரில் வழங்கும் நன்கொடைகளிலிருந்தும் சோவியத் யூனியனின் திருச்சபைகளும் சமய நிறுவனங்களும் நடத்தப்படுகின்றன.

"இந்த வருவாய்கள் மத குருமார்களையும் கோயில்களையும் நிர்வகிப்பதற்கு ஆகும் செலவைவிட அதிகமானதாகும்."

["சோ. யூ. ம. வழிபாடு"; பக்கம். 25, 26]

நமது நாட்டிலேயும் கோயில்களுக்கும் மடாலயங்களுக்கும் நிலமும் பிறவகையான சொத்துக்களும் நிறைய இருக்கின்றன. அவற்றிற்கு நம்நாட்டு அரசியல் சட்டம் பாதுகாப்பளிக்கிறது.

தமிழ்நாட்டிலே, கோயில்கள்—அறக் கட்டளைகள்—அற நிறுவனங்கள் என்று கூறப்படுவனவற்றின் எண்ணிக்கை 8627 ஆகும். இவற்றிடம் 4 இலட்சத்து 8 ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கின்றது. அதிலே 1 இலட்சத்து 66 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலமாகும். 1 இலட்சத்து 42 ஆயிரம் ஏக்கர் புஞ்சை நிலமாகும். இவற்றிலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கும் வருவாய் பற்றி சரியான புள்ளி விவரம் அரசுக்குக் கிடைக்கவில்லை. இதர சொத்துக்களின் விவரம் அரசால் இதுவரை வெளியிடப்படவில்லை.

சோவியத் யூனியனிலே தனி நபர்களோ, மத நிறுவனங்களோ தான-தர்மங்களிலே ஈடுபடுவதில்லை. ஆம்; தான-தருமம் எனப்படும் 'புண்ணிய காரியம்' அங்கு நடைபெறுவதில்லையாம். இதற்கு இரண்டு

காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஒன்று, அங்கு தனி நபர்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் சொத்துரிமை இல்லாதது. மற்றொன்று, அப்படிப்பட்ட தான-தருமங்கள் சோவியத் யூனியனிலுள்ள மக்களுக்குத் தேவைப்படவில்லை என்பதாகும். இதுபற்றி, சோவியத் அரசு தரும் தகவல் வருமாறு:

"வாழ்க்கைத் தர உயர்வு—வறுமை ஒழிப்பு—வேலையில்லாத் திண்டாட்டத்தின் மறைவு ஆகியவை தான தருமங்களைத் தேவையற்றவையாக்கி விட்டன. தேவைப்படும்போது சோவியத் மக்கள் அரசிடமிருந்தும், தொழிற் சங்கங்களிடமிருந்தும், இதர நிறுவனங்களிட மிருந்தும் உதவி பெறுகின்றனர்.

"முதிய வயது பென்ஷனுக்காகவும், வேலை செய்யும் ஆற்றலை இழந்தோருக்கான பென்ஷனுக்காகவும் சோவியத் அரசு ஆண்டுதோறும் ஏராளமான தொகை ஒதுக்குகிறது. வருவாய்க்குரியோரை இழந்த குடும்பங்களுக்கு உதவி செய்கிறது. பெரிய குடும்பங்களையுடைய தாய்மார்களுக்கு அலவன்சுகள் அளிக்கின்றது. கருவுற்றிருக்கும் போதும் மகப்பேற்றின்போதும் பெண்களுக்கு உதவித்தொகை வழங்குகின்றது.

"ஆலைத் தொழிலாளர்களையும் அலுவலக ஊழியர்களையும் போலவே கூட்டுப்பண்ணை விவசாயிகளும் அரசாங்கத்திடமிருந்து முதிய வயது பென்ஷனையும் வேலை செய்யும் ஆற்றலை இழந்தோருக்கான பென்ஷனையும் பெற உரிமை பெற்றுள்ளனர்.

"இத்தகைய நிலையில் சமய நிறுவனங்களின் தான தருமங்கள் சோவியத் மக்களின் பொருளா

தாரப் பாதுகாப்பில் எத்தகைய பங்கும் வகிக்க முடியாது என்பது தெளிவுதானே!''

['சோ. யூ. ம. வ.; பக்.—26.]

இந்தத் தகவலை நான் முதன் முதலாகப் பெற்ற போது, அயோத்தி நகரிலே, 'கொள்வாருமில்லை, கொடுப்பாருமில்லை'' என்றும், ''எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே, இல்லாருமில்லை உடையாருமில்லை'' என்றும் மகாகவி கம்பர் பாடியிருக்கிறரே. அந்த வரிகள் என்னுடைய நினைவுக்கு வந்தன.

நம் நாட்டிலே, மத நிறுவனங்கள் சொத்துரிமை பெற்றிருப்பதன் காரணமாக, தான தருமங்களிலே கொஞ்சம் தாராளமாகவே ஈடுபட்டுள்ளன. கிறித்துவ மிஷனரிகள் பயனுடைய முறையில் ஏராளமான பள்ளிகளையும் கல்லூரிகளையும் நடத்தி வருகிறார்கள். இந்து—முஸ்லிம் மதங்களின் சார்பிலும் தான தருமங்கள் நடைபெறுகின்றன. இஸ்லாமியருக்குரிய 'வக்த் போர்டு' அறப் பணிகளை மேற்பார்வையிடுகின்றது. இந்துக்களின் தான தருமங்களை இந்து அற நிலையத்துறை கண்காணித்து வருகின்றது. இதற்கென்று ஒரு அமைச்சகமே தேவைப்பட்டுவிட்டது. தனி அமைச்சரும் இருந்து வருகிறார். அறநிலையங்கள் சம்பந்தப்பட்ட சொத்துக்களால் எழும் வழக்குகளைத் தீர்த்து வைக்க அறத்துறையின் ஒரு பகுதியாக, தனி நீதி மன்றமே இயங்கி வருகிறது.

இவ்வளவு பெரிய அளவுக்கு மத நிறுவனங்களின் தான தருமங்கள் பெருகிவிட்டமையால், அரசு மேற்கொண்டுள்ள நிலச்சீர்திருத்தம் முழுமை பெறுமல் இருக்கிறது. ஆம்; நில உச்ச வரம்புச் சட்டம் கோயில்களுக்கும், மடங்களுக்கும், அறக்கட்டளைகளுக்கும், இவை

போன்ற பிறவற்றிற்கும் பொருந்தக் கூடியதாக இல்லை. அவற்றிற்கு நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. இந்த விலக்குக் கூடாதென்ற கருத்துடையோரும் இருந்து வருகின்றனர்.

கொள்கை அளவில் பார்த்தால், எனக்கும் அந்தக் கருத்து உடன்பாடுதான். கடவுளின் பெயரால் நிலங்களுக்குப் பட்டா எழுதி, 'தரித்திர நாராயணர்' எனப் பெயர் பெற்ற அவரையும் 'மிராசுதார்' ஆக்கியுள்ளது நகைச்சுவையான விஷயம்தான். ஆனால், இவ்விஷயத்தில் அவசரப்பட்டு எதையும் செய்வது நிலைமையை சிக்கலாக்கிவிடக்கூடும். இது, கோயில்களையும் மடங்களையும் பொருத்த விஷயம் மட்டுமல்ல; சரியாகவோ; தவறாகவோ கோடிக்கணக்கான மக்கள் கொண்டுள்ள மத உணர்ச்சியையும் பொறுத்ததாக இருக்கிறது. சோவியத் யூனியனிலே கூட, மக்களுடைய மத விஷயங்களிலே எச்சரிக்கை காட்ட வேண்டுமென்று லெனின் தனது கட்சியினரை எச்சரித்தார்.

கோயில்களின், மடங்களின் நிலங்களுக்கு உச்சவரம்பு கட்டுவதானால், அந்த மத ஸ்தாபனங்கள் நடத்தி வரும் தான தருமங்கள் சிறிதுகூடப் பாதிக்கப்படாத வகையில் அதைச் செய்யவேண்டியிருக்கிறது. அதை எப்படிச் செய்வதென்பதுதான் நாம் ஆராய வேண்டிய விஷயம்.

மகத்தான புரட்சியின் விளைவாக அமைந்துள்ளதும் ஒற்றைக் கட்சியால் ஆளப்படுவதுமான சோவியத் சோஷலிச ஆட்சியிலே மத ஸ்தாபனங்களின் சொத்துக்களைப் பொதுவுடைமை யாக்குவது எளிதாக இருந்திருக்கலாம். ஆனால், சொத்துரிமை சட்ட சம்மதமாக்கப்பட்டுள்ள—பல கட்சிகள் வாழ்கின்ற நம் நாட்டிலே அது எளிதன்று.

மற்றும், மக்களுடைய தேவைகளுக்கு சோவியத் யூனியனிலே சோஷலிச அரசே பொறுப்பேற்றுக் கொண்டு; சட்டரீதியாகஉத்தரவாதமும் கொடுத்திருக்கிறது. அந்த உத்தரவாதம் நாணயமாகவும், மக்களுக்கு மனநிறை வைத் தரும்வகையிலும் காலாகாலத்தில் அமுல் நடத்தப் படுகின்றது. இந்தியாவிலோ, தமிழ்நாட்டிலோ அந்த நிலை இல்லை. இங்கு மக்களுடைய தேவைகளை அரசால் ஓரளவுதான் நிறைவு செய்ய முடிகிறது. அதற்குமேல் அங்குலம்கூட நகர முடிவதில்லை. அதனால், மக்கள் தங்களுடைய தேவைகளைத் தனிப்பட்ட செல்வந்தர்களிட மிருந்தும், மத ஸ்தாபனங்களிட மிருந்தும் பெற வேண்டியவர்களாக இருக்கின்றனர். அவற்றைத் தடுத்துக் கெடுக்கும் வகையில் எந்த விதமான சீர்திருத் தத்தையும் இங்கு அமுல் நடத்துவதற்கில்லை. இது ஒரு தருமசங்கடமான நிலைதான்.

மக்கள் என்றென்றும் தான தருமங்களை மட்டுமே நம்பி வாயையும் வயிற்றையும் வைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்று சொல்ல முடியாது. அரசு இருக்கும் நாட்டிலே இது மிகவும் கேவலமான ஒரு நிலையாகும்.

உடையாரும் வறியாரும் இல்லாத ஒரு சமதரும உலகம் புதிதாக உருவாகிவரும் இந்த நாளிலே, தெய்வத்தின் பேரால் ஏழை உழவர்களுக்கு அநீதி இழைப்பதை அனுமதிப்பதற்கில்லைதான். ஆனால், 'நீதி' என்பது 'ஓரேவழிப் பாதை' ஆகிவிடக் கூடாது.

சோவியத் யூனியனில் மதத்திற்கும் தெய்வ வழிபாட்டிற்கும் உள்ள வாய்ப்பு பற்றிச் சிறிது அதிகமாகவே கூறிவிட்டேன். இனி, பல்வேறு மொழிவழிக் குடியரசுகளைக் கொண்ட சோவியத் யூனியனிலே, மாநிலங்களுக்கு சுயாட்சியளிக்கப்பட்டுள்ளது பற்றி ஆராய்வோம்.

சோவியத் வழி காட்டுகிறது!

சோவியத் யூனியன் பதினைந்து குடியரசுகளைக் கொண்ட கூட்டரசாகும். உறுப்பு அரசுகளிலே ஒவ்வொன்றும் 'குடியரசு' எனும் பெயராலேயே அழைக்கப் படுகின்றன. அரசியலமைப்புச் சட்டத்திலேயே அந்தப் பெயர் சேர்க்கப் பட்டிருக்கிறது. குடியரசுகளின் பெயர் கள் வருமாறு:

ருஷ்ய சோவியத் சோஷலிச சமஷ்டிக் குடியரசு
உக்ரேனியன் சோவியத் சோஷலிசக் குடியரசு
பைலோ ருஷ்ய சோவியத் சோஷலிசக் குடியரசு
உஸ்பெக் சோவியத் சோஷலிசக் குடியரசு
கஜாக் சோவியத் சோஷலிசக் குடியரசு
ஜார்ஜியன் சோவியத் சோஷலிசக் குடியரசு
அஜெர்பைஜான் சோவியத் சோஷலிசக் குடியரசு
லிதுவேனிய சோவியத் சோஷலிசக் குடியரசு
மோல்தாவிய சோவியத் சோஷலிசக் குடியரசு
லாத்விய சோவியத் சோஷலிசக் குடியரசு
கிர்கிஜ் சோவியத் சோஷலிசக் குடியரசு
தாஜிக் சோவியத் சோஷலிசக் குடியரசு
அர்மீனியன் சோவியத் சோஷலிசக் குடியரசு
துருக்மென் சோவியத் சோஷலிசக் குடியரசு
எஸ்தோனிய சோவியத் சோஷலிசக் குடியரசு

இந்தக் குடியரசுகள் அனைத்தும் கலந்த மத்திய அரசுக்கு "ருஷ்ய சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் கூட்டரசு" என்று பெயர்.

இந்தப் பதினைந்து குடியரசுகளுக்கும் நேரில் சென்று, அவற்றில் ஒவ்வொன்றும் இயங்குகின்ற விதத்தை நேரில் கண்டறிய வேண்டுமென்ற ஆர்வத்துடன்தான் சோவியத் ருஷ்யாவுக்குச் செல்ல வேண்டுமென்ற ஆசையை வளர்த்துக் கொண்டு வந்தேன். ஏனென்னில், நான் எத்தகைய அரசியல் அந்தஸ்தை இந்திய மாநிலங்களுக்குக் கோருகிறேனோ, அத்தகைய அரசியல் அந்தஸ்தை சோவியத் யூனியனிலுள்ள ஒவ்வொரு குடியரசும் அனுபவித்து வருகின்றன. அதனால், இந்தக் குடியரசுகளை நேரில் பார்க்க வேண்டுமென்ற ஆசை பிறந்தது இயற்கைதானே!

துரதிருஷ்டவசமாக, சோவியத் சுற்றுலா ஒரு வாரமாகச் சுருங்கி விட்டதால் ருஷ்ய சமஷ்டிக் குடியரசு, கஜாக் குடியரசு ஆகிய இரண்டை மட்டுமே நேரில் காண வாய்ப்புப் பெற்றேன். 'பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல, நான் நேரில் கண்ட இரண்டு குடியரசுகளைக் கொண்டு, நான் காணத் தவறிய மற்ற பதின்மூன்று குடியரசுகள் பற்றியும் விமர்சிப்பது எனக்குச் சாத்தியமாகிறது. இதற்குப் பயன்படக் கூடிய நூல்களையும் சேகரித்து வந்துள்ளேனாதலால், சோவியத் யூனியனில் உள்ள சோஷலிசக் குடியரசுகள் அனைத்தைப் பற்றியுமே மேற்போக்காக விமர்சிப்பதில் எனக்குக் கஷ்டமொன்றுமில்லை.

சோவியத் யூனியனிலே ஒவ்வொரு குடியரசுக்கும் யூனியனில் இணைந்திருக்க விருப்பமில்லாத போது பிரிந்து வாழ உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இந்த உரிமை அரசியலமைப்புச் சட்டத்தின் மூலமே உறுதி செய்யப்பட்டிருக்கிறது. தமிழரசுக் கழகம் ருஷ்யாவில் உள்ள குடியரசுகளுக்குள்ளது போன்ற பிரிந்து வாழும்

உரிமையைக் கோரவில்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

ருஷ்ய சமஷ்டி அமைந்து அரை நூற்றுண்டுக்கு மேலாகிவிட்டது. இவ்வளவு நீண்ட காலத்திலே எந்த ஒரு குடியரசிலேயும் சோவியத் யூனியனிலிருந்து வெளியேற வேண்டுமென்ற கிளர்ச்சி தொடங்கப்படவில்லை என்பதனை இங்கு நாம் நினைவில் கொள்ள வேண்டும். "ஒற்றைக் கட்சியின் சர்வாதிகாரம் அங்கு நடைமுறையிலிருப்பதால்தான் பிரிவினைக் கிளர்ச்சி தோன்றுவது சாத்தியமில்லாமலிருக்கிறது" என்று இங்கு சிலர் கூறுகின்றனர். இது சுத்தப் பொய் என்பதுடன், சோவியத் கூட்டுக் குடியரசில் இணைந்துள்ள மொழிவழித் தேசிய இனங்களின் உரிமை உணர்ச்சியை அவமதிப்பதுமாகும்.

உண்மை என்னவென்றுல், முதலாளித்துவ—நிலப் பிரபுத்துவ சக்திகள் ஆணி வேரோடு அகற்றப்பட்டு விட்டன. தேசிய இனக் குடியரசுகள் சமத்துவமுடையவையாகவும், மத்திய அரசிடமிருந்து எல்லாவிதமான உதவிகளையும் உரியகாலத்தில் பெறக் கூடியவையாகவும் இருக்கின்றன. தேசிய இனங்களிடையே பரஸ்பரம் நல்லுறவு நாளொரு மேனியாக வளர்க்கப்பட்டு வருகின்றது. இந்தக் காரணங்களால் பிரிவினைக் கிளர்ச்சி சோவியத் யூனியனில் தோன்றுவது சாத்தியமல்லை தானே!

சோவியத் யூனியனிலுள்ள ஒவ்வொரு குடியரசுக்கும் தனித்தனியே கொடி உண்டு. தனித்தனியே குடியரசுப் பாடல் உண்டு. இவற்றிற்கு மேலாக,'சோவியத் யூனியன் முழுவதற்குமாக ஒரு தேசியக் கொடியும், ஒரு தேசியப் பாடலும் இருக்கின்றன. கஜாக் குடியரசுக்கு நான் சென்றிருந்தபோது, அதன் கொடியை நேரில் கண்டேன். கஜாக் குடியரசுக் கீதமும் பாடக் கேட்டேன்.

இப்படி, ஒவ்வொரு மாநிலத்திற்கும் "குடியரசு" என்ற பெயரும், தனித்தனியே கொடியும், குடியரசுப் பாடலும் கொடுத்து, அவற்றின் தனித்த அரசியல் அந்தஸ்தை உறுதிப்படுத்திவிட்டமையால் ஒரு கேடும் நேரவில்லை. இங்கும் அப்படித்தான் கொடுக்கவேண்டு மென்று தமிழரசுக்கழகம் கோரி வருகின்றது. துரதிருஷ் டம் என்னவென்றால், தமிழர்களாகிய நம்மவர்கள் சிலரிடமிருந்தே இந்தக் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தோன்றியிருப்பதாகும்.

சோவியத் ருஷ்யாவில் இன்னொரு சிறப்பு என்ன வென்றால், அங்கு ஒவ்வொரு குடியரசும் தனக்கெனத் தனியே அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பெற் றிருப்பதாகும். சோவியத் யூனியன் முழுவதற்குமாக ஒரு அரசியலமைப்புச் சட்டமிருக்கிறது. இந்த இரு வேறு 'குடியரசு,' 'கூட்டரசு'ச் சட்ட நூல்களை நான் கண்டபோது வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன். ஆம்; அங்கு மொழிவழித் தேசிய இனங்களுக்கு முதலில் சுய நிர்ணயம் வழங்கப்பட்டது—அதாவது, ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தன் தாயகத்தின் அரசியலமைப் பைத் தானே தயாரித்துக் கொள்ள உரிமை வழங் கப்பட்டது. அதனால், பதினைந்து குடியரசுகளும்—சில விதிகளில் வேறுபாடுடைய—பதினைந்து அரசியலமைப் புச் சட்டங்களைப் பெற்றிருக்கின்றன. இதனால், சோவி யத் யூனியன் முழுவதற்குமான அரசியலமைப்புச் சட்டம் அளவில் மிகவும் சிறியதாக இருக்கிறது. இந்தியாவின் நிலைமை இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்.

நான் கஜாக் குடியரசின் தலைநகரான "அல்ம்-அதா" விற்குச் சென்றிருந்தபோது, அங்கு அரசியல் ஞான முடைய ஒரு கஜாக்கரைச் சந்தித்தேன். அந்த நகரை நான் சுற்றி வந்தபோது அவர் என்னுடனேயே இருந்

தார். அவரிடமிருந்து சோவியத் நாட்டிலே மாநிலத்துக்கும் மத்திய அரசுக்குமிடையே நிலவி வரும் உறவு பற்றி அறிந்துகொள்ள முயன்றேன்—குறிப்பாக, சோவியத் யூனியனிலே கஜாக் குடியரசின் நிலைமையை அறிந்து கொள்ள விரும்பினேன். அவரைப் பார்த்து, "கஜாக் குடியரசிலே கஜாக் மொழி பேசுவோரின் சத விகிதம் எவ்வளவு?" என்று கேட்டேன். அவர், "முப்பது சத விகிதம்" என்றார். அதைக் கேட்டு, நான் வியப்படைந்தேன். அவர் மேலும் சொன்னார், "ருஷ்யர்கள் 42.7 சத விகிதத்தினர்; உக்ரேனியர் 8.2 சதவிகிதத்தினர்" என்று. என் தலை சுற்றியது. ஆம்; கஜாக் குடியரசின் மக்கள் தொகையில் 30 சதவிகிதம் பேர்தான் கஜாக் மொழி பேசுவோராக இருந்தும், அது கஜாக் மொழியினரின் தாயகமாகவே கருதப்படுகிறது. 'கஜாக் குடியரசு' என்றே அழைக்கப்படுகிறது. கஜாக் மொழியே அந்தக் குடியரசின் ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் இருந்து வருகிறது. இதனை, குடியரசின் மக்கள் தொகையில் 42.7 சதவிகிதத்தினராக உள்ள ருஷ்யர்கள் எதிர்க்கவில்லை. அவர்களும் கஜாக் மொழிபயின்று கஜாக்கியர்களோடு கஜாக்கியர்களாகக் கலந்து வாழ்கின்றனர். இந்த விவரங்களை அறிந்தபோது என் உடம்பு புல்லரித்தது. 'இதுவன்றோ, தேசிய ஒருமைப்பாடு' என்று என் வாய் முணு முணுத்தது.

"கஜாக்கின் பூர்வகுடி மக்களான கஜாக்கியர்களை 30 சதவிகிதமாகக் குறைத்து விடும் அளவுக்கு ருஷ்யர்கள் கஜாக் மாநிலத்தில் திமு திமுவென்று குடியேற வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது?" என்று கேட்டேன். அதற்கு அந்த கஜாக் நண்பர் சொன்ன சமாதானம் வருமாறு:

"ஜார் ஆட்சிக் காலத்திலே இந்த கஜாக்ஸ்தான் மிகவும் பின்னடைந்து கிடந்தது. கல்வி கற்றவர்கள் விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய அளவுக்கு அருகியிருந்தனர். தொழில் துறையிலோ, படு மோசமான நிலையிலிருந்தது. அக்டோபர் புரட்சிக்குப் பின்னர்தான்—சோஷலிச ஆட்சியில்தான் கஜாக்ஸ்தான் பல துறைகளிலும் முன்னேற முடிந்தது. அந்த முன்னேற்றத்திற்கு ருஷ்யர்களின் உழைப்பும் உதவியும் தேவைப் பட்டன. ஆகவே, கஜாக்கியர்களின் விருப்பத்தின் பேரில் ருஷ்யர்கள் இங்கே குடியேறினார்கள். அவர்களுடைய குடியேற்றத்தால் கஜாக்கியர்கள் கொஞ்சம்கூட பாதிக்கப் படவில்லை. மாறாக, முன்னேற்றம் அடைந்தனர்."

ருஷ்யாவில், ஒரு மொழியினருக்குரிய மாநிலத்திலே அதன் பூர்வ குடிகளைச் சிறு பான்மையினராக்கும் அளவுக்கு, இன்னொரு மொழியினர் குடியேறியது கஜாக் குடியரசில் மட்டும்தான் நிகழ்ந்ததாகத் தெரிகிறது. ருஷ்யாவிலுள்ள வேறு குடியரசுகளிலே இந்த நிலை வந்ததாகத் தெரியவில்லை.

சோவியத் ருஷ்யா, ஐரோப்பா—ஆசியா ஆகிய இரு வேறு கண்டங்களின் இணைப்பென்று—அதாவது, ஆசியப் பகுதியும் ஐரோப்பியப் பகுதியும் இணைந்த ஒரு நாடு என்று முன்பே கூறினேன். அதிலே, கஜாக்கியர்கள், ஆசியாக்காரர்கள், ருஷ்யர், ஐரோபியர்கள். கஜாக்கியர்கள், மதத்தால் இஸ்லாமியப் பாரம்பரியத்தினர். ருஷ்யர்கள், மதத்தால் கிறித்துவப் பாரம்பரியத்தினர். இவ்வளவு வேறுபாடுகள் இருந்தும் இந்த இரு வேறு தேசிய இனத்தினரும் ஒருமைப்பாடுடன் வாழ முடிகிறது, சோவியத் ருஷ்யாவிலே!

ருஷ்யர்களுக்கும் கஜாக்கியர்களுக்கும் அதிக வேற்றுமை இருப்பதாக நான் சந்தித்த கஜாக் நண்பர் நினைக்கவில்லை.

"கஜாக்கியர்களுக்கும் ருஷ்யர்களுக்கும் உள்ள முக்கியமான வேற்றுமை என்ன?" என்று அந்த நண்பரைக் கேட்டேன். அவர் சிரித்துக் கொண்டே, தம்முடைய கண்ணையும், தற்செயலாக என் அருகிலிருந்த ருஷ்யரின் கண்ணையும் காட்டி, "இதுதான் வித்தியாசம்" என்றார். ஆம்; ருஷ்யருடைய கண் பூனைக்கண். கஜாக்கியருடைய கண் அப்படியல்ல; நம்முடைய கண்ணைப் போன்றது.

நம்முடைய நாட்டில் ஒரு மொழி வழங்கும் மாநிலத்தின் எல்லையோரக் கிராமங்களிலே இன்னொரு மொழி வழங்கும் அடுத்த மாநிலத்தவர் கொஞ்சம் கூடுதலாகக் குடியேறிவிட்டால், ஒன்றிரு தலைமுறைகளுக்குப் பின்னர் இனப் பூசலும் எல்லைப் பூசலும் ஏற்பட்டு விடுகின்றன. ஏனெனில், இது சோஷலிச நாடு அல்ல!

கஜாக் மொழிக் குடியரசிலோ, ருஷ்ய மொழியினர் அணி அணியாகக் குடியேறி, கஜாக்கின் பூர்வ குடியினரின் எண்ணிக்கையை 30 சதவிகிதமாகக் குறைத்துவிட்டாலும், அந்தக் குடியரசிலே இனப் பூசலோ, எல்லைப் பூசலோ ஏற்படவில்லை. ஏனெனில், அது சோஷலிச நாடு. இதிலிருந்து இந்தியாவிலும் உண்மையான தேசிய ஒருமைப்பாடு சோஷலிச அடிப்படையில் தான் ஏற்பட முடியும் என்பதனை நாம் அறிந்து கொள்கிறோம்.

இந்தியாவின் ஒரு மாநிலமான தமிழ் நாட்டிலே மக்கள் தொகையில் 85 சதவிகிதம் பேர் சுத்தத் தமிழராக இருந்தும், இதற்குத் "தமிழ் நாடு" என்று பெயரிடு

வதற்கு எதிர்ப்பு ஏற்பட்டது. இங்கு கல்லூரிகளிலே தமிழைப் பயிற்றுமொழி யாக்குவதற்கு எதிர்ப்பு இருந்து வருகிறது. இந்த எதிர்ப்பிலே மொழிவழிச் சிறு பான்மையினர்தான் முதலிடம் பெறுகின்றனர்.

சென்னை நகரிலே, தமிழல்லாத பிற மொழிகள் பேசுவோரின் எண்ணிக்கை 20 சதவிகிதம் கூட இல்லாத நிலையிலே, இங்குள்ள குஜராத்திகளையும் மார்வாடிகளை யும் மலையாளிகளையும் சேர்த்து வைத்துக் கொண்டு, "மதருஸ் மனதே" என்றனர் ஆந்திரர்கள். தேசிய ஒருமைப்பாடு ஏற்படுவதற்குத் தடையாக இருப்பது முதலாளித்துவ சக்திதான். ஆனால், "தேசிய ஒருமைப் பாடு" பற்றி அதிகமாகக் கூச்சலிடுவதும் அதே சக்தி தான்!

ருஷ்யாவிலே இன்னொரு அரசியல் அற்புதத்தையும் நான் பார்க்க முடிந்தது. சோவியத் ருஷ்யா முழுவதும் பல்வேறு குடியரசுகளைக் கொண்ட ஒரு சமஷ்டிக் குடியர சாக இருப்பதனை நாம் அறிவோம். அந்தப் பெரிய சமஷ் டிக்குள்ளே இன்னொரு சிறிய சமஷ்டியும் இருக்க அனு மதிக்கப்பட்டிருக்கிறது. அது, ருஷ்ய சமஷ்டிக் குடியர சாகும். அதாவது, ருஷ்ய மொழி வழங்கும் பிரதேசம் ஒரு சிறிய சமஷ்டியாக இயங்கி வருகின்றது. இந்தியா விலே இந்தி மொழி வழங்கும் உ. பி., பீகார், ம. பி., அரியானா, ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களைக் கொண்ட "இந்திப் பிரதேச சமஷ்டி" என்பதாக, இந்திய யூனியனுக்குள்ளே ஒரு உப யூனியன் அமைந்தால் எப்படியோ, அப்படியிருக்கிறது சோவியத் யூனியனுக்குட்பட்ட ருஷ்ய சமஷ்டிக் குடி யரசு.

அதனுடைய பரப்பளவு 1 கோடி 71 லட்சம் சதுர கிலோ மீட்டர். மக்கள் தொகை 12 கோடியே 73

லட்சம். அதாவது, பெரிய சமஷ்டியான சோவியத் யூனியனின் மொத்த மக்கள் தொகையில் 55 சத விகிதம்.

இந்தச் சிறிய சமஷ்டியிலே 16 சுயாட்சிக் குடியரசுகளும், 5 சுயாட்சிப் பிரதேசங்களும், 10 தேசிய வட்டாரங்களும் இணைந்துள்ளன. இதன் மக்கள் தொகையில் 83சத விகிதத்தினர் ருஷ்ய மொழியினரே ஆவர். இதன் தலைநகர் சோவியத் யூனியன் முழுவதற்கும் தலைநகராக உள்ள மாஸ்கோதான். அக்டோபர் புரட்சியின்போதும், இரண்டாவது உலகப் பெரும் போரின் போதும் வீர சாகசங்கள் புரிந்த லெனின் கிராட் நகரமும் ருஷ்ய சமஷ்டிக் குடியரசைச் சேர்ந்தது தான்.

நான் சோவியத் யூனியனுக்குப் போவதற்கு முன்னர் இந்தி மொழி மாநிலங்களை ஒன்றுபடுத்துவதிலே அக்கரை யில்லாதவனுக இருந்தேன். அப்படி ஒன்றுபடுத்துவதானுலும் தமிழ்நாட்டையும் ஆந்திராவையும்போல, ஒரே உறுப்பு ராஜ்யமாகத்தான் செய்ய முடியுமென்று நம்பியிருந்தேன். ஆனுல், சோவியத் யூனியன் சென்று திரும்பிய பின்னர், இந்தியாவிலே மாநிலங்களின் புனரமைப்பு இன்னும் முடிவு எய்தாத ஒன்ருகவே எனக்குத் தோன்றுகிறது. அதாவது, மாநிலங்களைத் திருத்தி அமைப்பதற்கு இன்னமும் அவசியமிருப்பதாகவே நான் நினைக்கிறேன். அரியாணு, பஞ்சாப், ராஜஸ்தான், பீகார், உ. பி., ம. பி. ஆகிய மாநிலங்களெல்லாம் இந்திமொழி வழங்கும் பிரதேசங்களென்ருலும், அவற்றிலே ஒவ்வொன்றிற்கும் சில பல அம்சங்களிலே சரித்திர ரீதியான தனித் தன்மைகளும் இருந்து வருகின்றன என்பதனை மறப்பதற்கில்லை. ஆகவே, சோவியத் ருஷ்யாவிலே, அந்த யூனியனின்

மக்கள் தொகையில் 55 சதவிகிதம் பேர் கொண்ட ருஷ்ய மொழிப் பிரதேசம் ஒரு சிறு சமஷ்டியாக அமைந் திருப்பதுபோல, இந்தியாவிலேயும் இந்தி மாநிலங்கள் உப சமஷ்டி ஒன்றை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பிருக் கிறது. ஒருகால், இன்றைய முதலாளித்துவ இந்தியாவிலே அப்படி ஒரு உப சமஷ்டி அமையவிடுவது இந்தி மொழி வழங்காத மாநிலங்களின் நலன்களுக்குக் கேடாக அமையலாம் என்று சிலர் கருதக்கூடும். ஆம்; சுத்த சோஷலிச நாடான சோவியத் ருஷ்யாவிலே சாத்திய மாக இருப்பதெல்லாம் சுத்த முதலாளித்துவ நாடான இந்தியாவிலேயும் சாத்தியமாகிவிடும் என்று சாதிப் பதற்கில்லைதான்.

சோவியத் யூனியனிலே ருஷ்ய உபசமஷ்டியொன்று இருப்பதுபோல, இந்திய யூனியனிலேயும் தெலிங்கானு வைத் தனி உறுப்பாகத் தன்னுள் கொண்ட ஆந்திர உப சமஷ்டி ஒன்றும் சாத்தியமாவதற்குச் சந்தர்ப்ப மிருக்கிறது.

ஜார் ஆட்சிக் காலத்தில் ருஷ்ய இனத்தினரே ஆளும் சாதியினராக இருந்து வந்தனர். ஜார் சக்கர வர்த்திகள் ருஷ்ய இனத்தவரே ஆவர். ருஷ்ய மொழி யானது பிற மொழிகளை அடக்கி ஒடுக்கி ருஷ்யா முழு வதிலுமே ஆதிக்கம் செலுத்துகின்ற மொழியாக இருந்து வந்தது. அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் ருஷ்யருடைய-ருஷ்ய மொழியினுடைய ஆதிக்கம் பொய் யாய், கனவாய், பழங்கதையாய் போய்விட்டதென்று சொல்லப்படுகிறது.

சோவியத் ருஷ்யா கம்யூனிஸ்டு நாடானதால், அங்கே 'மாநில உணர்ச்சி' மறைந்துபோயிருக்கும் அல்லது மறைக்கப்பட்டிருக்கும் என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், கஜாக் குடியரசிலே நான்

பெற்ற அனுபவம் இதற்கு எதிரானது. அங்கு எங்களை வரவேற்று குடியரசின் முன்னேற்றங்களை எங்களுக்கு விளக்கிய கஜாக் ஆப்பிரிக்காசிய உறவுக் குழுவின் நிர்வாகிகள் தாங்கள் கஜாக்கியர்கள் என்பதனைப் பெரு மிதத்தோடு கூறிக் கொண்டனர். எந்த முன்னேற்றத் தைச் சுட்டிக் காட்டினாலும், "சோவியத் யூனியனிலே கஜாக் குடியரசுதான் இதிலே முதலிடம் வகிக்கின்றது" என்று சொல்லி, அவர்கள் பெருமைப்பட்டுக் கொண் டனர். கஜாக் குடியரசின் தனிச் சிறப்புக்களையெல் லாம் ஒன்று விடாமல் அவர்கள் எங்களுக்கு எடுத்துக் கூறியபோது, தமிழ் இன உணர்ச்சியுடைய தமிழரசுக் கழகத் தோழர்களுடன் உரையாடிக் கொண்டிருக் கிறோமோ என்ற உணர்ச்சியே எனக்கு ஏற்பட்டது. சோஷலிச சமுதாயத்திலே தேசிய உணர்ச்சிக்கேயன்றி, பிரதேச உணர்ச்சிக்கும் நிலையான ஓர் இடம் உண்டு என்பதனை கஜாக்கியரால் அறிந்தேன்.

இங்கு, மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் கோரினால், கோருவோருடைய தேசபக்திகூட சந்தேகிக் கப்படுகிறது. இத்தகைய கோரிக்கை நாட்டைப் பிளவு படுத்தும் பிரிவினைக் கிளர்ச்சிக்கு முன்னோடியாகவும் வருணிக்கப்படுகிறது.

பிரதமர் இந்திரா காந்தி சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் கூட்டரசைப் பலமுறை சுற்றிப் பார்த் திருக்கிறார். தமிழகத் தலைவர்களான மீ. பக்தவத்சலம், கு. காமராசர், சி. சுப்பிரமணியம் ஆகியோரும் சோவியத் ருஷ்யாவில் சுற்றுலாச் செய்தவர்கள். எனவே சோவியத் யூனியனிலே ஒவ்வொரு பிரதேசமும் "குடி யரசு" என்று பெயர் பெற்றிருப்பதை அவர்கள் அறி வார்கள். அங்கே ஒவ்வொரு குடியரசும் தன் தனக் கெனத் தனித் தனியே கொடிகள் பெற்றிருப்பதனையும்

கண்டிருக்கிறார்கள். சோவியத் யூனியனிலே ஒவ்வொரு குடியரசுக்கும் தனித்தனியே அரசியல் சட்டம் இருந்து வருவதனையும் அறிந்திருக்கிறார்கள். மாநிலங்கள் விரும் பினால் பிரிந்து வாழவும் சோவியத் யூனியன் அரசியல் சட்டத்திலே விதி இருப்பதும் இவர்களுக்குத் தெரியும். சோவியத் யூனியனில் அங்கம் வகிக்கும் குடியரசுப் பிர தேசங்கள் முழு அளவில் சுயாட்சி உடையவை என் பதையும் இவர்கள் கண்ணாரக் கண்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும், மாநிலங்களுக்குச் சுயாட்சி வேண்டு மென்று இங்கு கோரினால், அதை "தேசிய ஒருமைப் பாட்டைச் சிதைக்கும் நாச வேலை" என்று இவர்கள் வருணிக்கிறார்களே!

சுத்த சோஷலிச நாட்டிலே ஒன்றுக்கு மேற்பட்ட கட்சி இல்லாத சோவியத் யூனியனிலே மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்குவதால் கேடு இல்லை. ஆனால், இந்தியா முதலாளித்துவ நாடானதால், இங்கு மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்குவதால் கேடு விளையக்கூடும் என்பதாக திருமதி. இந்திரா காந்தியும், திரு. பக்தவத்சலனாரும், திரு. சி. சுப்பிரமணியனாரும், திரு. காமராசரும் கருது கிறார்களோ என்னவோ! இதுதான் உண்மையென்றால், இவர்கள் தான் சோஷலிஸ்டுகளாச்சே! சோஷலிசத்தை யும் மாநில சுயாட்சியையும் இணைத்துப் பிணைத்துச் செயல்படுத்தலாமே! நானா வேண்டாமென்கிறேன்!

ஒருகால், மாநில சுயாட்சியை மறுக்கும் இவர்க ளெல்லாம் ஏகாதிபத்திய வாதிகளோ என்னவோ! சோஷலிசச் சித்தாந்தமும், ஏகாதிபத்திய வெறியும் ஒன்றோடு ஒன்று பொருந்தாவே!

மொழிச் சிக்கல்

இந்தியப் பெருநாடு விடுதலை பெற்றுக் கால்நூற்றாண்டு காலமாகியும், இன்னமும் இங்கே மொழிச்சிக்கல் முழு அளவில் தீர்க்கப் பெறவில்லை. ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை வெளியேற்றிய பாரதம், ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை வெளியேற்றுவதிலே இன்னமும் வெற்றி பெறவில்லை. இந்தியாவின் பொதுமொழி இந்தி மொழிதான் என்று இந்திய அரசியல் சட்டம் கூறினாலும், அதனை நடைமுறைக்குக் கொண்டு வர மத்திய அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கவில்லை. அது எடுத்த ஒவ்வொரு முயற்சியும், பொது மொழிச் சிக்கலை அதிகப்படுத்தியதேயன்றி, குறைத்துவிடவில்லை. இதற்குக் காரணம், இந்தியப் பேரரசு மொழிச்சிக்கலைத் தீர்ப்பதற்கு சரியான முறையில் முயலாததுதான்.

இத்துறையிலே சோவியத் ருஷ்யா அடைந்துள்ள வெற்றி இந்தியாவுக்கு மிகச் சிறந்த வழிகாட்டியாக விளங்குவதனை நான் நேரில் கண்டேன். சோவியத் ருஷ்யா, பன்மொழி நாடு. அதனால், அதற்கொரு பொதுமொழி தேவைப்படுகிறது. அந்தப் பொது மொழியாக ருஷ்யாவில் உள்ள மொழிகளில் ஒன்றான ருஷ்யமொழி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 1917-ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பின் தோன்றிய சோஷலிச ஆட்சி பொது மொழிச் சிக்கலைத் தீர்ப்பதில் நியாயமான வழியில் தீவிரமான ஆர்வங் காட்டியது.

புரட்சிக்கு முன்னிருந்த ஜார் ஆட்சி பொதுமொழி யான ருஷ்யமொழி ஒன்றுக்கே முதன்மை தந்து; பிரதேச மொழிகளின் வளர்ச்சியைப் புறக்கணித்தது. சில மொழிகளிலே சிறந்த நூல் ஒன்று கூட வெளியாக வில்லை. சில மொழிகளுக்கு வரி வடிவமே இல்லாமல் இருந்தது. மத்திய ஆட்சிக்கும் பிரதேச ஆட்சிக்கு மிடையே தொடர்புக்கு மட்டுமின்றி, பிரதேச அரசு களின் நிர்வாகத்திற்கும் பொது மொழியான ருஷ்ய மொழியே பயன்படுத்தப்பட்டது. பாடத் திட்டத்திலே ருஷ்ய மொழி கட்டாய பாடமாக்கப்பட்டது.

இந்தக் கொடுமைகளின் விளைவாக, சோவியத் ஆட்சி தோன்றிய உடனே, பிரதேச மொழிகளுக்கு உரிமை வழங்கும் திட்டத்தை மக்கள் எதிர்பார்த்தனர். சோவியத் அரசினர் மொழிப் பிரச்னையை மட்டும் தனியே எடுத்துக் கொள்ளாமல், அதனோடு தொடர்பு கொண்டுள்ள தேசிய இனப் பிரச்னையையும் ஆராய்ந்து அதற்குப் பரிகாரம் கண்டனர்.

ருஷ்யா முழுவதிலுமுள்ள மக்கள் தேசிய ரீதியில் ஒரே சமுதாயத்தினர்தான் என்றாலும், அந்தத் தேசிய சமுதாயம் ஏகப்பிண்டமென்று சோவியத் அரசு சாதிக்க வில்லை. மொழிவழிப்பட்ட பல்வேறு தேசிய இனங் களின் கூட்டுக் குடும்பமாகவே சோவியத் சமுதாயம் கருதப்பட்டது. கஜாக்கியர், உக்ரேனியர் ஆகியோர் தனித் தனித் தேசிய இனமாகக் கருதப்பட்டனர். ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் தனித்த தாயகமும், தனித்த வரலாறும், தனியான பழக்கவழக்கமும், தனிப் பட்ட கலாச்சாரத் தன்மையும் இருக்கிறதென்ற யதார்த்தமான உண்மையை சோவியத் அரசு ஒப்புக் கொண்டது. இப்படி ஒப்புக்கொள்வதன் மூலம்தான்

மொழிச் சிக்கலைத் தீர்க்க முடியும் என்று நம்பியது புரட்சியிலே பூத்த சோவியத் அரசு.

நம் நாட்டிலே, தமிழர்—ஆந்திரர்—மராத்தியர்—வங்காளியர் என்போரைத் தனித்த தாயகமும், தனிப்பட்ட வரலாறும், தனியான கலாச்சாரத் தன்மையும் கொண்ட தேசிய இனங்களாக இந்திய அரசோ, அதனுல் அமுல் நடத்தப்பட்டு வருகின்ற அரசியல் சட்டமோ ஒப்புக் கொள்ளவில்லை. இந்த மொழி வழிப் பட்ட இன உணர்ச்சி ஒரு குறையாக—ஏன், தேசிய ஒருமைப்பாட்டுக்குக் கேடு பயக்கத்தக்க குற்றமாகக் கூடக் கருதப்படுகிறது.

ஒரு மொழிக்கு ஒரு அரசு என்ற அடிப்படையில் இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்குவதன்மூலம்தான் இந்தியாவிலே மொழிச்சிக்கலைத் தீர்க்க முடியும் என்ற அடிப்படை உண்மைகூட நீண்ட காலமாக ஒப்புக் கொள்ளப்படவில்லை. "தட்சிணப் பிரதேசம்" போன்ற பன்மொழிப் பிரதேச அரசுகளைப் படைக்கவே மத்திய அரசு விரும்பியது. மக்களிடையே தோன்றிய மகத்தான எழுச்சிக்குப் பின்னர் ராஜ்யங்கள் மொழிவாரியாகத் திருத்தி அமைக்கப்பட்டன என்றாலும், இன்னமும் மொழி வழி ராஜ்யங்களின் நிலைமை "நித்திய கண்டம்; பூரண ஆயுசு" என்ற நிலையில்தான் இருக்கின்றது. எந்த நேரத்திலும் மொழிவழி ராஜ்யங்கள் ரத்து செய்யப்படலாம் என்ற மிரட்டல் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

சோவியத் ருஷ்யாவிலே நிலைமை இப்படி அல்ல. அங்கு "ஒரு மொழிக்கு ஒரு அரசு, அதுவும், சுயாட்சிக் குடியரசு" என்ற நல்ல தொடக்கத்தை அடித்தளமாக வைத்தே மொழிச் சிக்கலைத் தீர்க்க முனைந்தது சோவியத் அரசு.

ஒவ்வொரு குடியரசிலும் அதனதன் மொழியே ஆட்சிமொழியாகவும், கல்வியின் எல்லாக் கட்டத்திலும் பயிற்சி மொழியாகவும் இருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

பிரதேச மொழிகளின் வளர்ச்சிக்கு மத்திய அரசே—அதாவது, சோவியத் யூனியன் அரசே பொறுப்பேற்று, அதற்காக ஆண்டுதோறும் பலகோடி ரூபிள்களை செலவழித்து வருகிறது. வரி வடிவமில்லாத மொழிகளுக்கு அதனைப் படைத்துத் தரவும் சோவியத் யூனியன் அரசு முயற்சி மேற்கொள்கிறது. ஒவ்வொரு குடியரசும் பூரண சுதந்திரமுள்ள பிரதேசமாக இருந்துவர அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆம்; மாநில சுயாட்சி, சோஷலிசம் ஆகிய அரசியல் பொருளாதாரப் பிரச்னைகளிலிருந்து மொழிப்பிரச்னை வேறுபட்டிருப்பதாக சோவியத் அரசு கருதவில்லை.

நான் மாஸ்கோ நகரில் உள்ள உக்ரேன் ஓட்டலில் தங்கியிருந்த நாட்களிலே, அங்கு மொழி வேறுபாடுடைய, பல தேசிய இனத்தவரைச் சந்தித்திருக்கிறேன்—குறிப்பாக, ருஷ்ய மொழிப் பிரதேசமான மாஸ்கோவிலே உக்ரேனியர், அஜர்பைஜானியர் போன்ற வேற்று மொழியினரையும் கண்டேன்.

இப்படி, மொழி வேறுபாடுடையோர் சந்திக்குங்கால், அவர்கள் உலகப்பொதுமொழி என்று சொல்லப்படும் ஆங்கிலத்திலே பேசி நான் கேட்டதில்லை. தங்கள் சோவியத் நாட்டின் பொது மொழியான ருஷ்ய மொழியிலேதான் பேசிப் பழகுகின்றனர். நானும் என்னுடன் வந்திருந்த மற்ற மூவரும் எங்களுக்குள் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டபோது அதைக் கேட்ட ருஷ்யர்கள் வியப்படைந்தனர். ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளிலே எங்களைப் பார்த்து, "ஏன், உங்களுக்கென சொந்த

மாக ஒரு பொதுமொழி இல்லையா? ஆங்கிலத்தில் பேசிக் கொள்கிறீர்களே!" என்று கேட்டனர்.

சோவியத் நாட்டு மக்கள், உலகப் பாட்டாளி வர்க்கத்தை ஒரே இனமாக—ஒரே குலமாகக் கருதக்கூடிய சர்வ தேசிய மனப்பான்மையிலே கடந்த அரை நூற்றாண்டு காலமாக ஊறி வளர்ந்திருக்கின்றனர். அப்படியிருந்தும், அவர்கள் தங்கள் சொந்த மொழியிடத்து வைத்துள்ள பற்றும் பாசமும் வியக்கத் தக்கவையாக இருக்கின்றன.

ருஷ்ய நாட்டிலே டாக்டர்கள், என்ஜினீயர்கள், உயர்தர அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் ஆகியோரில் பெரும்பாலோருக்கு ஆங்கிலம் அறவே தெரியாது என்று நான் சொன்னால், தமிழரிலே படித்த பட்டதாரிகள் நம்ப மாட்டார்கள். ஆம்; இங்குள்ள சூழ்நிலை அப்படி! இங்கு எங்கும் எதிலும் ஆங்கிலமே ஆதிக்கம் செலுத்துகிறது. அதனால், ஆங்கிலப் புலமையின்றி டாக்டர்களாவும், என்ஜினியர்களாகவும் வரமுடியுமென்பதை இங்குள்ளோர் நம்பமாட்டார்கள்.

இதற்கு மாறாக, ருஷ்யாவிலே எங்கும் எதிலும் ருஷ்ய மொழி அல்லது பிரதேசமொழி முதலிடம் பெற்றிருக்கிறது. ஆங்கில மொழியை உயர்தரக் கல்வி கற்றோரில் ஒரு சிலரே பயின்று வைத்துள்ளனர். அவர்களிலும் பெரும்பாலோர் மொழி பெயர்ப்புப் பணிக்காகவே ஆங்கிலத்தைப் பயின்றுள்ளனர். ருஷ்யத் தலைவர்கள் அயல்நாடுகளிலிருந்து வரும் பிரமுகர்களைச் சந்திக்குங்கால் மொழி பெயர்ப்பாளரின் உதவியோடு தான் அவர்களுடன் பேசுகின்றனர். இதனை ஒரு குறையாக அல்லாமல், இயற்கை நியதியாகவே அவர்கள் கருதுகின்றனர்.

இந்தியாவி லிருந்து சென்ற நான் கலந்திருந்த குழுவினருக்கு மொழிபெயர்ப்பாளராக இருந்த திருமதி. நீனு என்ற ஒரு இளம்பெண், ருஷ்யம்—ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் தெரிந்து வைத்திருந்தார். அவர் கூட, ஆங்கிலத்திலே பெரும் புலமை பெற்றவர் என்று சொல்வதற்கில்லை.

ருஷ்யாவின் கல்விமுறையைப் புரிந்து கொள்வோமானால், அந்த நாட்டில் மொழிச்சிக்கல் தீர்க்கப்பட்ட விதத்தையும் எளிதாகத் தெரிந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநிலமொழி மட்டுமே பாடத் திட்டத்திலே கட்டாய பாடமாக்கப் பட்டிருக்கிறது. கல்வியின் எல்லாக் கட்டத்திலும் மாநில மொழியே பயிற்று மொழியாகவும் இருந்துவருகிறது. இரண்டாவது மொழியாக சோவியத் நாட்டின் பொதுமொழியான ருஷ்யமொழி பயிலப்படுகிறது. ஆம்; பள்ளிகளிலேயே! அதுவும் கட்டாயப் பாடமாக அல்ல; விருப்பப்பாடமாக! பிரதேசமொழிக்கு எதிராக பொது மொழி திணிக்கப்படாததாலும், சோவியத் ருஷ்யாவின் தேசிய ஒருமைப்பாட்டில் மக்களுக்கு இயற்கையாகவே விருப்பமிருப்பதாலும், பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகள் அவ்வளவு பேருமே தங்கள் தாய்மொழிக்கு அடுத்த மொழியாக ருஷ்யமொழியை விரும்பி எடுத்துப் பயிலுகின்றனர் என்று அறிந்தேன்.

கல்வியின் ஒரு கட்டத்திலே ஆங்கிலம் அல்லது ஏதேனும் ஒரு அன்னிய மொழி பயிலப் பாடத்திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் விருப்பப் பாடமாகத்தான்; கட்டாயபாடமாக அல்ல, ஆங்கிலம் ஜெர்மன், பிரெஞ்சு, கிரேக்கம் போன்ற மொழிகளில் ஏதேனும் ஒரு மொழியை ஒவ்வொரு மாணவரும்

எடுத்துப் பயில்கின்றனர். இந்த மும்மொழித் திட்டம் சுமக்க முடியாத ஒரு பாரமாக ருஷ்ய மாணவர்களுக்கு இருக்கவில்லை.

ருஷ்யாவிலே மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்கப் பட்டிருப்பதால், சோவியத் யூனியன் அரசில் உத்தி யோகம் பெறுவதற்காகவன்றி, சோவியத் நாட்டி லுள்ள மொழி வேறுபாடுடையதேசிய இனங்களிடையே ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்காகவென்றே அங்கு பொதுமொழி பயிலப் படுகிறது. கல்லூரி மட்டத்திலே தமிழ் மொழி கூடப் பயில வாய்ப்பளிக்கப் படுகிறது. திரு. செமியோன் ருதின் என்பார், நம் தமிழகத்துக்கு அறிமுகமான தமிழ்ப் புலவராவார்.

நம் நாட்டிலே பொது மொழியான இந்தியை ஆதிக்க உணர்வோடுதான் இந்தி மொழி வழங்காத பிரதேசங்கள் மீது திணிக்கின்றனர் மத்திய அரசி லுள்ளோர். அதனால்தான் இங்கே பொது மொழிப் பிரச்னை இன்னமும் தீரவில்லை. பிரதேச மொழிகள் ஆங்கிலத்தின் இடத்தைப் பிடிப்பதற்கு முன்பே, மத்தி யில் மொழி மாறுதல் செய்ய முற்படுகின்றனர். ஆம்; தமிழகத்தில் ஆட்சி மொழியாகவும் பயிற்று மொழியா கவும் தமிழ் வருவதற்கு முன்பே மத்தியில் ஆங்கிலத் திற்குப் பதில் இந்தியை ஆட்சி மொழியாக்கிவிடத் துடிக்கின்றனர். இது, வண்டிக்குப் பின்னே குதிரை யைப் பூட்டுவது போல! இதனால்தான் வண்டி நகர மாட்டேன் என்கின்றது. மொழி வேறுபாடுடைய இந்திய மக்களிடையே உறவை வளர்க்க—இந்திய தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்க இந்தி மொழியைப் பயில் வது வேறு; இந்திய யூனியன் அரசின் நிர்வாக மொழி யாக இந்தி மொழியை ஏற்பது வேறு. முன் சொன்ன உறவு மொழியாக மட்டுமே இந்தி தமிழகத்துப் பள்ளி

களிலே விருப்பப் பாடமாக வைக்கப் பட்டிருந்தால்; பொது மொழிப் பிரச்னை இதற்குள் தீர்ந்து போயிருக்கும். அண்ணு கூட, தான் முதல்வராக வந்த பின் தி. நகரில் நடந்த ராஜஸ்தானியர் கூட்டத்திலே இப்படித்தான் சொன்னுர். துரதிருஷ்டவசமாக, இந்தியை இந்திய தேசிய இனங்களிடையே உறவு மொழியாகச் செய்வதை விட, மத்திய அரசிலே உத்தியோக மொழியாகச் செய்வதிலேதான் அதிக ஆர்வங் காட்டி வருகின்றனர் இந்தி பக்தர்கள். இங்கே பொது மொழிப் பிரச்னையிலே இரண்டு கோஷங்கள் ஒன்றுக்கொன்று எதிராகக் கோஷிக்கப் படுகின்றன. ஒன்று, 'என்றென்றும் ஆங்கிலம்'! இன்னென்று, 'இன்றைக்கே இந்தி'! இந்த இரண்டுமே தமிழ் போன்ற பிரதேச மொழிகளின் வளர்ச்சிக்கு எதிரானவை. அதனுல், இந்த இரண்டு கோஷங்களுக்கும் எதிராக "எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்" என்ற மூன்ருவது ஒரு கோஷமும் தமிழக அளவில் தேவைப்பட்டு விட்டது.

சோவியத் ருஷ்யாவில் இப்படிப்பட்ட கோஷங்கள் தேவையில்லாமலே மொழிச் சிக்கல் தீர்க்கப்பட்டு விட்டது. புரட்சி முடிந்த ஐந்தாண்டு காலத்திற்குள்ளாகவே ஜார் ஆட்சியில் உருவாக்கப் பட்டிருந்த மொழிச் சிக்கல் முழு அளவில் தீர்க்கப்பட்டு விட்டது. ருஷ்யாவில் நான் பெற்ற அனுபவத்தால், உண்மையான சோஷலிச சித்தாந்தத்தின் அடிப்படையிலேதான் மொழி வேறுபாடுடைய நாடுகள் ஒரே சமஷ்டியில் இணைய முடியுமென்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டுள்ளது. அத்தகைய சோஷலிச சமஷ்டியிலேதான் மொழிச் சிக்கலைத் தீர்ப்பதும் சாத்தியமாகு மென்று நான் நம்புகின்றேன்.

இந்தியாவிலே மொழிச் சிக்கல் தீர்க்கப்பட வேண்டு மானல் சோவியத் நாட்டைப் பின்பற்றி, மாநிலங்களுக் குப் பரிபூரண சுயாட்சி வழங்கப்பட வேண்டும். இதற் கும் மொழிச் சிக்கலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கும் வரை பொது மொழியின் தேவை அதிகப்பட்டு வருவதோடு, ஒவ்வொரு குடிமகனும் அதனைப் பயின்ருக வேண்டிய கட்டாயமும் தேவைப்பட்டு விடுகின்றது. மத்திய அரசிலே அதிகாரங்கள் குறைந்து விட்டால், அப்புறம் யூனியன் அரசில் உத்தியோகம் பெறுவதற்காக பொது மொழியினைப் பயில வேண்டிய அவசியம் ஒரு சிலருக்கே தேவைப்படுகின்றது. மத்திய அரசிலுள்ள அதிகாரங்கள் மாநில அரசுகளுக்கு மாற்றப் படுகின்றன என்ருல், இங்கிலீஷ் அல்லது இந்தி மண்டலத்திலிருந்து தமிழ் மண்டலத்திற்கு மாற்றப் படுகின்றன என்று பொருளா கிறது.

பாதுகாப்பு, போக்குவரத்து, அயல் நாட்டுறவு ஆகிய மூன்று பொறுப்புக்களை மட்டுமே மத்திய அரசிடம் விட்டு வைத்து, மற்ற பொறுப்புக்களை மாநில அரசுகளுக்கு மாற்றி விட்டால், அதற்கப்புறம் பொது மொழிப் பிரச்னை என்பது பூதக் கண்ணுடி வைத்துப் பார்த்தாலும் கண்ணில் புலப்படாது. ஆம்; அந்த அளவுக்குப் பொது மொழிப் பிரச்னை சிறுத்துவிடும். இந்த அடிப்படையில்தான் சோவியத் ருஷ்யாவிலே பொது மொழிப் பிரச்னை தீர்க்கப்பட்டது.

ருஷ்யாவின் கல்வித் திட்டத்திலே இன்னொரு சிறந்த முறையையும் தெரிந்துகொண்டு வந்துள்ளேன். தமிழ் நாட்டு மாணவ—மாணவியர் பலர் மாஸ்கோ பல்கலைக் கழகத்திலே பல்வேறு வகையான சிறப்புக் கல்விகளைப் பயின்று வருகின்றனர். இவர்கள் எந்த மொழியின்

வாயிலாகக் கல்வி பயல்கின்றனர் என்பதனை அறிந்து கொள்வதிலே நான் மிகுந்த ஆர்வங் காட்டினேன். செல்வி லட்சுமி என்ற தமிழ் நாட்டு மாணவி அங்கே தத்துவம் பயின்று வருகிறார். எந்த வகை சிறப்புக் கல்வியானாலும் மொத்தம் இரண்டாண்டு காலம் அதற்காக செலவிடப்படுகின்றது. அதிலே முதல் ஆறு மாத காலம் ருஷ்ய மொழி பயிற்றுவிக்கப் படுகிறது. ருஷ்யர் அல்லாதவர்கள் ருஷ்ய மொழியை ஆறுமாத காலத்திற்குள்ளே எளிதில் படித்துக் கொள்வதற் கேற்றவாறு அம்மொழியிலே பாட நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆறு மாத காலம் பயின்ற ருஷ்ய மொழி ஞானத்தை வைத்துக் கொண்டு, எஞ்சியுள்ள ஒன்றரை ஆண்டு காலத்தில் தாம் விரும்பும் சிறப்புக் கல்வியைப் பயில்கின்றனர் தமிழக மாணவர்கள்.

சிறப்புக் கல்வி பயில வரும் அயல் நாட்டு மாணவர் ஒவ்வொருவருக்கும் இதே விதிமுறைதான். பிரான்சு நாட்டிலேயும் இதே முறைதான். அங்கும் பாரிஸ் பல்கலைக் கழகத்திலே சிறப்புக் கல்வி பயிலும் தமிழக மாணவர்களைக் கண்டேன். அவர்களும் முதல் ஆறு மாத காலம் பிரெஞ்சு மொழியிலே பயிற்சி பெற்று, அதன் பின் ஒன்றரை ஆண்டு காலம் பிரெஞ்சு மொழியின் மூலம் தாங்கள் விரும்பும் சிறப்புக் கல்வியைப் பயில்கின்றனர்.

ருஷ்ய மொழியின் வாயிலாகவோ, பிரெஞ்சு மொழியின் வாயிலாகவோ தமிழகத்து மாணவர் பயிலும் சிறப்புக் கல்வி பயனுடையதாக இருக்குமானால், தமிழகத்திலே தமிழின் மூலம் பயிலும் மருத்துவமோ, பொறியியலோ, பிற விஞ்ஞானப் படிப்போ வாழ்க்கைக்குப் பயன்படா என்று கூறுவது வடிகட்டிய மூடத்தனமல்லவா?

அயல்நாடு செல்லும் ஒவ்வொருவரும் தாயகம் திரும்புங்கால் தத்தம் குடும்பத்தாருக்கென சில பொருள்களைக் கொண்டு வருவதுண்டு. நானும் சில பொருள்களைக் கொண்டு வந்தேன். அவை, பொன்னல்ல; வேறு வகைப்பொருள் அல்ல! அரசியல், பொருளாதாரம், மொழி ஆகியவற்றோடு சம்பந்தப்பட்ட புதிய புதிய எண்ணங்களாகும். சுங்க வரி அதிகாரிகளின் பார்வையில் படாமல் என்னுடைய மனப் பெட்டிக்குள்ளே அந்த எண்ணங்களை மறைத்து வைத்துக் கொண்டு வந்தேன். அவற்றில் ஒன்று தாய் மொழியையே கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் பயிற்று மொழியாகக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையாகும்.

நகர நாகரிகம்!

"ருஷ்யா சோஷலிச நாடானதால், அங்கு ஒழுக்க நெறி விரும்பி வளர்க்கப்படுமா?" என்ற ஐயப்பாடு முதலாளித்துவ நாடுகளிலே எழுப்பப்படுவதுண்டு. நம் நாட்டிலேயும் அப்படி ஐயுறுவோர் இல்லாமலில்லை. எனக்கு இந்த ஐயப்பாடு சோவியத் நாட்டை நேரில் பார்ப்பதற்கு முன்னும் இருந்ததில்லை. ஆயினும், நான் எதிர் பார்த்ததை விடவும் அதிக அளவில் ஒழுக்க நெறிகள் விரும்பி வளர்க்கப்படக் கண்டேன்.

வறுமையும் கல்வியின்மையும் ஒழிக்கப்பட்டு, மக்களுடைய அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப் பட்டு விட்டால், ஒழுக்கம் இயற்கையாகவே வளருமென்பது சோவியத் நாட்டிற்குச் செல்லு முன்பு தத்துவ அளவில் நானறிந்த ஒரு உண்மை. ஆனால், அது நடைமுறையில் மெய்ப்பிக்கப்பட் டிருப்பதனை சோஷலிச நாடான சோவியத் ருஷ்யாவில் நேரில் கண்டேன்.

சுக போகங்கள் மிகுதியாக உள்ள நகரங்களிலே, ஒழுக்கக் கேடுகள் மலிந்து விடுமென்பது பொதுவான சித்தாந்தம். இதற்கு, "போக நீள் புகழ் மன்னும் புகார் நகர்" தன்னைக் காட்டி எச்சரிக்கின்றார் இளங் கோவடிகள்.

ஆடம்பரமான நகர நாகரிகம் ஒழுக்கத்தை வளர்க்காதென்று அஞ்சியவராகி,

"தேட்டிலே மிகுந்த சென்னையி லிருந்தால்
சிறுகுறு மென்றுளம் பயந்தே
நாட்டிலே சிறிய வூர்ப்புறங் களிலே
நண்ணினேன்..."

என்கின்றூர், இராமலிங்க சுவாமிகள்.

ஒழுக்கத்தை உயிரெனப் போற்றிய காந்தியடிகளும், நகர நாகரிகத்தை வெறுத்தவராகி கிராம வாழ்க்கையையே விரும்பினூர்.

பொதுவாக, முதலாளித்துவ சமுதாயத்திலே நகர நாகரிகமானது ஒழுக்கக் கேடுகளை வளர்க்கின்றது என்பதில் ஐயமில்லை. பாரிஸ் நகரை ஒரு முறை பார்த்தாலே இதனைப் புரிந்து கொள்ளலாம். ஆனல், சோஷலிச நாட்டின் தலைநகரான மாஸ்கோவில் எல்லோருக்கும் எல்லாம் கிடைப்பதாக இருந்தும், அங்கு ஒழுக்கம் நிலவுகிறது. உண்மையில், மாஸ்கோவையும் பாரிஸ் நகரையும் பார்த்த பின்னர், ஒழுக்கமாக வாழ்வது சோஷலிச சமுதாயத்தில்தான் சாத்திய மென்பதனைத் தெள்ளத் தெளிய உணர்ந்தேன்.

மாஸ்கோவில் நான் தங்கியிருந்த உக்ரேன் ஓட்டல், அந்த நகரத்திலேயே மிகப் பெரிய—அழகிய ஓட்டலாகும். அயல் நாட்டுப் பயணிகள் இங்குதான் அதிகமாகத் தங்குகின்றனர். ஆனல், முதலாளித்துவ நாடுகளிலுள்ள அதுபோன்ற பெரிய ஓட்டல்களில் காணப்படும் குறைபாடுகள் உக்ரேன் ஓட்டலில் இல்லையென்று உறுதியாகச் சொல்வேன்.

நம் நாட்டில் சென்னை, பெங்களூர், ஜெய்ப்பூர், பம்பாய், டில்லி, கல்கத்தா போன்ற நகரங்களிலும்; அயல் நாடுகளில் ரங்கூன், சிங்கப்பூர், கோலாலம்பூர், பாரிஸ், லண்டன், நகரங்களிலும் உள்ள பெரிய ஓட்டல்

களில் தங்கி, அவற்றின் நிலவரங்களை அறிந்திருக்கி றேன். அந்த ஓட்டல்களில் சில விபசார விடுதிகளாகவே இயங்குகின்றன என்று விசாரணையில் அறிந்து கொண்டேன். விபசாரத் தடைச் சட்டமுள்ள நகரங்களிலே அந்தரங்கத்தில் சட்டம் மீறப்படுகின்றது.

சோஷலிச நாடான சோவியத்திலே, ஆண்—பெண் உறவு பெரும்பாலும் ஒழுக்க நெறிக்கு உட்பட்டதாகவே இருந்து வருகின்றது. நம்முடைய இலக்கியங்களிலே வற்புறுத்தப் படுகின்ற பிறர் நெஞ்சு புகாத தெய்விகக் கற்பு நெறி சோவியத் நாட்டிலே நம்பப்படுவதாக நான் சொல்லவில்லை. மனித சமுதாயத்திற்கு இன்றியமையாது தேவைப்படும் ஒழுக்கம் ஆண்—பெண் உறவோடு உறவு கொண்டிருக்கின்றது என்றே கூறுகின்றேன். அங்கே ஆண்மையானது பெண்மைக்குப் பாதுகாப்பளிக்கிறது. 'பெண்ணறத்தினை ஆண் மக்கள் வீரந் தான் பேணுமாயின் பிறிதொரு தாழ்வில்லை' என்றார் பாரதியார். சோவியத்திலே பெண்கள் ஒழுக்கத்தோடு வாழ ஆண் மக்களின் ஒழுக்கம் உதவி புரிகிறதென்றே கேள்விப்பட்டேன். சோவியத்திலும் ஒழுக்கக் கேடுகள் இங்கு மங்குமாக இருக்கலாம். சமுதாயம் முழுவதையும் பொதுப்பட நோக்குமிடத்து, சோவியத் நாடு முதலாளித்துவ நாடுகளை விடவும் ஒழுக்கத்திற் சிறந்து விளங்குவதாகவே நான் நம்புகின்றேன். பாரிஸ், லண்டன், நகரங்களில் காணப்படும் "இரவு விடுதிகள்" மாஸ்கோவில் இல்லை—இருக்க விடாது சோவியத் அரசு. பாரிசிலே, இளம் நங்கையும் நம்பியும் வீதியில் நடமாடுங்கால், திடீரென ஓரிடத்தில் நின்று, ஒருவரையொருவர் கட்டித் தழுவி முத்தம் கொடுத்துக் கொள்வது சர்வ சாதாரணமாக நிகழ்கின்றது. அது உயர்தர நாகரிகமாவும் கருதப்படுகின்றது போலும்!

நான் பாரிசிலிருந்தபோது, 'இரவு விடுதி'யொன்றை அவசியம் பார்க்க வேண்டுமென்று என் மதிப்பிற்குரிய நண்பர்கள் என்னை வற்புறுத்தினர். ஒரு நாள் இரவு நுழைவுச் சீட்டுகூட எனக்கும் சேர்த்து வாங்கிவிட்டனர். இரவுவிடுதியிலே நடனமேடை சிறந்தமுறையில் - பொறியியல், விஞ்ஞானத்திறமையோடு-அமைக்கப் பட்டிருப்பதால், அதைப் பார்ப்பதற்காகவேனும் நான் 'இரவு விடுதி' யை ஒருமுறை பார்த்தாக வேண்டுமென்று என்னை நிர்ப்பந்தித்தனர். நண்பர்கள் வற்புறுத்தலுக்கு நான் இணங்கவில்லை. லண்டனிலும், 'இரவு விடுதி'கள் உண்டு. ஆனால், பாரிஸ் நகரில்தான் இந்த ஆபாச விடுதிகள் மிகுதியாக இருக்கின்றன. மாஸ்கோவில் அறவே இல்லை.

நாடகங்களிலே, நடனங்களிலே, திரைப் படங்களிலே நடிகைகள் ஆபாச உடையணியும் வழக்கமும் சோவியத் ருஷ்யாவில் இல்லை. இதிலே, சோஷலிச ஆட்சி மிகவும் கண்டிப்புக் காட்டுவதாக அறிந்து மகிழ்ந்தேன்.

மாஸ்கோவில் ஓட்டல்கள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள் ஆகியவற்றிலே ஆண்களும் பெண்களும் சேர்ந்தே பணி புரிகின்றனர்.

இதனால், ருஷ்ய சமுதாயத்திலே ஒழுக்கம் குறைந்துவிடவில்லை என்று அறிந்தேன். நம் நாட்டிலே, இம்மாதிரி ஆண்களும் பெண்களும் சேர்ந்து பணி புரிந்தால், ஒழுக்கம் ஒழிந்தே போய் விடுமென்ற அச்சம் இருந்து வருகின்றது. கல்லூரிகளிலே மாணவர்களும், மாணவியர்களும் சேர்ந்து படிப்பதற்கான நல்ல சூழ்நிலைகூட நம் நாட்டில் இன்னும் உருவாகவில்லையே!

மாஸ்கோவிலே போக்கு வரத்துக்கான விதிமுறைகளை மக்கள் ஒழுங்காகக் கடைப்பிடிக்கின்றனர். வீதி

யின் இருமருங்கிலுமுள்ள நடைபாதைகள் தவருன முறையில் பயன்படுத்தப்படவில்லை. நடை பாதை அதன் பெயருக்கேற்ப மக்கள் நடப்பதற்காகவே பயன் படுத்தப் படுகின்றது. நம் நாட்டிலுள்ள நகரங்களில் நடை பாதையை கடைகள் வைக்கவும், குடியிருக்கவும் மக்களீ பயன் படுத்துகின்றனர். இது சட்ட விரோத மான செயலாக இருந்தும், இதனைத் தடுக்க நகர மன்றங்களாலும் ஆட்சியாலும் இயலவில்லை. நடை பாதைகளிலே ஏழைக் குடும்பங்களேயன்றி, குடும்பம் இல்லாத பிள்ளையார் கூடக் குடியேறி விடுகின்முர்! இந்த அநாகரிகம் நகர நாகரிகத்திலிருந்து பிரிந்தெடுக்க இயலாதபடி அதனோடு இரண்டறப் பிணைந்து விட்டது. ஆனால், மாஸ்கோ நகரில் நடைபாதை சட்ட விரோத மாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

மாஸ்கோ வீதிகளிலே வண்டிப் போக்குவரத்துக்கு இடையூறு செய்யாமல் மக்கள் ஓரமாக ஒதுங்கி கியூ வரிசைபோல ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் காட்சி என்னைப் பெரிதுங் கவர்ந்தது. ஆரம் பத்தில் சோவியத் அரசு கட்டாயப்படுத்தி அவர்களை இப்படிப் பழக்குவித்ததோ என்று எண்ணத்தக்க வகை யில் மக்கள் வீதிகளிலே ஒழுங்கு முறையோடு நடந்து செல்கின்றனர். அதைப் பார்ப்பதிலே எனக்கொரு தனி மகிழ்ச்சி! அதனால், வீதிகளில் மக்கள் சாரி சாரி யாக நடந்து செல்வதனை, நான் தங்கியிருந்த உக்ரேன் ஓட்டலின் சாளரத்தின் வழியாக அடிக்கடி பார்த்து மகிழ்ச்சியடைந்தேன். இந்த அற்புதத்தை, ஆணை மூல மாக அல்லாமல், அன்பு வழியிலே சோவியத் அரசு சாதித்ததாகச் சொல்லப்பட்டது.

மாஸ்கோ வீதியோரங்களிலுள்ள சுவர்களிலே விளம்பரச் சுவரொட்டிகளை நான் காணவில்லை. அதற்

கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களிலே, அதற்கெனப் பொருத்தப்பட்டுள்ள போர்டுகளிலேதான் விளம்பரச் சுவரொட்டிகளைக் கண்டேன். மாஸ்கோவில் மட்டுமல்லாமல், பாரிஸ்—லண்டன் நகரங்களிலும் இந்த முறை கண்டிப்பாகக் கையாளப்படுகிறது. மற்றும், மாஸ்கோ—பாரிஸ்—லண்டன் நகரங்களிலே, பாதாள* ரயில் நிலையங்களிலேதான் விளம்பரச் சுவரொட்டிகள் சுவர்களிலே காணப்பட்டன. நம் நாட்டிலே—குறிப்பாக, சென்னை நகரிலே, விளம்பரச் சுவரொட்டிகள் ஒட்டப்படாத சுவர்களையே காண முடியாத நிலை இருந்து வருகின்றது.

ஐரோப்பிய நகரங்களிலே மோட்டார் ஹார்ன் ஒலியைக் கேட்க முடியாது. அங்கெல்லாம் ஹார்ன் அடிக்கக் கூடாதென்ற ஆணை நகரம் முழுவதிலுமே அமுலிலிருந்து வருகின்றது. நம் சென்னை நகரில் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே ஹார்ன் அடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. மாஸ்கோ நகர மக்களைப் போன்று சென்னை நகர மக்களும் நடை பாதைகளை நடந்து செல்வதற்கு மட்டுமே பயன் படுத்துவார்களானால், வண்டிப் போக்கு வரத்துக்கு உதவி புரியும் வகையில், வீதியோரங்களில் ஒழுங்காக நடந்து செல்வார்களானால், இங்கும் மோட்டார் ஹார்ன் ஒலியை நகர முழுவதிலுமே தடை செய்து விடலாம்.

நாடக திரைப்படக் கொட்டகைகள், கடை வீதிகள், ரெயில்வே நிலையங்கள் ஆகிய மக்கள் அதிகமாகக் குழுமும் பொது இடங்களிலே நம் நாட்டில் பயங்கரமான இரைச்சலைக் கேட்கின்றோம். ஆம், மக்கள், அவசியமில்லாமல், ஏதேதோ வெட்டிப் பேச்சுக்களைப் பேசி, இறைச்சல் ்பாடுகிறார்கள். இடித்துக் கொண்டும் காலை மிதித்துக் கொண்டும் முந்துவதற்கு முயல்கிறார்கள்.

ஐரோப்பிய நகரங்களில்—குறிப்பாக, மாஸ்கோ நகரில் எந்த ஒரு பொது இடத்திலும் மக்கள் இப்படி நடந்து கொண்டு நான் பார்க்கவில்லை. அமைதியாகவும் ஆரவாரமின்றியும் நடந்து செல்கிறார்கள். வெட்டிப் பேச்சுகளைப் பேசி, இரைச்சலிடும் வழக்கமே அங்கு இல்லை.* இது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. மாஸ்கோ நகரத்திலுள்ள லெனின் சதுக்கத்தில் லெனின் சமாதியைக் காண்பதற்காக சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். ஆனால், எங்கும் நிசப்தம் நிலவியது. அவர்கள் வரிசை வரிசையாக—ஒருவரையொருவர் முந்த முயலாமல்—ஒழுங்கு முறையோடு சென்றார்கள். அந்தக் காட்சி இன்னமும் நினைப்பு வரும் போதெல்லாம் என் கண் முன்னே தோன்றுகின்றது.

சோவியத் நாட்டிலே மதுவிலக்குச் சட்டம் நடைமுறையிலில்லை. ஆம்; குடிப் பழக்கம் சட்ட சம்மதம். ஓட்டல்களிலே மது வழங்கப்படுகின்றது. டில்லியிலிருந்து மாஸ்கோவுக்கும் மாஸ்கோவிலிருந்து பாரிசுக்கும் சோவியத் விமானத்தில் நான் சென்றபோது, விமானத்திலேயே மது வழங்கக்கண்டேன். 'வோல்கா' என்ற மஞ்சள் நிறமான ஒருவகை மதுவும், 'விஸ்கி' எனப்படும் செந்நிறமான மதுபானமும் வழங்கக் கண்டேன். ஆனால், ஓட்டல்களிலும் சரி; மற்ற பொதுவிடங்களிலும் சரி; குடி போதையால் தகாத முறையில் நடந்து கொண்டவர்களை நான் காணவில்லை.

சோவியத் அரசுக்கு குடிப் பழக்கத்தைச் சட்ட விரோதமாக்கும் எண்ணமில்லை யாயினும், குடிப் பழக்கத்தைக் குறைப்பதைத் தன் கொள்கையாகக் கொண்டிருக்கிறதென்று எனக்குச் சொல்லப்பட்டது. இப்போது குடிப் பழக்கம் வரம்பை மீறி வளர்ந்து வருவதாக அரசு கவலைப்படுகிற தென்றும், அதனைக் குறைப்

பதிலே அக்கறை காட்டி வருகிறதென்றும் சொல்லப் பட்டது.

'வோல்கா' என்ற மதுபானம் அதிக போதையைத் தருவதில்லையாம். ருஷ்யாவில் அந்த பானம்தான் அதிக மாகப் பயன்படுத்தப்படுகிறது. விஸ்கி அருந்துவோரின் தொகை குறைவென்றும், அவர்களும் குறைந்த அளவி லேயே அருந்துகின்றனரென்றும் அறிந்தேன்.

தொழிலாளர்களில் எவரேனும் மது போதையால் குற்ற மிழைத்தால், சட்டப்படி அவரைத் தண்டிப்பதற் குப் பதிலாக, அவர் தொழில் புரியும் தொழிற்சாலை யிலே, அவர் செய்த குற்றத்தை விளம்பரப்படுத்தி, அவரே நாணும்படிச் செய்வதன் மூலம் அவர் திரும்ப வும் அப்படிப்பட்ட குற்றத்தைச் செய்யாதபடி அரசு தடுத்தாட் கொள்ளுகிறதாம்! இந்த அன்பு முறையைத் தான் நாம் இங்கு 'காந்தியம்' என்கின்றோம்.

சோவியத் நாட்டிலே குடும்பக் கட்டுப்பாடு இல்லை. ஆனால், இந்தியாவை நோக்குங்கால், அங்கு மக்கள் உற்பத்தி மிக மிகக் குறைவென்றே சொல்ல வேண்டும். பெண்கள் தங்கள் உடல் நலங் கருதியும், இளமை இன்பந் துய்ப்பதற்குக் குழந்தைப் பெருக்கம் தடையாகி விடக் கூடாதெனக் கருதியும் இயற்கையாகவே குடும் பக் கட்டுப்பாட்டைக் கடைப் பிடிக்கின்றார்கள். இந்த வழக்கம் ஐரோப்பா முழுவதிலுமே இருந்து வருவதாக அறிந்தேன். உண்மையில், இளந்தம்பதிகள் நல்ல ஆரோக்கியத்தோடு இருக்கின்றனர். இதற்குக் காரணங் கள் பலவாயினும், முதற் காரணம், குழந்தை பெறுவ தைக் கட்டுப்படுத்திக் கொள்வதேயாகும்.

குழந்தை வளர்ப்பிலே சோவியத் ருஷ்யா உலகில் எந்த ஒரு நாட்டையும் இணை சொல்ல இயலாத அளவில்

அதிக அக்கறை காட்டி வருகின்றது. இதிலும் ஐரோப் பிய நாடுகள் அனைத்துமே இந்தியாவை விடவும் சீரிய முறையில் செயலாற்றுகின்றன என்றாலும், சோவியத் ருஷ்யா தான் தலை சிறந்து விளங்குகின்றது.

மூன்று வயதுவரைதான் குழந்தைகள் பெற்றோ ரிடமே வளர்கின்றன. அதற்கு மேல் குழந்தைகளுக்கான விடுதிகளில் சேர்க்கப்பட்டு, அங்கு விசேஷ பராமரிப் புடன் வளர்க்கப்படுகின்றன. கம்யூனிச சமுதாயத்தைப் படைக்கப் பாடுபட்டு வரும் சோவியத் ருஷ்யா, அந்தப் புதிய சமுதாயத்தை குழந்தை சமுதாயத்தைக் கொண்டு தான் படைக்க முடியுமென்பதைத் தெளிவாக உணர்ந்து செயல்படுகின்றது.

மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளை—அவை பெற்றோர் பாதுகாப்பில் இருப்பினும்—வளர்க்கும் பொறுப்பிலே அரசு மறைமுகமாகப் பங்கு கொள்ளு கின்றது. ஆம்; குழந்தைகளுக்குத் தேவைப்படும் பசும் பால் போன்ற போஷாக்கான உணவுகளை அரசு இலவச மாக வழங்குகின்றது.

குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதிலே சோவியத் அரசு காட்டி வரும் ஆர்வம் உலகிலுள்ள நாடுகளுக்கெல் லாம் ஒரு முன்னுதாரணம் என்று சொல்லலாம். ருஷ்யா விலே சோஷலிச ஆட்சி அமைந்து 53 ஆண்டுகளா கின்றன. இந்த அரை நூற்றாண்டு காலத்திலே ஒரு புத்தம் புதிய சமுதாயத்தையே படைத்து, சோஷலிச சித்தாந்தத்தின் பலன் இன்னதென்று உலகுக்கு உணர்த்தி வருகின்றது.

சோவியத் ருஷ்யாவிலே சோம்பலுக்கு இடமில்லை. "உழைக்காத சோம்பேறிக்கு உயிர் வாழவே உரிமை யில்லை" என்றார் லெனின். வயது வந்த அனைவரும்-ஆணா யினும் சரி, பெண்ணாயினும் சரி - உழைத்துத்தான்

பிழைக்க வேண்டும். உழைக்கத் திறனற்று விட்ட முதியோர்கள் மட்டுமே இந்த விதிக்கு விலக்காவர். அவர்களைப் பொஷிக்கும் பொறுப்பை அரசே மேற் கொண்டுள்ளது. ஒப்புக்கு இங்கொருவருக்கு அங்கொரு வருக்கு உதவித் தொகை கொடுப்பதோடு திருப்தி யடைந்து விடாமல், அரசினுடைய உதவி தேவைப்படும் முதியோர் அனைவருக்கும் உதவி புரிகிறது.

நம் நாட்டிலே கூட்டுக் குடும்ப வாழ்க்கை என்பது "ஒருவன் சம்பாதிக்க ஒன்பது பேர் வயிறு வளர்க்க" என்னும் நிலையில்தான் இருக்கின்றது. இதற்குக் காரணம் வேலையில்லாத் திண்டாட்டம் மட்டும் அன்று; சோம்பலும் கூடத்தான். இதனை உணர்ந்தே,

'இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார் சிலர்
பலர் நோலா தவர்.'

என்கின்றார் வள்ளுவர். ஆம்; மக்கள் பொருளின்மை யால் வருந்துவதற்குக் காரணம், உழைப்போர் சிலரும், உழைக்காதுண்பவர் பலருமாக இருப்பதுதான் என்பது மேற்படி குறளின் பொருளாகும்.

பொதுவாக, பாரிஸ்—லண்டன் ஆகிய ஐரோப்பிய நகரங்களிலே சோம்பேறிகள் குறைவுதான். ஆயினும் அங்கெல்லாம் சோம்பித் திரிவது சட்ட விரோதமாக்கப் படவில்லை என்று நினைக்கின்றேன். ஆனால், சோஷலிச நாடான சோவியத் ருஷ்யாவிலே சோம்பித்திரிவது சட்ட விரோதம்—சமூகத் துரோகமும் கூட.

ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள ஆண், பெண் அனைவருமே ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபட்டு உழைக் கின்றனர். அதிலே கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு வாழ்க்கை நடத்துகின்றனர். கணவன் கையை நம்பி மனைவி வாழ்வதில்லை. 'தன் கையே தனக்குதவி' என்ற

தமிழ் நாட்டுப் பழமொழி சோவியத் நாட்டிலே வீட்டுக்கு வீடு நடை முறையிலிருக்கக் கண்டேன். ஆரோக்கியமுடைய முதியோர் கூட, பத்திரிகை விற்பது போன்ற உடல் பலம் தேவையற்ற உழைப்பிலே ஈடு பட்டு வாழ்க்கை நடத்துகின்றனர்.

சோவியத் நாட்டின் குடும்பங்களிலே பொருளற்ற பாச உணர்ச்சிகள் போற்றப்படுவதில்லை. ஏன், ஐரோப்பா முழுவதுமே அத்தகைய பாச உணர்ச்சி மூட நம்பிக்கையாகவே கருதப்படுகின்றது. இது சரி என்று தான் நான் எண்ணுகின்றேன். பிள்ளைகளிடம் பெற்றோர் காட்டும் குறிக்கோளற்ற பாச உணர்ச்சியால் அவர்கள் கெட்டுவிடுகின்றனர். மூன்று வயது முடிந்ததும் தங்கள் குழந்தைகளை அரசு நடத்தும் விடுதிகளிலே விட்டுவைக்க நம் நாட்டிலுள்ள பெற்றோர் விரும்ப மாட்டார்கள். இதன் பெயர் 'பிள்ளைப் பாசம்' அல்லது 'தாய்ப் பாசம்' என்று சொல்லப்படுகிறது. இத்தகைய மூட நம்பிக்கையால் வருங்கால சமுதாயத்தைத் திட்டமிட்டபடி உருவாக்க அரசால் முடியாமல் போகின்றது. நம் நாட்டில் இந்தக் கொடிய பழக்கத்திற்கு என்று முடிவேற்படுகிறதோ அன்றுதான் நவ இந்தியாவைப் படைக்கும் முயற்சியிலே அரசு வெற்றிபெற முடியும். ருஷ்யாவிலே பெற்றோர்களுக்கு பிள்ளைப் பாசம் அறவே இல்லை என்று சொல்லி விடுவதற்கில்லை. விடுதி களுக்குச் சென்று தங்கள் பிள்ளைகளுடன் பெற்றோர் கொஞ்சிக் குலாவுவதை 'அல்ம்-அதா' நகரத்தில் நான் நேரில் கண்டேன். அந்த நேரத்திலே தங்களுடைய குழந்தைகள்பால் உள்ள பாசத்தின் ஆழத்தை அவர்கள் முகங்கள் அளந்து காட்டின. குழந்தை சமுதாயத்தைத் திட்டமிட்டு வளர்க்காத எந்த ஒரு நாட்டுக்கும் வருங் காலம் ஒளியுடையதாக இருக்க முடியாது.

பொல்லாத வயிறு!

சோவியத் யூனியனிலுள்ள கஜாக் குடியரசின் தலை நகரான 'அல்ம்—அதா'வுக்கு நான் சென்றதனை முன்னமே கூறியுள்ளேன். அங்கு நான் பெற்ற அனுப வங்களை இன்னும் சிறிது விரிவாகக்கூற விரும்புகிறேன்.

சோவியத் யூனியனுக்குச் சென்ற ஐந்தாவது நாள் இரவு விமானத்தின்மூலம் நானும் என்னுடன் சோவியத் துக்கு வருகை தந்த மற்ற மூன்று இந்தியர்களும் அல்ம் -அதா பயணமானோம்.

நள்ளிரவில் பயணமாகி விடியும் நேரத்தில் அல்ம்-அதா சேர்ந்தோம். உட்கார்ந்தபடி இரவு முழுவதும் விமானத்தில் பயணம் செய்தால் எனக்கு உறக்கம் வராது. அதனால், இரவிலே நான் விமானப் பயணம் செய்வதில்லை! நம் நாட்டிலே நாடகம், திரைப்படம் பார்க்கக்கூட இரவுக் காட்சிக்கு நான் செல்வதில்லை. எனக்கு மிகவும் வேண்டியவர்களான டி. கே. எஸ். சகோதரர்கள் நடத்தும் இரவு நாடகத்திற்குக்கூட நான் செல்வதில்லை, சோவியத் அரசின் ஏற்பாடானதால், மறுக்க வழியின்றி நள்ளிரவில் பயணம் செய்தேன்.

டகோடா விமானத்தில் சென்றதால், விமானப் பயணம் மகிழ்ச்சிகரமாக இல்லை. ஏதோ கட்டை வண்டி ஆடுவது போன்று விமானம் ஆடிக் கொண்டே சென்றதால் உடம்பு அலுத்துவிட்டது. இரவு முழுவதும் தூக்கமில்லை.

விடியற்காலையில், நாங்கள் 'அல்ம்-அதா' விமான நிலையத்தை யடைந்தபோது, அங்கு கஜாக் குடியரசின் ஆப்பிரிக்காசியக் குழுவின் நிர்வாகிகளான கஜாக்கியர்கள் எங்களை வரவேற்றனர். அந்த ஊரில் கிடைக்கும் ஒரு வகை மலர்களாலான மாலைகளை எங்கள் கழுத்தில் அணிவித்து எங்களை வரவேற்றனர். தமிழ் நாட்டுக்கு வெளியே சென்றுவிட்டால், மாலை அணிந்து கொள்ளும்போது மனம் மகிழ்ச்சி அடைய மாட்டேன் என்கிறது. காரணம், தமிழ்நாட்டுக்கு வெளியே வட இந்தியாவிலும் சரி; பிற நாடுகளிலும் சரி; நம் நாட்டில் அணிவிக்கப்படும் அழகிய ரோஜா மாலையோ, மணங் கமழும் மல்லிகை மாலையோ கிடைப்பதில்லை. அழகும் மணமும் இல்லாத ஏதோ ஒரு வகையான மலர்களைக் கொண்டு கட்டப்பட்ட மாலைகளையே அணிவிக்கிறார்கள்.

கஜாக்கியர்கள் விருந்தோம்புவதிலே ருஷ்ய மொழியினரையும் மிஞ்சிவிடக் கூடியவர்களாக இருக்கின்றனர். விமான நிலையத்தில் எங்களை வரவேற்றபொழுது புலர்ந்துகொண்டிருந்த நேரத்தில் ஆப்பிரிக்காசிய உறவுக் குழுவின் அலுவலகத்துக்கு எங்களை அழைத்துச் சென்றனர். அங்கு சுமார் ஒருமணி நேரம்வரை எங்களைத் தங்கவைத்து, எங்களோடு ஏதேதோ பேசி அளவளாவி மகிழ்ந்தனர். எனக்கு மிகவும் அறிமுகமான ஒருநண்பர் வீட்டிலோ, இரத்த பாசமுடைய உறவினர்கள் வீட்டிலோ இருப்பதுபோலிருந்தது.

இந்த உபசரணைக்குப் பின்னர், அல்ம்-அதா நகரத்தின் ஒதுக்குப்புறத்தில் உள்ள சிறந்த ஒட்டல் ஒன்றுக்கு நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம். 'சிறந்த ஒட்டல்' என்றால், மாஸ்கோ நகரத்தில் நான் தங்கியிருந்த உக்ரேன் ஒட்டல் போன்றதன்று. கொஞ்சம் சாதாரணமானதுதான். ஆயினும் எல்லா வசதிகளும்

நிறைந்திருந்தது. அல்ம்-அதாவின் பருவநிலை என் உடலுக்கு இன்பந் தருவதாக இருந்தது. ஆயினும், எனக்குத் தேவைப்படும் உணவுவகை அந்த நகரில் கிடைக்கவில்லை. குடற் புண்ணால் தொல்லைப்படுபவனாதலால் கண்டதைத் தின்று வயிற்றை நிரப்ப என்னால் முடிவதில்லை. இன்று நேற்று என்றில்லாமல் முப்பது ஆண்டுகளாக இப்படி வயிற்றோடு போராடி வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறேன். உணவு கொள்ளும் ஒவ்வொரு வேளையிலும் வயிற்றோடு போராட்டம்தான். இதைத் தின்றால் என்ன ஆகிவிடுமோ, அதைத் தின்றால் என்ன நோய் வந்துவிடுமோ?' என்று பயந்து பயந்து சாப்பிடுவது எனக்கு வழக்கமாகிவிட்டது.

இளமைப்பருவம் முழுவதும் வறுமையில் உழன்று பட்டினியோடு போராடியதால் குடல் சுருங்கிவிட்டது. இளமை கடந்தபின் வயிற்றுக்கு உணவு கிடைக்கிறதென்றாலும் உண்ணுவதற்கு வயிறு உதவமாட்டேன் என்கிறது. இதனாற்றான், 'கொடிது கொடிது வறுமை கொடிது' என்று சொன்ன ஔவைப் பெருமாட்டியார், 'அதனினும் கொடிது இளமையில் வறுமை' என்றார்.

சோவியத் யூனியனுக்கு என்னுடன் வந்திருந்த வட இந்திய நண்பர்கள் நான் உணவுகொள்ளும் ஒவ்வொரு நேரத்திலும் எனது நிலையைக் கண்டு வருந்தினர். எப்படியேனும் என்னை அதிகப்படியாக உண்ண வைத்துவிட வேண்டுமென்பதில் அவர்கள் அதிக அக்கறை காட்டினர். ஐரோப்பியச் சுற்றுலாவின்போது நான் பெரும்பாலும் பால், தயிர், பழவகை முதலியவற்றைத்தான் உட்கொண்டேன். மாஸ்கோவிலிருந்த நாட்களிலே பாலுக்கும் தயிருக்கும் பஞ்சமில்லை. எனக்கு காரமும் புளிப்பும் அடியோடு விலக்கு! நல்ல வேளையாக, புளிக்காத தயிர் மாஸ்கோ ஓட்டலில் நான்

விரும்பியபோதெல்லாம் கிடைத்தது. ஆனல், அல்ம்-அதாவிலே பாலுக்கும் தயிருக்கும் பஞ்சமிருந்தது. நாங்கள் அங்கிருந்த சனி, ஞாயிறு கிழமைகள் விடுமுறை நாட்கள்! அதனல்; தொழிலாளர்கள் ஓய்வெடுத்துக் கொண்டு விட்டனர். பாலுக்கும் தயிருக் கும் பஞ்சமேற்பட்டதற்கு இதுதான் காரணம்.

சனி, ஞாயிறு கிழமைகளிலே தொழிலாளர்கள் விடுமுறையை அனுபவிப்பது இந்தியத் தமிழனுகிய எனக்கு மிகவும் புதுமையாக இருந்தது. தொழி லாளர்கள்—ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் —குடும்பம் குடும்பமாக அல்ம்-அதா நகர வீதி களிலே வீதியின் இருபுறங்களிலும் உற்சாகமாக நடந்து செல்லக் கண்டேன். பூங்காக்களிலேயும் திரைப்பட-நாடகக் கொட்டகைகளிலேயும் மக்கள் கூட்டங்கூட்ட மாக இருந்தனர். அவர்களுடைய முகங்களிலே மிகுந்த உற்சாகம் காணப்பட்டது. விடுமுறை நாட்களை இன்ப மாகக் கழிக்க வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத் திருக்கிறது சோஷலிச அரசு. நம் நாட்டிலே, காணும் பொங்கல் நாளிலே நகரங்களிலும் கிராமங்களிலும் மக்கள் திரள் திரளாகப் பலவிடங்களுக்குச் சென்று, அந்த நாளை மிகுந்த மகிழ்ச்சியோடு கழிப்பதைக் காண் கின்ருேமல்லவா! அதுபோல இருந்தது அல்ம்-அதா நகரிலே தொழிலாளர் குடும்பங்கள் விடுமுறை நாட் களை அனுபவித்த காட்சி.

பெரும்பாலான மக்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று விடுமுறையை அனுபவிப்பது வழக்கமாம். அதனல், அல்ம்-அதா நகரில் மக்கள் தொகை நான் அங்கிருந்த நாட்களிலே குறைந்துவிட்டிருந்தது. அப்படி யிருந்தும், தொழிலாளர் குடும்பங்கள் விடுமுறையை

அனுபவித்த காட்சி என் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது.

அல்ம்-அதா நகரிலே உள்ள பொருட்காட்சிச் சாலை ஒன்றை எங்களுக்குக் காட்டினர். எப்போதுமேபொருட் காட்சிச் சாலையைச் சுற்றிப் பார்ப்பதென்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருவதில்லை. அதிலும், விவசாய-தொழில் வளர்ச்சியைக் காட்டும் பொருட் காட்சியை அந்தத் துறைகளிலே சிறிதேனும் அனுபவமில்லாத நான் பார்த்து மகிழ்வதென்பது சாத்தியமில்லைதானே! அல்ம் -அதாவிலே எனக்கும் என்னோடிருந்த இந்திய நண்பர் களுக்கும் அவ்வூர் ஆப்பிரிக்காசிய உறவுக் குழுவின் நிர்வாகிகள் காட்டிய பொருட்காட்சி கஜாக் குடியரசின் விவசாய-தொழில் வளர்ச்சியைப் புலப்படுத்துவதாகும். பலமணி நேரத்தை அங்கே போக்கியபின், மாலை 4 மணிக்கு ஓட்டலுக்குச் சென்று பகல் உணவை அருந்தினோம். பிற்பகல் 2 மணி கடந்து விட்டால் அநேகமாக நான் பகல் உணவைப் பெருமளவுக்குக் குறைத்துக் கொள்வேன். இல்லாவிட்டால், நோய்ப்பட்டு படுக்கையில் விழுந்துவிட நேரிடும். அலம்-அதாவில் பாலும் தயிரும் கிடைக்காமற் போனமையால் அன்று நான் பகல் பட்டினிதான்!

முக்தார் அசோக் என்பவர், கஜாக் குடியரசில் தோன்றிய தலைசிறந்த எழுத்தாளர். இவருக்கு சோவியத் யூனியன் முழுவதிலுமே நல்ல செல்வாக்கு உண்டு. இவர் இப்போது வாழவில்லை யாயினும் இவரது எழுத்தோவியங்கள் மிகுந்த புகழோடு சோவியத் மக்கள் மத்தியிலே வாழ்கின்றன. இவர் வாழ்ந்த மாளிகை இருக்கிறது. அது தோற்றத்தில் சிறியதாயினும், அழகில் மிகவும் சிறந்தது. இந்த வீடு முக்தார் அசோக் அவர் களின் நினைவாலயமாகச் செய்யப்பட்டிருக்கிறது.

இதனைப் பரிபாலிக்க ஒரு தனிக்குழுவை நியமித்திருக்கிறது கஜாக் குடியரசு. அந்தக் குழுவிற்கு முக்தார் அசோக் அவர்களின் மனைவியே அவரது ஆயுள்காலம் வரை தலைவராக்கப்பட்டிருக்கிறார்.

முக்தார் அசோக் அவர்களின் படுக்கை அறையும் அவர் தம் நண்பர்களோடு இருந்து உரையாடிய மண்டபமும் அவர் உபயோகித்த மாதிரியே பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவருடைய ஆடைகள், எழுதுகோல், கையெழுத்துப் பிரதிகள், அவர் படித்த நூல்கள், அவர் சம்பந்தமான புகைப்படங்கள் ஆகிய அனைத்தும் இந்த மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளன. முக்தார் அசோக் இந்தியாவின் தலைநகருக்கும் வந்து சென்றிருக்கிறார். அவர் இந்தியா வந்தபோது இந்தியப் பேரரசு அவரைப் பெரிதும் கௌரவித்திருக்கிறது.

முக்தார் அசோக் மியூசியத்தைப் பார்த்தபோது என் மனதில் எவ்வளவோ எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக எழுந்தன. தேசிய மகாகவி சுப்பிரமணிய பாரதியாருக்கு இப்படி ஒரு நினைவாலயம் ஏற்படுத்தத் தமிழ் நாடு தவறிவிட்டதை நினைத்து என் மனம் வருந்தியது. தமிழ்ப் பெரியார் திரு. வி. க. வின் நினைவாக முக்தார் அசோக் மியூசியம் போன்று ஒன்றை வைக்க தமிழ் நாடு முயன்றிருந்தால், அது முடியாத காரியமல்ல.

நல்ல வேளையாக, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகச் செயலாளர் திரு வ. சுப்பையா பிள்ளையவர்கள் மறைமலையடிகள் நினைவாலயம் ஒன்றை மிகவும் சிறந்த முறையில் பல்லாவரத்திலே அமைத்துள்ளார். ஆனால், அதுகூட அதிக விளம்பரம் பெறவில்லை. தமிழன் தன்னை மதிக்கக் கற்றுக் கொள்வானானால், அப்போதுதான் உலகம் அவனை மதிக்கும்.

நாங்கள் அல்ம்-அதா சென்ற இரண்டாவது நாளிலே கஜாக் குடியரசின் ஆப்பிரிக்காசிய உறவுக் குழுவின் தலைவரைச் சந்தித்தோம். அவர் சுமார் 40 வயதுடைய பெண்மணியாவார். இந்தியக் குழுவினரிலே ஒவ்வொருவராக அவருக்கு அறிமுகம் செய்து வைக்கப் பட்டனர். நான் அறிமுகப்படுத்தப்பட்டபோது அந்த அம்மையார் என்னைக் கூர்ந்து கவனித்தார். 'உங்களை எங்கோ பார்த்ததுபோ லிருக்கிறதே; நீங்கள் இதற்கு முன் கஜாக் குடியரசுக்கு வந்திருக்கிறீர்களா?' என்று கேட்டார். நான் வியப்புற்றவனாக, 'நான் சோவியத் யூனியனுக்கு வருவதே இதுதான் முதன் முறை' என்று கூறி விட்டு, நகைச்சுவையுடன் சொல்வதாக நினைத்துக் கொண்டு, "தாங்கள் தமிழ் நாட்டுக்கு வந்திருக்கிறீர் களா?" என்று கேட்டேன். அவர் சற்றும் தாமதியாமல், 'ஆம்; வந்திருக்கிறேன், சென்னை நகருக்கு' என்றார். அதற்கப்புறம், மயிலை சாஸ்திரி ஹாலில் அவருக்கு நடை பெற்ற வரவேற்புக் கூட்டத்திற்கு நான்தான் தலைமை தாங்கினேன் என்பது என் நினைவுக்கு வந்தது. அதை நான் அவரிடம் சொன்ன போது, "அதனாற்றான், உங்களை முன்னர் எங்கோ பார்த்த மாதிரியாக எனக்குத் தோன்றியது" என்றார். எனது மீசை அவரது கவனத் தில் நிலைத்துவிட்டது போலும்!

சிறிது நேரம் இந்திய-சோவியத் உறவு பற்றி உரை யாடி அளவளாவிய பின்னர், அந்தச் சந்திப்புக்கு நிச்ச யிக்கப்பட்ட நேரம் முடிவதற்கு முன்பே நான் மட்டும் அந்த அம்மையாரிடம் விடைபெற்றுக் கொண்டு, மாஸ்கோ செல்ல விமான நிலையத்துக்குப் புறப்பட் டேன். அந்த சகோதரியார் நான் கஜாக் குடியரசுக்கு வந்ததை நினைவில் வைத்துக் கொள்ளும் பொருட்டு பீங்கான் பூக்குழல் ஒன்றை எனக்குப் பரிசாகத் தந்தார்.

விமானத்தில் பகலில் பயணஞ் செய்ததால், அலுப்பின்றி மாஸ்கோ அடைந்தேன். ஜூலை 14-ம் தேதி முற்பகலில் அல்ம்-அதாவிலிருந்து மாஸ்கோ திரும்பினேன். நான் சோவியத் யூனியன் சென்றதுமே மாஸ்கோவிலிருந்து பாரிசுக்குச் செல்வதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தேன். அல்ம்-அதாவிலிருந்து மாஸ்கோ திரும்பியதும், சுமார் மூன்று மணி நேரம் உக்ரேன் ஓட்டலில் தங்கியிருந்து விட்டு, பாரிசுக்குப் பயணமானேன். மாஸ்கோ தமிழர்களான திரு. சி. ஜி. எஸ். மணிவர்மன், திரு. பி. சோமசுந்தரம் ஆகிய இருவரும் உக்ரேன் ஓட்டலுக்கு வந்திருந்து, பிரயாண ஏற்பாடுகளுக்கும் உதவி புரிந்து என்னை வழியனுப்பி வைத்தனர். மாஸ்கோ வானொலியில் பணிபுரியும் மற்றொரு தமிழரான திரு. நீலகண்டன் அவர்கள் தமிழ் நாட்டு பாணியில் எனக்குத் தேவைப்படும் பத்திய உணவைத் தயாரித்து உக்ரேன் ஓட்டலுக்குக் கொண்டு வந்து நான் உண்ணும்படி செய்தார். அதற்கு முன்னும் இரண்டொரு முறை அவர் எனக்கு உணவளித்து உபசரித்தார். அன்பர் நீலகண்டன் அவர்களின் உபசாரப் பண்பு என்னைப் பெரிதும் கவர்ந்தது.

சோவியத் அரசு வகுத்த திட்டப்படி, ஜூலை மாதம் 22-ந்தேதி வரை சோவியத் யூனியனில் தொடர்ந்து சுற்றுலாச் செய்திருக்க வேண்டும். அந்தத் திட்டப்படி, ஜூலை 17, 18 தேதிகளில் நான் புகழ் மிக்க லெனின்கிராட் நகரத்தில் இருக்க வேண்டும். ஆனால்' ஜூலை 15, 16, 17, 18 தேதிகளில் பாரிஸ் நகரில் நடைபெறும் மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சோவியத் யூனியன் சுற்றுலாவைப் பாதியிலே நிறுத்திவைத்து பாரிசுக்குப் பயணமானேன். சோவியத் ஆப்பிரிக்காசிய குழுவினரும் இதிலே எனக்கு

உதவிகரமாக இருந்தனர் என்பதனை நான் இங்கு நன்றியறிதலோடு குறிப்பிட வேண்டும்.

மாஸ்கோ—பாரிஸ் பயணத்திற்கு 'ஏர் இந்தியா' டிக்கட் எடுப்பதிலே கடைசி நேரத்தில் மிகுந்த இன்னல் ஏற்பட்டது. பாரிஸ் மாநாட்டிற்கு நான் தமிழக அரசின் பிரதிநிதியாகச் செல்கிறேனுதலால், மாஸ்கோ—பாரிஸ் பயணத்திற்கு சோவியத் அரசு பொறுப்பேற்பதற்கில்லை. தமிழக அரசின் செலவிலேயே செல்ல வேண்டியவனாக இருந்தேன். ஆனால், சரியான நேரத்தில் எனக்கு டிக்கெட் வழங்குவதற்கான ஆணை மாஸ்கோவிலுள்ள 'ஏர் இந்தியா' அலுவலகத்திற்கு இந்தியாவிலிருந்து அனுப்பப்படவில்லை. அதனால், எனது பாரிஸ் பயணம் தடைப்பட்டு விடுமோ என்று நான் அஞ்சினேன். நல்ல வேளையாக, மாஸ்கோ நண்பர் திரு. சி. ஜி. எஸ். மணிவர்மன், இரண்டு நாட்கள் அதே வேலையாக அலைந்து மணிக்கு மணி மாஸ்கோவிலுள்ள 'ஏர் இந்தியா' விமான அலுவலகத்துடன் நேரில் தொடர்பு கொண்டு, பாரிஸ் பயணத்துக்கான டிக்கட்டைப் பெற்றுவிட்டார். பிற்பகல் இரண்டு மணிக்கு மாஸ்கோ தமிழர்களிடமிருந்து-ஏன், சோவியத் யூனியனிடமிருந்தே விடை பெற்றுக் கொண்டு, ஐந்து நாட்கள் வரை எனது சொந்த வீடு போன்றிருந்த உக்ரேன் ஓட்டலை விட்டுக் கிளம்பி, மாஸ்கோ விமான நிலையத்தை அடைந்தேன். நான் மாஸ்கோவிலிருந்த நாட்களிலே எனக்கும் என்னுடனிருந்த இந்திய நண்பர்களுக்கும் மொழி பெயர்ப்பாளராக இருந்த திருமதி. நீனு வழியனுப்ப என்னுடன் விமான நிலையத்துக்கு வந்தார். அந்த நங்கை மாஸ்கோவிலிருந்த நாட்களில் என் மகளைப் போன்று அன்புடன் என்னை உபசரித்துக் காத்தாராதலால், எங்கள் பிரிவு அவருக்கும் எனக்கும் வருத்தம் தருவதா

கவே இருந்தது. காந்தியடிகள் முக உருவம் பொறித்த இருபது காசு நாணயமொன்றையும், நேரு பெருமகனர் உருவம் பொறித்த தபால்தலை ஒன்றையும் இந்திய ஊது பத்திக் கத்தையொன்றையும் திருமதி. நீனுவுக்கு அன்பளிப்பாகத் தந்தேன். அவற்றை அவர் மிக்க மரியாதையுடன் பெற்றுக் கொண்டார்.

மீண்டும் சோவியத் யூனியனுக்கு வருவேன் என்னும் நம்பிக்கையுடன் தான் மாஸ்கோவிலிருந்து நான் புறப்பட்டேன். என்னை வழியனுப்பிய நண்பர்களும் அப்படித்தான் நினைத்தனர். ஆனால், என் மனத்திலும்—ஏன், என்னை வழியனுப்பிய நண்பர்கள் மனத்திலும் பிரிவுபசார நினைப்பு இருந்ததாகத்தான் எனக்குப்பட்டது.

இந்தியாவிலிருந்து மாஸ்கோ புறப்பட்டபோது தமிழரசுக் கழகச் செயலாளர் திரு. ம. சீ. கிருஷ்ணமூர்த்தி புதுடில்லியிலே என்னை வழியனுப்பி வைத்தார். டில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தின் சிப்பந்திகளும், என்னை வழியனுப்பப் பாலம் விமான நிலையத்துக்கு வந்திருந்தனர். 'ஏர் இந்தியா' விமான சிப்பந்தியான தமிழர் ஒருவர் என்னை விமானத்திற்குள் கொண்டு போய் அமர்த்தும் வரை, என்னுடன் இருந்து பிரயாண ஏற்பாடுகளை எல்லாம் கவனித்தார். இந்த வசதிகள் மாஸ்கோ விமான நிலையத்தில்—மாஸ்கோவிலிருந்து பாரிசுக்குச் செல்லுங்கால்-எனக்குக் கிடைக்கவில்லை. மாஸ்கோ விமான நிலையம் மிகவும் பெரியது. எந்த விமானம்—எந்த நாட்டுக்கு—எந்த நேரத்தில் புறப்படுகிறது என்பதனைத் தெரிந்து கொள்வது மிகவும் கஷ்டமாக இருந்தது.

நான் அயல்நாட்டுப் பயணியாதலால் என்னை வழியனுப்ப விமான நிலையத்திற்கு வந்திருந்த ருஷ்யப் பெண்மணியான திருமதி. நீனு, விமான நிலையத்தின் நுழை

வாயிலிலேயே என்னிடம விடைபெற்றுக் கொண்டார். விமான நிலையத்துக்குள்ளே, பாஸ்போர்ட்—விசா பரிசீலனை, மருத்துவ—சுங்கச் சோதனை ஆகியவற்றிற்கு என்னுடனிருந்து உதவி புரிய நீனுவால் முடியவில்லை. அதனுல் மாஸ்கோ விமான நிலையத்திற்கு உள்ளே நுழைந்ததும் நான் 'அகதி'போல் ஆகிவிட்டேன். விமான நிலையத்திலே, விமானம் புறப்படும் நேரம் பற்றிய தகவல் ருஷ்ய மொழியிலேயே தரப்படுகின்றது. விமான நிலையத்தில் உள்ள ருஷ்ய அதிகாரிகளில் பெரும்பாலோருக்கு ஆங்கிலம் தெரியாது. நான் ஆங்கிலத்திலே புலமை பெற்றவன் அல்லவென்ருலும், பயண ஏற்பாடுகளுக்கு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களோடு ஆங்கிலத்திலே பேசவும், அவர்கள் ஆங்கிலத்திலே பேசுவதைப் புரிந்து கொள்ளவும் என்னுல் முடியும். ஆனுல், எனக்குத் தெரிந்த ஆங்கிலம் கூட மாஸ்கோ விமான நிலையத்திலே பயன்படாமல் போய் விட்டது. விமானப் பயணிகளிலே ஆங்கிலந் தெரிந்த ருஷ்ய இளைஞரொருவரைக் கண்டுபிடித்து அவரது துணைகொண்டு பாரிசுக்குப் பயணப்பட்டேன்.

நான் பயணம் செய்தது போயிங் விமானமாதலால், கூட்டம் ஏராளமாக இருந்தது. அன்று (ஜூலை 14) பிரான்சிலே விடுதலைத் திருநாளாம். நான் சென்றது பிரெஞ்சு நாட்டு விமானமாதலால், அதிலே பிரெஞ்சுக்காரர்களே அதிகமாக இருந்தனர். மாஸ்கோவிலிருந்து பாரிஸ் போய்ச் சேர நான்கு மணி நேரம் பிடித்தது. இந்த நான்கு மணி நேரமும் விமானத்திலே ஒரே கொண்டாட்டந்தான்! ஆம்; தங்கள் நாட்டின் விடுதலை நாளை மகிழ்ச்சி வெறியோடு கொண்டாடினர் என்னுடன் விமானத்திலிருந்த பிரெஞ்சுக்காரர்கள்.

ஆண்களும் பெண்களும்—ஏன், குழந்தைகளும்கூட எல்லையற்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்தி விடுதலை நாளை விமானத்தில் கொண்டாடிய காட்சியைக் கண்டு நான் வியப்புற்றேன். விமானத்தில் பயணம் செய்த நான்கு மணி நேரமும் பிரெஞ்சுக்காரர்கள் மத்தியிலே நான் 'சிறை'ப்பட்டிருந்தேன். அவர்களிலே பலர் மதுவும் அருந்தினர். ஆனால், போதையால் தவறாக நடந்து கொள்ளவில்லை. காரணம், அளவோடு குடித்ததுதான்!

பாரிஸ் செல்லும் வழியிலே கம்யூனிஸ்டு நாடான போலந்தின் தலைநகரான 'வார்சா'விலே விமானம் சிறிது நேரம் நின்றது. சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அப்போது வார்சாவில் நடைபெற்ற உலக சமாதான மாநாட்டிற்கு இந்தியப் பிரதிநிதிகளில் ஒருவராகச் செல்வதற்கு எனக்கு எழுத்து மூலம் அழைப்பு வந்தது. அப்போது நான் உலக சமாதானக் குழுவின் தமிழ் நாட்டுக் கிளையின் துணைத் தலைவனாக இருந்தேன். அதனால், வார்சா மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டிய கடமையும் எனக்கிருந்தது. வார்சா சென்றால் சோவியத் யூனியனுக்கும், மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் செல்ல வாய்ப்புக் கிடைக்குமென்றும் என்னிடம் கூறப்பட்டது. வார்சா மாநாட்டிற்குச் செல்ல எனக்கும் விருப்பமிருந்தது. ஆனால், அப்போது இந்தியாவின் பிரதமராக மட்டுமல்லாமல், காங்கிரஸ் மகா சபையின் தலைவராகவுமிருந்த ஜவஹர்லால் நேரு அவர்கள், 'காங்கிரஸ்காரர்கள் உலக சமாதான மாநாட்டிற்குச் செல்வதை நான் விரும்பவில்லை' என்று அறிக்கை விட்டிருந்தார்.

அப்போது நான் காங்கிரசிலிருந்தேன். நேருவினுடைய கருத்து நேரடியாக என் பெயருக்கு அனுப்பப்பட்ட ஆணை அல்ல. ஆயினும், காங்கிரஸ் தலைவரின் அறிக்கையை கட்டளையாக மதித்து, வார்சா மாநாட்

டிற்கு செல்ல மறுத்துவிட்டேன். அப்போது, தமிழ் நாடு சமாதானக் குழுவின் தலைவராக இருந்த டைரக்டர் கே. சுப்பிரமணியம் அவர்கள் வார்சா மாநாட்டில் நான் கலந்து கொண்டே ஆகவேண்டுமென்று நேரில் என் வீட்டிற்கே வந்து என்னை வற்புறுத்தினர். ஆனால், நான் என் முடிவை மாற்றிக் கொள்ள மறுத்துவிட்டேன்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு பார்க்கத் தவறி விட்ட வார்சாப் பெருநகரை பாரிஸ் செல்லும் வழியில் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தபோது என் மனம் மகிழ்ச்சி அடைந்தது. இரண்டாவது ஒரு சோஷலிச நாட்டை விமானத்தி லிருந்தபடியேனும் பார்க்க முடிந்ததில், எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்பட்டது.

பாரிஸ் நகரிலே . . .

பாரிஸ் நகரிலே எனக்கு நண்பர் யாருமில்லை. அந்த நகருக்கு நான் செல்வதே இதுதான் முதன் முறை. அதுவும் பிரெஞ்சு விடுதலை நாளன்று செல்கிறேனாதலால், ''பாரிஸ் நகர் முழுதும் விழாக்கோலம் கொண்டிருக்கும். தெருக்களில் எல்லாம் மக்கள் கூட்டம் நிறைந்திருக்கும்'' என்று நான் கற்பனை செய்து கொண்டேன். இந்த நிலையிலே, முன்னர் பார்த்தறியாத — பழகிய நண்பர்கள் இல்லாத பாரிஸ் நகரிலே விமான நிலையத்துக்கு என்னை வரவேற்க யாரும் வராவிட்டால் எங்கு செல்வது? யாருடைய துணையோடு செல்வது? எந்த ஓட்டலில் தங்குவது? ஓட்டல்களில் இடம் கிடைக்காவிட்டால், என்ன செய்வது? என்றெல்லாம் எண்ணி எண்ணிக் குழப்பமடைந்தேன்.

நான் இந்தியாவி லிருந்தவரை உலகத் தமிழ் மாநாட்டின் நிகழ்ச்சி நிரல் எனக்குக் கிடைக்கவில்லை. பாரிசுக்குச் சென்று கொண்டிருந்த வரையும் நிலைமை அதுதான். அதனால், உலகத் தமிழ் மாநாடு ஜூலை 15-ஆம் தேதி முதல் 18-ஆம் தேதி வரை நடைபெறப் போகிறது என்பதற்கு அதிகமாக, அந்த மாநாடு கூடும் இடமோ, நேரமோ எனக்குத் தெரியாது. ஒருகால், மாநாடு தள்ளிப் போடப்பட்டிருக்குமோ என்றுகூடக் கற்பனை செய்து கொண்டு, ''அப்படி நடந்திருந்தால், பாரிசில் நம் நிலைமை என்ன?'' என்றெண்ணிக் கவலையில் ஆழ்ந்தேன்.

பாரிஸ் மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவரும் பிரெஞ்சுக்காரருமான டாக்டர் பிலியோசாவுக்கும், பாரிஸ் நகரில் உள்ள யுனெஸ்கோ அலுவலகத்தின் தற்காலிக டைரக்டர் ஜெனரல் திரு. மால்கம் ஆதிசேஷையாவுக்கும் நான் டில்லியிலிருந்த போதே — அதாவது, பாரிஸ் செல்வதற்குப் பத்து நாட்களுக்கு முன்பே — ஜூலை மாதம் 14-ஆம் தேதி மாலை மாஸ்கோ விலிருந்து பாரிசுக்கு வருவதாகக் கடிதம் மூலம் தகவல் தந்திருந்தேன். விமான நிலையத்துக்கு யாரையேனும் அனுப்பி வைக்கும்படியும் அவ்விருவரையும் கேட்டுக் கொண்டிருந்தேன். மாஸ்கோவிலிருந்து புறப்படுவ தற்கு முன்பும் நான் வருகிற நேரத்தை அந்த இரு கனவான்களுக்கும் தந்தி மூலம் அறிவித்திருந்தேன். இவ்வளவிருப்பினும், அவர்கள் இருவரும் எனக்கு முன்பின் அறிமுகமில்லாதவர்களாதலால், என் விருப் பத்தை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்பதிலே எனக்கு நம்பிக்கையில்லை. என்னுடன் விமானத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஆங்கிலந் தெரிந்த ருஷ்யருடன் பேசி, விமான நிலையத்தில் என்னை வர வேற்க யாரும் வராவிட்டால், பாரிஸிலுள்ள இந்தியத் தூதுவர் அலுவலகம் வரை என்னுடன் துணைக்கு வருமாறு அவரைக் கேட்டுக் கொண்டேன்,

அவர், ஏதோ அவசரவேலையாக தாம் பாரிஸ் செல் வதாகவும், அதனால் தான் துணைக்குவர அவகாசம் இல்லை என்றும் மிகவும் மரியாதையான முறையில் மறுப்புத் தெரிவித்தார். ஆயினும், தன்னை வரவேற்க நண்பர்கள் யாரேனும் வருவார்களென்றும், அவர்களில் ஒருவரை என்னுடன் துணைக்கு அனுப்ப முயல்வதாகவும் கூறினார்.

சரியாக இரவு 7-மணிக்கு நான் பயணம் செய்த விமானம் பாரிஸ் விமான நிலையத்தை அடைந்தது. விமான நிலையம் என்றவுடனே, ஐரோப்பா சென்றறியாத வாசகர்களுக்கு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையமோ, டில்லி பாலம் விமான நிலையமோ நினைவுக்கு வரக்கூடும் பாரிஸ் விமான நிலையத்தோடு எந்த வகையிலும் சென்னை—டில்லி விமான நிலையங்களை ஒப்பிடுவதற்கில்லை. ஒரு நாளைக்கு 60 ஆயிரம் பயணிகள் பாரிஸ் விமான நிலையத்தில் போக்குவரத்துச் செய்கின்றனர். 900விமானங்கள் வருகின்றன—போகின்றன. இரண்டு நிமிடத்திற்கு ஒருவிமானம் புறப்படுகின்றது—வருகின்றது! விமான நிலையத்திலே எந்தப் பக்கம் பார்த்தாலும் ஜே, ஜே என்று மக்கள் கூட்டம்! பிரெஞ்சு மொழியைத் தவிர வேறெந்த மொழியும் நம் காதில் விழுவதில்லை. விமான நிலையத்தின் சார்பில் தரப்படும் தகவல் அறிவிப்புகள் பெரும்பாலும் பிரெஞ்சு மொழியில் தான்!

பாரிசுக்கு முதன்முதலாகத் தன்னந்தனியாக வரும் பிரெஞ்சு மொழி அறியாத பயணிக்கு விமான நிலையத்தை அடைந்தவுடனே ஒரே திகைப்புத்தான் தோன்றும். எனக்கும் அப்படித்தான் தோன்றியது. விமானத்தைவிட்டு இறங்கி, விமான நிலையக் கட்டிடத்திற்குள்ளே சென்று கொண்டிருக்கையில், விமானப் பயணத்தின்போது முன்னெச்சரிக்கையோடு நான் அறிமுகம் செய்துவைத்துக் கொண்டிருந்த ஆங்கிலந் தெரிந்த ருஷ்ய நண்பரைத் தவறவிட்டு விட்டேன். என் பின்னே வருகிறாரென்று நினைத்துக்கொண்டு நான் முன்னே சென்று கொண்டிருந்தேன். விமான நிலையக் கட்டிடத்திற்குள் சென்றதும் திரும்பிப் பார்த்தபோது அவர் என் பார்வையில் படவில்லை. நான் அகதிபோலா

னேன்! பாரிஸ் விமான நிலையத்திலே பாஸ்போர்ட்-விசா பரிசீலனை, மருத்துவ சோதனை, சுங்கச் சோதனை ஆகிய சடங்குகளுக்கெல்லாம் பிரெஞ்சு மொழி தெரிந்த ஒருவரின் துணை எனக்குத் தேவைப்பட்டது. ஆனால் அப்படி ஒருவர் எனக்குக் கிடைக்காததால், எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் பேசி அந்தச் சடங்குகளை எல்லாம் முடித்துக் கொண்டேன். அதிலே, எனக்கு ஒன்றும் அதிகக் கஷ்டமிருக்கவில்லை.

ஐரோப்பாவைச் சுற்றி வருவதற்கு ஆங்கிலம் ஓரளவு தெரிந்திருந்தாலே போதும். இங்கிருப்பவர்கள் 'கதை'ப்பதைப்போல ஆங்கிலத்திலே அதிகப் புலமை ஒன்றும் தேவைப்படவில்லை. மாநாடு கருத்தரங்கு, விவாதக் குழு ஆகியவற்றிலே கலந்து கொண்டு பேச வேண்டுமானால் ஆங்கிலப் புலமை அதிக அளவில் தேவைதான். அங்கெல்லாம்கூட நம்முடைய கருத்தை ஆங்கிலத்திலே புலமை பெற்ற ஒருவர் மூலம் எழுதித் தயாரித்துக் கொண்டு, அதை அவையிலே நின்று படித்து விட்டாலே போதும். என்னைப் போன்றவர்களால் அது முடியக்கூடியதே. உலகத் தமிழ் மகா நாட்டிலே ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் படித்தவர்களிலே பலர், பிறருடைய உதவியால்தான் அதைச் செய்தார்கள்.

பாரிஸ் விமான நிலையத்தில் சோதனைச் சடங்குகள் நடந்துகொண்டிருந்தபோது என் கண்கள் நான்கு திக்கிலும் சுழன்று, ஒரு தமிழராவது அல்லது ஒரு இந்தியராவது கிடைப்பாரா?-என்று தேடிப் பார்த்தன. சுமார் பதினைந்து நிமிடநேரம் கண்கள் சுழன்றபின்னர் தூரத்தில் இருந்து கொண்டு இந்தியர் போன்ற தோற்றத்திலிருந்த ஒரு இளைஞர், தன் கைகளை அசைத்து மகிழ்ச்சியோடு எனக்கு வரவேற்புக்கூறினார்.

அவரைப் பார்த்தேனே இல்லையோ, எனக்கு உதவுவதற்காகத் தெய்வமே அங்கு வந்ததுபோலிருந்தது. சோதனைகளை முடித்துக் கொண்டு, ஆபத்பாந்தவராக வந்த அந்த நண்பரை அணுகிக் கைகுலுக்கினேன். அவர் தன் பெயர் 'அரிஹரன்' என்றுகூறி, தன்னை எனக்கு மிகுந்த அன்போடு அறிமுகப்படுத்திக் கொண்டார். விமானப் பயணத்தின் போது, பாரிசில் நமக்கு என்ன நேருமோ, யார் வருவார்களோ, வராமல் போய்விடுவார்களோ என்று சஞ்சலித்துக் கொண்டிருந்த என் மனம், ஹரியும் ஹரனும் சேர்ந்து வந்தாற்போல என்னை வரவேற்க வந்த திரு. ஹரிஹரனைக் கண்டதுமே ஆறுதல் அடைந்தது.

வந்த நண்பர், தான் பாரிஸிலுள்ள இந்தியத் தூதுவரகத்தின் அதிகாரி என்றும், என்னை வரவேற்பதற்காகத் தாம் வந்திருப்பதாகவும் என்னிடம் தெரிவித்தார். இன்னும் ஒரு மணிநேரத்துக்குப் பின் லண்டனிலிருந்து தமிழக நிதியமைச்சர் மாண்புமிகு கே. ஏ. மதியழகன் அவர்கள் விமானத்தில் பாரிஸ் வருவதாகவும், அவரையும் தாம் வரவேற்கவேண்டுமென்றும் கூறினார். ஆனால், "அதுவரை நீங்கள் விமான நிலையத்தில் காத்திருக்கத் தேவையில்லை" என்றுகூறி, அவர் தனது காரைக் காட்டி, இந்திய தூதுவரகத்தின் வங்க அலுவலர் ஒருவர் என் காரில் இருக்கிறார். அவருடன் நகரில் உங்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'லாட்ஜு'க்குச் செல்லுங்கள்" என்று கூறினார்.

"பாரிசில் நான் தங்கக்கூடிய ஓட்டலில் மாநாட்டிற்கு வந்துள்ள தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளில் யாரேனும் இருக்கிறார்களா?" என்று நண்பர் அரிஹரனைக் கேட்டேன்.

ஆம்; இப்போது அவர் எனக்கு 'நண்பர்' ஆகி விட்டாரல்லவா! உடுக்கை இழந்தவன் கைபோல என் இடுக்கண் களைய வந்த அவரைவிட உத்தம நண்பர் வேறு யார் இருக்க முடியும்! அந்த நண்பர் கேரளத்தைச் சார்ந்த பிராமணர். வீட்டுமொழி மலையாளமாயினும், தமிழில் இனிமையாகப் பேசுகிறார். ஆனால், அயல்நாட்டில் அலுவல் புரியும் அதிகாரியாதலால், ஆங்கிலமும் கலந்த மணிப்பிரவாள நடையில்தான் பேசுகிறார்.

நண்பர் ஹரிஹரன், 'துணைவேந்தர் சுந்தரவடிவேலு தாங்கள் தங்கும் லாட்ஜிலே 303-வது அறையில் தங்கியிருக்கிறார். அவர் தங்களுக்குத் துணையாக இருப்பார்' என்று கூறினார்.

இதைக் கேட்டதும், 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது' என்பார்களே, அதுபோன்றிருந்தது. ஆம்; சென்னைப் பல்கலைக் கழகக் கட்டிடத்திலே, ஒரு ஆராய்ச்சி மாணவராகவோ, அலுவலராகவோ, பேராசிரியராகவோ துணைவேந்தருடன் தொடர்பு கொள்ளும் பேற்றினைப் பெறாதவன் என்றாலும், அவருடன் ஒரே ஓட்டலிலே, அதுவும், ஐரோப்பிய நகரொன்றிலே தோழமை பூண்டு சில நாட்களேனும் வாழ்க்கை நடத்த நேர்ந்ததனை நினைத்துப் பெருமிதமடைந்தேன்.

மிகவும் வேதனையோடு ஒன்றை இங்கு ஒளிக்காமல் சொல்லிவிட வேண்டியது என் கடமையாகும். மூன்றாவது உலகத்தமிழ் மாநாட்டுக்கு தமிழக அரசின் பிரதிநிதியாக பாரிசுக்குச் சென்ற யாரையுமே விமான நிலையத்தில் வரவேற்று அழைத்துச் செல்ல மாநாட்டின் வரவேற்புக்குழு அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. நான் பாரிஸ் செல்வதற்குப் பத்து நாட்களுக்கு முன்பே

நான் வரும் நாளையும் நேரத்தையும் மாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவருக்குக் கடித மூலம் தெரிவித்திருந்தும் விமான நிலையத்திற்கு யாரையேனும் அனுப்பி வைக்கும்படி வலுவில் நானே கேட்டுக் கொண்டிருந்தும் அப்படி யாரையும் அவர் அனுப்பி வைக்கவில்லை.

தமிழக அரசுப் பிரதிநிதிக்குழுவின் செயலாளரும் பிரதிநிதிகளில் ஒருவருமான திரு. வேங்கட சுப்பிரமணியம் அவர்களுக்கு நான் பாரிசை அடையக்கூடிய நேரத்தை முன்கூட்டி அறிவித்திருந்தேன். அதனால் அவர் பாரிசில் உள்ள இந்தியத் தூதுவரகத்துக்கு எனது வருகை பற்றித் தகவல் தந்திருந்தார். திரு. அரிஅரன் விமான நிலையத்துக்கு வந்து என்னை வரவேற்றது மகாநாட்டின் வரவேற்புக் குழுவின் சார்பிலல்ல; இந்தியத் தூதுவரகத்தின் சார்பிலேதான். ஏனோ, மாநாட்டு வரவேற்புக்குழுவினர் தங்கள் கடமையை உணரத்தவறிவிட்டனர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பிரதிநிதியாக பாரிஸ் வந்திருந்த டாக்டர் மு. வரதராசனார்கூட வரவேற்புக் குழுவினர்மீது என்னைப் போன்றே குறைபட்டுக்கொண்டு சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசியதைக் கேட்டேன்.

பாரிசில் நான் தங்குவதற்கு இந்தியத் தூதுவரகத்தினர் ஏற்பாடு செய்திருந்த லாட்ஜ், அங்குள்ள மிகப் பெரிய லாட்ஜுகளுள் ஒன்றாகும். அதனால், அதிகக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. தமிழக அரசு எனக்கும் மற்ற பிரதிநிதிகளுக்கும் ஆறு நாட்கள் பாரிசில் ஆகக்கூடிய செலவுக்காகப் பணம் வழங்கியிருந்தது. அந்தத் தொகை பாரிசின் ஆடம்பர வாழ்விற்குப் போதுமானதல்ல வாயினும், என்னைப் பொறுத்த வரையில் அது போதுமானதாகவே இருந்தது. பாரிசில்

நான் தங்கியிருந்தது போன்ற ஆடம்பரமான ஓட்டலின் சூழ்நிலை இயற்கையிலேயே என் சுபாவத்திற்குப் பொருந்தாததாகும். ஆயினும், இந்தியத் தூதுவரகத்தார் எனக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் முன்கூட்டி ஏற்பாடு செய்து விட்டதால், அங்கு தங்குவதைத் தவிர்ப்பதற்கு என்னால் இயலாமற் போய்விட்டது.

லாட்ஜில் எனக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்த பின், என்னுடன் நான் கொண்டு சென்றிருந்த இரண்டு பெட்டிகளை அங்கு வைத்துவிட்டு, இரவு உணவுக்காக வேறு ஓட்டலுக்குப் புறப்பட வேண்டியவனானேன். ஆம்; நான் தங்கியிருந்த லாட்ஜிலே காலையில் ரொட்டி, பால், காப்பி தருவதைத் தவிர, பகல் உணவோ, இரவு உணவோ தரப்படவில்லை.

வெளி ஓட்டலுக்குச் செல்வதற்காகத் துணை வேந்தர் திரு. நெ. து. சுந்தர வடிவேலு அவர்களைத் துணைக்கு அழைக்க விரும்பினேன். ஆனால், அந்த ஓட்டலிலே துணை வேந்தர் இருக்கின்ற அறை எத்தனையாவது மாடியிலிருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. அதைத் தெரிந்து கொள்ள என் அறையிலிருந்தபடி லாட்ஜின் வரவேற்பு அதிகாரிக்குப் போன் செய்தேன். '303வது அறை எத்தனையாவது மாடியிலிருக்கிறது?' என்று ஆங்கிலத்தில் கேட்டேன். நல்ல வேளையாக, அந்த அதிகாரிக்கு ஆங்கிலம் தெரிந்திருந்தது. ஆனால், 'ரூம் நெம்பர் த்ரீ அன்றடன் த்ரீ' என்று நான் சொன்னது அவருக்கு விளங்கவில்லை. திரும்பவும் 'த்ரீ நாட் த்ரீ' என்று சொன்னேன். அதுவும் அவருக்கு விளங்கவில்லை. 'த்ரீ ஜீரோ த்ரீ' என்றேன். அதைக்கூட அவர் விளங்கிக் கொள்ளவில்லை. பின்னர், என் அறையைப் பூட்டிக் கொண்டு, நான் இருந்த மாடியிலிருந்து

கீழே இறங்கி வரவேற்பு அதிகாரியை நேரில் அணுகி, 303 என்று எழுதிக் காட்டினேன். அதற்கப்புறம், "ஓ!" என்று வியந்து. "த்ரீ ஓ த்ரீயைக் கேட்கிருயா?" என்ருர்.

நாம் இங்கு 'ஜீரோ' அல்லது 'நாட்' என்றுகூறுவதனைப் பாரிஸிலே 'ஓ' என்று உச்சரிக்கின்றனர். லண்டனில்கூட பலர் இப்படித்தான் உச்சரிக்கின்றனர். ஒருவிதமாகப் போராட்டம் நடத்தி, துணைவேந்தர் சுந்தர வடிவேலு அவர்களின் அறை நான்காவது மாடியில் இருப்பதாகத் தெரிந்துகொண்டு, அங்கு சென்றேன்.

அப்போது இரவு 8-30 மணி ஆகிவிட்டதால், அவர் தனது அறையைத் தாளிட்டுக்கொண்டு படுத்துவிட்டார். நான் கதவைத் தட்டி எழுப்பியதன் பேரில் எழுந்தார். "உணவு கொள்ள நான் ஓட்டலுக்குச் செல்ல வேண்டும். கொஞ்சம் துணைக்கு வாருங்கள்" என்றேன். "என் 'கதை'யும் அதுதான். இங்கு ஆங்கிலத்தில் கேட்டால் அதிகம் பேருக்குத் தெரியாது. தேவைப்படும் பண்டங்களை பிரெஞ்சு மொழியில்தான் கேட்டுப் பெற வேண்டும். பல பண்டங்களின் பெயர்களைப் பிரெஞ்சு மொழியில் வழங்குகிறபடி ரோமன் லிபியில் நான் ஒரு அட்டையில் எழுதி வைத்திருக்கிறேன். அந்த அட்டையை எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி அட்டையும் கையுமாக என்னுடன் புறப்பட்டார் துணைவேந்தர்.

ஒரு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரா யிருப்பவரும் ஆங்கிலத்தில் புலமை பெருத என்னைப் போலத் தான் பாரிஸ் நகரில் பிரெஞ்சு மொழி புரியாமல் கஷ்டப் படவேண்டியிருக்கிறது; ஆங்கிலத்திலே அவர் பெற்றுள்ள பெரும் புலமை அங்கு பயன்படவில்லை என்பதை அறிந்தபோது, அதையும் துணை வேந்தரே வாய் விட்டுச்

சொல்லிக் கேட்டபோது, என் மனம் ஆறுதலடைந்தது. உலகில் ஆங்கிலத்துக்குள்ள செல்வாக்கை இங்குள்ள படித்தவர்கள் மிகைப்படுத்திப் பேசுகிறார்கள். அது உண்மை அல்ல என்பதை மாஸ்கோவிலும், பாரிசிலும் அனுபவத்தின் மூலம் அறிந்துகொண்டேன். இன்னமும் ஐரோப்பா அளவில்கூட ஒரு பொது மொழி உருவாக வில்லை.

பொது மொழிக்குரிய இடத்தில் ஆங்கிலம் இல்லை. 'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை' என்பது போல, ஆங்கிலம் உலக நாடுகளிலே—குறிப்பாக, ஐரோப்பாவிலே ஓரளவே பயன்பட்டு வருகின்றது. ஆனால், உலகத்தின் ஒரே பொது மொழி அல்ல. ஐரோப் பிய நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டு விட்ட—மக்களில் பெரும்பாலோரால் பயன்படுத்தப்பட்டு வருகிற பொது மொழி என்ற நிலையில் ஆங்கிலம் இல்லை. பிரெஞ்சுக் காரர்கள் ஆங்கிலத்தை ஐரோப்பாக் கண்டத்தின் பொது மொழியாக ஏற்கவில்லை என்றும், அந்தத் தகுதி ஆங்கிலத்தை விடவும் தங்கள் பிரெஞ்சு மொழிக்கே அதிகம் இருப்பதாக அவர்கள் கருதுவதாகவும் பாரிஸ் நகரில் வாழும் தமிழர்கள் சொல்லிக் கேட்டேன்,

எப்படியோ, சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தருடன் வேறொரு ஓட்டலுக்குச் சென்று இரவு உணவை ஒருவாறு முடித்துக் கொண்டு எனது முகாமுக் குத் திரும்பினேன்.

பாரிஸ் நகருக்கு முதன் முதலாக நான் சென்ற இரவிலே பருவநிலை அருமையாக இருந்தது. மழைத் தூறலும் குளிரும் இருந்தன என்றாலும், அவை உடலுக் கும் உள்ளத்துக்கும் இன்பமளித்தன. மின் விளக்குகளின் ஒளியால் அழகு பெற்றிருந்த பாரிஸ் நகர நங்கை என்னைப் பெரிதும் கவர்ந்தாள்.

உலகத் தமிழ் மாநாடு

பாரிஸ் மாநகரிலே முதலிரவைக் கழித்த பின்னர் ஜூலை பதினைந்தாம் நாள் பிறந்தது! அதிகாலை பொழுது புலர்ந்ததும் நான் மிகுந்த மகிழ்ச்சிப் பெருக்கோடு படுக்கை யிலிருந்து எழுந்தேன். நாகரிக மிக்க ஓட்ட லிலே தங்கி வாழ்வது எனக்குப் பிடிக்கவில்லை என்ரு லும், பாரிஸ் நகர வாழ்க்கையிலே என் மனத்துள் மகிழ்ச்சி நிறைந்திருந்தது. காரணம், மூன்ருவது உலகத் தமிழ் மாநாடு அங்கு நடைபெற்றதுதான்!

"இராமன் இருக்குமிடம் அயோத்தி" என்பது பழமொழி. அதுபோல, பாரிஸ் நகரமானது சென்னை மாநகர் போலவே எனக்கு ஆகிவிட்டது! மூன்ருவது உலகத் தமிழ் மாநாடு பற்றி என் மனத்துள் எப்படி எப்படி எல்லாமோ கற்பனை செய்துகொண்டிருந்தேன். அதனுல், படுக்கையை விட்டு எழுந்ததும், காலைக் கடன்களை முடித்து, வெந்நீரில் குளித்து, பின்னர் சிற்றுண்டி அருந்தி விட்டு, மாநாட்டு அரங்குக்குச் செல்லத் தயாரானேன். வழக்கமாக, தாயகத்திலிருந்த போது உடுத்தியது போல, வேட்டி—சட்டை—மேல் துண்டு ஆகியவை அணிந்து தமிழருக்குரிய கோலத்தி லேயே உலகத் தமிழ் மாநாட்டிற்குச் சென்றேன். இதனை ஏன் இங்கு சிறப்பாகக் குறிப்பிடுகிறேன் என்ருல்; ஐரோப்பியர் உடையிலே தமிழ் மாநாட்டில் கலந்து கொண்ட தமிழர்களும் உண்டு என்பதனை நினைவூட்டவே

யாகும். குளிரைத்தாங்கிக் கொள்வதற்காக விசேஷமாக கோட் மட்டும் அணிந்திருந்தேன்.

நானும், எனது ஓட்டல் சகாவாகிவிட்ட துணை வேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்களும், நாங்கள் தங்கியிருந்த ஓட்டலிலிருந்து கிளம்பி, 'டி. பிரான்ஸ்' கல்லூரிக்குச் சென்றோம். ஓட்டலுக்கு வெளியே வீதியில் நூறு கெஜ தூரம் நடந்து சென்றதுமே, தாங்கிக் கொள்ள முடியாத அளவில் குளிர் என்னைத் தாக்கியது. ஆம்; அன்று மழைத் தூறலும், குளிரும் இருந்தன. அதனால், மீண்டும் ஓட்டலுக்குத் திரும்பி, கலைஞர் ஏ. பி. நாகராசன் எனக்காகத் தயாரித்தளித்த குளிர் கோட்டையும், உல்லன் குல்லாயையும் அணிந்து கொண்டேன். பின்னர், 'டி—பிரான்ஸ்' கல்லூரிக்குச் சென்றேன். அந்தக் கல்லூரியின் வாயிலருகே நின்று கொண்டு, "டி—பிரான்ஸ்' கல்லூரி எங்கேயிருக்கிறது?" என்று விசாரித்தறிய முயன்றேன். "இதுதான் 'டி—பிரான்ஸ்' கல்லூரி" என்று எனக்கு எதிரேயுள்ள கட்டிடத்தைச் சிலர் காட்டியபோது, நான் வியப்புற்றேன். ஆம்; அலங்காரம் எதுவும் செய்யப்படவில்லை. அலங்காரமும் ஆடம்பரமுமின்றி, பெரிய பெரிய மாநாடுகள் நடத்துவது ஐரோப்பாவின் வழக்கம் போலும்! உலகத் தமிழ் மாநாடு நடத்தியவர்களும் அந்த வழக்கத்தைக் கடைப் பிடித்து, என் போன்ற அப்பாவிகளை ஏமாற்றிவிட்டனர்! ஆனால், இந்த ஆடம்பரமற்ற தன்மை எனக்குப் பிடித்திருந்த தென்பதனை இங்கு நான் சொல்லியாக வேண்டும். ஏழ்மை நிறைந்த நம் நாட்டிலே, ஆடம்பரம் ஒரு நாகரிகமாகிவிட்டது. மாநாடு நடத்துவதென்றால், பெரும் பொருள் தேவைப்பட்டு விடுகின்றது. அதனால், பண பலம் இல்லாத அமைப்போ, அரசியல் கட்சியோ தலை எடுத்து வளர முடிவதில்லை.

பாரிஸ் மாநாட்டிலே தமிழக முதல்வரும் கலந்து கொள்ளப் போகிறார் என்பது நான் பாரிஸ் நகரை அடையும்வரை எனக்குத் தெரியாது. கண் வலிக்குச் சிகிச்சை பெற அவர் லண்டன் மருத்துவ மனையில் தங்க நேர்ந்ததால் பாரிஸ் மாநாட்டிற்கு வரமாட்டார் என்று முன்னதாகவே—அவர் சென்னையிலிருந்த போதே—அறிவிக்கப் பட்டிருந்தது. ஆனால், கலைஞர் கருணாநிதியவர்கள் லண்டன் செல்லும் வழியில் பாரிசில் ஒரு நாள் தங்கியிருந்தபோது, பாரிசில் சிறப்புக் கல்வி பயில்வதற்காகத் தங்கியுள்ள தமிழக மாணவர்கள் அவரை முற்றுகையிட்டு, உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினராம். இயற்கையாகவே தமிழுணர்ச்சியுடைய கலைஞர், இளைஞர்களின் வற்புறுத்தலுக்கு எளிதில் இணங்கி விட்டார். பாரிசில் மாநாடு கூடும் அதே நாளில்தான் லண்டன் மருத்துவ மனையில் கண் வலிக்கு அவர் சிகிச்சை பெற இருந்தார். ஆனால், தாய் மொழியிடத்துள்ள தனிப் பற்றுக் காரணமாக, சிகிச்சை தொடங்குவதற்கு முன்பிருந்த சில மணி நேர அவகாசத்தைப் பயன்படுத்தி, பாரிஸ் மாநாட்டில் அவர் பங்கு பெற்றார்.

உலகத் தமிழ் மாநாடு தொடங்குவதற்கு முன்பு 'இறை வாழ்த்து' ஒலி பரப்பப்பட்டது. பாரிஸ் நகரவாசிகளிலே தமிழிலே இறைவாழ்த்துப் பாடத் தெரிந்த தமிழர் கிடைப்பது அரிது. மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளிலே இசை ஞானத்தோடு பாடக் கூடியவர்களை முன்னதாகவே தேர்ந்தெடுக்க மாநாட்டு நிர்வாகிகளுக்கு வாய்ப்பில்லை. அதனால், முன்கூட்டியே நாடாவில் பதிவு செய்யப்பட்டிருந்த பாடலொன்றை ஒலி பரப்பினார்கள். குயிலினுமினிய குரலுடைய யாரோ ஒரு சகோதரியார் பாடி வைத்த திருவாசகப் பாடல்

அது. 'நமச்சிவாய வாழ்க; நாதன் தாள் வாழ்க' என்று தொடங்கும் சிவபுராணம் முழுவதும் ஒலிபரப்பப் பட்டது. இயற்கையாகவே எவர் மனத்தையும் உருக்கும் ஆற்றலுடைய அந்தப் பாடல், பாடியவரின் பக்தி உணர்வால் என் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது. அதனைக் கேட்டுக் கொண்டிருந்தபோது நான் என்னை மறந்தேன்.

சிவபுராணப் பாடல் முடிந்து கொண்டிருக்கும் தருணத்திலே முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி யவர்கள் மாநாடு நடைபெறும் மண்டபத்திற்குள்ளே நுழைந்தார். பல நாடுகளைச் சேர்ந்த மாநாட்டுப் பிரதிநிதிகள் அவ்வளவு பேரும் எழுந்து நின்று மரியாதை காட்டி அவரை வரவேற்றோம்.

இறை வணக்கப் பாடலுக்குப் பின்னும் தமிழ் வணக்கப் பாடலொன்றை யாரையேனும் கொண்டு பாடும்படி செய்ய வேண்டுமென்று மாநாட்டு நிர்வாகிகளில் ஒருவரான பேராசிரியர் தனி நாயகம் அடிகள் விரும்பினார். யாரைக் கொண்டு பாடவைப்பது என்பது எனக்கும் அவருக்கும் பிரச்சினையாகி விட்டது. என்னுடைய ஆஸ்தானக் கலைஞர்போல் ஆகிவிட்ட கலைஞர் ஔவை தி. க. சண்முகம் அவர்களை அப்போது நினைத்துக் கொண்டேன். பாரதியாரின் 'தமிழ் வாழ்த்து'ப் பாடலை விரும்பினார் தனிநாயகம் அடிகள். என் அருகிலிருந்த வித்துவான் கி. வா. ஜகந்நாதன் அவர்களை தமிழ் வாழ்த்துப் பாடும்படி நானும் நண்பர் தனிநாயகமும் கேட்டுக் கொண்டோம். அவர், தானே சொந்தமாகப் புனைந்துள்ள 'தமிழ் வாழ்த்து'ப் பாடலை மிகவும் உருக்கமாகப் பாடினார்.

மாநாடு தொடங்குவதற்கு சிறிது முன்னதாகவே கலைஞர் வந்து விட்டாரென்றாலும், மேடைக்குச் செல்

லாமல் கீழே முன் வரிசையில் சிறிதுநேரம் அமர்ந்திருந் தார். அப்போது அவருடைய கண்கள் யாரையோ தேடுவதை அவருக்குப் பின்னல் நான்காவது வரிசையில் அமர்ந்திருந்த நான் அறிந்து கொண்டேன். மாநாட்டிலே பணி புரியும் இளைஞர்களில் ஒருவரை அழைத்து ஏதோ • கேட்டார் கலைஞர். கலைஞருக்குப் பின்னல் இருந்த என்னை அந்த இளைஞர் கலைஞருக்குச் சுட்டிக் காட்டினர். உடனே எழுந்து நின்று கை காட்டி, தாம் இருக்கும் இடத்திற்கு வறுமாறு கலைஞர் என்னை அழைத்தார். நான் சென்று அவருடைய அருகில் அமர்ந்து உடல் நலம் விசாரித்தேன்.

மாநாட்டு நிகழ்ச்சி நிரலிலே மாநாட்டைத் தொடங்கிவைப்பவர் யார் என்பது குறிப்பிடப்பட வில்லை. ஆயினும், யுனெஸ்கோ டைரக்டர் ஜெனரலான திரு. மால்கம் ஆதிசேஷையா அவர்கள் தொடக்கவுரை ஆற்றக் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தார் என அறிந்தேன். அவர், தமது தொடக்க வுரையையும் அச்சடித்துத் தயாராக வைத்திருந்தார். தமிழக முதல்வரும் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்வார் என்பதை மாநாட்டிற்கு முதல் நாளன்று அறிந்ததும் நிகழ்ச்சி நிரலில் மாறுதல் செய்யப்பட்டது. வரவேற்புக் குழுத்தலைவர் திரு. பிலியோசா தமது வரவேற்புரையை முடித்ததும், தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணநிதி மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசினர்.

இங்கு ஒரு சுவையான செய்தியை நான் சொல்லியாக வேண்டும். டாக்டர் பிலியோசா பிறப்பால் தமிழரல்லர்; பிரெஞ்சுக்காரர். ஆங்கிலத்தின் மூலம் தமிழைப் பற்றி அவர் அறிந்தும் ஆராய்ந்தும் வைத்திருக்கிறர் என்றலும், தமிழில் பேசவோ, எழுதவோ அவரால் இயலவில்லை. அதனல், தமிழ் மாநாட்டில் தமிழில்தான்

பேச வேண்டும் என்ற முறையை அவரால் கடைப் பிடிக்க முடியவில்லை. அவருடைய தாய் மொழியான பிரெஞ்சு மொழியில் பேசினுல், மாநாட்டுப் பிரதிநிதி களில் மிகப் பெரும்பாலோர் அவரது பேச்சைப் புரிந்து கொள்ள இயலாது. அதனுல், கோலாலம்பூரில் நடந்த முதல் மாநாட்டிலும், சென்னையில் நடந்த இரண்டாவது மாநாட்டிலும் டாக்டர் பிலியோசா ஆங்கிலத்தில்தான் பேசினுர். பாரிஸ் மாநாட்டிலும் தமது வரவேற்புரையை அவர் ஆங்கிலத்தில்தான் நிகழ்த்துவார் என்று நான் எதிர்பார்த்தேன். இதற்கு மாருக, முதலில் ஒரு நிமிட நேரம் ஆங்கிலத்தில் சில வார்த்தைகள் கூறிவிட்டு, பின்னர் பிரெஞ்சு மொழியில் நீண்ட நேரம் வரவேற் புரை நிகழ்த்தினுர். மாநாட்டு அரங்கிலே குழுமியிருந் தவர்களில் நான்கைந்து பேருக்குக்கூட பிரெஞ்சு மொழி தெரியாது. அப்படியிருந்தும், டாக்டர் பிலியோசா பிரெஞ்சு மொழியிலே பேசினுர். "ஆங்கிலத்தில் சரள மாகப் பேச என்னுல் முடியாதாகையால், நான் என்னு டைய தாய் மொழியில் பேசுவதற்கு மாநாட்டினர் அனுமதிக்க வேண்டும்" என்று ஆங்கிலத்தில் கூறிவிட்டு, பிறகுதான் பிரெஞ்சு மொழியில் பேசினுர். டாக்டர் பிலியோசா ஆங்கிலத்தில் பேசாததற்குக் கூறிய சமா தானம் உண்மைக்கு மாருனதாகும். கோலாலம் பூரிலும், சென்னை மாநகரிலும் கூடிய முதலிரண்டு மாநாடுகளிலே பலமுறை பல மணி நேரம் அவர் சரள மாக ஆங்கிலத்தில் பேசியதை நான் கேட்டிருக்கிறேன். அப்படிப்பட்டவர் உண்மைக்கு மாருன ஒரு சமாதானத் தைக் கூறிவிட்டு, நீண்ட நேரம் பிரெஞ்சு மொழியிலே பேசினுரென்ருல், அதற்குக் காரணமென்ன?

உலகத் தமிழ் மாநாடு பிரெஞ்சு மொழி வழங்கும் நாட்டிலே நடைபெறுவதாலும், அவருடைய தாய்

மொழியும் பிரெஞ்சு மொழியாதலாலும், அவர் ஆங்கிலத்தில் பேசினால் அவரை பிரெஞ்சு மக்கள் வெறுப்பார்கள் என்று அவர் அஞ்சியிருக்க வேண்டும். இல்லையேல், பிரெஞ்சு மொழி வழங்கும் ஒரு நாட்டின் தலைநகரிலே கூடும் மாநாட்டிலே பிரெஞ்சு மொழிக்காரராகிய தாம் பிரெஞ்சு மொழியிலே பேசுவதுதான் முறையானதென்று அவர் கருதியிருக்க வேண்டும். இந்த இரண்டில் எதுவானாலும், அதனை நாம் வரவேற்க வேண்டும்.

ஆங்கிலமும் பிரெஞ்சும் பாரிஸ் மாநாட்டின் அலுவல் மொழிகளாக இருக்கும் என்று முன் கூட்டியே தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் அறிக்கை விடப்பட்டது. மூன்றாவது மொழியாகக்கூட தமிழுக்கு இடந்தரப்படவில்லை என்பது இங்கு நினைவுறத் தக்கதாகும்.

பிரெஞ்சுக்காரரான டாக்டர் பிலியோசா, மூன்று உலகத் தமிழ் மாநாடுகளை நடத்தப் பொறுப்பேற்ற தமிழ் அகடமியின் அமைப்புத் தலைவராவார். பாரிஸ் மாநாட்டையும் முழுக்க முழுக்க அவர்தான் பொறுப்பேற்று நடத்தினார். அவருடைய செல்வாக்கும் காரணமாகவே, பாரிஸ் மாநாட்டு அலுவல் மொழிகளில் ஒன்றாக பிரெஞ்சு மொழி அங்கீகரிக்கப்பட்டது. தமிழ் அகடமியின் செயலாளரான திரு. ஏ, சுப்பையா, பேராசிரியர் தனிநாயகம் அடிகள் ஆகியோருக்கும் தமிழ் அகடமியில் நல்ல செல்வாக்கு உண்டு. டாக்டர் மு. வ., தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் போன்ற தமிழ்ப் பேராசிரியர் சிலரும் பாரிஸ் மாநாட்டை நடத்திய தமிழ் அகடமியில் அங்கம் வகிக்கின்றனர். ஏனோ அவர்கள் பாரிஸ் மாநாட்டின் அலுவல் மொழிகளிலே மூன்றாவது மொழியாகக்கூடத் தமிழுக்கு இடந்தேடித்

தரத் தவறிவிட்டனர். இந்த லட்சணத்தில் பாரிசில் நடந்தது, தமிழ் மாநாடாம்!

டாக்டர் பிலியோசா பிரெஞ்சு மொழியில் நிகழ்த்திய வரவேற்புரையில் அவர் என்ன கூறினார் என்பது இந்த நேரம்வரை எனக்குத் தெரியாது. மிகவும் அதிகமாகச் சொன்னாலும் அந்த மாநாட்டின் அரங்கிலே கூடியிருந்தவர்களில் ஐந்துபேர்கூட அவரது உரையின் பொருளைப் புரிந்துகொண்டிருக்க முடியாது. அவருடைய பேச்சின்போது மாநாட்டு அரங்கு முழுவதிலும் மவுனம் நிலவியது. ஆம்; பேச்சின் பொருள் புரியாததால்! அதன்பின் மாநாட்டு அவையில் மவுனத்தைக் கலைத்த பெருமை தமிழக முதல்வர் கலைஞருக்குரியதாகும். அவர், இனிய தமிழிலே, தமக்கே உரிய கம்பீரமான குரலிலே திறப்புரை ஆற்றத் தொடங்கிய பின்னர், அவையில் புதிய உயிர் பிறந்தது. அவையிலுள்ள பலருக்கு தமிழர் என்ற உணர்வும் பிறந்தது. முன்கூட்டிச் சேகரித்து வைத்திருந்த புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டி, ஆழ்ந்த சிந்தனை சக்தியைப் புலப்படுத்தும் ஆராய்ச்சி மிக்க சொற்பொழி வொன்றை கலைஞர் நிகழ்த்தினார். அவரது பேச்சு பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவுக்குரிய பெருமையைப் பெற்றிருந்தது.

அவருடைய உரையைத் தாமாகவே புரிந்து கொள்ள முடியாத—தமிழறியாத அயல்நாட்டார் சிலர், தமிழறிந்த தமிழர்களைக் கேட்டுப் புரிந்து கொண்டனர். அப்படிப் புரிந்துகொள்ள அவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களிலே பலர் முதல்வருடைய கருத்தாழம் மிக்க உரையை என் போன்றவர்களிடம் பாராட்டிப் பேசினர்.

பாரிசிலுள்ள "யுனெஸ்கோ" நிறுவனத்தின் டைரக்டர் ஜெனரல் திரு. மால்கம் ஆதிசேஷையா அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினர். அவர், மொழிச் சிக்கலில் அகப்பட்டுக் கொள்ளாமல் மிகவும் சாதுரியத் துடன் பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்றுமொழி களிலேயும் முறையே பேசினர். ஆம்; தமிழை அடியோடு புறக்கணிக்க அவர் மனம் விரும்பவில்லை. தமது பேச்சிலே தாம் ஒரு தமிழர் என்பதை மிகுந்த உணர்ச்சி யோடு அடிக்கடி சொல்லிக் கொண்டார். தமிழை வளர்க்க வேண்டியதன் அவசியத்தையும்-அவசரத் தையும் அவர் வலியுறுத்தியபோது அவரது அகத்தில் இருந்த ஆர்வம் முகத்தில் வெளிப்பட்டது. உலகப் பெரும் நிறுவனமான "யுனெஸ்கோ"வின் டைரக்டர் ஜெனரலாக இருந்தும், தாய் மொழியையும், தாய் இனத்தையும், தாய் நாட்டையும் மறந்துவிடவில்லை— மனமார நேசிக்கிருர் என்பதனை அவரது பேச்சுக் காட்டியது.

திரு. மால்கம் ஆதிசேஷையா, தனது 'யுனெஸ்கோ' நிறுவனத்தின் சார்பில் ஒரு பெருந்தொகையை பாரிஸ் மாநாட்டிற்குக் கொடுத்து உதவினர். வேறு வகை யிலும் மாநாட்டின் சிறப்புக்கு அவர் பேருதவி புரிந் தார்.

திரு. மால்கம் ஆதிசேஷையா கம்பீரமான தோற்ற முடையவர். கடமை உணர்ச்சியும் மிக்கவர். அவ ருடைய மனைவியார் மலையாளி. அந்த அம்மையார் தம் கணவருடன் சேர்ந்து பாரிஸ் உலகத்தமிழ் மாநாடு வெற்றிபெறப் பலவகையிலும் உதவி புரிந்தார்.

பாரிஸ் மாநாட்டிலே கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையைச் சொன்னல் படிப்பவர்களுக்குக் கவர்ச்சியாக இராது. ஆம்; சென்னையில் நடந்த

மூன்ருவது உலகத் தமிழ் மாநாட்டை நேரில் கண்டு கவர்ச்சியுற்றவர்கள் கிட்டத்தட்ட அதைப்போன்ற ஒன்ருகத்தான் பாரிஸ் மாநாடு நடந்திருக்குமென்று எதிர்பார்ப்பார்கள்.

ஆனல், பாரிஸ் சென்னை ஆகிவிடாது. சென்னை தமிழ்நாட்டின் தலைநகரம். இங்கு நடைபெறுவது தமிழரசு. அதிருஷ்டவசமாக, மூன்ருவது உலகத்தமிழ் மாநாடு நடைபெறுவதற்கு முன்பே தமிழ் உணர்ச்சி உடையவர்கள் தமிழகத்தை ஆள வந்துவிட்டார்கள். அதனல், அரசே முழுமூச்சுடன் முன்நின்று உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியது சென்னையிலே, ''நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை'' என்ற நிலையிலே தமிழரே மிகுதியாக வாழ்கின்றனராதலால், மாநாட்டு நிகழ்ச்சிகளிலே வெள்ளம்போல் தமிழர் குழுமினர்.

பாரிஸ் பட்டினத்தின் நிலைமை சென்னைக்கு முற்றிலும் மாருனது. அங்கு, அதிகப்படியாகச் சொன்னலும் முன்னூறுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் தமிழர் இல்லை எனலாம். அவர்களில் பெரும்பாலோர் புதுவையோடு தொடர்புடையவர்கள். மற்றவர்கள் சிறப்புக் கல்வி பயில பாரிசில் தங்கியிருக்கும் மாணவர்கள். அந்த நகரிலே கோலாலம்பூரிலோ, சென்னையிலோ நடத்தியது போன்ற சிறப்புடன் உலகத் தமிழ் மாநாட்டை நடத்திட முடியாது.

கோலாலம்பூருக்கும் சென்னைக்கும் அடுத்தபடியாக மூன்ருவது உலகத்தமிழ் மாநாடு நடத்த ஒரு நாட்டைத் தேர்ந்தெடுத்திருக்க முடியுமானல், அது இலங்கையாகத்தான் இருக்க முடியும். ஐரோப்பாவிலே மூன்ருவது மாநாட்டை நடத்துவதானலும், லண்டன் நகரைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். அங்கு சுமார்

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர் வாழ்கின்றனர். அவர்களிலே பொருளுதவி புரியக்கூடிய வசதி உடையவர்களும் இருக்கின்றனர்.

பிரெஞ்சு நாட்டின் தலைநகரான பாரிசிலே மாநாட்டை நடத்தியதற்கும் சமாதானம் சொல்லக் காரணங்கள் உண்டு. தமிழ் வளர்ச்சிக்கு உதவிபுரிந்த பெருமையிலே பிரெஞ்சுப் பேரரசுக்கும் பங்குண்டு. தமிழ் வழங்கும் புதுவை—காரைக்கால் பகுதிகளிலே சுமார் ஒன்றரை நூற்றுண்டுகளுக்கு மேலாக பிரெஞ்சு ஆட்சி நடைபெற்றது. அந்தக் காலத்திலே புதுவையும் காரைக்காலும் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் அடிமைக் காலனிகளாகத்தான் இருந்தன. ஆயினும், பிரிட்டிஷ் இந்தியாவைவிட, இன்னும் கொஞ்சம் நாகரிகமான முறையில் புதுவை காரைக்காலிலே பிரெஞ்சு ஆட்சி நடைபெற்றது. பிரிட்டிஷ் இந்தியாவிலே ஆங்கிலேய ராட்சியின் அடக்குமுறைக் கொடுமைகளை ஆற்ற மாட்டாமல் புதுவைக்குச் சென்ற அரவிந்தர், வ. வே. சு ஐயர், சுப்பிரமணிய பாரதி போன்ற தேச பக்தர்களுக்கு அடைக்கலம் தந்தது பிரெஞ்சு ஆட்சி.

வ. வே. சு. ஐயரும் மகாகவி பாரதியாரும் பல ஆண்டுகள் புதுவையில் தங்கியதனுல், தமிழுக்குத் தொண்டு செய்ய அதிக வாய்ப்புப் பெற்றனர். வ. வே. சு. ஐயர் திருக்குறள் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தது புதுவையில் இருந்தபோதுதான். குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு ஆகிய குறுங்காப்பியங்களைப் பாரதியார் படைத்தது பாண்டிச்சேரியில் வாழ்ந்தபோதுதான்.

அரவிந்த கோஷ் புதுவையில் அடைக்கலம் பெற்றில்லையானல், மகான் நிலைக்கு அவர் வளர்ந் திருப்பாரா என்பது ஐயப்பாடே. வங்க மொழியிலும்

ஆங்கிலத்திலும், அரவிந்தர் வளமார்ந்த இலக்கியங்களைப் படைத்தது. பிரெஞ்சுப் பேரரசு புதுவையில் அவருக்கு தஞ்சமளித்ததால்தான்.

இப்படி, இந்திய இலக்கிய வளர்ச்சிக்கு உதவிய பெருமை பிரெஞ்சுப் பேரரசுக்கு உண்டு. இதற்காகவும், தமிழ் அகடமியைத் தோற்றுவித்து அதன்மூலம் தம் தாய்மொழி அல்லாத தமிழுக்குத் தொண்டு செய்து வரும் டாக்டர் பிலியோசாவைக் கவுரவிப்பதற்காகவும் மூன்றுவது தமிழ் மாநாட்டை பாரிசில் நடத்தியதை வரவேற்கலாம்.

தமிழுலகைக் கண்டேன்!

பாரிஸ் மாநாட்டுக்கு எந்தெந்த நாடுகளிலிருந்து —யார் யார் எல்லாம் பிரதிநிதிகளாக வருகிறார்கள் என்பது பற்றிய விவரமடங்கிய பிரசுரமொன்று மாநாட்டு நிர்வாகிகளால் வெளியிடப் பெற்றது. அதிலே, ஆறு கண்டங்களில் உள்ள முப்பத்தைந்து நாடு களிலிருந்து 164 பிரதிநிதிகள் கலந்துகொள்ளக் கூடு மென்று தகவல் தரப்பட்டது. அவர்களில், தமிழ் நாட் டாரல்லாத—தமிழ்மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாத அயல் நாட்டாரும் அயல் மொழியினருமே அதிக எண்ணிக்கையில் இருந்தனர். அவர்களின் எண் ணிக்கை 98.

அச்சுப் பிரசுரத்தில் தரப்பட்டிருந்த பிரதிநிதிகள் அவ்வளவு பேருமே மாநாட்டில் கலந்து கொண்டார்கள் என்று சொல்வதற்கில்லை. அவர்களில் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தவர்களே அதிக எண்ணிக் கையில் மாநாட்டிற்கு வந்திருந்தனர். அவர்களிலும் தமிழகம், இலங்கை, மலாசியா, சிங்கப்பூர் ஆகிய நாடு களைச் சேர்ந்தவர்களே மிகுதியாக இருந்தனர். ஐரோப் பாவிலே, சொந்த அலுவல் காரணமாக, அல்லது வேறு காரணங்களுக்காகத் தங்கி வாழ்கின்ற தமிழர்களிலே சிலரும் பாரிஸ் மாநாட்டிலே பங்கு பெற்றனர். அயல் நாடுகளையும் அயல் மொழிகளையும் சார்ந்த தமிழ ரல்லாத பிரதிநிதிகளின் எண்ணிக்கை எதிர்பார்த்ததை விடவும் குறைவாகவே இருந்ததெனலாம்.

கோலாலம்பூர் மாநாட்டிலும் சென்னை மாநாட்டிலும் கலந்துகொண்ட அளவுக்குக் கூட, தமிழரல்லாத அயல் நாட்டுப் பிரதிநிதிகள் பாரிஸ் மாநாட்டில் பங்கு பெறவில்லை. பிறப்பால் தமிழரல்லாதவராக இருந்தும் தமிழிலே பயிற்சி பெற்று, உடையாலும் உணர்வாலும் தமிழராகவே வாழ்கின்ற ருஷ்ய நாட்டவரான செமியோன் ரூதின் பாரிஸ் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. அவர், சென்னை மாநாட்டிலே மிகவும் சிறந்த முறையில் பணியாற்றினுரென்பது நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

உலகத் தமிழ் மாநாடு என்ற பெயருக்கேற்ப குறைந்த அளவிலேனும் அயல் நாடுகளிலிருந்து—தமிழறிந்த அயல் மொழியினருட்பட பலர் பாரிஸ் மாநாட்டில் பங்கு கொண்டிருந்தும், இந்தியாவில் உள்ள தமிழரல்லாதாரிலே ஒருவர் கூட பாரிஸ் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. கோலாலம்பூர்—சென்னை மாநாடுகளிலே, வங்காளியான சுனித்குமார் சட்டர்ஜியும் தமிழ் பயிலும் பஞ்சாபி ஒருவரும் கலந்துகொண்டனர். அவர்களைக்கூட பாரிஸ் மாநாட்டிலே காண முடியவில்லை. இது, இந்திய தேசத்தில் உள்ள பெருங் குறைபாடாகும். இந்த நிலையைப் பார்த்த அயல் நாட்டுப் பிரதிநிதிகள் இந்திய தேசியத்தைப் பற்றி என்ன நினைத்தார்களோ? ஐரோப்பியர் பலர் கலந்து கொண்ட உலகத் தமிழ் மாநாட்டிலே, ஆந்திரரும் கேரளரும் கன்னடரும் கலந்துகொள்ளாதது ஒரு குறை தானே! ஒருகால், இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களிலிருந்து பிரதிநிதிகளை அழைப்பதற்கு பாரிஸ் மாநாட்டை நடத்தியவர்கள் முயற்சி எடுக்கவில்லையோ என்னவோ! தமிழுக்கு உலகந் தழுவிய பெருமையைத் தேட மாநாடு நடத்தும் உலகத் தமிழ் ஆராய்ச்சிக்

கழகத்தார், முதலில் பாரதம் தழுவிய பெருமையைத் தேட முயல வேண்டும்.

திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்திலிருந்து தமிழ்ப் பேராசிரியர் வி. ஐ. சுப்பிரமணியம் அவர்கள் பாரிஸ் மாநாட்டில் கலந்து கொண்டதை நான் மறந்துவிடவில்லை. ஆனால், தமிழறிந்த மலையாளி ஒருவரும் பாரிஸ் மாநாட்டிற்கு அழைக்கப் பட்டிருக்க வேண்டும். சென்னைப் பல்கலைக் கழகத்தில் மலையாள மொழிப் பேராசிரியராகப் பணிபுரியும் டாக்டர் எஸ். கே. நாயர் தமிழில் பெரும் புலமையுடையவர். அழைத்திருந்தால் அவர் தவறாமல் வந்திருப்பார். அப்படியே, பிறப்பால் ஆந்திரராகவும் கன்னடராகவும் உள்ள தமிழறிந்த புலவர்களை அழைத்திருக்கலாம். திராவிட மொழிக் குடும்ப உணர்ச்சியைக்கூட பாரிஸ் மாநாடு பிரதிபலிக்கவில்லை.

தமிழில் எழுதப் படிக்கத் தெரியாத—ஆங்கில மொழியின் மூலம் தமிழைப் பற்றி ஓரளவே அறிந்து வைத்துள்ள ஐரோப்பியர் பலர் பாரிஸ் மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தனர். அந்த நிலையிலேனும் வங்கத்திலிருந்தும் மகாராஷ்டிரத்திலிருந்தும் பிரதிநிதிகளை அழைத்திருக்கலாம். மாநாட்டு நிர்வாகிகள் இத்துறையில் போதிய ஆர்வமோ அக்கரையோ செலுத்தவில்லை என்றே நான் கருதுகிறேன்.

இந்தக் குறைபாடு மாநாட்டில் கலந்துகொண்ட தமிழ் நாட்டுப் பெரும் புலவர்கள் பார்வையிலே பட்டதாகவே தெரியவில்லை. பாரிஸ் மாநாட்டிற்கு அழைப்பை எதிர்பார்த்து ஏமாந்தவர்கள், ஆத்திரப்பட்டுக் கண்டனக் குரல் கொடுத்தார்கள். பாரிஸ் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளின் தகுதிகளைப் பற்றி எல்லாம் ஆராய்ச்சி நடத்தினார்கள். அவர்

கள்கூட, இந்தியாவில் உள்ள பிற மொழி மாநிலங்களி லிருந்து பிரதிநிதிகள் அழைக்கப்படாததைக் குறித்துக் குறை கூறவில்லை.

பாரிஸ் மாநாட்டில் என்னுடைய பார்வையிலே பட்ட இன்னொரு பெருங் குறையும் உண்டு. அது பாரிசைத் தலைநகராகக் கொண்ட பிரெஞ்சு நாட்டின் பிரதமரோ, கல்வி அமைச்சரோ, கல்வித் துறை அதி காரியோ மாநாட்டில் கலந்து கொள்ளாததாகும். கோலாலம்பூர் மாநாட்டிலே மலாசியப் பிரதமர் துங்கு அப்துர் ரஹ்மான் கலந்து கொண்டார். அவர்தான் மாநாட்டைத் துவக்கிவைத்தார். சென்னை மாநாட்டை இந்திய ஜனாதிபதி டாக்டர் ஜாகீர் உசேன் தொடங்கி வைத்தார். இந்த மரபைப் பின்பற்றி பாரிஸ் மாநாட் டையும் பிரெஞ்சு நாட்டின் பிரதமரைக் கொண்டு தொடங்கி வைத்திருக்கலாம். அழைத்திருந்தால், அவர் வருவதற்கு மறுத்திருக்க மாட்டார். மறுத்திருந்தால் பிரெஞ்சு நாட்டுக் கல்வி அமைச்சரையேனும் அழைத் திருக்கலாம். மாநாட்டில் பங்குபெற அவருக்கு விருப்ப மிருந்ததாகவும், மாநாட்டினர் அவரை அழைக்கவில்லை என்றும் பாரிஸ் நகரில் கேள்விப்பட்டேன். மாநாட்டு வரவேற்புக் குழுவினர் அரசாங்க சார்புடைய யாரையும் அழைப்பதில்லை என்று முடிவு செய்திருந்ததாக மாநாட்டு அரங்கிலே பேசிக் கொள்ளப்பட்டது.

பிரெஞ்சு நாட்டிலுள்ள மொழியியல் அறிஞர்கள் கூட உலகத் தமிழ் மாநாட்டுக்கு அழைக்கப்படவில்லை. மாநாட்டு அரங்கில் பார்வையாளராகக்கூட பிரெஞ் சுக்காரர் எவரையும் நான் பார்க்கவில்லை. பிரெஞ்சு மொழி வழங்கும் நாட்டின் தலைநகரில் நடந்த ஒரு மாநாட்டிலே, பிரதிநிதிகளாக மட்டும் அல்லாமல் பார்வையாளராகக்கூட பிரெஞ்சுக்காரர்களிலே எவரும்

கலந்து கொள்ள ஏற்பாடு செய்யத் தவறியது வருந்தத் தக்கதாகும்.

இந்தியாவின் புராதன மொழியாகிய தமிழின் பெயரால் நடைபெற்ற உலகந் தழுவிய மாநாட்டிலே கலந்துகொள்ள பாரிசிலுள்ள இந்தியத் தூதுவர் கடமைப் பட்டிருக்கிறார். வியப்பென்ன வென்றால், அவர், மாநாடு நடந்த பக்கம்கூட தலைகாட்டவில்லை யென்பதாகும்.

கோலாலம்பூர் மாநாட்டின் போது, அங்குள்ள இந்தியத் தூதர், பிரதிநிதிகளுக்குத் தனியாக விருந்தளித்து சிறப்பு செய்தார் என்பதனை இங்கு நினைவூட்ட வேண்டியது என் கடமையாகும்.

தமிழக அரசின் சார்பில் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளை வரவேற்பதிலும், பாரிசில் அவர்களுக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து தருவதிலும் இந்தியத் தூதுவரக கீழ்மட்ட அதிகாரிகள் பெரிதும் உதவிகரமாக இருந்தனர். அவர்களுடைய உதவி கிடைத்திலலையேல், பாரிசுக்குப் புதியவர்களான என் போன்றவர்கள் நிலை பரிதவிக்கத்தக்கதாக இருந்திருக்கும். அந்த வகையில் பாரிசில் உள்ள இந்தியத் தூதுவரக அதிகாரிகளை — குறிப்பாக, திரு. ஹரிஹரன் போன்ற தென்னிந்தியர்களை நான் பெரிதும் பாராட்ட வேண்டும்.

இந்தியத் தூதுவரும் மாநாட்டில் கலந்துகொண்டிருந்தால், இந்தியாவின் தேசிய உணர்ச்சியை மாநாட்டுக்கு வந்திருந்த அயல்நாட்டுப் பிரதிநிதிகள் அறிந்து கொள்ள முடிந்திருக்கும். 'இந்தியத் தேசியம்' இன்னமும் தமிழை மதிக்கக் கற்றுக் கொள்ளவில்லை என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். பாரிஸ் மாநாட்டை நடத்திய

வர்கள் இந்தியத் தூதுவரை அழைக்கத் தவறியிருப்பார்களானால், அது பெருந் தவறு மட்டும் அல்ல; குற்றமுமாகும்.

பாரிஸ் மாநாட்டில் என் பார்வையில் பட்ட—என்னால் மறக்க முடியாத மற்றொரு மாபெருங் குறை என்னவென்றால், அது தமிழில் நடைபெறாததாகும். தமிழின் பெயரால் மாநாடு கூட்டிவிட்டு, தமிழை அறவே கைவிட்டு, ஆங்கிலத்திலேயே மாநாட்டை நடத்தியது, தமிழை அவமதித்த செயலாகவே எனக்குப் பட்டது. தமிழை அவமதிக்கும் நோக்கம் மாநாட்டை நடத்தியவர்களுக்கு இருந்திருக்காது. எவ்வளவோ இன்னல்களுக்கிடையே உலகந் தழுவிய பெரும் புகழை தமிழுக்குத் தேடித் தரப் பாடுபடுவோர், தெரிந்தே தமிழை அவமதித்தார்கள் என்று நான் எப்படிச் சொல்ல முடியும்? ஏனோ தமிழின் பேரால் மாநாட்டைக் கூட்டிவிட்டு, அதை ஆங்கிலத்திலே நடத்துவது மிகப் பெரிய குற்றம் என்பது மாநாட்டு நிர்வாகிகளின் மனத்திலே படவில்லை.

உலக மாநாடு ஒன்று உலகப் பொது மொழியான ஆங்கிலத்தில்தானே நடைபெற முடியும்?—என்று மாநாட்டு நிர்வாகிகள் நினைக்கிறார்கள். இது ஒரு மயக்கம்! இந்த மயக்கம் மாநாட்டை நடத்தியவர்களுக்கு மட்டுமல்லாமல், படித்த தமிழர்களில் மிகப் பெரும் பாலோருக்கு இருந்து வருகின்றது.

உலகந் தழுவிய வகையில் சரித்திரத்தின் பெயராலோ, பொருளாதாரத்தின் பெயராலோ, அரசியலின் பெயராலோ, விஞ்ஞானத்தின் பெயராலோ ஒரு மாநாடு நடந்தால், அதற்கு ஒரு பொதுமொழி தேவைப் படுகிறது என்பதனை நான் ஐயமற அங்கீகரிக்கிறேன். ஏனெனில், மொழி வேறுபாடுடைய நாடுகளின் சரித்

திரப் பேராசிரியர்கள் கூடினுல், பொதுமொழி ஒன்ருலன்றி, வேறு எந்த மொழியாலும் அந்த மாநாட்டை நடத்த முடியாது. "சரித்திர ஞானம்" என்பது நிச்சயமாக மொழி அறிவல்ல; மொழி அறிவைக் கடந்த பொருளறிவு. அதனுல், ஜெர்மனி, பிரான்ஸ், இந்தியா ஆகிய மொழி வேறுபாடுடைய நாடுகளின் பிரதிநிதிகள் தங்களுக்கிடையே கருத்துக்களைப் பறிமாறிக்கொள்ள ஆங்கிலத்தைத்தான் பயன்படுத்த முடியும். பொருளாதாரம், அரசியல், விஞ்ஞானம், தத்துவம் ஆகிய விஷயங்கள் பற்றிய உலக மாநாடுகளுக்கும் இந்த நியாயம் பொருந்தும்.

சிகாகோவில் நடந்த சர்வ சமய மாநாட்டிலே இந்தியாவின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட சுவாமி விவேகானந்தர் ஆங்கிலத்தில்தான் பேசினுர். இந்து சமய தத்துவ ஞானத்தை சமஸ்கிருத மொழியின் மூலம் தான் அவர் பயின்ருர் என்ருலும், சிகாகோவில் கூடியது சர்வசமயத் தத்துவ மாநாடானதால், ஆங்கே உலகப் பொதுமொழியான ஆங்கிலத்தில் அவர் பேசியது மிகவும் பொருத்தமானதாகும்.

பாரிசிலே கூடியது அப்பட்டமான மொழி மாநாடு. வேறு விஷய ரீதியான மாநாடு அல்ல. அதுவும் பொதுவாக "உலக இலக்கிய" மாநாடாகக் கூடியிருந்தால், அதிலே ஆங்கிலந்தான் நடவடிக்கை மொழியாக இருக்கமுடியும்—இருந்தாக வேண்டும். பாரிசில் கூடியது தமிழ் மொழியில் மட்டுமே உள்ள இலக்கண இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி மாநாடு ஆகும். அந்த மாநாட்டிலே தமிழை இரண்டாவது மொழியாகக்கூடப் பயன்படுத்தாமல், முழுக்க முழுக்க ஆங்கிலத்தையே பயன்படுத்தியது. "படிப்பது இ ர ா ம ா ய ண ம்; இடிப்பது

பெருமாள் கோவில்'' என்பார்களே, அந்தப் பழமொழி போன்றதாகும்.

பாரிசில் கூடியது, தமிழர் மாநாடு அல்ல; தமிழ் மாநாடுதான் என்பதனை நான் அறிவேன். அதனால், தமிழரல்லாத ஜப்பானியரும் அமெரிக்கரும் ஜெர்மானியரும் அந்த மாநாட்டிலே பங்கு பெற்றதில் உள்ள நியாயத்தை நான் உணர்கின்றேன்—ஒப்புக் கொள்கின்றேன். ஆனால், அவர்கள் பிறப்பால் தமிழரல்லாதவர்களாக இருந்தாலும், தமிழைப் பயின்றவர்களாகத் தானே இருக்க வேண்டும்? தமிழ் பயிலாதவர்களுக்கு தமிழ் மாநாட்டிலே என்ன வேலை? அந்த மாநாட்டிற்கு அவர்கள் எதற்காக வரவேண்டும்? அவர்களுக்காக தமிழை ஏன் ஒதுக்க வேண்டும்? தமிழை விலக்கிவிட்டு தமிழ் மாநாடா? இந்த வினாக்களில் உள்ள உண்மைத் தன்மையை பாரிஸ் மாநாட்டைக் கூட்டியவர்கள் மட்டுமல்லாமல், நம் தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளில் கூடப் பலர் உணரவில்லை என்பதுதான் எனக்குள்ள வேதனை.

தமிழிலே பெரும்புலமை பெற்ற —தனிப்பட்ட முறையில் என்பால் பேரன்பு கொண்ட பேராசிரியர்களிடம் இதுபற்றிப் பாரிசிலேயே நான் விவாதித்தேன். ஆனால், எனது உணர்ச்சியை அவர்கள் பிரதிபலிக்கவில்லை. புரியாத்தனமாக — தமிழின்பால் கொண்ட மூடபக்தி காரணமாக நான் ஆங்கிலத்தை வெறுப்பதாக அவர்கள் கருதியிருக்கலாம். ஆம்; அந்த அளவுக்கு தமிழ்ப் பேராசிரியர்களுக்கும் ஆங்கில மோகம் இருக்கிறது.

கோலாலம்பூரில் நடந்த முதல் மாநாட்டிலேயும் சென்னையிலே நடந்த இரண்டாவது மாநாட்டிலேயும் ஒருநாள் முழுவதும் தமிழிலே கருத்தரங்கு நடத்தவும், அதில் தமிழிலே ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படிக்கவும்

நிகழ்ச்சி நிரலிலே இடம் தரப்பட்டது. பாரிஸ் மாநாட்டிலே அந்தச் சிறிய வாய்ப்புக்கூட தமிழுக்குக் கிடைக்காமல் போய்விட்டது. ஆம்; அங்கு எல்லாம் ஆங்கிலத்தில்!

பாரிஸ் மாநாட்டிலே படிக்கப்பட்ட—ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தமிழிலே மொழிபெயர்த்துத் தரக்கூட, கட்டுரை படித்த பேராசிரியர்களோ, மாநாட்டு நிர்வாகிகளோ முயலவில்லை. ஆம்; மொழி பெயர்ப்பிலே காட்சியளிக்கும் பெருமை கூட தமிழுக்குத் தரப்படாத நிலையில், மூன்றாவது உலகத் தமிழ்மாநாடு நடந்து முடிந்தது!

புதுவை முதலமைச்சர் திரு. ஃபரூக் மரைக்காயர் ஒருவர்தான் தமது கட்டுரையைத் தமிழில் தயாரித்துப் படித்தார். அவர், கோலாலம்பூர்—சென்னை மாநாடுகளில் கலந்து கொள்ளவில்லை. அதனால், தமிழின் பேரால் கூட்டப்படும் மாநாடு தமிழிலேதான் நடைபெறும் என்று தவறாக நினைத்துக் கொண்டு, தமது கட்டுரையைத் தமிழிலேயே அச்சடித்துக் கொண்டு வந்தார். இதனை, பாரிசில் அவரே நேரில் என்னிடம் கூறினார்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள், மகாகவி பாரதியாரைப் பற்றிய தமது ஆராய்ச்சிக் கட்டுரையை ஆங்கிலத்தில்தான் படித்தார். என்றாலும், அதனைத் தமிழிலே மொழி பெயர்த்து, அதன் அச்சுப் பிரதிகளை மாநாட்டிலே வழங்கினார். அந்த அளவில்கூட தமிழுக்கு மதிப்புத்தர தமிழ்ப் பேராசிரியர்களில் எவரும் முன்வரவில்லை.

உலகத் தமிழ்மாநாட்டை ஆங்கிலத்தில் மட்டுமே நடத்துவதால் விளையும் பெருங்கேடு என்னவென்றால்,

தமிழ்மொழி வளர்ச்சியடைய வாய்ப்பில்லாமல் போகிறது என்பதுதான். மாநாட்டு நடவடிக்கை பற்றிய குறிப்புகளும், மாநாட்டில் படிக்கப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் ஆங்கிலத்தில் மட்டுமே தயாரிக்கப்படுவதால், மாநாடு முடிந்த பின்னர் அந்தக் குறிப்புகளும், கட்டுரைகளும் தொகுக்கப்பட்டு — இரண்டு அல்லது மூன்று பகுதிகள் அளவில்—தனி நூலாக வெளியிடப்பட்டு, ஆங்கில நூற் களஞ்சியத் திற்கு அனுப்பப்படுகிறது. தமிழ்மொழி நூற் களஞ்சி யத்திற்கு வரவு இல்லாமற் போகிறது. இது, தமிழ் வளர்ச்சியல்ல; ஆங்கில வளர்ச்சிதான். இதற்காகவா இரண்டு வருடத்திற்கொருமுறை தமிழர் உழைப்பால், தமிழக அரசுக்கும் பெருஞ்செலவேற்படுத்தி உலகத் தமிழ் மாநாடு நடத்த வேண்டும்?

உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரியும் இந்த உண்மைகூட, உலகத் தமிழ்மாநாட்டை நடத்துபவர் களுக்கோ, அதில் கலந்து கொள்ளும் தமிழ்ப் பேராசிரியர்களுக்கோ மனதில் படவில்லை என்றால்; தமிழ்மொழியின் துரதிருஷ்டத்தை என்னென்பது!

இவ்வளவு குறைவுகள் இருப்பினும், மொத்ததில் பாரிஸ் மாநாடு சிறந்த முறையில்தான் நடந்ததென்று நாம் கருத வேண்டும். நம் தாய்மொழியின் பெயரால் நடந்த மாநாடல்லவா!

பாரிஸ் மாநாட்டிலே உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் செயலாளர் திரு. ஏ. சுப்பையா அவர்கள், உலகந் தழுவிய முறையில் தமிழ்மொழி அடைந்து வரும் பெருமையை —அந்தப் பெருமையை வளர்க்க உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஆற்றிவரும் பணியை ஒரு அறிக்கை வாயிலாக மாநாட்டில் சமர்ப் பித்தார். அவரே பிரதிநிதிகளின் எதிரே நின்று

உணர்ச்சிப் பெருமிதத்தோடு அந்த அறிக்கையைப் படித்தார். "உலகில் 56 பல்கலைக் கழகங்களிலே தமிழ் மொழி பயிற்றுவிக்கப்படுகிறது" என்று அவர் தகவல் தந்தபோது, எனது உடம்பு சிலிர்த்து, மயிர்க் கூச்செறிந்தது. அவர் சொல்லாத சில சிறப்புக்களும் அப்போது என் நினைவுக்கு வந்தன.

இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர், ருஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய அயல்நாடுகளின் வானொலி நிலையங்களிலே தமிழ்த்துறை ஒன்று தனியாக இருந்து வருவதனை நினைத்துக் கொண்டேன். இந்திய மொழிகளிலே வேறு எந்த மொழிக்கும் இத்துணை வானொலி நிலையங்களிலே இடமில்லை என்பதனை நினைத்து பெருமிதமடைந்தேன். இதுகூட உலகந் தழுவிய மாநாட்டை நடத்துவதற்கான பெருமையை தமிழுக்குத் தந்திருக்கிறதென்பதனை உணர்ந்தேன்.

யுனெஸ்கோவின் சார்பில் இந்திய மொழிகள் இரண்டிலே மாத இதழ் வெளியிட ஏற்பாடாகியுள்ளதென்று யுனெஸ்கோ தற்காலிக டைரக்டர் ஜெனரல் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் பாரிஸ் மாநாட்டிலே மகிழ்ச்சிப் 'பெருமிதத்தோடு அறிவித்தார். அந்த இரண்டு மொழிகளிலே ஒன்று இந்தி, இன்னொன்று தமிழ்! இப்போது வெளிவந்துகொண்டிருப்பது தமிழ் ஏடு ஒன்றுதான். இந்தியிலேயும் ஏடு வெளியிட யுனெஸ்கோ பணம் ஒதுக்கியிருப்பினும், அம்மொழியாளரின் முயற்சியிலே முன்னேற்றமில்லாததால், இந்தி ஏடு இன்னமும் வெளிவரவில்லை என்று டாக்டர் ஆதிசேஷையா என்னிடம் தனியாகக் கூறினர்.

பாரிசிலே, "சர்வ தேசத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு —கருத்தரங்கு(இண்டர் நேஷனல் கான்பரன்ஸ்— செமினர் ஆப் தமிழ் ஸ்டடிஸ்)" என்ற பெயரில் தமிழ்

ஆராய்ச்சியாளர்கள் கூடினார்கள் என்றாலும், நடைமுறையில் அது மாநாடாக இயங்கவில்லை. அப்பட்டமான கருத்தரங்காகவே இயங்கியது.

'மாநாடு' என்றால், பிரதிநிதிகளேயன்றி, பார்வையாளர்களும் அனுமதிக்கப்படுவது வழக்கம். ஆனால், பார்வையாளர்கள் அம் 'மாநாட்டில்' கலந்து கொள்ள வாய்ப்போ, வசதியோ தரப்படவில்லை. பாரிஸ் மாநாட்டை நடத்துவோரின் அழைப்பின்றியே, லண்டனிலிருந்து விசேஷ பஸ் அமர்த்திக் கொண்டு ஏராளமானவர்கள் பாரிசுக்கு வந்திருந்தார்கள். ஆம்; மாநாட்டில் பார்வையாளராகக் கலந்து கொள்ள! இவர்களில் பெண்களும் இருந்தனர். பலர், கணவன்—மனைவியர். அநேகமாக எல்லோருமே பட்டதாரிகள்! இருநூறு மைல் தூரம் பஸ்ஸிலே பயணம் செய்து வந்த தமிழ் ஆர்வமுடைய இந்தப் பட்டதாரிகளிலே செல்வி ஐராவதி (சென்னை மேரி ராணிக் கல்லூரி முன்னாள் முதல்வர்), டாக்டர் ஈ. மீனாட்சிசுந்தரம், பாரிஸ்டர் எஸ். சபாபதிப்பிள்ளை (தலைவர், கிரேட் பிரிட்டன் இந்து சங்கம்), 'லண்டன் முரசு' ஆசிரியர் சதானந்தம் ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

பார்வையாளர்களை அனுமதிப்பதில் மாநாட்டு நிர்வாகிகள் அதிக ஆர்வம் காட்டவில்லை என்றே சொல்ல வேண்டும். ஆனால், பார்வையாளராகக் கலந்து கொள்ள வந்திருந்தவர்களை அவர்கள் தடுக்கவும் இல்லை. அநேகமாக லண்டனிலிருந்து விசேஷ பஸ்ஸில் வந்திருந்தவர்களைத் தவிர, வேறு யாரும் பார்வையாளர்களாக பாரிஸ் மாநாட்டில் பங்கு கொள்ளவில்லை என்றே சொல்ல வேண்டும்.

தமிழுக்கு 'முத்தமிழ்' என்றொரு பெயருண்டு. இயலோடு இசையும் நாடகமும் கலந்தாலே தமிழ் முழு

வடிவம் பெறுகின்றது. ஆகவே, தமிழின் பெயரால் கூட்டப்பட்ட உலகந் தழுவிய மாநாட்டிலே இயற்ற மிழுக்குப் பிரதிநிதிகள் இருந்தனர். இசைத் தமிழுக்கும், நாடகத் தமிழுக்கும் பிரதிநிதிகளாக யாரும் அழைக்கப் படவில்லை. முதலிரண்டு மாநாடுகளில் இசைப் பேராசிரியர்" சங்கீத பூஷணம் திரு. இராமநாதன், நாடக உலகின் சக்கரவர்த்தி கலைஞர் ஔவை தி. க. சண்முகம், நடனக் கலைஞர் திருமதி. நிர்மலா இராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்களில் முதல் இருவரும் இசை பற்றியும் நாடகம் பற்றியும் கட்டுரை படித்தனர். இலங்கையிலிருந்து, நாடகத்தின் சார்பில் வந்த ஒரு பிரதிநிதி அந்த நாட்டில் நடைபெறும் தெருக் கூத்துகள் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை படித்தார். இந்த முன் மாதிரியை ஒட்டி பாரிஸ் மாநாட்டிற்கும் இசை, நாடகக் கலைகளுக்குப் பிரதிநிதிகளை அழைக்க மாநாட்டை நடத்தியவர்கள் முயன்றிருக்க வேண்டும்.

பாரிஸ் மாநாட்டிலே காலையிலும் மாலையிலும் இரு வேளைகளிலும் கருத்தரங்குகள் நடைபெற்றன. அவற்றிலே அறிஞர் பலர் பல்வேறு விஷயங்கள் பற்றித் தாங்கள் தயாரித்திருந்த கட்டுரைகளைப் படித்தனர். எனக்கென்னமோ, இந்த மாதிரி கட்டுரைகள் படிக்கும் கருத்தரங்குகள் கொஞ்சமும் பிடிக்கவில்லை. முன் கூட்டியே தயாரித்து அச்சடிக்கப்பட்ட கட்டுரையைப் படிப்பதற்காக நெடுந் தொலைவிலிருந்து நேரத்தையும் பணத்தையும் செலவழித்துக் கொண்டு பிரதிநிதிகள் வரத் தேவையில்லை. அச்சடித்த கட்டுரையை ஆராய்ச்சித்துறை அறிஞர்களுக்கு அஞ்சல் மூலமே அனுப்பிவிடலாம். கருத்து வேற்றுமைகளை அஞ்சல் மூலம் பரிமாற்றம் செய்து கொள்ளலாம்.

கருத்தரங்கிலே படிக்கப்படும் கட்டுரை மீது விவாதம் நடத்துவதும் ஒரு முக்கிய அம்சமாகும். இந்த விவாதத்தை முன்னிட்டுத்தான் பிரதிநிதிகள் ஓரிடத்திலே கூடுகிருர்கள் என்ருல், அது புரிகிறது. விவாதம் நடைபெறவில்லையாளுல், பல நாடுகளிலிருந்தும் பிரதி நிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களெல்லாம் ஒரு நாட்டிலே வந்து குழுமுவது வீண் வேலையாகும்.

கோலாலம்பூர், சென்னை, பாரிஸ் மாநாடுகளிலே படிக்கப்பட்ட கட்டுரைகள் மீது காரசாரமான விவாதம் எதுவும் நிகழவில்லை. ஒன்றிரு கட்டுரைகள் மீது சிலர் விவாதத்தில் ஈடுபட்டனர். அதுவும் சொற்ப நிமிட நேரம்தான். அந்த விவாதமும் கேட்போருக்குச் சுவையாக அமையவில்லை.

பாரிஸ் மாநாட்டிலே முதலிரண்டு மாநாடுகளை விடவும் விவாதம் குறைந்த அளவில்தான் இருந்தது. 'கம்ப்யூட்டர்' என்னும் கருவியின் துணைகொண்டு ஆராய்ந்த மொழியியல் (லிங்குஸ்டிக்ஸ்) அறிஞர்கள் மட்டுமே தங்கள் ஆராய்ச்சி பற்றிப் பரஸ்பரம் கருத்து வேற்றுமை காட்டி, சில நிமிட நேரம் விவாதித்தனர். அதனை, கம்ப்யூட்டர் மூலம் ஆராயும் கலையறிந்த இரண்டொருவர் தவிர வேறு யாரும் புரிந்து கொள்ளக்கூட முடியவில்லை.

பாரிஸ் கருத்தரங்கில் சிந்துவெளி ஹரப்பா—மொகஞ்சதாரோ நாகரிகம் பற்றிய கட்டுரை படிக்கப்பட்டது. இதனைப் படித்தவர் டாக்டர் கமில் சுவலபில் என்ற அறிஞராவார். இவர், சமீப ஆண்டுகளில் தமிழ் நாட்டவர்க்கு—குறிப்பாக, தமிழ்ப் புலவர் பெருமக்களுக்கு நன்கு அறிமுகமாகியிருக்கிருர். தமிழின் மீது மிகுந்த நல்லெண்ணம் காட்டி இவர் தெரிவித்த உயர்

வான கருத்துக்கள் இவர் மீது தமிழர் நல்லெண்ணங் கொள்ளும்படி செய்தன. ஆனால், எதனாலோ, இவர் தற்போது மனமாற்றம் அடைந்திருக்கிறார். கோலாலம்பூர்—சென்னை மாநாடுகளிலே, "ஹரப்பா—மொகஞ்சதாரோ நாகரிகம் தமிழருடையதே" என்று வாதித்த இவர், அதற்கு நேர்மாறாக பாரிஸ் மாநாட்டிலே; "தமிழருடையதல்ல" என்று சாதித்தார். இவர் படித்த கட்டுரை கருத்தரங்கிலே சிறிது பரபரப்பை ஏற்படுத்தியது; பரபரப்பு அடைந்தவர்களிலே நானும் ஒருவன்.

டாக்டர் கமில் சுவலபில், சிந்து வெளி நாகரிகம் பற்றி மனமாற்றம் அடைந்ததற்கு ஏதேதோ காரணங்கள் கூறப்படுகின்றன. இவர், கம்யூனிஸ்டு நாடான செக்கோஸ்லோவேகியாவில் பிறந்தவர். அதனால்; கம்யூனிசச் சார்புடையவராகவும் இருந்து வந்தார். இப்போது, செக்கோஸ்லோவேகியாவின் குடியுரிமையைத் துறந்து இவர் அமெரிக்காவிலே தங்கி வாழ்வதாகச் சொல்லப்படுகிறது. இத்துடன், சமஸ்கிருத மொழியைப் பயிலவும், அம்மொழி இலக்கியங்களை ஆராயவும் இவர் முற்பட்டிருக்கிறாராம். இதனால், சமஸ்கிருத மொழி வட்டாரத்தில் உள்ள—தமிழைப் புறக்கணிப்பதையே வழக்கமாகக் கொண்டுள்ள மொழி வைதிகர்களின் நட்பையும் நல்லெண்ணத்தையும் பெற்று வருகிறார். இந்தச் சூழ்நிலை காரணமாக சிந்து வெளி நாகரிகம்பற்றி மனமாற்றம் அடைந்துவிட்டார் என்று பாரிஸ் மாநாட்டரங்கிலே பேசப்பட்டது

சோவியத் அறிஞர் சிலர், பாரிஸ் மாநாடு கூடவிருந்த தருணத்திலே, சிந்து வெளி நாகரிகம் பற்றி ஆராய்ந்து, அது தமிழர் நாகரிகம்தான் என்று அறிக்கை விட்டிருந்தனர். அவர்களை மறுக்க வேண்டுமென்ற ஆத்திரத்தாலும் டாக்டர் கமில் சுவலபில் ஒருதலைப்பட்ச

மாக மனமாற்றம் அடைந்திருக்கலாம் என்று சொல்லப் பட்டது.

பாரிஸ் கருத்தரங்கிலே டாக்டர் கமில் சுவலபில் வெளியிட்ட முரண்பட்ட கருத்தைத் தமிழகத்தில் இருந்து வந்திருந்த பெரும் புலவர்களிலே ஒருவரும் மறுக்கவோ, எதிர்க்கவோ இல்லை. இதுகண்டு, நான் வியப்பும் வேதனையும் அடைந்தேன். திரு. ஐ. மகா தேவன் ஐ. ஏ. எஸ். அவர்களும், மற்றொரு ஐரோப்பிய ரும் மட்டுமே டாக்டர் கமில் சுவலபிலின் கருத்தைக் கடுமையாக மறுத்துப் பேசினர். இது எனக்கு ஓரளவு ஆறுதல் தந்தது.

பாரிஸ் கருத்தரங்கின் பிரதிநிதி என்ற முறையில் நான் டாக்டர் கமில் சுவலபில் அவர்களை எதிர்த்து அங்கேயே பேசியிருக்க முடியும். ஆனால், தன் கருத்துக்கு அரண் செய்யும் வகையில் அவர் கரும் பலகையில் எழுதிக் காட்டிய சான்றுகள், முற்றிலும் 'கம்ப்யூட்டர்' என்னும் கருவியின் துணைகொண்ட ஆராய்ச்சியாகவே இருந்தது. அந்த ஆராய்ச்சியில் எனக்குப் பயிற்சி கிடையாது. அதனால், என்னுள் பொங்கி எழுந்த சினத்தை அடக்கிக்கொண்டு, நான் வாய் மூடி மவுனி யாகி இருப்பதைத் தவிர, வேறு வழியில்லாமல் போய் விட்டது.

தாயகம் திரும்பிய பின் டாக்டர் கமில் சுவலபில் அவர்களின் முரண்பாடுடைய கருத்தை ஆராய்ந்து முடிவு காண ஆராய்ச்சிக் குழு ஒன்றை நியமிக்கும்படி தமிழக அரசைக் கோரினேன். சட்டப் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்று, தமிழக அரசின் ஆதரவை யும் பின் பலமாகக் கொண்டு, சட்டப் பேரவையிலும் உத்தியோகப் பற்றற்ற தீர்மானமொன்றை முன் மொழிந்து பேசினேன். இது நாடறிந்ததாகும்.

பாரிஸ் கருத்தரங்கில் சிந்துவெளி நாகரிகம் பற்றிய விவாதத்திலே கலந்துகொள்ள எனக்கு வேறு ஒரு தடையுமிருந்தது. மாநாட்டு நிர்வாகிகள், "கட்டுரை கொடுத்தவர்கள்தான் விவாதத்தில் கலந்துகொள்ள முடியும்" என்று முன் கூட்டியே அறிவித்தனர். கட்டுரை கொடுக்காத பிரதிநிதிகளிலே நானும் ஒருவன். ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று தயாரிப்பதிலே அறிவு பூர்வமான கஷ்டம் எதுவும் எனக்கில்லை. எத்தனை கட்டுரை வேண்டுமானலும் கொடுத்திருக்க முடியும். கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரைகள் அனைத்துமே ஆராய்ச்சியோடு எழுதப்பட்டவை என்றும் சொல்வதற்கில்லை. பல கட்டுரைகள், படிக்கப்பட்ட இடத்தை ஒட்டி 'ஆராய்ச்சி' என்று பெயர் பெற்று விட்டன. கட்டுரைக்குள்ளே ஆராய்ச்சி பூர்வமான கருத்துக்கள் இல்லை.

கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின்போது, "வள்ளலார் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பிலே ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றைத் தயாரித்து, அதனை அச்சிட்டும் எடுத்துக்கொண்டு போயிருந்தேன். கோலாலம்பூர் சென்ற பின்னர்தான் அந்த மாநாட்டின் நடைமுறை ஆங்கிலமாக இருந்ததனை அறிந்துகொள்ள முடிந்தது, அதனை வெறுக்கும் வகையில், எனது கட்டுரையைப் படிக்க நான் மறுத்து விட்டேன். எனது ஆராய்ச்சிக் கட்டுரையின் அச்சுப் பிரதிகளை கோலாலம்பூர் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வழங்கியதோடு ஆறுதலடைந்தேன்.

சென்னையில் நடந்த இரண்டாவது மாநாட்டிலேனும் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றைப் படிக்க வேண்டுமென்ற ஆவல் எனக்கிருந்தது. "கண்ணகி வழிபாடு" என்னும் தலைப்பிலே ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை எழுதி, அதன் கையெழுத்துப் பிரதியை மாநாட்டு

நிர்வாகிகளிடம் காட்டி, அதனைப் படிக்க அனுமதி கோரினேன். ஆனுல், பல்கலைக் கழக நூற்ருண்டு விழா ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற பெரிய கருத்தரங்கிலே எனது கட்டுரையைப் படிக்க இடங் கிடைக்கவில்லை. மாலை நேரத்திலே எங்கோ ஒரு சிறு அறையில் நடந்த —தமிழுக்கெனவே ஒதுக்கப்பட்டிருந்த கருத்தரங்கிலே இடந் தரப்படுமெனத் தெரிந்தது. இந்தப் போக்கு தமிழுக்கு இழைத்த அவமானம் என்று கருதி, நான் ஒதுங்கி விட்டேன்.

கோலாலம்பூரிலும் சென்னையிலும் பெற்ற அனுபவத்தின் காரணமாக, பாரிஸ் மாநாட்டில் ஆராய்ச்சிக் கட்டுரை படிப்பதுபற்றி நான் நினைத்துப் பார்க்கக்கூட இல்லை. பிரதிநிதியாகக் கலந்துகொண்டு திரும்புவதோடு திருப்தி அடைய முடிவெடுத்தேன். இதனுலும் சிந்துவெளி நாகரிகம் பற்றிய விவாதத்திலே டாக்டர் கமில் சுவலபில் கருத்தை எதிர்ப்பதற்கு உரிமை யில்லாதவனு யிருந்தேன்.

ஆராய்ச்சி என்பது முடிவற்றது. அதிலே, முரண்பட்ட கருத்துக்கள் ஏற்படுவதும் இயற்கை. ஒரு ஆராய்ச்சியாளர், தான் முதலில் எடுத்த முடிவை அறிவு வளர்ச்சியின் காரண மாக பின்னுல் மாற்றிக்கொள்வதும் எதிர்பார்க்கக் கூடியதே. ஆகவே, சிந்துவெளி நாகரிகம் பற்றி டாக்டர் கமில் சுவலபில் மனமாற்றம் அடைந்ததை என்னுல் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனுல், அவர் எந்தச் சூழ்நிலையில் தனது கருத்தை மாற்றிக் கொண்டார் என்பதை நினைக்கும்போது, பாரிசில் அவர் தெரிவித்த முடிவைக் களங்கமற்றதாக நான் கருதுவதற்கில்லை. இதனுற்ருன், தனிக் குழுவை நியமித்து ஆராயுமாறு தமிழக அரசைக் கோரினேன்.

பாரிஸ் மாநாடு கூடிய டி-பிரான்ஸ் கல்லூரியிலே, மாநாடு கூடிய அறையிலே, மூன்றும் நாள் மாலையில் சிறப்புக் கூட்டமொன்று நடத்தப்பெற்றது. பாரிஸ் பல்கலைக் கழகத்திலே சிறப்புக் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள் இந்தச் சிறப்புக் கூட்டத்தை நடத்த முயற்சி எடுத்தனர். 'பாரி மாநகர் மாணவர் மன்றம்' பெயரில் ஒரு அமைப்பினைத் தொடங்கும் நிகழ்ச்சியாகவே இந்தச் சிறப்புக் கூட்டம் அமைந்தது. புதுவை முதல்வர் பரூக் மரைக்காயர் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்திலே சுமார் அரை மணி நேரம் பேச எனக்கு ஒரு அரிய வாய்ப்புக் கிடைத்தது. மாநாட்டின் மூன்று நாள் நடவடிக்கைகளைப் பார்த்த பின் எனக்கேற்பட்ட மனக் குமுறல்களை வெளிப் படுத்திப் பேசினேன். மாநாட்டு நிர்வாகிகளுக்குள்ள ஆங்கில மோகத்தை நாசுக்காகக் குறைகூறும் வகையிலும் பிரலாபித்தேன். பிரதிநிதிகளிலே பலரும, லண்டன் மாநகரிலிருந்து வந்த பார்வையாளர்களும் நான் வெளியிட்ட கருத்துக்களை மகிழ்ச்சியோடும், மன நிறைவோடும் ஆதரித்து அடிக்கடி கைதட்டி ஆரவாரித்தனர். அவர்கள் அவ்வளவு பேரும் இளைஞர்களாதலால், என்னைப்போன்றே இதயத் துடிப்புடையவர்களாக இருந்தனர். 'என்னைப் போன்றே' என்று நான் கூறுவதால், நானும் இளைஞன் ஆகிவிட மாட்டேன். ஆயினும், தமிழுக்குள்ள அவலத்தைப் போக்குவதிலே எனக்குள்ள ஆர்வம் உணர்ச்சி அளவிலேனும் என்னை இளைஞனாக வைத்திருக்கிற தென்பதனை உறுதியுடன் கூறுவேன்.

இந்தச் சிறப்புக் கூட்டத்திலே சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு, மதுரை துணைவேந்தர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், திரு. கி. வா. ஜகந்நாதன், திரு சா. கணேசன், திரு. பி.

ஜி. கருத்திருமன், திரு. இரா. ஜனார்த்தனம் உள்படப் பலர் பேசினர். இந்தச் சிறப்புக் கூட்டம் நடந்திராவிடில், பாரிசில் உள்ள தமிழ் இளைஞர்களும், லண்டனிலிருந்து வந்திருந்த பார்வையாளர்களும் மிகுந்த மனவேதனை அடைந்திருப்பார்கள். ஆம்; தமிழ் ஆர்வமுடைய நெஞ்சங்களுக்கு டி—பிரான்ஸ் கல்லூரியில் நடந்த கருத்தரங்கு உணர்ச்சி ஊட்டுவதாக அமையவில்லையல்லவா!

விருந்தோ விருந்து !

பாரிஸ் மாநகரில் நான் ஏழு நாட்கள் தங்கியிருந்தேன். உலகத் தமிழ் மாநாடு நான்கு நாட்களே நடைபெற்றன. அதன் பின்னும் மூன்று நாட்கள் உடல் நலக் குறைவு காரணமாக டாக்டர் மீனாட்சி சுந்தரம் அவர்கள் துணையோடு பாரிஸ் நகரில் தங்கியிருந்தேன. உலகத் தமிழ் மாநாட்டு நடவடிக்கைகளில் மட்டுமின்றி, அதனையொட்டி நடைபெற்ற விருந்துகள், கலை நிகழ்ச்சி-சிறப்புக் கூட்டங்கள் ஆகியவற்றிலும் பங்கு கொண்டேன்.

பாரிஸ்மாநகரில் வாழும் பாண்டிச்சேரி தமிழர்கள் தமிழ் மாநாட்டுக்கு வருகை தந்த புதுவை முதல்வர் திரு. பரூக் மரைக்காயருக்குத் தனியாக விருந்து அளித்தனர். இது, பிரதேசப் பற்று! இருக்கத்தானே செய்யும்! ஆனல், இந்தத் தேநீர் விருந்துக்கு மாநாட்டுப் பிரதிநிதிகள் அனைவரையுமே அழைத்திருந்தனர். யாரும் தனித்தனி மேஜை அருகே அமர்ந்து தேநீர் அருந்தவில்லை. ஓரிடத்தில் குவியலாக வைக்கப்பட்டிருந்த பண்டங்களைத் தத்தம் தேவைக் கேற்ப எடுத்து உண்டு உலாவிக் கொண்டே உரையாடிய வண்ணம் பொழுது போக்கினர். பாரிஸில் நிரந்தரமாகத் தங்கி வாழும் தமிழர்களிலே புதுவைத் தமிழர்களே மிகுதியாக இருக்கின்றனர். இவர்களின் எண்ணிக்கை எனக்குத் தெரியாது. நூற்றுக் கணக்கில்தான் இருக்குமென்று நம்புகிறேன். இவர்களில் முஸ்லிம்கள் கணிச

மான தொகையினராவர். புதுவை முதல்வர் திரு. பருக் மரைக்காயர், தேநீர் விருந்துக்குப் பின்னர், மிகுந்த உற்சாகத்துடன் சிறியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அதிலே தமிழ் மணம் கமழ்ந்தது.

பாரிஸ் மாநாடு நடந்தபோது, ஒரு நாள் அங்குள்ள பல்கலைக் கழகத்தில் படிக்கும் தமிழ் மாணவர்கள், மாநாட்டின் பிரதிநிதிகளுக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் விடுதியிலேயே பகல் விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர். பாரிஸிலேயே புதுவைத் தமிழர்களுக்கு அடுத்தபடியாக, பல்கலைக் கழகத்தில் பயிலும் தமிழ் மாணவர்களைத்தான் குறிப்பிட வேண்டும். அவர்கள், பாரிஸ் நகரத்துக்கு வரும் தமிழகப் பிரமுகர்களை வரவேற்கவும், அவர்களுக்கு வசதிகள் தேடித் தந்து உபசரிக்கவும் ''பாரிமா நகர் மாணவர் மன்றம்'' ஒன்றை அமைத்துள்ளதை—அதன் தொடக்க விழாவினை உலகத் தமிழ் மாநாட்டு மேடையிலேயே நிகழ்த்தியதனை முன்பே கூறியிருக்கிறேன்.

பாரிஸ் மாநகர் தமிழ் மாணவர்களிலே திரு. ஜமீல் என்ற முஸ்லிம் மாணவர் தமிழிடத்தே மிகுந்த பற்றுடையவர். ஓடியாடி உழைப்பதிலே அவருக்கு இணை அவர்தான். உலகத் தமிழ் மாநாட்டுத் தொண்டர் படைக்கு அவர்தான் தலைவராக இருந்தார்.

மாணவர் விடுதியிலே தரப்பட்ட பகல் உணவு வகைகள் நான் முன்பு எப்போதும் உண்டறியாதவை என்பது மட்டுமல்ல; கண்டறியாதவை என்றும் சொல்ல வேண்டும்—தயிரைத் தவிர! 'மூன்று வேளை உணவு' என்று பொதுவாகச் சொல்வதுண்டு. அதிலே, நான் அரை வயிறேனும் மனநிறைவோடு உண்ண முடிவது பகல் வேளையில்தான். அப்போதும் பத்திய உணவு—பழகிய உணவு கிடைக்காவிட்டால், பட்டினிதான்!

பாரிஸ் மாணவர் விடுதியிலே அளிக்கப்பட்ட விருந்தில் தயிர் ஒன்றை மட்டும்தான் பயமின்றி அருந்தினேன். ஆயினும், தமிழ் மாணவர்கள் என்னை உபசரித்த முறை மன நிறைவைத் தந்ததோடு, உணவால் நிரப்பமுடியாத வயிறும் அவர்கள் காட்டிய அன்பால் நிறைந்தது எனலாம். அவ்வளவு அன்பு காட்டி உபசரித்தனர்.

பாரிஸில் உலகத் தமிழ் மாநாடு நடப்பதற்குப் பல வகையிலும் உதவி புரிந்த 'யுனெஸ்கோ' நிறுவனத்தின் தற்காலிக டைரக்டர் ஜெனரல் டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷையா அவர்கள் ஜூலை 16-ம் தேதியன்று மாலை தமிழ் மாநாட்டில் கலந்து கொண்ட உலகப் பிரதிநிதிகள் அனைவருக்கும் தேநீர் விருந்தளித்தார். விருந்து 'யுனெஸ்கோ' கட்டிடத்தின் ஏழாவது மாடியில் நடைபெற்றது. விருந்திலே மதுபானங்கள் பரிமாறப் பட்டன, பாரிஸ் நகர வழக்கப்படி! யார் யாருக்கு எது எது விருப்பமோ அவரவர்கள் அது அதனைப் பருகினர். அந்த விருந்திலே ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்திருந்த வெள்ளையர்களும் கலந்து கொண்டனர் என்பதனை மீண்டும் நினைவூட்டுகிறேன்.

யுனெஸ்கோ விருந்திலே 'நலம் புனைந்துரைத்தல்' எனப்படும் சடங்கும் நடைபெற்றது. இது 'டோஸ்ட்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகிறது. பானம் நிறைந்த கண்ணாடிக் கோப்பையைக் கையில் எடுத்துக் கொண்டு, ஒருவர் கோப்பையோடு மற்றவர் கோப் பையை லேசாகத்தட்டி 'நலம் புனைந்துரைத்தல்' சடங்கு நடத்தப்பெறுகிறது. இதனைச் சுவைபட வருணிக்கும் திறன்கூட எனக்கு இல்லை. ஒருகால், என் தமிழுக்கே இல்லையோ, என்னவோ! யுனெஸ்கோ தேநீர் விருந்தில் மட்டுமல்லாமல், உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற

நேரத்திலே, இடையிடையே தேநீர் வழங்கப்பட்ட போதும், இது நிகழ்ந்தது.

தமிழ் நாட்டிலிருந்து சென்றிருந்த சுத்தத் தமிழர் களில்—தமிழ்ப் புலவர் பெருமக்களில் சிலர் கூட, மிகுந்த உற்சாகத்தோடு தங்களுக்குள்ளேயே 'டோஸ்ட்' சடங்கை நிகழ்த்தினர். 'இது தேவை தானு?' என்பது என் மனத்துள் எழுந்த வினு. ஆனுல், மற்றவர்கள் அடையும் மகிழ்ச்சியைக் குறைக்க எனக்கு விருப்பம் இல்லாததால், நான் இதுபற்றி யாரையும், எதுவும் கேட்காமல் மௌனமாக இருந்துவிட்டேன்.

தமிழ் மாநாட்டிலே கலந்து கொள்பவர்கள்—அவர்கள் தமிழரல்லாதாராயினும்—தமிழ் இனத்தின் பண்பாட்டின்படியும் பழக்க வழக்கங்களின்படியும் நடந்துகொள்ள வேண்டுமென்பது என் விருப்பம். தமிழர் அல்லாதார் எப்படி நடந்து கொண்டாலும் சுத்தத் தமிழர்களேனும் தங்கள் பழக்க வழக்கப்படி உலக அரங்கிலே நடந்துகொண்டு, அவற்றின் சிறப்பை மற்றவர்களுக்கும் உணர்த்த வேண்டும். அந்த நாள் என்று வருமோ!

டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷையா அவர்கள், தமிழக அரசின் சார்பில் சென்ற பிரதிநிதிகட்கு மட்டும் ஒரு நாள் இரவு தனியாக விருந்தளித்தார், யுனெஸ்கோ கட்டிடத்திலேயே! அந்த விருந்திலே, என்னைத் தம் அருகிலேயே அமர்த்திக் கொண்டு, வயிறு நிறைய உண்ணும்படி அன்பால் என்னை நிர்ப்பந்தித்துவிட்டார். இந்த விருந்தின்போது தவிர, முன்பு எப்போதும் நாங்கள் சந்தித்து உரையாடியது இல்லை. அப்படி யிருந்தும் என்பால் நீண்ட நெடுங்காலமாக தாம் கொண்டுள்ள அன்பை இந்த விருந்தின்போது வெளிப்படுத்தினுர். உணவு கொள்வதில் மட்டும் என்னை யாரும் தம் விருப்

பப்படி ஆட்டிப் படைக்க முடியாது. ஆனால், யுனெஸ்கோ அதிபர் விருப்பப்படி அவர் அளித்த விருந்திலே நான் நடந்து கொண்டேன், மதுபானம் பருகுவது ஒன்றைத் தவிர!

யுனெஸ்கோ அதிபர் அளித்த இரவு விருந்திலே மது பானங்கள் எனக்கும் பரிமாறப்பட்டன. முதலில் வோல்கா வழங்கப்பட்டபோது, 'எனக்குத் தேவை யில்லை' என்று கூறி, அதனைப் பெற்றுக்கொள்ள மறுத்து விட்டேன். இரண்டாவதாக 'வொய்ன்' வழங்கப் பட்டபோதும் அப்படியே மறுத்தேன். அப்போது என் அருகில் இருந்த டாக்டர் ஆதிசேஷையா அவர்கள் குறுக்கிட்டு, "அப்படி மறுப்பதனை இங்குள்ளவர்கள் மரியாதைக் குறைவாகக் கருதுவார்கள். தயவு செய்து வாங்கிக்கொண்டு, ஒரு முணர் அருந்துங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

மதுவை வெறுப்பதிலே நான் மகா வைதீகன். மரியாதைக்காக ஒரு முணர் குடிக்கத் தொடங்கினால் அது என்னை எங்கு கொண்டுபோய் விடுமோ?—யாரறி வார்! ஆகவே, டாக்டர் ஆதிசேஷையா அவர்கள், வற்புறுத்தலுக்காக வொயினைக் கையில் வாங்கிக்கொண் டேன். ஆனால், சுவை பார்க்கவில்லை. சுவை பார்த்தவர்களும் உண்டு. யார் மத்தியில் இருக் கிறோமோ அவர்கள் பழக்க வழக்கங்களோடு கலந்து விடும் பலவீனம் தமிழரிலே சிலருக்கு ஏற்பட்டுவிடுகிறது.

இந்த விருந்துக்கு தமிழகப் பிரதிநிதிக் குழுவின் தலைவர்—அப்போதைய தமிழ்நாடு நிதி அமைச்சர் மாண்புமிகு கே. ஏ. மதியழகன் வருவார் என்று எதிர் பார்த்தோம். அவர் வரவில்லை.

பாரிசில் இருந்த நாட்களிலே 'யாரேனும் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய் கொஞ்சம் ரசச் சோறும்,

தயிர்ச் சோறும் தர மாட்டார்களா?' என்று ஏங்கிக் கொண்டிருந்தேன். நானாகவே அங்கு நிரந்தரமாகத் தங்கி வாழும் சில தமிழர்களை சோறு போடுமாறு கேட்டுக் கொண்டதும் உண்டு. பாரிஸிலுள்ள இந்தியத் தூதுவரகத்திலே பணி புரியும் திரு. கோபால் என்பவர், என்னையும் என் சகாவாக இருந்த துணைவேந்தர் நெ. து. சுந்தர வடிவேலு அவர்களையும் ஒரு நாள் பகல் தமது இல்லத்திற்கு அழைத்துச் சென்று விருந்தளித்தார்.

அவரும் அவருடைய குடும்பத்திலுள்ள பெண்களும் முகமலர்ச்சியோடு உபசரித்தனர். பாரிசில் இருந்த நாட்களிலே இவர்கள் வீட்டிலே உணவருந்திய பகலில்தான் வயிறார உண்டேன். காரணம், உணவு வகை எனக்குப் பிடித்தமாக இருந்ததுதான். 'பிடித்தமாக...'—என்று நான் சொல்வதால் 'பிரியாணி' விருந்து என்று கருதிவிட வேண்டாம். நன்கு வேக வைக்கப் பட்ட புழுங்கலரிசிச் சோறு; புளிக்காத தயிர்; காரமில்லாத கறிவகையும் வைக்கப்பட்டன.

திரு. ராபர்ட் செயின்ட் ஜான் என்ற புதுவைத் தமிழரின் இல்லத்திலே ஒரு நாள் பகல் விருந்துண்டேன். இந்த நண்பர் பிறருக்கு உதவிகரமாகத் தொண்டு புரிவதிலே மிகுந்த ஆர்வமுடையவர். நம் நாட்டில் "கௌரவ நீதிபதி" என்பார்களே, அதுபோன்ற ஒரு உயர் பதவியை இவர் பாரிசில் வகிக்கிறார். ஆனால், குடும்பத்துடனல்லாமல், தனி மனிதராகத்தான் இவர் பாரிசில் வாழ்கிறார்.

பாரிசில் உள்ள இந்தியத் தூதுவரகத்தின் உயர்தர அதிகாரி திரு. ஹரிகர அய்யர் (இவரைப் பற்றி முன்பும் குறிப்பிட்டுள்ளேன்) ஒரு நாள் இரவு என்னைத் தமதில்லத்திற்கு அழைத்துச் சென்று விருந்தளித்தார்.

இரவிலே சோறு உண்ணும் வழக்கத்தை கால்நூற்றுண்டுக்கு முன்பே நான் விட்டு விட்டேன். 'ஓட்ஸ்' கஞ்சிதான் உட்கொண்டு வருகிறேன். அது இல்லையானால், இட்டலியோ, இடியாப்பமோதான் உட்கொள்வது வழக்கம். ஆனால், மாஸ்கோ-பாரிஸ் நகரங்களிலிருந்த இரவு நேரங்களிலே, அரிசிச் சோறு கிடைத்தால் விடுவதில்லை. வருவது வரட்டும் என்று துணிந்து சாப்பிட்டு வந்தேன். ஒன்றும் வந்துவிடவில்லை. அன்பர் அய்யர் இல்லத்திலே, அவர் தம் அருமை மனைவியார் அன்புடன் உபசரித்ததால், பகல் நேரத்தில்கூட அரை வயிறு சோறே உண்ணும் வழக்கமுடைய நான் நிறை வயிறு உண்டுவிட்டேன். அதுவும் இரவுபன்னிரெண்டு மணிக்கு! அன்போடு உபசரிப்போர் இருந்தால், அளவுக்குமீறி உண்டால்கூட அதனால் வயிற்றுக்குத் துன்பம் உண்டாவதில்லை. இதனைப் பல நேரங்களில் நான் பார்த்திருக்கிறேன்.

பாரிசிலே பிரெஞ்சுக்காரர்களிடம் உபசரிக்கும் பண்பாடு சிறந்து விளங்கக் கண்டேன். நான் பாரிஸ் சென்ற முதல் நாள் இரவிலே உணவு கொள்வதற்குத் துணைவேந்தர் நெ. து. சு. அவர்களின் துணையோடு ஒரு ஓட்டலுக்குச் சென்றேனல்லவா! அங்கு விதவிதமான பண்டங்கள், வரிசைவரிசையாக, மிகவும் கவர்ச்சிகரமான முறையில் வைக்கப்பட்டிருந்தன. சாப்பிட வருவோர் தமக்குத் தேவையான பண்டங்களைத் தாமே எடுத்து தட்டில் வைத்துக்கொண்டு, ஒரு மேஜை அருகே அமர்ந்து சாப்பிட வேண்டும். இது அங்குள்ள முறை. என் பெருமதிப்பிற்குரிய துணைவேந்தர் அவர்கள், சில பண்டங்களை எனக்காக, தாமே நினைத்து ஒரு தட்டில் எடுத்து வைத்து உண்ணும்படி என் அருகிலிருந்து என்னைத் தூண்டினர். உணவுகொள்ளும் நேரம் எனக்கு

மிகவும் துன்பம் தரக்கூடியது என்பதனை அவர் அறிந்திருக்கவில்லை. அதனால், ஓரளவுதான் என்னைப் பற்றி நிதானித்து எனக்குத் தேவைப்படும் பண்டங்களைத் தேர்ந்தெடுத்தார். பழக்கம் இல்லாத உணவாகையால், அவற்றை உண்ணுவதற்குப் பயந்து, ஒவ்வொன்றிலும் சிறிதளவு சிறிதளவு எடுத்துச் சுவை பார்த்ததோடு, உணவை முடித்துக்கொண்டேன். எனது நிலை கண்டு துணைவேந்தர் பரிதாபப்பட்டார்.

வெறும் ரொட்டியேனும் சாப்பிடுமாறு வற்புறுத்தி, கட்டை போன்றுள்ள ஒரு ரொட்டியைத் தருவித்துக் கொடுத்தார். அதன் உட்பகுதியை மட்டுமே உண்டு ஆறுதலடைந்தேன். எனக்காக எடுக்கப்பட்ட பண்டங்களுக்கு துணைவேந்தர்தான் பணம் கொடுத்தார். உணவு கொள்வது போன்று நான் நடத்திய 'நாடகத்தை'க் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த ஓட்டல்காரர், எனக்காகக் கடைசியாக எடுக்கப்பட்ட ரொட்டிக்குப் பணம் வாங்க மறுத்து விட்டார். 'பாவம்! (என்னைக் காட்டி) அவர் ஒன்றுமே சாப்பிடவில்லையே!' என்று கூறி, என்பால் இரக்கம் காட்டினார்.

பாரிசிலே நான் தங்கியிருந்த 'அப்சர்வேட்டா' என்ற ஓட்டலில், நாள்தோறும் காலையிலே ஒரு ரொட்டியும், ஒரு பெரிய கப் அளவு சூடான பாலும் கொடுப்பது வழக்கம். நான் குளித்து முடிப்பதற்குள் இந்தக் காலை உணவை பணிப் பெண் ஒருவர் என் அறையில் வைத்துவிட்டுப் போய் விடுவார். வழக்கம்போல ரொட்டியின் நடுப்பகுதியையும், கொஞ்சம் பாலையும் உண்டுவிட்டு, நான் வெளியில் சென்று விடுவேன். ரொட்டி உணவு எனக்கு மலச்சிக்கலை ஏற்படுத்திவிடும். இரவு படுக்கைக்குப் போகும் நேரம் தவிர, மற்ற நேரத்தில் நான் பால் குடிப்பதில்லை. குடித்தால் வயிற்றில்

காற்று(Gas) நிறைந்துவிடும். எனக்குள்ள இந்தச் சங்கடம் ஓட்டல் பணிப் பெண்ணுக்குத் தெரியாதல்லவா! நான் ஓட்டலில் குடியேறிய மூன்றும் நாள் பகலில் என்னைச் சந்திப்பதற்கென்றே அந்தப் பணிப்பெண் என் அறைக்கு வந்தார். வந்தவர்,

"நீங்கள் நான் வைத்துவிட்டுப்போகும் பாலையும்—ரொட்டியையும் சாப்பிடுவதில்லையே; ஒரு ஆளுக்குத் தேவைப்படும் அளவுக்குத்தானே நான் கொண்டுவந்து வைக்கிறேன். அதைக் கூடச் சாப்பிடா விட்டால், நீங்கள் உயிர் வாழ்வது எப்படி? இது குளிர் தேசம். இங்கு நிறையச் சாப்பிட்டால்தான் நீங்கள் ஆரோக்கியமாக இருக்க முடியும். நான் கொண்டுவரும் உணவு உங்களுக்குப் பிடிக்கவில்லையானால், வேறு என்ன வேண்டும் சொல்லுங்கள்," என்று கேட்டார். அந்தப் பணிப்பெண் என்பால் காட்டிய பரிவு என் அன்னையாரை நான் நினைத்துக் கொள்ளும்படி செய்தது.

நான் சரியாக உணவு கொள்ள மறுத்த நேரத்திலெல்லாம் என் அன்னையார் இப்படித்தான் எனக்கு அறிவுரை கூறி, நீண்ட சொற்பொழிவே நிகழ்த்திவிடுவார். ஓட்டல் பணிப் பெண்ணுக்கு ஏதோ சமாதானம் சொல்லி அனுப்பி விட்டேன். பிரெஞ்சு மக்களுடைய பண்பாட்டினையே பணிப்பெண் பிரதிபலித்ததாக நான் உணர்கிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி வயிற்றுக்கு மட்டுமென்றி, கண்ணுக்கும் செவிக்குங்கூட விருந்தளிக்கப்பட்டது. 'யூனெஸ்கோ' கட்டிடத்திலுள்ள அழகிய தியேட்டரிலே செல்வி பத்மாவின் நடனம் நடைபெற்றது. இவர், சென்னை திரைப்பட டைரக்டர் திரு. கே. சுப்பிரமணியம் அவர்களின் மகளாவார். உலக நாடுகள் பலவற்றிலே சுற்றுலாச் செய்து, அங்

கெல்லாம் நடனமாடிப் பெரும் புகழ் பெற்றிருக்கிறார். யுனெஸ்கோ தியேட்டரிலே இவருடைய நடனத்தைக் காண மாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகள் அவ்வளவு பேரும் குழுமியிருந்தனர். பிரதிநிதிகள் அல்லாத பாரிஸ் நகரப் பிரமுகர் பலரும் செல்வி பத்மாவின் நடனத்தைக் காண்பதற்கென்றே வந்திருந்தனர். உலகத் தமிழ் மாநாட்டு அரங்கிலே நடனமாடுவது தனக்குப் புதிய அனுபவமாதலால், செல்வி பத்மா தன்னுடைய திறமை முழுவதையும் வெளிப்படுத்தி ஆடி, வந்திருந்தோரைப் பரவசத்திலாழ்த்தினார். யுனெஸ்கோ ஆக்டிங் டைரக்டர் ஜெனரல் நல்ல முறையில் பாராட்டிப் பேசினார். தமிழ் மகளான செல்வி பத்மா உலகப் புகழ்பெற்று வருவதிலே எனக்குத் தனி மகிழ்ச்சி. மகாகவி பாரதியார் இன்று வாழ்ந்திருந்தால் கவிபாடி செல்வி பத்மாவைப் புகழ்ந்திருப்பார்.

பாரிசில் பிரெஞ்சுக் கவிஞர்கள், நாவலாசிரியர்கள், பெரு வீரர்கள் நினைவாலயமாக விளங்கும் டிலாவர் மியூசியத்தைப் பார்வையிட்டேன். அந்த மியூசியம் மிகவும் புனிதமான கோயில்போலவே கருதப்படுகிறது. அங்கு வரும் பார்வையாளர்களை அவரவர் விருப்பம் போல நடந்துகொள்ள அனுமதிப்பதில்லை. குழுவாகத் தான் உள்ளே செல்ல அனுமதிக்கிறார்கள். ஒரு குழுவினர் பார்த்து முடித்த பின்னரே அடுத்த குழுவினர் அனுமதிக்கப்படுகின்றனர். உள்ளே செல்பவர்கள் சந்தடி செய்யக் கூடாதென்பது கட்டளை. அதனால், மியூசியத்திற்குள்ளே நல்ல அமைதி நிலவுகிறது. 'சார்ஜெண்ட்' ஒருவர், மியூசியத்திலுள்ள நினைவுச் சின்னங்களை— அவற்றிற்குரிய வரலாற்றுச் சிறப்புக்களை விவரித்துக் கூறுகிறார். உலகப் புகழ் பெற்ற நாவலாசிரியர் விக்டர் ஹியூகோவின் சமாதி இங்குதான் இருக்கிறது. இன்

னும் பலரது சமாதிகளையும் இங்கு காண முடிகிறது. அவர்கள் பயன்படுத்திய பொருள்கள்கூட இங்கு வைக்கப்பட்டுள்ளன. சுமார் முக்கால் மணி நேரம் இந்த மியூசியத்தைச் சுற்றிப் பார்த்து, 'சார்ஜெண்ட்' தந்த விளக்கத்தைக் கேட்டுவிட்டுத் திரும்பியபோது, என் மனத்தில் என்னென்னவோ நினைவுகள் எழுந்தன. தமிழ் நாட்டு மக்களுக்குத் தமிழிடத்துத் தளராத பற்று இருந்தால், பாரிசில் நான் கண்ட மியூசியத்தைப் போன்று மாவட்டந்தோறும் மியூசியங்களைப் படைத்திருக்கலாமே! வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்று வரை தமிழகத்தில் தோன்றிய கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் மாவீரர்களுக்கும் கணக்கேது!

என்ன செய்வது? நம்மவருக்கு 'தமிழர்' என்னும் இன உணர்வு இல்லை. சிறப்பு மிக்க ஒருவர் நம் சிந்தனைக்கு வந்தால், அடுத்த கணமே 'அவருடைய சாதி என்ன? குலம் என்ன? கோத்திரம் என்ன?' என்ற தடை விைனாக்களும் நம் உள்ளத்தில் தோன்றி அவருக்குஅஞ்சலி செய்யவிடாமல் தடுத்து விடுகின்றன. ஒரு ஊரிலே குறிப்பிட்ட ஒரு சாதியினர் செல்வாக்குப் பெற்றுவிடுவார்களானால், மற்ற சாதிகளில் தோன்றும் மூதறிஞர்களைத் திரை போட்டு மறைத்து விடுகின்றனர். இந்த சாதிக் கொடுமையால் உலகம் புகழத்தக்க பெருமைக்குரிய பலர் புதையுண்டு போனார்கள். தமிழரசுக் கழகம் தோன்றிய பின்னரே, கப்பலோட்டிய தமிழர், கட்டபொம்மன், சிலப்பதிகாரக் கண்ணகி போன்றோருக்குப் போடப்பட்டிருந்த திரை கிழிக்கப்பட்டு, அவர்களை யெல்லாம் மக்கள் நினைத்துப் பார்க்க முடிந்தது—பாராட்டவும் முடிகிறது.

பிரெஞ்சு நாட்டிலே சாதிகள் இல்லை; வருணங்கள் இல்லை. அதனால், உயர் சாதியாரின்—உயர் வருணத்

தாரின் ஆதிக்கக் கொடுமைகள் இல்லை பிரெஞ்சு நாட்டில் தோன்றிய பெருமக்கள் எல்லோருக்கும் அங்கு சிறப்புச் செய்யப்படுகின்றது. அந்த வகையில் அமைந்ததுதான் பாரிசில் நான் கண்ட டிலாவர் மியூசியம். சென்னை நகரில் எங்கோ—எப்போதோ இறந்துபோன மிருகங்களுக்கும் மியூசியங்கள் உண்டு. ஆனால், மறைந்து போன மாமேதைகளின் நினைவாலயமாக ஒரு மியூசியம் கூட இல்லை.

"டமிலியன்" ஆகி விட்டவர்களை என்று "தமிழர்" ஆக்க முடியுமோ, அன்றுதான் தமிழகத்தை 'தமிழன்' என்ற இன உணர்வு படைத்தோர் நிரந்தரமாக ஆள முடியும். ஆம்; பாரிசிலுள்ள மூதறிஞர்கள் நினைவாலயத்தைப் பார்த்த பின்னர் இந்த எண்ணம்தான் எனக்கு ஏற்பட்டது. டாக்டர் மு. வரதராசனார் அப்போது என்னுடன் இருந்தார். அவரிடம் எனது எண்ணத்தைக் கூறி ஆறுதலடைந்தேன்.

பாரிஸில் நான் பட்ட பாடு!

ஜூலை 15ஆம் நாள் அன்று பாரிசில் தொடங்கிய மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெற்றபின், 18ஆம் நாள் முடிவுற்றது. இறுதிநாள் நடவடிக்கையிலே நான் கலந்து கொள்ள இயலவில்லை. காரணம், அன்று முற்பகலில் நான் மாஸ்கோ புறப்பட வேண்டியிருந்ததுதான். சோவியத் சுற்றுலாவை இடையில் நிறுத்தி வைத்துவிட்டுத்தான் பாரிஸ் மாநாட்டுக்கு வந்தேனென்று நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். சோவியத்தில் மேலும் நான்கு நாட்கள்—ஜூலை 19 முதல் 22வரை-சுற்றுலா இருந்தது. லெனின்கிராடைப் பார்த்தாக வேண்டுமென்ற பேராசையால், இடையில் நிறுத்திவைக்கப்பட்ட சோவியத் சுற்றுலாவைத் தொடர்ந்து நடத்தப் பாரிசி லிருந்து மாஸ்கோ திரும்ப முயன்றேன்.

எனது திட்டப்படி ஜூலை 18ஆம் தேதி பகல் பாரிசி லிருந்து விமானம் மூலம் பயணமாகி, மாலையில் மாஸ்கோவை அடைந்து, அன்றிரவே இரயில் மூலம் லெனின்கிராட் செல்ல வேண்டும். லெனின்கிராட் நகரிலே ஜூலை 19, 20 ஆகிய இரண்டு நாட்கள் தங்கி யிருக்கவும், அங்குள்ள பல்கலைக் கழகத்தில் தமிழ் பயிலும் சோவியத் மாணவர்களைச் சந்திக்கவும், அவர் களிடையே தமிழில் சொற்பொழிவாற்றவும், மற்றும் லெனின்கிராடிலுள்ள பல்வேறு அமைப்புகளின் நிர்வாகி களைச் சந்தித்து உரையாடவும் முன்னரே திட்டமிடப்

பட்டிருந்தது. பின்னர் ஜூலை 20ஆம் தேதி இரவு ஸ்டாலின் கிராடிலிருந்து இரயிலில் புறப்பட்டு, மறுநாள் காலை மாஸ்கோவையடைந்து, அங்கு இரண்டு நாட்கள் தங்கி விட்டு, ஜூலை 22ஆம் தேதி மாலை எங்கள் குழுவுக்கு நடத்தப்படும் பிரிவுபசார விருந்திலும் பங்கு கொண்டு, அன்றிரவே விமானமூலம் தாயகம் புறப்படத் திட்ட மிடப்பட்டிருந்தது.

நான் மாஸ்கோவிலிருந்து ஜூலை 14-ம்தேதி பாரிசுக் குத் திரும்பிய பின்னர், இந்தியாவிலிருந்து என்னுடன் சோவியத்துக்கு வந்திருந்த மற்ற நண்பர்கள், தங்கள் சுற்றுலாவைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந் தார்கள். அவர்கள் ஜூலை 19-ம் தேதி லெனின்கிராடிலே என்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பாரிசில் ஜூலை 18ஆம்தேதியன்று காலை நான் தங்கி யிருந்த ஓட்டலிலிருந்து வெளியேறி, என்னுடைய ஓட்டல் சகாவாயிருந்த சென்னை பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டேன். பாரிசை விட்டுப் புறப்படுமுன் உலகத் தமிழ் மாநாட்டின் அன்றைய காலை நடவடிக்கைகளையும் சிறிது நேரம் கவனித்து விட்டு விமான நிலையத்திற்குப் பயணமானேன். விமான நிலையத்திலே என்னை வழியனுப்பி வைக்கத் துணைக்கு ஒருவரை அனுப்புமாறு உலகத்தமிழ் மாநாட்டின் நிர்வாகிகளை வேண்டிக் கொண்டேன். எனது வேண்டு கோள் பலனளிக்கவில்லை. பின்னர், நானாக முயற்சி எடுத்து பாரிசில் உள்ள பாண்டிச்சேரி தமிழரான ராபர்ட் செயின்ட் ஜான் என்பவருடைய துணையைப் பெற்று விமான நிலையத்துக்குச் சென்றேன்.

கால் நூற்றாண்டு காலத்திற்கு மேலாக என்னை வருத்தி வரும் குடற்புண் காரணமாக மலச்சிக்கலும்'

வயிற்றுப் போக்கும் மாறி மாறி வருவது வழக்கமாகி விட்டது. சில நாட்களில் வாந்தியும் குமட்டலும்கூட ஏற்படுவதுண்டு. இந்த நாட்களில் வாழ்க்கையிலேயே வெறுப்பேற்பட்டுவிடும். குடற்புண் கடுமையாகிவிடும் நாட்களிலே, வாந்தியிலோ, மலத்திலோ இரத்தம் வெளிப்படுவதுமுண்டு. அப்படி ஏற்படும்போது மரண பயம் என்னைப் பிடித்துக் கொள்ளும்.

நான் மாஸ்கோ புறப்பட்டபோதே எனது நோயைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பொன்றை சென்னையில் என்னைக் கவனித்துவரும் டாக்டர் பி. கிருஷ்ணன் அவர்கள் என்னிடம் கொடுத்திருந்தார். குடற்புண் சம்பந்தமாக அண்மையில் எடுக்கப்பட்ட 'எக்ஸ்ரே' படங்களையும், தாம் தயாரித்துத் தந்த மருத்துவக் குறிப்பையும் நான் என்னுடனேயே கொண்டு செல்ல வேண்டுமென்றும் டாக்டர் கிருஷ்ணன் எனக்கு அறிவுரை கூறியிருந்தார். ஆம்; சோவியத் சுற்றுலாவின் போது திடீரென குடற்புண் காரணமாக எனக்கு அபாயம் நேர்ந்து, நான் ஸ்மரணை யற்றுவிட்டால் எனது நோய்பற்றிய வரலாற்றையும் எக்ஸ்ரே படங்களையும் சோவியத் மருத்துவர்கள் தெரிந்து கொள்ளுவதற்காகவே டாக்டர் கிருஷ்ணன் இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தார்.

மற்றும், சோவியத் சுற்றுலா முடிந்ததும் மாஸ்கோவில் சில நாட்கள் தங்கி, ருஷ்ய மருத்துவர்களிடம் எனது குடற்புண்ணுக்கு நான் சிகிச்சை பெற வேண்டுமென்பதும் என்பால் அன்புள்ள சென்னை நண்பர்களின் ஆவலாக இருந்தது. முடிந்தால் அவர்களுடைய ஆவலை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகவும் மருத்துவர் குறிப்பையும், எக்ஸ்ரே படங்களையும் நான் கையோடு கொண்டு சென்றிருந்தேன். மாஸ்

கோவிலிருந்த நாட்களிலே அங்கு குடற்புண்ணுக்குச் சிகிச்சை பெறுவதற்கான முன்னேற்பாடு எதையும் நான் செய்துகொள்ளவில்லை. எனது சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்த சோவியத் ஆசியாப்பிரிக்க உறவுக் குழுவினரிடம் கூட இதைப்பற்றி நான் தெரிவிக்கவில்லை.

இதற்கு என் மனச்சாட்சி ரீதியான ஒரு தடையே காரணமாகும். குடற்புண் காரணமாக உயிருக்கு அபாயம் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. ஆயினும், அது நம் நாட்டு மருத்துவர்களால் தீர்க்க முடியாததன்று. அறுவை சிகிச்சையின் மூலம் குடற்புண்ணை ஆற்றி விடலாமென்று சென்னையில் டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் அவர்களும், அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர் ஏ. எஸ். இராமகிருஷ்ணன் அவர்களும் எனக்கு ஆலோசனை கூறியிருந்தனர். தலைவர் ராஜாஜியும் நான் அவரைச் சந்திக்கும்போதெல்லாம் அறுவை சிகிச்சையை நான் தள்ளிப் போட்டுக்கொண்டு வருவது பற்றி ஆயாசப்பட்டுக்கொள்ளுவார்.

மாஸ்கோ புறப்படவிருந்த நாளில், திடீரென்று வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. மலத்தில் நான் பயப்படும் அளவுக்கு இரத்தமும் வெளிப்பட்டது. அந்த நிலையில் வழக்கம்போல என்மனம் குழப்பமடைந்தது. மரண பயம் ஏற்படவில்லை என்றாலும், இரத்தப் போக்கை உடனடியாக நிறுத்தியாக வேண்டுமென்ற கவலை ஏற்பட்டது.

பாரிஸ் நண்பர் ஒருவரிடம் எனக்கேற்பட்டுள்ள துன்பத்தை எடுத்துச் சொல்லி சிகிச்சைக்கு டாக்டரைத் தருவிக்குமாறு அவரைக் கேட்டுக் கொண்டேன். அவர், பாரிசிலே டாக்டர் கிடைப்பது அவ்வளவு எளிதல்ல என்று சொன்னார். ஓட்டலில் என்னுடன் தங்கியிருந்த துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு

அவர்களிடமோ, உலகத் தமிழ் மாநாட்டுப் பிரதி நிதிகள் யாரிடமுமோ எனது நோய்பற்றி எதுவும் கூறுமலேயே நான் துணிவுடன் விமான நிலையத்துக்குச் சென்றேன்.

சோவியத் அரசாங்கத்தின் விருந்தினனாக நான் அந்த நாட்டில் சுற்றுலாச் செய்வதால், நான் மாஸ்கோ சென்று விட்டால் எனது வயிற்றுப் பிணியைத் தீர்க்க அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கையால், விமானத்தில் பயணம் செய்யும் கால அளவுவரை நோயின் கொடுமையைச் சகித்துக்கொள்ள முடிவுசெய்து பாரிஸ் விமான நிலயத்திற்குச் சென்று விட்டேன். வயிற்று நோயோடு போராடிக் கொண்டு அயல்நாட்டுப் பயணிக்குரிய சகல சடங்குகளையும் எனக்குத் துணைவந்த பாண்டிச்சேரித் தமிழரின் உதவி யோடு ஒருவாறு முடித்துக் கொண்டேன். ஆனுல், மாஸ்கோ செல்ல வேண்டிய விமானம், அரைமணி நேரம் தாமதித்து வரும் என்று முதலில் அறிவிக்கப்பட் டது. அதன்பின் ஒருமணிநேரம் தாமதம் என்று அறிவிக் சப்பட்டது. இறுதியில் 'மூன்று மணி நேரம் தாமதித்து மாஸ்கோ விமானம் புறப்படும்' என்று அறிவிக்கப் பட்டது. குடற்பிணி காரணமாக மனக்குழப்பம் அடைந்திருந்த நான் விமானப்பயணம் தாமதமானது காரணமாக மேலும் குழப்பமடைந்தேன்.

விமானநிலைய அதிகாரிகள் அறிவித்தபடி மூன்று மணிநேர தாமதத்திற்குபின் விமானம் புறப்பட்டாலும் அன்றிரவு மாஸ்கோவிலிருந்து லெனின்கிராட் பயணம் செய்வது சாத்தியமாகுமா என்ற ஐயப்பாடு எனக்கு ஏற்பட்டது. இதனுல், மாஸ்கோ பயணத்தை ரத்து செய்துவிட்டு, பாரிஸ் நகருக்குத் திரும்பிவிட்டேன்.

ஆம்; பாரிசிலிருந்து மாஸ்கோ வழியாகத் தாயகம் திரும்பும் எண்ணத்தைக் கைவிட்டு பாரிசிலிருந்து லண்டன் சென்று அங்கு சில நாட்கள் தங்கியபின் ரோம் வழியாகத் தாயகம் திரும்பும் வகையில் எனது பயணத் திட்டத்தில் மாறுதல் செய்தேன்.

விமான நிலையத்தி லிருந்து நகருக்குத் திரும்பிய பின், உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் டி பிரான்ஸ் கல்லூரிக்குச் சென்றேன். நான் செல்வதற்கு முன்பு மாநாடு முடிந்து, பிரதிநிதிகளிலே பலர் எங்கெங்கோ சென்று விட்டார்கள். சிலரை மட்டுமே அங்கு நான் பார்க்க முடிந்தது. அவர்களில் அப்போது தமிழக நிதி அமைச்சராக இருந்த மாண்புமிகு கே. ஏ. மதியழகன் முக்கியமானவராவார்.

நான் லண்டன் வழியாக தாயகம் திரும்பத் திட்ட மிட்டுவிட்டதால், விமானப் பயணத்துக்கு எனக்கு டிக்கட் எடுத்துக் கொடுக்கும் பொறுப்பை தமிழக அரசு ஏற்க வேண்டியிருந்தது. பாரிசிலிருந்து நான் லண்ட னுக்கு வந்துவிட்டால், அதற்குள் தான் லண்டன் சென்று விடுவதாகவும், அங்கே விமானப் பயணத்திற்கு டிக்கட் எடுக்க ஏற்பாடு செய்து தருவதாகவும் நிதியமைச்சர் எனக்கு உறுதி கூறினர். உலகத் தமிழ் மாநாட்டுப் பிரதிநிதிகளில் நானும் ஒருவன் என்ற முறையில் எனது பயணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கு உண்டு என்பதை இங்கு நினைப்பூட்டுகிறேன்.

பாரிசிலிருந்து லண்டன் செல்வதற்கு டிக்கட் எடுக்க என்னிடம் பணம் இருந்தது. ஆகவே, அது குறித்து நான் கவலைப்படவில்லை. ஆனல், லண்டனுக்குள் நுழை வதற்கு பிரிட்டிஷ் அரசின் அனுமதி தேவைப்பட்டது. நான் லண்டனுக்குச் செல்வது பற்றி முன்கூட்டித் திட்ட

மிடாததால், நுழைவுச் சீட்டு எடுக்க நான் முயற்சிக்க வில்லை. ஜூலை 18 ஆம் தேதி பகல்தான் எனது பயணத் திட்டத்தில் மாறுதல் செய்தேன். மறுநாள் சனிக் கிழமையும், அதற்கடுத்த நாளான ஞாயிற்றுக் கிழமை யும் விடுமுறை நாட்கள். எனவே, பிரிட்டிஷ் தூதுவ ரகத்தில் 'நுழைவுச் சீட்டு' பெறுவதற்கு வாய்ப்பில்லை. அந்த இரண்டு நாட்களிலும் பாரிசிலேயே தங்கிவிட்டு, திங்கட்கிழமை பிரிட்டிஷ் தூதுவரகத்தை அணுக முடிவு செய்தேன்.

பாரிசில் ஏற்கனவே நான் தங்கியிருந்த ஓட்டல் அறையைக் காலி செய்து விட்டேனாதலால், வேறு ஓட்டலில் அறை பிடிக்க வேண்டிய அவசியம் எனக் கேற்பட்டது. அங்கேயும் தமிழரின் துணையின்றி தனித் திருக்க வேண்டும். நல்ல வேளையாக, சென்னை பெரிய மருத்துவ மனையில் பணிபுரியும் டாக்டர் ஈ. மீனாட்சி சுந்தரம், லண்டனிலிருந்து உலகத் தமிழ் மாநாட்டுக் காக பாரிசுக்கு வந்திருந்தார்.

விமான நிலையத்திலிருந்து நான் பாரிஸ் திரும்பிய தும் வயிற்றுப் போக்குக்கு சிகிச்சை பெற வேண்டு மென்ற ஆர்வத்துடன் டாக்டர் மீனாட்சிசுந்தரம் அவர் களைத் தேடினேன். சென்னை நகரிலே நீண்ட காலமாக எனக்குச் சிகிச்சை புரிந்து வரும் மருத்துவர்களிலே அவரும் ஒருவராதலால், நான் நோயுற்ற நேரத்தில்—டாக்டர்கள் கிடைப்பது அரிதாக உள்ள பாரிஸ் நகரிலே—டாக்டர் ஈ. மீனாட்சி சுந்தரம் அவர்கள் பாரிசில் இருந்தது எனக்கு ஆறுதலைத் தந்தது. ஆனால், விமான நிலையத்திலிருந்து பாரிசில் மாநாடு நடைபெறும் டி பிரான்ஸ் கல்லூரிக்கு நான் திரும்புவதற்குள் மாநாடு முடிந்துவிட்ட காரணத்தால், டாக்டர் மீனாட்சிசுந்தரம் நகரைச் சுற்றிப் பார்க்கப் போய்விட்டார். ஆம்; காலை

5 மணி முதல் வயிற்றுப்போக்கால் தொல்லைப்பட்டு வருகிற நான் மாலை 5 மணி வரை சிகிச்சை பெற வழி யில்லை.

நல்ல வேளையாக, டாக்டர் மீனாட்சி சுந்தரம் அவர் கள் வந்திருந்த பஸ்ஸையும், அதிலிருநத அவருடைய சகபிரயாணிகளையும் கண்டு பிடித்துவிட்டேன். அவர் களிலே சென்னை மேரி ராணி கல்லூரியின் முதல்வராக இருந்து ஓய்வு பெற்ற செல்வி. ஐராவதி அம்மையார் எனது நிலையை அறிந்து எனக்கு உதவி புரிய முன் வந் தார். யார் யாரையோ, எங்கு எங்கெல்லாமோ அனுப்பி டாக்டர் மீனாட்சி சுந்தரத்தைத் தேடிப் பிடித்துவர அவர் முயற்சி எடுத்தார். அவர் கிடைக்கவில்லை. இறுதி யாக, "நாங்கள் தங்கியிருக்கும் முகாம் பாரிசிலிருந்து பதினைந்து மைல் தொலைவிலிருக்கிறது. இரவு எத்தனை மணியானாலும் டாக்டர் மீனாட்சி சுந்தரம் அங்கே வந்து விடுவார். நீங்கள் எங்கள் பஸ்ஸில் ஏறிக்கொண்டு எங்கள் முகாமுக்கு வந்துவிடுங்கள்" என்றார் செல்வி ஐராவதி.

முகாமுக்குச் செல்லு முன் பஸ்ஸிலிருந்து கொண்டே நகர் முழுவதையும் சுற்றி இரவு விளக்கொளியிலே பாரிஸ் நகரின் அழகைப் பார்க்க விரும்பினர் செல்வி ஐராவதியும் அவருடைய சக பிரயாணிகளும். நகரைச் சுற்றிப் பார்க்கும் அளவுக்கு எனது மனதில் தெம்பில்லை என்றாலும், அவர்களை விட்டுப்பிரிந்து தனித்திருக்க நான் விரும்பாததலால், அவர்களுடனேயே சென் றேன். பஸ்ஸிலிருந்தவர்களிலே மிகப் பெரும்பாலோர் உயர்தரக் கல்வி கற்ற பட்டதாரிகள். அவர்களெல்லாம் "இரவு விடுதி"க்குச் செல்ல ஏற்கனவே திட்டமிட்டிருந் தனர். அந்தத் திட்டப்படி தாங்கள் செல்லும் விடுதிக்கு என்னையும் அழைத்தனர்.

பாரிசில் உள்ள இரவு விடுதிகள் பற்றி அனுபவ ரீதியாக நான் எதுவும் சொல்வதற்கில்லை. ஆயினும்; அங்கே அழகிகள் நடனம் நடக்கும் என்றும்; அவர்கள் அநேகமாக நிர்வாணமாகவே நடனமாடுவார்கள் என்றும் கேள்விப்பட்டேன். அழகிகள் நடனமாடும் மேடை பொறியியல் திறமையை வெளிப்படுத்தும் வகையில் அற்புதமாக அமைந்திருக்கு மென்றும், மேடையோடு நடனமாடும் நங்கையும் காண்பேரின் அருகே அடிக்கடி வந்துபோவா ளென்றும் நண்பர்கள் சொன்ஞர்கள், இந்த விவரங்களைக் கேட்ட பின்னர் இரவு விடுதிக்குச் செல்ல நான் விரும்பவில்லை. மேடை அமைந்துள்ள அற்புதத்தைக் காணவேனும் நான் இரவு விடுதிக்கு வரவேண்டுமென்று லண்டன் நண்பர்கள் என்னை வருந்தி அழைத்தார்கள். இதற்காகப் பஸ்ஸிலே சுமார் அரைமணி நேரம் பெரிய விவாதமே நடந்து விட்டது. செல்வி. ஐராவதியும், யாழ்ப்பாணத்தவரான திரு. சபாபதிப் பிள்ளை தம்பதிகளும் என் சார்பில் வாதித்தார்கள். அவர்கள் மூவரும் என்னைப் போன்றே வயதானவர்கள். ஆனல், பஸ்ஸில் இருந்த இளைஞர்களில் எவரும் இரவு விடுதிக்குச் செல்வதில் கிடைக்கும் இன்பத்தை எனக்காகத் தியாகம் செய்யத் தயாராக இல்லை.

இதனை அறிந்ததும் பஸ்ஸை அவர்கள் பொறுப்பிலேயே விட்டு விட்டு யாழ்ப்பாணத் தம்பதிகளும், செல்வி. ஐவராவதி அம்மாளும் ஒரு டாக்சியைப் பிடித்து, அதில் என்னையும் அழைத்துக் கொண்டு முகாமை அடைந்தனர். அதற்குள் நான் நடமாடும் சக்தியையே இழந்துவிட்டேன். சிகிச்சை ஏதும் இல்லாமலே பட்டினி காரணமாக—வயிற்றுப் போக்கும், இரத்தப் போக்கும் பெருமளவுக்குக் குறைந்து விட்டதென்று

லும், ஒரு பகல் முழுவதும் பட்டினியிருந்ததால் நான் மிகவும் சோர்ந்து விட்டேன். யாழ்ப்பாணத் தம்பதி களும், செல்வி ஐராவதி அம்மாளும் என்பால் பேரன்பு காட்டி எனக்கு உதவி புரிய முன் வந்திலலையானல், பாரிஸ் நகரிலே எனது நிலைமை பரிதாபகரமானதாக இருந்திருக்கும். ஆம்; நோய் காரணமாக ஏற்பட்ட மனக் குழப்பத்தால் சோவியத் சுற்றுலாவை நான் கைவிட்டது எனக்கு நானே துன்பமிழைத்துக்கொள்வ தாக முடிந்தது.

நண்பர்களோ, உறவினர்களோ இல்லாத ஒரு அயல் நாட்டிலே, அந்த நாட்டு மொழியிலே பயிற்சி இல்லாத ஒருவன் கடுமையாக நோய்வாய்ப்பட்டு விடுவானானல், அவனது நிலைமை பரிதாபத்திற்குரியதுதானே! இத்த னைக்கும் காரணம், என்னோடு பிறந்து—என்னோடு வளர்ந்து—எனக்கே பகையாகிவிட்ட எனது வயிறு தான்.

பாரிஸ் நகருக்குப் பதினைந்து மைல் தொலைவி லுள்ள முகாமுக்குச் சென்றதும், செல்வி ஐராவதியும் திரு. சபாபதிப் பிள்ளை அவர்களின் மனைவியும் என்மீது பேரன்பு காட்டி, எனக்கெனப் பத்திய உணவு தயாரித்து இரவு பதினொரு மணிக்கு என்னை உண்ண வைத்தனர். அந்த உணவு வயிற்று வலியையும், வயிற்றுப் போக்கை யும் மிகுத்து விடுமோ என்ற அச்சத்தால் நான் உண்ண மறுத்தேன். ஆனல், அந்தத் தாய்மார்கள் என்னைத் தங்கள் மகன்போலக் கருதி, எனக்கு ஆறுதல் மொழிகள் கூறி, உண்ணும்படி செய்துவிட்டனர்.

சரியாக இரவு 12 மணிக்கு, நான் யாரைத் தேடிக் கொண்டு பாரிஸ் புறநகர் முகாமுக்குப் போனேனோ, அவர்—டாக்டர் ஈ. மீனுட்சி சுந்தரம்—முகாமுக்கு வந்து சேர்ந்தார். உறங்கிக் கொண்டிருந்த என்னை எழுப்பி,

என் உடலைப் பரிசோதனை செய்து பார்த்து, குடற் புண்ணில் அபாயகரமான மாறுதல் எதுவும் ஏற்படவில்லை என்றும், சாதாரண இரத்தக் கசிவுதான் என்றும் ஆறுதல் கூறி என்னைத் தேற்றினர். உடனே எனக்குச் சிகிச்சை தர அவர் கைவசம் மருந்து எதுவும் இல்லை. உடனடியாக மருந்து பெறுவதும் அவரால் இயலவில்லை. எப்படியோ இரவு கழிந்து மறுநாள் காலை பகற்பொழுது உதயமானது.

சரியாக காலை 8 மணிக்கு மிகவும் சிரமப்பட்டு ஒரு டாக்சியைத் தேடிப் பிடித்து என்னைப் பாரிஸ் நகருக்குள் அழைத்துச் சென்றுர் டாக்டர் மீனுட்சி சுந்தரம். அங்கு சென்று பல மருந்துக் கடைகளை அணுகி தேவைப்படும் மருந்தை வாங்க அவர் முயன்றும் முடியவில்லை. டாக்டர் மீனுட்சி சுந்தரம் இந்திய டாக்டராதலால் அவர் எழுதிய மருந்துச் சீட்டுக்கு மருந்து தர கடைக்காரர்கள் மறுத்தனர். பாரிசிலே சாதாரண தலைவலி மருந்துகூட உள் நாட்டு டாக்டரின் சீட்டு (Prescription) இல்லாமல் கடைக்காரர்கள் கொடுக்கமாட்டார்களாம். டாக்டர் மீனுட்சி சுந்தரம் பிரிட்டனில் சிறப்புக் கல்வி பயின்று கொண்டிருந்தாராதலால், பிரிட்டிஷ் டாக்டருக்குள்ள உரிமை அவருக்கும் உண்டு. அப்படியிருந்தும், அந்த உரிமையைக் கூட ஒப்புக்கொள்ள மறுத்து விட்டனர் பாரிஸ் மருந்துக் கடைக்காரர்கள்.

இப்படி, மருந்து விற்கும் கடை கடையாக ஏறி இறங்கி டாக்டரும் நானும் அலைந்து கொண்டிருக்கையில், பாரிஸ் இந்தியத் தூதுவரகத்தின் அதிகாரியான திரு. ஹரிஹரன், வீதியிலே எங்கள் எதிரே நடந்து வந்து கொண்டிருந்தார். நான் முதன் முதலாக பாரிஸ் விமான நிலையத்தை அடைந்தபோது, என்னை வரவேற்க யாரேனும் வந்திருக்கிறுர்களா என நான்

மிகுந்த ஆர்வத்துடன் தேடியபோது, அவர் என் எதிரே தோன்றி எனக்கு ஆறுதலளித்தார் என்று முன்பே கூறினேன். அதே நண்பரை இப்போதும் நான் எதிர் பாராத விதமாக வீதியிலே சந்திக்க நேர்ந்தது எனக்குப் பேரானந்தத்தைத் தந்தது.

அவரிடம் நாங்கள் மருந்து தேடி அலைவதைக் கூறினோம். எனக்கு நேர்ந்த இன்னல் கேட்டு அவர் துடித்துப்போய்விட்டார். ஒரு மருந்தகத்திற்கு அழைத்துச் சென்று, இந்தியத் தூதுவரகத்தின் அதிகாரி என்ற செல்வாக்கைப் பயன்படுத்தி எனக்கு மருந்து வாங்கிக் கொடுத்தார். அந்த இடத்திலேயே டாக்டர் மீனாட்சி சுந்தரம் அந்த மருந்தை நான் உண்ணும்படி செய்தார். 28 மணி நேரம் வரை சிகிச்சையே இல்லாமல் அலைந்த பின்னர் அந்த மருந்தை உண்டேன் சில மணி நேரத்திற்குப் பின்பு வயிற்றுப் பிணி அடியோடு மறைந்தது.

பாரிஸ் நகரில் மிகவும் குறைந்த கட்டணத்தில் அறை கிடைக்கக் கூடிய ஓட்டல் ஒன்றைத் தேடிப் பிடித்து அதிலே நானும் டாக்டர் மீனாட்சி சுந்தரமும் ஐந்தாவது மாடியில் குடியேறினோம். லிப்டில்லாத ஓட்டலாதலால், ஏற்கனவே ஆவி தளரும் நிலையில் அலுத்துப் போயிருந்த நான் ஐந்து மாடிகளையும் நடந்தே கடக்க வேண்டியிருந்தது. மூன்ருவது மாடியில் மூச்சு திணறிப்போய் படிக்கட்டிலே சிறிது நேரம் நின்று விட்டு அப்புறம் மேலேயுள்ள படிகளைக் கடந்து எனது அறைக்குச் சென்றேன்.

டாக்டர் மீனாட்சிசுந்தரம் பாரிஸ் மாநாடு முடிந்த மறுநாள் காலை லண்டன் திரும்புவதாக இருந்தார். என்னையும் லண்டனுக்கு அழைத்துச் செல்லும் எண்ணத்துடன்தான் அவர் பாரிஸ் வந்திருந்தார். ஆனால்,

லண்டன் செல்ல எனக்கு நுழைவு சீட்டு தேவைப் பட்டதாலும், சனி, ஞாயிற்றுக்கிழமைகள் ஓய்வு நாட்க ளாதலாலும், திங்கட்கிழமையன்று எனக்கு அனுமதிச் சீட்டு கிடைக்கும்வரை மூன்று நாட்கள் எனக்குத் துணை யாக என்னுடன் பாரிசிலேயே தங்கியிருக்க முடிவு செய்தார்.

பாரிஸ் நகரின் பெரும் புகழுக்குக் காரணமான 'எப்பீல்' என்ற இரும்புக் கோபுரத்தின் உச்சியிலேறி நகரம் முழுவதையும் பார்க்க வேண்டுமென்று நான் ஆசைப்பட்டேன். அந்தக் கோபுரத்தின் மேலே சிற்றுண் டிச் சாலையும் இருக்கிறது. அங்கு போய் தேநீர் சாப்பிடு வதிலே ஒரு ஆனந்தமிருக்குமாம்! உடல் நலிவுற்றிருந் தாலும் கீழிருந்து அந்தக் கோபுரத்தின் உச்சிக்குச் செல்ல 'லிப்ட்' இருக்கிறது என்று தெரிந்ததால்; என்னுடைய டாக்டரின் துணையைப் பெற்று கோபுரத் தைக் காண ஆவலுடன் சென்றேன். இந்தக் கோபுரம் 1889-ல் நடைபெற்ற பாரிஸ் பொருட் காட்சியின்போது அலெக்சாந்தரே குஸ்தால் எப்பீல் என்ற பிரெஞ்சு என்ஜினீயரால் கட்டப்பட்டது. முழுவதும் இரும்பினு லேயே கட்டப்பட்ட இந்தக் கோபுரத்தின் உயரம், 955 அடி. நிறை, சுமார் ஏழாயிரம் டன்.

இந்தக் கோபுரத்தைப் பற்றி காந்தி அடிகள் செய் துள்ள வருணனையைப் படிப்போம்:

> "எப்பீல் கோபுரம் இன்று எவ்விதம் பயன்படு கிறது என்பது எனக்குத் தெரியாது. ஆனால், அதைக் குறித்துப் பலர் குறை கூறினர் என்றும், பலர் போற்றினர் என்றும் அப்பொழுது அறிந் தேன். அதைக் குறை கூறியவர்களில் முக்கிய மானவர் உலகப் புகழ்பெற்ற ருஷ்ய எழுத்தாள ரான லியோ டால்ஸ்டாய்.

"எப்பீல் கோபுரம் மனிதன் செய்யும் தவறுக்கு ஒரு சின்னமேயன்றி, அவனுடைய அறிவுக்குச் சின்னமல்லவென்று அவர் கூறினார். மதிமயக்கத்தில் மனிதன் படைப்பவைகளில் ஒன்றே எப்பீல் கோபுரம் என்றும் டால்ஸ்டாய் கூறினார். எப்பீல் கோபுரத்தில் கலைத்திறன் எதுவும் இல்லை. இதைப் பார்ப்பதற்கு ஏராளமான மக்கள் கூடினர். இது புதுமையாகவும், இணையற்றவகையில் பெரிதாகவும் இருந்ததால், மக்கள் அதன்மேல் ஏறியும் பார்த்தனர். அதை ஒரு விளையாட்டுப் பொம்மை என்றே சொல்லலாம். நாம் குழந்தைகளாக இருந்து கொண்டிருக்கும் வரையில் பொம்மைகள் நமக்குக் கவர்ச்சியாகவே இருக்கும். விளையாட்டுப் பொருள்களைக் கண்டு மயங்கும் குழந்தைகளே நாம் எல்லோரும் என்ற உண்மைகளை அந்தக் கோபுரம் நன்றாக எடுத்துக் காட்டுவதாக இருந்தது. அதுவே எப்பீல் கோபுரத்தினால் ஏற்பட்ட பயன் என்றும் சொல்லிக் கொள்ளலாம்."

[—காந்தி நூல்கள்; தொகுப்பு-3; பக். 114—115]

காந்தியடிகளின் இந்த வருணனையை நான் பாரிசிலிருந்து திரும்பிய பிறகுதான் படித்தேன். எப்பீல் கோபுரத்தின் அருகே சென்று அதனைப் பார்த்தபோது என் உள்ளமும் காந்தியடிகள் வெளியிட்ட கருத்தையே கொண்டது. கோபுரத்தின் மேலே ஏற வேண்டுமென்ற ஆர்வம் எனக்கு ஏற்படவில்லை. ஏராளமான நபர்கள்—குடும்பம் குடும்பமாக கோபுரத்தின் மீது ஏறுவதும் இறங்குவதுமாக இருந்த காட்சி விளையாட்டுத்தனமாகத்தான் எனக்குப் பட்டது. நான் அங்கு சென்றபோது கடுமையான குளிர் காற்றும் மழைத் தூரலும் இருந்தமையால், என்னுடன் வந்த டாக்ட

ருக்கு அவற்றைக் காரணங் காட்டி, கோபுரத்தின் மீது ஏறுமலேயே ஓட்டலுக்குத் திரும்பினேன். இந்தியாவில்–குறிப்பாக, வட இந்தியாவில் தாஜ் மஹால் கட்டிடத்தைக் காட்டும் படத்திற்கும், பதுமைக்கும் நல்ல மதிப்பிருப்பதுபோல, பிரெஞ்சு நாட்டிலும் எப்பீல் கோபுரப் படத்திற்கும் பதுமைக்கும் நல்ல மதிப்பிருக்கிறது. அவை ஏராளமாக விற்கின்றன.

பாரிஸ் நகரை இரவு நேரத்தில் சுற்றிப் பார்த்த போது மின்சார விளக்கொளியிலே ஒரே ஒளிமயமாகத் தெரிந்தது. மனித வாழ்க்கைக்குத் தேவையற்ற வீண் ஆடம்பரமும், புலனடக்கத்தோடு கூடிய வாழ்க்கைக்குக் கேடு செய்யும் கவர்ச்சிகளும் பாரிஸ் நகரில் மலிந்திருப்பதனை முன்னிரவு நேரத்தில்தான் அதிகமாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. அழகு வேறு; ஆடம்பரம் வேறு. இது என் கருத்து. ஆனால், பாரிஸ் நகரிலே அழகும் ஆடம்பரமும் பிரித்துப் பார்க்க முடியாதபடி பிணைந்திருக்கின்றன.

சென்னை கடற்கரையிலே உலகத் தமிழ் மாநாட்டின் போது தமிழ்ப் புலவர் பெருமக்களின் சிலைகள் திறக்கப் பட்டன. அது பொறுத தமிழ் விரோதிகள், தி. மு. க. அரசின்மீது கொண்ட காழ்ப்பால், "இதென்ன தலை நகரா, சிலை நகரா?" என்று கேலியாகக் கேட்டார்கள். பாரிஸ் நகரைச் சுற்றிப் பார்த்தபோது, திரும்பிப் பார்த்த இடமெல்லாம் சிலைகளும், வேறு வகையான நினைவுச் சின்னங்களும் காட்சியளித்தன.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சிகளை பிற்காலச் சந்ததியார் நினைவில் கொள்ளும் பொருட்டு நினைவுச் சின்னங்கள் எழுப்பப் பட்டுள்ளன. பிரெஞ்சு வீரன் நெப்போலியனின் வெற்றிச் சாதனைகளைக் குறிக்கும் நினைவுச் சின்னங்களையும் கண்டேன். இன்னும் எத்தனை

எத்தனையோ வீரர்களின் உருவச் சின்னங்களையும் கண்டு களித்தேன். தமிழினத்தவராகிய நம்முடைய முன்னோர்களான புலவர்களுக்கும், வீரர்களுக்கும், ஞானியருக்கும் சிலை எடுப்பதென்றால், தலைநகரமென்ன, தமிழ்நாடு முழுவதுமே சிலை நாடாகி விடுமே! பாரிஸ் நகரைப் பார்த்தபோது இப்படித்தான் என் மனதில் தோன்றியது.

தேம்ஸ் நதியும் தேச பக்தியும்

தொடர்ந்து ஆறு நாட்களைப் பாரிஸ் நகரில் கழித்த பின்னர், ஜூலை 21-ஆம் தேதியன்று இலண்டன் செல்லத் தயாரானேன். இலண்டனிலே போலீசுக்கும், பொது மக்களுக்கும் இடையே நெருங்கிய நல்லுறவு இருப்ப தாகக் கேள்விப் பட்டேன். பிரிட்டிஷ் அரசு நியமித்த போலீஸ் கமிஷன் தந்த அறிக்கையிலே, போலீஸ்—பொதுமக்கள் நல்லுறவுபற்றி மிகவும் விரிவாகவும், சிறப்பாகவும தகவல் தரப்பட்டிருந்தன. அதனைப் படித்தபின் பிரான்சுக்கு செல்ல நேர்ந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு, பிரிட்டனுக்கும் செல்லவேண்டு மென்று தமிழகத்தில் இருந்தபோதே திட்டம் வகுத் திருந்தேன். அப்போது தமிழக அரசு நியமித்த போலீஸ் கமிஷனில் நான் ஒரு அங்கத்தினனாக இருந்தேனாதலால், பிரிட்டனிலே போலீஸ்—பொதுமக்கள் உறவு எப்படி யிருக்கிறதென்பதனை அறிந்து வருவதால் பலன் ஏற்படக்கூடுமென்று நம்பினேன். தமிழக போலீஸ் கமிஷனில் உள்ள என் சகாக்களும் என்னைப்போன்றே எண்ணினார்கள்.

போலீஸ் கமிஷன் தலைவர் திரு. ஆர். ஏ. கோபால் சாமி அவர்கள், மத்திய அரசின் உள்துறைச் செயலா ளர் திரு. எல். பி. சிங் ஐ. சி. எஸ். அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி, இலண்டனிலுள்ள இந்தியத் தூதவரகத் தின் மூலம் எனக்கு வேண்டிய ஒத்துழைப்பைத் தேடித் தருமாறு கேட்டுக்கொண்டார். அப்போது தமிழக

அரசின் தலைமைச் செயலாளராக இருந்த திரு. இ. பி. இராயப்பா அவர்களும், இலண்டனிலுள்ள இந்தியத் தூதுவரக அயல்நாட்டுறவுப் பகுதியின் செயலாளருக்கு எனக்காக ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

சென்னையிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சிலின் தென்னிந்தியப் பிரதிநிதி திரு. பி. ஜே. கரோல் அவர்களும், இலண்டனிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சிலுக்கு ஒரு கடிதம் எழுதி நான் இலண்டனுக்கு வருங்கால் எனக்கு வேண்டிய ஒத்துழைப்பைத் தருமாறு கேட்டுக்கொண்டிருந்தார்.

கடமை உணர்ச்சி காரணமாகத்தான் நான் இலண்டனுக்குச் செல்லும் திட்டத்துடன் தாயகத்திலிருந்து புறப்பட்டு ஐரோப்பாவுக்குப் போனேன். ஆனால், நான் பாரிஸ் சென்ற மறுநாள் அங்குள்ள பிரிட்டிஷ் கவுன்சில் பிரதிநிதி திரு. ஈ. டபிள்யூ. எப். டாம்ளன் என்பவர், இலண்டன் பிரிட்டிஷ் கவுன்சிலிடமிருந்து என் பெயருக்கு வந்திருந்த கடிதமொன்றை என்னிடம் சேர்ப்பித்தார். அதிலே, பிரிட்டனில் கோடை விடுமுறை காலமாதலாலும், போதிய அவகாச மின்மையாலும், போலீஸ்—பொதுமக்கள் உறவுபற்றி அறிந்துகொள்ள எனக்கு உதவி அளிப்பதற்கு இயலவில்லை என்றும், மற்றொரு சமயத்தில் என்னை அவர்களே அழைப்பதாகவும் தகவல் தரப்பட்டிருந்தது.

இதனால், பிரிட்டனுக்குச் செல்வதற்கான கடமை எதுவும் இல்லாதிருந்தும், எப்படியும் இலண்டன் நகரைப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆர்வத்தால் பாரிசிலிருந்து புறப்படத் தயாரானேன். நான் தாயகத்திலிருந்தபோது இலண்டனுக்குச் செல்ல பிற நாடுகளிலுள்ளதைப்போல் 'விசா' முறை இல்லை என்றும், சாதாரண நுழைவுச் சீட்டு (என்ட்ரி பெர்மிட்) இருந்

தாலே போதுமென்றும், பாரிசிலுள்ள பிரிட்டிஷ் தூதுவ ரகத்தில் அந்தச் சீட்டு எனக்கு எளிதில் வழங்கப்பட்டு விடுமென்றும் அனுபவமுள்ள நண்பர்கள் கூறியிருந் தார்கள். அதனை நம்பி, ஜூலை 21-ஆம் தேதியன்று காலை பிரிட்டிஷ் தூதரகத்துக்குச் சென்றேன். அங்கு, நுழைவுச் சீட்டுப் பெறுவது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. பிரிட்டனில், கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சிக்கு வந்துவிட்டதால், அன்னிய நாட்டார் அங்கு நுழைவதற்குக் 'கெடுபிடி' அதிகமாகிவிட்டதென்றும், அவர்களிலும் இந்தியர்களிடம்தான் அதிகக் கண்டிப்பு காட்டப்படுகிறதென்றும் அறிந்தேன். இதனை அறிந்த போது நான் மிகவும் சோர்வடைந்து விட்டேன். பிரிட்டிஷ் தூதரக வெள்ளை அதிகாரி என்னிடம் மிகவும் கண்டிப்பான பாணியில் பேசினார். அவர், எனக்கு நுழைவுச் சீட்டு வழங்குவதற்குத் தயாராக இல்லை என்பது தெரிந்தது. நான் சோவியத் ருஷ்யாவில் சுற்று லாச் செய்துவிட்டு பாரிஸ் நகர் வந்திருப்பதை என்னிட மிருந்த இந்திய பாஸ்போர்ட்—ருஷ்ய விசா ஆகியவற்றி னால் அவர் அறிந்துகொள்ள முடிந்ததால், அது காரண மாகவும் என்னிடம் அவர் கண்டிப்பாக நடந்து கொண்டாரோ என்னவோ!

பின்னர், பாரிசிலுள்ள இந்தியத் தூதுவரகத்தின் பரிந்துரைக் கடிதத்தை அவரிடம் தந்தேன். அதன் மூலம் இந்திய அரசும் தமிழக அரசும் தங்களுடைய அதிகாரபூர்வமான பிரதிநிதியாக உலகத் தமிழ்மாநாட் டுக்கு என்னை அனுப்பியிருப்பதனை அவர் உணர்ந்து கொண்டபின், அவருடைய கண்டிப்பு கொஞ்சம் தளர்ந் தது. அப்போதும் இலண்டனிலிருந்து திரும்புவதற் கான விமானப் பயண டிக்கட்டை முன்கூட்டி எடுத்து, அதைக் காட்டினாலொழிய, எனக்கு அனுமதிச் சீட்டு

வழங்க இயலாதெனக் கூறிவிட்டார். நல்ல வேளையாக என்னிடம் அன்னியச் செலாவணியோடு கூடிய பணம் போதிய அளவு இருந்ததால், பாரிசிலிருந்து இலண்டனுக்குச் செல்லவும், இலண்டனிலிருந்து பாரிஸ் திரும்பவும் "ரிட்டன்" டிக்கட் எடுத்து, அதை அவரிடம் காட்டி, நுழைவுச் சீட்டுப் பெற்றேன்.

நான் இலண்டன் சென்றபின் அங்கிருந்து திரும்புவதற்கு வக்கற்று, அந்த நகரின் தெருக்களிலே பிச்சை எடுப்பேனே என்று பிரிட்டிஷ் தூதரகம் பயந்தது போலும்! இந்தியப் பயணிகளைப்பற்றி ஐரோப்பிய நாடுகள் அனைத்திலுமே இந்த அச்சம் இருப்பதாக இலண்டனிலுள்ள தமிழர் சிலர் என்னிடம் கூறினர். 'இந்தியர்' என்றாலே, "பிச்சைக்காரர்" என்று ஐரோப்பா எண்ணுகிறது போலும்!

ஜூலை 21-ஆம் தேதியன்று மாலை 4 மணிக்கு விமான மூலம் இலண்டனுக்குப் புறப்பட்டேன். இந்த முறை நான் தனியாகப் பயணம் செய்யவில்லை. என் உடல் நலத்தைக் கவனித்துவரும் டாக்டர் ஈ. மீனாட்சிசுந்தரம் அவர்கள் என்னுடன் பயணம் செய்தார். அவர் தன்னுடைய விருந்தினனாகவே என்னை அழைத்துச் சென்றார்.

பாரிசிலிருந்து இலண்டனுக்கு ஒரு மணி நேரப் பயணம். ஐரோப்பாவில், நான் செய்த விமானப் பயணங்களிலே இந்தப் பயணம்தான் மிகவும் இன்பந் தருவதாக இருந்தது. காரணம், என் மனதுக்குப் பிடித்த—என்பால் பேரன்பு கொண்ட தமிழர் ஒருவர் எனக்குத் துணையாக இருந்ததுதான்.

இலண்டன் செல்லும் வழியில் பாரிசைக் கடந்ததுமே இங்கிலீஷ் கால்வாயைக் கண்டேன். விடுதலை

வீரர் விநாயக தாமோதர சவர்க்கார், இலண்டனி லிருந்து தப்பி பாரிசுக்குச் செல்வதற்கு இந்தக் கால்வா யைக் கடந்த செய்தி வரலாற்றுச் சிறப்புவாய்ந்ததாகும். வீரர் சவர்க்காரின் இந்த அரிய செயல் குறித்து தேச பக்தியுள்ள ஒவ்வொரு இந்தியனும் பெருமையடைந்த துண்டு. ஆம்; விமானத்திலிருந்தபடி இந்தக் கால்வா யைக் கண்டதுமே, வீர சவர்க்காரின் நினைவுதான் எனக்கு வந்தது.

இலண்டன் நகரை நெருங்கிக் கொண்டிருக்கையில் 'தேம்ஸ் நதி' என் கண்களுக்குத் தெரிந்தது. அது சென்னை நகரிலுள்ள கூவம் நதிபோன்று இலண்டனை ஊடுவிச் செல்கின்றது. ஆனால், கூவத்தைப்போன்று அதிலே துர்நாற்றமில்லை. கூவம்கூட கலைஞர் கருணா நிதியின் ஆட்சியிலே மணக்க ஆரம்பித்துவிட்டதே! உண்மையில் தேம்ஸ் நதியைப் பார்த்தபோது, கூவத் தைச் சீர்திருத்த கலைஞர் ஆட்சி எடுத்துவரும் பெரு முயற்சியை நினைத்துப் பெருமை அடைந்தேன். ஆனால், தேம்ஸ் நதி அழகானது, அகலமானது. கூவம் நதி அப்படிப்பட்டதன்று. ஆகவே, என்னதான் சீர்திருத்தி னாலும், கூவம் கூவம்தான்!

தேம்ஸ் நதியைப் பார்த்தபோது மற்றொரு பழைய வரலாறும் எனது நினைவுக்கு வந்தது. இந்தியாவில் விடுதலைப் போர் நடந்த காலத்திலே இலண்டன் தேம்ஸ் நதி, தேசபக்தத் தலைவர்கள்—தொண்டர்கள் நாவிலே படாத நாளில்லை. பெருந் தலைவர்களிலே சிலர் கீழ்க் கண்டவாறு பேசி நான் பலமுறை கேட்டிருக்கிறேன்.

> "இந்திய மக்களின் எண்ணிக்கை முப்பது கோடி. நம்மை ஆளுகிற வெள்ளையர்களோ ஆறு லட்சம் பேர்தான். நாம் முப்பது கோடி பேரும் காரித் துப்பினால், அந்த எச்சில் பெரு வெள்ளமாகத்

திரண்டு, இந்த ஆறு இலட்சம் வெள்ளையர்களையும் லண்டன் தேம்ஸ் நதியில் கொண்டு போய்த் தள்ளி விடும்.''

இப்படி, நான்கூட என் தலைவர்களைப் பின் பற்றிப் பேசியிருக்கக்கூடும். நடிகர் எஸ். எஸ். விசுவநாத தாஸ், பிரபலமான கொக்குப் பாட்டைப் பாடி அந்தக் காலத் திலே தேசபக்தியை வளர்த்தார். ''கொக்குப் பறக்குதடி பாப்பா'' என்று தொடங்கும் அந்தப் பாடலிலேகூட, ''தேம்ஸ் நதிக்கரையின் கொக்கு, அங்கு தின்னவழி யில்லாத கொக்கு'' என்ற வாசகங்கள் வரும்.

இப்படி, விமானத்தில் இருந்தபடி தேம்ஸ் நதியைக் கண்டபோது பழைய விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்ருக என் மனத்தில் அலைமோதின. இந்த மோதல் அடங்குவதற்கு முன்பே நான் பயணம் செய்த விமானம் இலண்டன் விமான நிலையத்தில் இறங்கியது. ஒரு விசேஷம் என்னவென்ருல், மாஸ்கோவிலும் பாரிசிலும் விமான நிலையங்களிலே நான் இறங்கிய போது ஒரு தமிழர்கூட என் பார்வையில் படவில்லை. ஆனுல், இலண்டன் விமான நிலையத்திலே இங்குமங்குமாகத் தமிழர் பலர் நடமாடக் கண்டு என் மனம் மகிழ்ந்தது.

விமான நிலையத்தில் அயல் நாட்டுப் பயணிகளுக்குரிய சடங்குகள் முடிய சிறிது தாமதம் ஏற்பட்டது. மாஸ்கோ, பாரிஸ் நகரங்களைவிட, இலண்டனிலே பாஸ் போர்ட்—விசா பரிசீலனையும், சுங்கச் சோதனையும் கொஞ்சம் கடுமையாகத்தான் இருந்தன. அதெல்லாம் முடிந்த பின்னர், விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு, கவர்ச்சிமிக்க இலண்டன் தெருக்களை டாக்சி மூலம் கடந்து ஒய். எம். சி. ஏ. ஓட்டலுக்கு டாக்டர் மீனுட்சி சுந்தரம் அவர்களால் அழைத்துச் செல்லப்பட்டேன்.

அங்கு நான் தங்குவதற்காக ஒரு அறையை டாக்டர் அவர்கள் ஏற்கனவே ஏற்பாடு செய்து வைத்திருந்த தால், இடம் பிடிப்பதற்கு நான் கஷ்டப்பட வேண்டி ஏற்படவில்லை.

ஒய். எம். சி. ஏ. ஓட்டலில் தங்கியிருந்தோர் எல்லோரும் இந்தியர்களே. அவர்களில் மிகப் பெரும் பாலோர் தமிழ்நாட்டவரே! அதன் செயலாளர், மானேஜர் இருவரும் தமிழர்களே! அவ்விருவரும் எனது வருகை கண்டு மனம் பூரித்து மிகுந்த அன்போடும் பண்போடும் என்னை வரவேற்று உபசரித்தனர்.

ஒய். எம். சி. ஏ. விடுதி

ஜூலை 20-ஆம் தேதி மாலை இலண்டன் நகரை அடைந்ததும் நான் முதலில் தேடியது நல்ல அரிசிச் சோறு கிடைக்கும் உணவுச் சாலையைத்தான். வட இந்தியத் தம்பதிகள் இந்திய முறையிலேயே நடத்தும் ஒரு ஓட்டலுக்குச் சென்றேன். அங்கு அருமையான புலவு அரிசிச் சோறும், புளிப்பில்லாத கட்டித் தயிரும், மற்றும் காய்கறிகளும் கிடைத்தன. தாயகத்தைவிட்ட பின்னர், இவ்வளவு அருமையான—சுவையான சோறு தரும் ஓட்டலைக் கண்டதில்லை. அதனால், குடற்புண்ணை மறந்து—தின்றால் என்னாகுமோ என்று கவலைப்படாமல் வயிறார உண்டேன்.

இலண்டனை அடைந்த பின்னர், ஒன்றைப் பற்றிய கவலை எனக்கிருந்தது. அது, இலண்டனிலிருந்து தாயகம் 'திரும்புவதற்குத் தமிழக அரசிடமிருந்து விமானப் பயணத்திற்கான வசதியைப் பெறுவதாகும். நான் பாரிசிலிருந்த போதே—அப்போது இலண்டனில் தங்கியிருந்த—முதல்வர் கருணாநிதி அவர்களோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச முயன்றேன். அவர், ஓட்டலைவிட்டு வெளியே நகரைச் சுற்றிப் பார்க்கச் சென்று விட்டதாகத் தகவல் கிடைத்தது.

நான் இலண்டனுக்கு வரும் விஷயம் அவருக்கு முன் கூட்டித் தெரியாது. அதனால், அவர் தங்கியிருந்த ஓட்டல் நிர்வாகிக்கு நான் இலண்டன் வரும் விஷயம் பற்றி அவருக்குத் தகவல் தருமாறு கூறியிருந்தேன்.

நான் இலண்டன் வந்த பின்னர்தான் அவர் அங்கிருந்து தாயகத்துக்குப் புறப்படுவார் என்று எண்ணி யிருந்தேன். ஆனால், நான் வருவதற்கு நான்கு மணி நேரத்திற்கு முன்பே அவர் புறப்பட்டுப் போய்விட்டார். ஆயினும், இலண்டனில் தங்கியிருந்த தமிழக அரசின் அப்போதைய நிதி அமைச்சர் மாண்புமிகு கே. ஏ. மதியழகன் அவர்களிடம் எனக்குத் தேவைப்படும் விமான டிக்கட்டை எடுத்துக் கொடுக்குமாறும், நான் கோரும் மற்ற உதவிகளைச் செய்யுமாறும் சொல்லி விட்டுப் போயிருந்தார். இலண்டன் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. அழகப்ப செட்டியார் அவர்களிடமும், வேறு இரண்டொருவரிடமும் என் தேவைகளைக் கவனிக்குமாறு மிகுந்த அக்கறையோடு சொல்லி விட்டுச் சென்றிருந்தார். தனிப்பட்ட முறையில் என்பால் தமிழக முதல்வர் வைத்திருந்த பேரன்பையும், பெரு மதிப்பையும் நான் இலண்டனி லிருந்தபோது அதிக அளவில் அறிந்து கொள்ள முடிந்தது. தன்னுடைய உடன் பிறந்தவனாகவே என்னைக் கருதி என் விஷயத்தில் அவர் மிகுந்த அக்கறை காட்டினார்.

கலைஞர் கருணாநிதி தமிழக முதல்வர்க்குரிய கடமை யைச் செய்வதோடு ஆறுதலடையாமல், எனக்குத் தேவைப்படும் வசதிகள் அனைத்தையும் வேறு வகையில் தேடிக் கொள்ள என்னால் இயலாதென்பதை உணர்ந்து, அவற்றைத் தேடித் தருவதிலே அவர் மிகுந்த அக்கறை காட்டினார். அயல் நாடுகளில் சுற்றுலாச் செய்யும் ஒரு வருக்கு அங்கு தேவைப்படும் வசதிகளைத் தேடிக் கொள் வது அவ்வளவு சுலபமல்ல வென்பது ஒரு முறையேனும் சுற்றுலாச் சென்று திரும்பியவர்களுக்குத் தெரிந்திருக் கும். அதனாற்றான், என் விஷயத்தில் தமிழக முதல்வர் காட்டிய அக்கறை என் மனத்தைக் கவர்ந்தது.

நான் இலண்டன் சென்ற மறுநாள் காலையில் திரு கே. ஏ. மதியழகன் அவர்களுடைய செயலாளர் திரு. கே. வேங்கட சுப்பிரமணியம் அவர்கள் நான் தங்கியிருந்த ஒய். எம். சி. ஏ. ஓட்டலுக்கு வந்து எனது பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து தந்தார். அன்பர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்களும் என் விஷயத்தில் மிகுந்த அன்பும் அக்கறையும் எடுத்துக்கொண்டு தனது செயலாளர் மூலம் உதவி புரிந்தார்.

இலண்டனிலே "ஏர் இந்தியா" அலுவலகத்தில் திரு. கேசவன் என்ற வடாற்காடு மாவட்டத்தைச் சார்ந்த ஒரு தமிழர் உயர்தர அதிகாரியாக இருந்து வருகிறார். தமிழக அரசின் சார்பில் இலண்டனிலிருந்து பம்பாய் வழியாகச் சென்னை திரும்புவதற்கான டிக்கட் ஒன்றை எனக்காக எடுப்பதிலே நடைமுறைச் சிக்கல்கள் இருந்தன. திரு. கேசவன், நல்லெண்ணத்துடன் நடந்து கொண்டிராமல், கண்டிப்புக் காட்டியிருந்தால், எனக்கு டிக்கட் எடுப்பது சாத்திய மில்லாமல் போயிருக்கும். நல்ல வேளையாக, அன்பர் கேசவன் என்பால் எல்லையற்ற அன்பு காட்டி, ஒரு மணி நேரத்திற்குள் தாம் உயர்தர அதிகாரி என்பதையும் மறந்து என் தேவையை வெற்றிகரமாக முடித்துக் கொடுத்தார்.

இலண்டனிலிருந்து திரும்புகையில் ரோம் நகரைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பம் எனக்கிருந்தது. ஆன்மீக உணர்வுடையவனாதலால் கிறித்துவர்களுடைய புனிதத் தலமான ரோமுக்குச் சென்று, முடிந்தால் போப்பாண்டவரையும் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கிருந்தது. ஆனால், தமிழர் ஒருவர் துணையின்றி ரோமில் தங்குவதற்கு எனக்குத் துணிவு ஏற்படவில்லை. 'ஏர்இந்தியா' இலண்டன் மானேஜர் திரு. கேசவன் அவர்கள், நான் ரோமில் ஒரு நாள் தங்கிச் செல்வதற்

கான எல்லா ஏற்பாடுகளையும்; 'ஏர் இந்தியா' அலுவலகத்தின் செலவிலேயே செய்து தருவதாக என்னிடம் கூறினார். சமய நம்பிக்கையும் இலக்கியப் பயிற்சியுமுடைய நான் ரோம் நகரைப் பார்ப்பது அவசியம் என்றுகூட வற்புறுத்தினார். ஆனால், தமிழர் ஒருவரைத் துணைக்குத் தருவது சாத்தியமில்லை என்று அவர் கருதினார். அதனால், நான் இலண்டனிலிருந்து பம்பாய் வழியாக சென்னை திரும்புவதற்கே ஏற்பாடு செய்தேன்.

மாஸ்கோ—பாரிஸ் நகரங்களைப் போலல்லாமல் இலண்டன் நகரிலே ஆயிரக் கணக்கான தமிழர்கள் உயர்தரக் கல்வி கற்று உத்தியோகம் செய்பவர்கள் இருக்கிறார்கள். இலண்டன் வீதிகளிலே நடந்து சென்றால், தமிழர்களைச் சாதாரணமாகச் சந்திக்க முடியும். மற்றும், தமிழ் நாட்டு முறையில் உணவளிக்கும் ஓட்டல்களும் இருக்கின்றன. 'இந்தியா கிளப்'பிலே தமிழ் நாட்டை விடவும் சுத்தமான—சுவையான உணவு வகைகள் கிடைக்கின்றன. 'தமிழ் நாட்டை விடவும்' என்று நான் சொல்வதற்குக் காரணம் உண்டு. இங்கு எல்லாம் கலப்புதான். கலப்பில்லாத இட்டிலி, தோசை, மற்ற பண்டங்கள் இலண்டனில் கிடைக்கின்றன. அதனால், தாயகத்தை விட்ட பின்னர் இலண்டன் வரும்வரை பதின்மூன்று நாட்கள் உணவுக்காக நான் பட்ட கஷ்டம் பறந்தோடிவிட்டது. இலண்டனில் எனக்கு உணவுப் பிரச்சினையே இல்லை. மாஸ்கோவிலும், பாரிசிலும் தெருக்களிலே தனித்து நடமாடத் தயங்கினேன். ஆம்; ருஷ்ய மொழியோ, பிரஞ்சு மொழியோ தெரியாததால்! இலண்டனிலே அந்தத் தொல்லை இல்லை. எனக்குத் தெரிந்துள்ள ஆங்கிலம் தெருவிலே நடமாடுவதற்குப் போதுமானதாயிருந்தது. அதனால், துணை தேவைப்படாமலே இலண்டன் நகரைச் சுற்றிவரத் துணிவு பெற்

றேன். ஆயினும் போக்கு வரத்து விதிகளைப் புரிந்து கொள்வது கஷ்டமாக இருந்தது.

ஐரோப்பிய நகரங்களில் மோட்டார் வண்டிகள் வலது பக்கம் போவதும், இடது பக்கம் வருவதுமாகப் போக்கு வரத்துச் செய்கின்றன. ஆனால், இலண்டன் நகரிலே மட்டும் இடது பக்கம் போவதும், வலது பக்கம் வருவதுமாக இருக்கின்றன. ஆம்; வண்டிப் போக்கு வரத்தில் இலண்டன் நகரம் தனக்கென ஒரு தனி முறையை வகுத்துக் கொண்டுள்ளது. இந்தியா உள்பட தான் அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்திய நாடுகளில் எல்லாமும் இலண்டனில் உள்ளது போன்ற போக்குவரத்தையே நடை முறைக்குக் கொண்டு வந்தது. பிரிட்டிஷ் பேரரசு அதனிடமிருந்து விடுதலை பெற்ற பின்னரும் தமிழ்நாடு உள்ளிட்ட இந்தியப் பெரு நாட்டிலே போக்குவரத்தில் பிரிட்டனின் முறையே தொடர்ந்து பின்பற்றப்படுகிறது. இருநூறு ஆண்டு காலம் பழகி விட்டதால், வண்டிப் போக்கு வரத்து முறையை இனி மாற்றுவது சாத்தியமில்லை. மாற்ற வேண்டிய அவசியமும் நமக்கிருக்கவில்லை.

பி. பி. ஸி. எனப்படும் இலண்டன் பிரிட்டிஷ் வானொலித் துறையிலே 'தமிழோசை' என்னும் பெயரிலே தனிப் பகுதி இயங்குகிறது. இப்பகுதி மிகவும் திறம்பட நிர்வகிக்கப்படுகிறது. திரு. சங்கரமூர்த்தி என்னும் இளைஞர் இதனை நிர்வகித்து வருகிறார். இவர் தமிழ்நாட்டிலுள்ள பிரபல எழுத்தாளர் திரு. துறைவன் என்பவரின் தம்பியாவார். மிகுந்த உற்சாகமுள்ள இளைஞர். இவர் பாரிசிலேயே என்னைச் சந்தித்தார். உலகத் தமிழ் மாநாட்டின் நடவடிக்கைகளை ஒலிப் பதிவு செய்து உலகெங்கிலும் வாழும் தமிழர்களுக்கு ஒலி பரப்புவதற்கென—திரு. சங்கரமூர்த்தி பி. பி.

ஸி. நிர்வாகத்தால் பாரிசுக்கு அனுப்பப்பட்டிருந்தார். பாரிஸ் மாநாட்டைப் பற்றி என்னைப் பேட்டி கண்டு பாரிசிலேயே என் கருத்தைப் பதிவு செய்துகொண்டார். அத்துடன், உலக நாடுகளில் வாழும் தமிழர்களுக்காக சிறப்புச் செய்தி ஒன்றையும் என்னிடமிருந்து பெற்றுக் கொண்டார். இவரிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தாலே கவலைகள் எல்லாம் பறந்து போகும். இவரது முகத்தில் எப்பொழுதுமே மகிழ்ச்சி தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது.

பாரிசில் என்னிடம் பெற்ற செய்திகளை அடிக்கடி "தமிழோசை" மூலம் உலக நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு ஒலிபரப்பி வருகிறார். என் செய்திகளை அயல் நாடுகளில் வாழும் தமிழர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்று, பி. பி. ஸி. க்குக் கடிதங்கள் எழுதுவதாக திரு. சங்கரமூர்த்தி கூறியுள்ளார்.

தமிழக திராவிட முன்னேற்றக் கழக மாணவர் இயக்கத் தலைவர் திரு. இரா. ஜனார்த்தனம், உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் இலண்டன் சென்று திரு. சங்கரமூர்த்தியோடு ஒரு மாத காலம் தங்கியிருந்தார். அவர் இலண்டனிலிருந்து ஔவை தி. க. சண்முகம் அவர்களுக்கு 26-8-70ல் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு:

"நம் சிலம்புச் செல்வர் ஐயா அவர்கள்—பாரிசிலும், இலண்டனிலும் எல்லோரும் என்றும் மறக்க முடியாத அளவு அவரது அன்பும் சொற்பொழிவுகளும் அமைந்தன. 'பி. பி. ஸி. தமிழோசை'யில் அவர் அளித்த பேட்டிகளைக் கேட்டு பல நாட்டுத் தமிழர்கள் பி. பி. ஸி'க்கு எழுதி அனுப்பிய பாராட்டுக் குவியல்களைக் கண்ட நான் அடைந்த

மகிழ்விற்கு எல்லை இல்லை. எல்லைகளை மீட்ட ஏந்த லின் ஆற்றல்தான் என்னே!"

நான் இலண்டனிலிருந்த போது தமிழோசை திரு. சங்கரமூர்த்தியைப் பார்க்க விரும்பி, தொலை பேசி மூலம் தொடர்பு கொள்ள முயன்றேன். அவர் கிடைக்க வில்லை. அவர், இலண்டன் நகரில் உள்ள தமிழர்களின் நல்லெண்ணத்தைப் பெற்றிருக்கிறார்.

இலண்டன் சென்ற மறுநாள் மாலை—நான் தங்கி யிருந்த ஒய். எம். சி. ஏ. ஓட்டலிலேயே—தமிழர்கள் ஒரு கூட்டம் நடத்தி, அதிலே சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துமாறு செய்தனர். ஒரு மணி நேரம் பேசிவிட்டு; அடுத்து அரைமணி நேரம் கூட்டத்தில் கலந்து கொண் டவர்களிலே சிலர் விடுத்த வினாக்களுக்கு விடையளித் தேன். கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அவ்வளவு பேரும் பட்டதாரிகள். டாக்டர் கண்ணப்பன் என்பவர், ஒய். எம். சி. ஏ. விடுதியாளர் சார்பில் இந்தக் கூட் டத்தை நடத்தி வைத்தார்.

எனக்கு விடுக்கப்பட்ட வினாக்கள் பெரும்பாலும் தமிழ் நாட்டிலே ஆங்கிலத்தி லிருந்து தமிழுக்கு மாறு வதற்காக நடைபெற்றுக் கொண்டிருக்கும் முயற்சிகளைப் பற்றியவையாகவே இருந்தன. நானும் தி. மு. க. அரசும் ஆங்கிலத்தை அடியோடு ஒழித்து விடுவதற்கே முயன்று வருவதாக இலண்டனில் உள்ள தமிழர்களும் கருதுகின் றனர். இதற்குக் காரணம், தமிழகத்தில் உள்ள பத்திரி கைகளின் தவறான பிரச்சாரமே! கல்லூரிகளிலே ஆங் கிலம் பாடமொழியாக இருப்பது வேறு; பொருளா தாரம், வரலாறு போன்ற கலைகளைக் கற்பதற்கான பயிற்சி மொழியாக இருப்பது வேறு என்பதனைத் தெள்ளத் தெளிய விளக்கினேன். அன்றைய என்னு டைய பேச்சு மொழித்துறையில் நிபுணத்துவமுடைய

ஒருவருடைய பேச்சு போன்று இருந்ததாக நன்றி கூறிய டாக்டர் கண்ணப்பா குறிப்பிட்டார். நான் நடத்தி வரும் பலவகையான ஆராய்ச்சிகளிலே ஆட்சி மொழி, பயிற்சி மொழி பற்றிய ஆராய்ச்சிதான் என்னுடைய வாழ்வையே ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறது. அதனுல், அந்தத் துறையிலே நான் சிறிதளவு கூடுதலாக அறிவு பெற்றிருக்கலாம்.

நான் இலண்டனிலிருந்தபோது எனது உடையிலே சிறிது மாறுதல் இருந்தது. வேட்டி கட்டாமல், 'பாண்ட்' போட்டுக் கொண்டிருந்தேன். இந்த மாறுதல் 'பாண்ட்' மீது எனக்குள்ள மோகத்தால் ஏற்பட்ட தன்று. டில்லியிலிருந்து புறப்பட்ட பின்னர், சோவியத் ருஷ்யாவில் தங்கியிருந்த நாட்களிலும் சரி; பாரிஸ் நகரில் தங்கியிருந்த நாட்களிலும் சரி; வேட்டிதான் கட்டிக் கொண்டிருந்தேன். அதனுல், கடுங்குளிர் இருந்த நேரத்திலே கால்கள் விரைத்துப் போய் உடம்புக்கு ஏதேனும் கேடு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம்கூட எனக்கு ஏற்பட்டதுண்டு. அந்த நிலையிலும் வேட்டிதான் கட்டிக் கொண்டிருந்தேன். இலண்டனில் மட்டும் நான் 'பேண்ட்' அணியக் காரணம் சலவை வேட்டி இல்லாதது தான்.

மாஸ்கோவிலும், பாரிசிலும் என் கதர் ஆடைகளை சலவைக்குப் போட முயன்றேன். மாஸ்கோவில் நான் தங்கியிருந்த ஓட்டலிலேயே சலவைச் சாலை இருந்தது. அதன் மானேஜர் என் ஆடைகளை சலவைக்கு எடுத்துக் கொள்ளவே மறுத்துவிட்டார். மாஸ்கோ வானெலியி லுள்ள திரு. சி. ஜி. எஸ். மணிவர்மன் பிடிவாதமாக வற்புறுத்தியதன் பேரில் எடுத்துக் கொண்டார். ஆனுல், இரண்டு நாட்களுக்குப் பின் "என்னுடைய ஆட்களுக்கு இந்த ஆடைகளை சலவை செய்து தரத் தெரியவில்லை"

என்று கூறி, கதராடைகளைத் திருப்பிக் கொடுத்து விட்டார்.

நான் தாயகத்திலிருந்து புறப்பட்டபோது டாக்டர் சங்கரலிங்கம் அவர்கள், குளிரைத் தாங்கிக் கொள்ள முடியாதபோது அணிந்து கொள்வதற்கென்று ஒரே ஒரு 'பேண்ட்'டை மட்டும் என் பெட்டியிலே வைத்தார். அதைத்தான் பாரிசைவிட்டுப் புறப்பட்டதிலிருந்து பம்பாய் திரும்பும் வரை தொடர்ந்து நான்கு நாட்கள் வரை அணிந்து கொண்டிருந்தேன்.

ஐரோப்பாவில் நான் சுற்றுலாச் செய்தது கோடைக் காலத்தில்! அந்தக் காலத்திலேயே சில நேரங்களில் உல்லன் பேன்ட் தேவை என்பதனை உணர்ந்தேன். ஐரோப்பியச் சுற்றுலாவின்போது சூட் அணிந்துகொள்வது இன்னொரு வகையிலும் தேவைப்படுகின்றது. ஆம்; வேட்டிகளும், குட்டைகளும் பெட்டியை அடைத்துக் கொள்ளுகின்றன. எடை அதிகரித்து விடுவதாலும் விமானத்திற்கான கட்டணம் கூடுதலாகி விடுகிறது. கதர் ஆடைகள் காரணமாக என்னுடைய சாமான் பெட்டிகளின் எடை அதிகரித்துவிட்டது. டில்லி விமான நிலையத்திலே 300 ரூபாய் கட்டணம் செலுத்துமாறு கோரினர். பின்னர், சில ஆடைகளை எடுத்து என்னுடனிருந்த திரு. ம. சீ. கி. யிடம் கொடுத்துவிட்டு, அதிகக் கட்டணம் செலுத்துவதைத் தவிர்த்தேன். சூட் உபயோகிப்பதாக இருந்தால், இரண்டே சூட் போதும். ஆனல், கதர் ஆடை—அதுவும் வேட்டி, சட்டை, குட்டை ஆகிய மூன்றுடை அணிந்து வழக்கப்பட்டு விட்ட நான் தேவையைக் கருதியும் சூட் அணிய விரும்பாதவனுனேன்.

இந்தியா கிளப்

இலண்டன் மாநகரில் வரலாற்றுச் சிறப்பு மிக்க பல இடங்களைப் பார்த்தேன். 'ஹைட்ஸ் பார்க்' என்னும் பூங்கா இருக்கின்றது. அந்த இடத்திலே அடிக்கடி கூட்டங்கள் நடக்குமாம். அரச குடும்பத்தைத் தவிர வேறு யாரைப் பற்றியும் எதுவும் அந்த இடத்தில் பேச லாமாம். அப்படிப் பேசுவோர் மீது வழக்குத் தொடுப்ப தில்லையாம். இதனை பிரிட்டிஷ் ஜனநாயகத்தின் ஒரு சிறந்த அம்சமாக அந்த நாட்டில் உள்ளவர்கள் கருது கிறார்களாம். நான் லண்டனிலிருந்த நாட்களிலே 'எதுவும்' பேச உரிமை தரும் பூங்காவிலே யாரேனும் பேசினார்களா என்பது எனக்குத் தெரியாது. அதுபற்றி விசாரித்துத் தெரிந்துகொள்ளவோ, அந்தப் பேச்சைக் கேட்கவோ நான் ஆர்வம் கொள்ளவில்லை. குறிப்பிட்ட ஒரு திடலிலே எதுவும் பேச அனுமதித்து விடுவது மட்டுமே ஜனநாயகத்தின் சிறப்பு என்று நான் கருத வில்லை. அது நாகரிகம் ஆகாதென்றே நான் கருது கின்றேன்.

நான்கு வீதிகள் சந்திக்கும் மற்றொரு இடத்திலே—நகரத்தின் நடுப்பகுதி என்று நினைக்கிறேன்—ஒரு சதுக் கம் இருக்கிறது. அந்த இடத்திற்கு நான் சென்றபோது காலை ஏழு மணி இருக்கும். அங்கே இளம் வயதுடைய நங்கையரும் நம்பியரும் படுக்கை ஏதுமின்றி, புல் தரை யிலேயே ஒரு ஒழுங்கு முறையின்றி, படுத்துக் கிடக்கக்

கண்டேன். ஆம்; 'கிடந்தார்கள்' என்றுதான் சொல்ல வேண்டும். அவர்களை மக்கள் 'ஹிப்பி'கள் என்று அழைக்கிறார்கள்.

வாழ்க்கையிலே இரு வேறு நியதிகள் உண்டு. ஒன்று, மனிதன் 'இப்படித்தான் வாழவேண்டும்' என்பது. இன்னொன்று, 'எப்படியும் வாழலாம்' என்பது. 'ஹிப்பி'கள் எப்படியும் வாழலாம் என்னும் நியதியைக் கடைப்பிடிப்பவர்களாவர். அவர்களுடைய முகங்களிலே இளம் பருவத்திற்கான ஒளியைக் காண முடியவில்லை. ஆம்; அகத்திலே ஒளி இருந்தால்தானே அது முகத்திலே பிரதிபலிக்கும்.

நான் ஹிப்பிகளைப் பார்த்தபோது, "இவர்களுடைய பெற்றோர்கள் இவர்களை நல்வழிப் படுத்த முயல்வதில்லையா?" என்று இலண்டன் தமிழர்களைக் கேட்டேன். "அவர்கள் இவர்களைப் பற்றிக் கவலைப் படுவதில்லை"—என்று நம் தமிழர்கள் என்னிடம் கூறினார்கள்.

பொதுவாக, ஐரோப்பாவிலே —குறிப்பாக, பிரிட்டனிலே—பன்னிரண்டு வயது முடிந்தாலே பெண்ணையும் பிள்ளையையும் பெற்றோர்கள் சுதந்திரமாக விட்டு விடுகிறார்களாம். அந்த சுதந்திரத்தின் விளைவுதான் 'எப்படியும் வாழலாம்' என்ற கொள்கையுடைய ஹிப்பிகளின் தோற்றம். அவர்கள் ஏதோ ஒரு போதைப் பொருளை உண்டு மயக்கத்தில் கிடந்தார்கள். நல்ல வேளையாக நான் பார்த்த ஹிப்பிகள் எல்லோரையும் போல உடை உடுத்திக் கொண்டுதான் இருந்தார்கள்.

இலண்டனில் இன்னொரு கூட்டத்தினரைக் கண்டேன். இவர்கள் தேச பக்த வெறியர்கள்! அவர்கள் பிரிட்டிஷார் அல்லாதவர்கள் பிரிட்டனிலே தங்கி, உத்தியோகம் பார்ப்பதோ, தொழிலும் வாணிபமும்

நடத்துவதோ கூடாதென்ற கொள்கையுடையவர்கள். இவர்கள் தனிக் குழுவாக இயங்குகிறார்களாம், அரசியலிலே இவர்கள் அனைவரும் 'கன்சர்வேடிவ் கட்சி'யினர் என்றும் கேள்விப்பட்டேன்.

பம்பாயிலே 'சிவ சேனை' என்னும் பெயரிலே ஒரு இனவெறிக் கூட்டம் இருந்து வருகிறதல்லவா? அது போன்றதுதான் பிரிட்டனிலுள்ள இனவெறிக் கூட்டம்! இவர்கள் பிரிட்டிஷார் அல்லாதார் எவருமே பிரிட்டனில் தங்கி வாழக் கூடாதென்ற கொள்கையுடையவர்கள் என்றாலும், இந்த இனவெறிக் கொள்கையை இந்தியர்களுக்கு எதிராகத்தான் அதிக அளவில் பயன்படுத்துகிறார்களாம். அவர்கள் காலில் அணிந்துகொண்டுள்ள பூட்சினுடைய குதிகால் பகுதி கொஞ்சம் நீண்டதாக இருக்கின்றது. இந்தியர்களைக் கண்டால் உதைப்பதற்காகவே இத்தகைய பூட்சுகளைத் தாங்கள் அணிவதாக அவர்கள் கூறிக் கொள்கிறார்களாம். ஏனோ, இந்தியர்கள் மீது அவர்களுக்கு அவ்வளவு துவேஷம்! இருநூறு ஆண்டு காலம் இந்தியாவைச் சுரண்டிக் கொழுத்ததற்கு நன்றி உணர்வு காட்டுகிறார்கள் போலும்!

இந்த பிரிட்டிஷ் 'சிவசேனை'யின் தலைவர் கன்சர்வேடிவ் கட்சியின் முன்னணித் தலைவர்களிலே ஒருவராக விளங்குகிறார். அண்மையிலே பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்கு நடைபெற்ற மறுதேர்தலிலே, மிகவும் அதிகமான வாக்குகளைப் பெற்று மகத்தான வெற்றி பெற்றவர் இந்த இனவெறியர்தானும். ஆம்; நூற்றுக்கு நூறு பேரும் கல்வி கற்றவர்கள்—பாராளுமன்ற அரசியலுக்கு முன்னோடிகள்—என்றெல்லாம் பெருமை கூறிக் கொள்ளும் பிரிட்டிஷாரே தங்களைச் சுற்றி வேலி கட்டிக் கொள்ள விரும்புவது விந்தைதான்.

இலண்டனில் உத்தியோகம் பார்க்கும் இந்தியர்களின் தொகை ஏழாயிரம் இருக்கும். அவர்களிலே தென்னிந்தியர் இரண்டாயிரம் பேர்தான். இலண்டன் தமிழர்கள் தங்கள் எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற கவலையுடன் இருக்கிறார்கள். இப்போது கன்சர்வேடிவ்கள் ஆட்சி வந்து விட்டதால் இந்திய விரோதக் கொள்கையை அந்த ஆட்சி மிகவும் கடுமையாகக் கடைப்பிடிக்கிறதாம். வெகு விரைவில் தாங்களெல்லாம் தாயகத்திற்கு விரட்டப்படக் கூடும் என்று இலண்டன் தமிழர்களில் சிலர் என்னிடம் கூறினார்கள்.

இந்தியத் தமிழகத்திலுள்ள படித்தவர்கள், ஆங்கில ஆதிக்கத்துக்கு ஆதரவாகச் சொல்லும் காரணங்களிலே ஒன்று, "அயல் நாடுகளுக்குப் போய் உத்தியோகம் பார்க்க தரமான—திறமான ஆங்கில அறிவு வேண்டும்" என்பதாகும்.

அயல் நாடுகள் அனைத்துமே ஆங்கில மொழி நாடுகள் அல்ல. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டன், சுவிட்சர்லாந்து ஆகியவைதான் ஆங்கில மொழி நாடுகள். கனடா இரு மொழி (ஆங்கிலம்—பிரெஞ்சு) நாடு. இந்த நாடுகளிலே பிரிட்டனுக்குத்தான் இதுவரை அதிகப்படியான தமிழர்கள் உத்தியோகத்திற்காகவோ, மேல் படிப்புக்காகவோ போய் வந்துகொண்டிருக்கிறார்கள். அந்த நாடுகளிலும் இந்தியர்களை உதைப்பதற்கு 'விசேஷ பூட்ஸ் கால்கள்' தோன்றி விட்டன. இங்குள்ள ஆங்கில ஆதிக்க ஆதரவாளர்கள் இதனை அறிய மாட்டார்கள் போலும். ஒருகால், அறிந்தும் அறியாதவர்கள் போல நடிக்கிறார்களோ என்னவோ!

இலண்டனிலே நான் பார்த்த மற்றொரு வரலாற்றுச் சிறப்பு மிக்க இடம் "இந்தியா கிளப்" ஆகும். இந்தியாவில் விடுதலைப் போராட்டம் நடந்த காலத்திலே, இந்த

இடத்தின் பெயர் "இந்தியா விடுதி" என்றிருந்தது. உயர் கல்விக்காக அந்நாளில் இலண்டன் சென்றவர் களிலே தேச பக்தி மிக்கவர்கள் இந்த விடுதியைத்தான் தங்கள் பாசறையாகக் கொண்டு ஏகாதிபத்திய எதிர்ப் பிலே ஈடுபட்டிருந்தனர். அவர்கள் அனைவருமே ஆயுதப் புரட்சியில் நம்பிக்கை யுடையவர்களாக இருந்தனர். இந்தக் கூட்டத்திலே வ. வே. சு. ஐயரும், டாக்டர் டி. எஸ். எஸ். இராசனும் இருந்தனர் என்று அறிகிறோம்.

மேடம் காமா என்ற பார்சி மாதும், விநாயக தாமோதர சாவர்க்கர் என்ற மகாராஷ்டிரரும் அந்நா ளில் இந்தியா விடுதியில் தங்கியிருந்த புரட்சி வீரர்களிலே உலகப் புகழ் பெற்றவர்களாவர். இந்த விடுதியின் வீர வரலாற்றை ஏற்கனவே நான் படித்துவைத்திருந்தேனாத லால், அந்தக் கட்டிடத்திற்குள் கால் வைத்ததுமே என் உடம்பு புல்லரித்தது. இந்தியா விடுதியின் சரித்திரத் தைப் போற்றும் பொருட்டு அந்த இடத்தில் இந்தியா விடுதலை பெற்ற பின்னர் இந்தியத் தூதுவரகம் அமைக் கப் பட்டிருக்கிறது. கட்டிடத்தின் மற்றொரு பகுதியில் 'இந்தியா கிளப்' இருக்கின்றது. அங்கு சுவை மிக்க தென்னிந்திய உணவு கிடைக்கிறது.

இந்தியத் தூதுவரகத்திற்குச் செல்லும் பிரமுகர் கள் கையொப்ப மிடுவதற்கு வைக்கப்பட்டுள்ள புத்த கத்திலே அங்குள்ளோரின் விருப்பத்திற்கிணங்க நானும் கையொப்பமிட்டேன். எனக்கு முன்னே பிரதமர் நேரு உள்பட பெருந்தலைவர்கள் பலர் அப்புத்தகத்திலே கையொப்பமிட்டிருக்கக் கண்டேன்.

"இந்தியா விடுதி"யில் அந்நாளில் தங்கியிருந்த புரட்சி வீரர்களின் உருவப் படங்கள் வைக்கப்பட வேண்டு மென்பது என் விருப்பம். அத்துடன், இந்தியா விடுதியைப் பாசறையாகக் கொண்டு நடந்த புரட்சி

வரலாற்றின் சுருக்கமும் அங்கே பொறித்து வைக்கப்பட வேண்டும்.

இந்த விடுதியிலே சிறிது நேரம் தங்கியிருந்து, அங்குள்ள உணவுச்சாலையில் பகல் உணவு கொண்டு, பின்னர் திரும்பினேன். அங்கு தங்கியிருந்த நேரம் எனக்கு இன்பத்தைத் தந்தது.

இலண்டனிலே நான் பார்த்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களிலே எனக்குப் பெரிய ஏமாற்றத்தைத் தந்தது பக்கிங்காம் அரண்மனையாகும். இந்த அரண்மனையிலிருந்துகொண்டுதான் பிரிட்டிஷ் சக்கரவர்த்திகளும் சக்கரவர்த்தினிகளும் இருநூறு ஆண்டுகாலம் ஏகாதிபத்தியம் செலுத்தினார்கள். இன்றைய பிரிட்டிஷ் ராணி எலிசபெத் அம்மையாரும் இந்த மாளிகையில் தான் வாழ்கிறார். பக்கிங்காம் அரண்மனையை நேரில் பார்ப்பதற்கு முன்பு அது புதுடில்லியிலுள்ள ஜனாதிபதி அரண்மனையைவிடவும் பெரியதாக இருக்கக்கூடுமென்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால், நேரில் பார்த்த போது அடுத்தடுத்துள்ள பல கட்டிடங்களின் நடுவேயுள்ள ஒரு கட்டிடமாகத்தான் காட்சி அளித்தது. அங்கு நுழைவாயிலிலே குதிரைகள் மீது இரு காவலர்கள் கையில் ஒருவகை ஆயுதமேந்திக் காவல் புரியாவிட்டால் அதனை சக்கரவர்த்தினியின் அரண்மனை என்று நினைக்க முடியாது. மாளிகையின் பின்புறம் பெரிய திறந்த வெளி இருக்கிறது. அதைச் சுற்றிலும் மதில் போடப்பட்டு இருக்கிறது. அதுகூட, சென்னையில் கவர்னர் வாழும் ராஜ்பவனிலுள்ள திறந்த வெளிப் பிரதேசத்தை விடவும் சிறியதென்றே நினைக்கிறேன்.

பக்கிங்காம் அரண்மனை 1703-ல் கட்டப்பட்டது. 1825-ல் சிறிய மாறுதல் செய்யப்பட்டது. திரும்பவும்

1911-ல் அரண்மனையின் முகப்பு மட்டும் மாற்றப் பட்டது.

புது டில்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகை பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. இவ்வளவு பெரிய மாளிகையை பிரிட்டிஷ் சக்கரவர்த்தியின் பிரதிநிதிக ளான அன்றைய வைசிராய்கள் வாழ்வதற்குக் கட்டி வைத்த பிரிட்டிஷ் அரசு, சாம்ராஜ்ய சக்கரவர்த்திகள் வழிவழி வாழும் பக்கிங்காம் அரண்மனையை மிகவும் சாதாரண ஒரு கட்டிடமாகக் கட்டி வைத்தது சிந்தனைக் குரியதாகும்.

ஆளப்படுவோரைப் பயமுறுத்த வேண்டுமானால் ஆளுவோரின் மாளிகை ஆடம்பரமாக அமைய வேண்டும்போலும். ஏகாதிபத்திய பாணிப் பயமுறுத் தலைத்தான் காட்டுகின்றது பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் அமைக்கப்பட்ட புதுடில்லி ராஜ்பவனம். புதுடில்லி யில் வைஸ்ராய் மாளிகை பெரிய அளவில் கட்டி முடிக் கப்பட்டபோது, "ஏழை நாட்டின் வைஸ்ராய்க்கு இவ் வளவு பெரிய மாளிகையா?" என்று கேட்டனர் காங்கிரஸ் தலைவர்கள். இந்த மாளிகைக்கு "வெள்ளை யானை" என்றும் பெயர் வைத்தது காங்கிரஸ் கமிட்டி. "இந்தியா விடுதலை பெற்றால் டில்லியிலுள்ள வைஸ்ராய் மாளிகை ஏழைகளுக்கு மருத்துவமனை யாக்கப்படும்" என்று கூறினார் காந்தியடிகள். நாடு விடுதலை பெற்று கால் நூற்றாண்டு காலமாகியும் வைஸ்ராய் மாளிகை ஜனாதிபதி பவனம் ஆனதைத் தவிர ஏழைகளின் மருத்துவமனையாகவில்லை. மேலும் பல லட்ச ரூபாய் களைச் செலவழித்து டில்லி ஜனாதிபதி மாளிகை அடிக்கடி விஸ்தரிக்கப்படுவதைத்தான் கண்டு வருகிறோம்.

நான் இலண்டனில் இருந்த இரண்டு நாட்களில் அங்கு நாடாளு மன்றத்தின் கூட்டம் நடைபெற

வில்லை. மற்றும், பிரிட்டிஷ் அரசின் நிதி அமைச்சர் நான் இலண்டனி லிருந்த நாளிலேதான் இறந்துபோனு ராதலால், அரசு துக்கம் கொண்டாடிய நாட்களிலே பார்லிமெண்டுக் கட்டிடத்தைப் பார்க்க எனக்கு வாய்ப் பிருக்கவில்லை. அதன் வெளிப்புறத்தைத்தான் பார்க்க முடிந்தது.

இலண்டனிலே எனக்குப் பெரும் வியப்பைத் தந்த மற்ருெரு இடம், பிரதமர் உட்பட பிரிட்டிஷ் அமைச் சர்கள் அவ்வளவு பேரும் வாழும் 'டௌனிங் தெரு' வாகும். இதனை, 'தெரு' என்று சொல்வதைவிட, 'சந்து' என்று சொல்வது பொருந்தும். அதுவும் முட்டுச் சந்து. அமைச்சர்களின் வீடுகள் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டு ஒரே வரிசையில் இருக்கின்றன. ஆம், ஒரு அமைச்சரின் வீட்டுக்கும் இன்னொரு அமைச் சரின் வீட்டுக்கும் நடுவே இடைவெளி இல்லை. பல அடுக்கு மாடிகளைக் கொண்ட மாளிகைகளுமல்ல. இதை விடவும் வியப்பு என்னவென்றால், டௌனிங் தெரு விலோ, அமைச்சர்களின் வீடுகளுக்கு முன்புறமோ காவலர் இல்லாததாகும். இதற்கு அந்த நாட்டு அரசியல் கட்சிகளின்—அரசியல் உணர்வுடைய மக்க ளின் பண்பாடும் காரணம் போலும். காரணம் எதுவா யினும் சரி; அமைச்சர்களின் ஆடம்பரமற்ற குடியிருப்பு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

பிரிட்டிஷ் பேரரசின் நிதி அமைச்சர் மரணத்தை யொட்டி இலண்டன் நகரிலே எந்த விதமான பர பரப்போ, ஆர்ப்பாட்டமான நிகழ்ச்சிகளோ இருக்க வில்லை. நிதி அமைச்சரின் மரணச் செய்தி நாளிதழ் களிலே முன் பக்கத்தில் பிரதான தலைப்புகளுடன் பிரசுரமானதைத் தவிர, மற்றபடி, நகர் முழுவதும் சாதாரண நிலையிலேயே இருந்தது. நிதி அமைச்சரின்

வீடுள்ள டௌனிங் தெருவில்கூட அதிக பரபரப்புக் காணோம். மறைந்தவருக்கு அஞ்சலி செலுத்தச் செல்லும் பிரமுகர்களின் கார்கள் வருவதும் போவது மாக இருந்தன—அவ்வளவுதான்!

பிரிட்டிஷாரின் தாய் மொழியும் இந்தியர்களாகிய நமக்கு அன்னிய மொழியுமான ஆங்கிலத்தை ஏற்றுக் கொள்வதிலே தமிழ் நாட்டிலுள்ள பட்டதாரிகளில் பெரும்பாலோர் ஒருமித்த கருத்துடையவர்களாக இருக்கின்றனர். அதுபோல, ஆங்கிலேயரின் அரசியல் பண்பாட்டையும், நல்ல பழக்க வழக்கங்களையும் ஏற்றுக் கொள்வதிலே அக்கறை காட்டினுல், அதனை நான் வரவேற்பேன்.

காட்சி கண்காட்சியே !

இலண்டனிலே, கலையரங்குகள் இரண்டைக் கண்டேன். அவற்றுள் ஒன்றில், நகைச்சுவை நாடகம் பார்த்தேன். மற்றொன்றில் மெழுகு பொம்மைகள் வைக்கப்பட்டுள்ள காட்சியைக் கண்டேன். முன்னது கண்டு வியப்பும் திகைப்பும் அடைந்தேன். பின்னது கண்டு வியப்பும் மகிழ்ச்சியுமடைந்தேன்.

இலண்டனில் ஏதேனுமொரு நாடகத்தைப் பார்க்க நான் விரும்புவதாக என்னை விருந்தாளியாக ஏற்றுக் கொண்டிருந்த டாக்டர் ஈ. மீனாட்சிசுந்தரம் அவர்களிடம் கூறியிருந்தேன். இலண்டனில் ஆங்கில நாடகத்தைத்தானே பார்க்க முடியும்? நான் தங்கியிருந்த ஒய். எம். சி. ஏ. விடுதியிலிருந்த டாக்டர் கண்ணப்பர் ஷேக்ஸ்பியர் நாடகம் ஒன்றைப் பார்க்க ஒரு நாள் டிக்கெட் எடுத்து வைத்திருந்தார். ஆனால், மெழுகு பொம்மைக் காட்சிச் சாலைக்குச் சென்று திரும்பச் சிறிது நேரமாகிவிட்டதால், எங்களுக்கு ஷேக்ஸ்பியர் நாடகம் நடந்த அரங்கிலே இடம் கிடைக்கவில்லை. அதனால் வேறொரு நகைச்சுவை நாடகத்திற்குச் சென்றோம். அங்கு தியேட்டர் நிறைய மக்கள் குழுமியிருந்தனர். நாடகம் தொடங்கி அரைமணி நேரத்திற்குப் பிறகு என்னைத் திகைக்க வைக்கும் காட்சி ஒன்றினைக் கண்டேன். சுமார் 18 வயது இளம் பெண், ஒருகாட்சியிலே, இரண்டு நகைச் சுவைப் பாத்திரங்கள் உரையாடிக் கொண்டிருக்கும் நேரத்தில், முழு நிர்வாணத்துடன்

மேடையில் தோன்றினுள். இதனை நான் எதிர் பார்க்கவே இல்லை. இந்த நாடகத்திற்கு என்னை அழைத்துச் சென்ற டாக்டர் கண்ணப்பாவும் எதிர் பார்க்கவில்லை என்று பின்னர் அறிந்தேன். அந்தக் காட்சியில் ஒரு புறத்திலே நீர் நிறைந்த கண்ணுடித் தொட்டி இருந்தது. நிர்வாணமாகத் தோன்றிய பெண் ஒரு நிமிடம் அவைக்கு 'பேர்ஸ்' கொடுத்து நின்றுவிட்டு, பின்னர் கண்ணுடித் தொட்டியில் உள்ள நீரில் நீந்திய வண்ணம் குளித்தாள். இந்தக் காட்சியை விடவும் எனக்கு வியப்பைத் தந்த மற்றென்று என்னவென்றல்' முழு நிர்வாணத்தில் ஒரு பெண் பாத்திரம் மேடையில் தோன்றியபோது நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த மக்கள் எத்தகைய பரபரப்பையும் ஆரவாரத்தையும் வெளிப்படுத்தாததுதான். அந்தப் பாத்திரத்தை மக்கள் விஷேமாக ரசித்தார்கள் என்றும் சொல்வதற்கில்லை. பெண் ஒருத்தி நாடக அரங்கில் நிர்வாணமாகத் தோன்றுவது அந்த நாட்டில் இயற்கையாகிவிட்டது போலும்! இரண்டாவது முறையும் நிர்வாணக் காட்சி காட்டப்பட்டது. அதன் பின் நாடகக் கொட்டகையிலிருந்து நான் வெளியேறிவிட்டேன். நாகரிகம் முதிர்ச்சி அடைந்தால் நம் நாடும் இந்த இழி நிலைக்குச் சென்று விடுமோ என்னவோ? இப்பொழுதே தமிழ் நாட்டுத் திரைப்படங்களிலே அரைநிர்வாண நாகரிகம் அதிகரித்து வருகிறது. இந்த அரை நிர்வாணக் காட்சியை நம் நாட்டில் மக்கள் நன்கு ரசிக்கிறுர்கள். இளைஞர்கள் ஆரவாரம் கூடச் செய்கிறுர்கள். இதுதான் பிரிட்டனுக்கும் நம் நாட்டுக்குமுள்ள வேற்றுமை.

ஐரோப்பாவி லிருந்த நாட்களிமல திரைப்படக் காட்சி எதையும் நான் காணவில்லை, அதற்குப் போதிய அவகாசமில்லை,

இலண்டனில் பிரசித்தி பெற்ற மெழுகு பொம்மைக் காட்சிச் சாலை ஒன்றைக் கண்டேன். நான் இலண்டன் சென்றால், இந்தக் காட்சிச் சாலைக்கு அவசியம் சென்று பார்க்க வேண்டுமென்று அமைச்சர் சி. பா. ஆதித்தனார், அமைச்சர் சாதிக் பாட்சா ஆகியோர் நான் சென்னையிலிருக்கையிலேயே என்னிடம் கூறினர். உண்மையில் இந்தக் காட்சிச் சாலை மனிதன் ஒவ்வொருவனும் காண வேண்டியதாகும். மெழுகு பொம்மைத் தயாரிப்பில் முதன் முதலில் ஒரு பெண்மணி தான் ஈடுபட்டதாகச் சொல்லப்படுகிறது. உலகில் உள்ள அரசியல் பெரும் தலைவர்கள், விஞ்ஞான மேதைகள், மெஞ்ஞானியர், பிரசித்தி பெற்ற பிரிட்டிஷ் பிரதமர்கள் ஆகியோரின் வடிவங்கள் மெழுகால் செய்யப்பட்டு உயிர் ஓவியங்களாகக் காட்சி யளிக்கின்றன. இந்தியத் தலைவர்களிலே காந்தியடிகள், நேரு, இந்திரா காந்தி ஆகியவர்களுடைய உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. நேருவின் உருவம் அவ்வளவு சரியாக இல்லை. காந்தியடிகளின் உருவமும் சரியாக அமையாததால் சரிவர அமைப்பதற்கென்று காட்சிச் சாலையிலிருந்து அகற்றப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். ஆம், அடிகளாரின் உருவம் நான் போனபோது காட்சிச் சாலையில் இல்லை.

உலகில் தோன்றிய புகழ் மிக்க கொள்ளைக்காரர்கள், பல கொலைகளைச் செய்த கொடும்பாவிகள் ஆகியோருடைய மெழுகு உருவங்களும்—அவர்களுடைய வரலாற்றுக் குறிப்புக்களோடு—வைக்கப்பட்டுள்ளன. ஆம்; அறம், மறம் ஆகிய இரு துறைகளிலும் பிரபலம் பெற்றுவிட்ட அவ்வளவு பேருடைய உருவங்களையும் அங்கு காண முடிகின்றது. பிரெஞ்சுப் புரட்சி, பிரிட்டனில் நடந்த புரட்சிகள் ஆகியவை சம்பந்தப்பட்ட வர

லாற்றுக் காட்சிகளும் அங்கு உள்ளன. உண்மையில் உலக வரலாற்றை முறையாகப் படித்தறியத் தவறி விட்டவர்களுக்கு இந்தக் காட்சிச் சாலை கண்வழிக் கல்வி யளிக்கும் ஒரு கல்லூரியாகும். அமைதியாக ஒவ் வொரு சிற்பத்தையும் நன்கு கூர்ந்து பார்த்து அறிவு வளர்ச்சி , பெறவேண்டுமானல் பல நாட்களாகும். அவகாசமின்மையால் ஒன்றரை மணி நேரத்திலே பார்த்து முடித்தேன். தினமும் பெருங்கூட்டம் கியூ வரிசையில் நின்று இந்தக் காட்சிச் சாலையைக் காணு கின்றது. அதுவே கண்கொள்ளாக் காட்சி.

இந்தக் காட்சிச் சாலையிலேயே இன்னும் பல்வேறு சரித்திரத் தொடர்புடைய காட்சிகள் அமைந்துள்ளன. அத்துடன், வானவெளி மண்டலத்தின் அற்புதங்களைக் காமிரா மூலம் காட்டும் விஞ்ஞானக் காட்சிக் கூடம் ஒன்றுள்ளது. புத்தி யறிந்த சிறுவர்சிறுமியர்கூட வான மண்டலத்தைப் பற்றிய உண்மைகளை எளிதில் அறிந்து கொள்ள இந்தக் காட்சிச் சாலை நன்கு பயன்படுகிறது. இதனை உணர்ந்து தத்தம் குழந்தைகளுடன் பெற்றோர் கள் இந்தக் காட்சிச் சாலைக்கு வருகின்றனர். இதனை நான் நன்கு ரசித்தேன்.

அலுவலர்கள் பண்பாடு

இலண்டன் மாநகரிலே நான் கண்ட வேறொரு நிகழ்ச்சியும் என்னைப் பெரிதும் கவர்ந்தது. அது, அலுவலர்களின் பண்பாடாகும். அரசு அலுவலகங்களிலும், தனியார் துறை அலுவலகங்களிலும் சரியாக காலை 9 மணிக்கு வேலை தொடங்குகிறது. "இதுபற்றி யாரும் முணுமுணுப்ப தில்லையா?" என்று லண்டனிலுள்ள இந்தியர்களைக் கேட்டேன். "இல்லை" என்று அவர்கள் பதிலளித்தார்கள். லண்டனில் மட்டுமல்ல; மாஸ்கோ, பாரிஸ் நகரங்களில்கூட அலுவல் தொடங்கும் நேரம் காலை 9 மணிதான். குளிர் தேசத்திலே காலை 9 மணிக்கு அலுவலகம் போவதென்பது கொஞ்சம் கஷ்டந் தான். அப்படியிருந்தும், இந்த அலுவலக நேர விதி ஐரோப்பிய நாடுகளிலே கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப் படுகிறது.

காலை 9 மணியாகி 10 நிமிஷத்துக்குள் எல்லோரும் அலுவலகத்துக்கு வந்துவிடுகிறார்கள். வீதிகளிலே இரு மருங்கிலும் மோட்டார் கார்கள் நிறுத்தப்பட்டிருக்கும் காட்சி என்னைக் கவர்ந்தது. அலுவலகங்களிலே வெட்டிப்பேச்சுப் பேசி நேரத்தை அவர்கள் வீணடிப்ப தில்லை. காரியத்தில் கண்ணும் கருத்துமாக ஈடுபடு கின்றனர். தங்களிடம் வரும் வெளியார்களை வெட்டிப் பேச்சுப் பேச அவர்கள் அனுமதிப்பதில்லை. இதனை சமூக ஒழுக்கமாகவே அவர்கள் கடைப்பிடிக்கிறார்கள்.

நம்நாட்டிலே காலை 9 மணிக்கே அரசு அலுவலகங்கள் வேலை தொடங்க வேண்டுமென்ற முயற்சியை முன்னொருமுறை தமிழக நிதியமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் நடைமுறைக்குக் கொண்டுவரக் கருதினார். அதற்குக் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. சென்னையிலுள்ள செய்தி இதழ்கள் தலையங்கம் எழுதி அவரது முயற்சியைத் தாக்கின. அதனால் அவரது முயற்சி அப்போது கருவிலேயே செத்துவிட்டது.

பின்னர், தி. மு. கழகம் அரசாள வந்ததும் காலை 9 மணிக்கு அலுவலகங்களிலே வேலை தொடங்க வேண்டுமென்ற ஆணை பிறந்தது. சில மாதங்கள் அமுலிலும் இருந்தது. ஆனால், திரும்பவும் கடுமையான கண்டனம் பிறந்த காரணத்தால், இந்த வேலை நேர மாறுதலை ரத்து செய்துவிட்டது தி. மு. க. அரசு.

தமிழகத்தின் பருவநிலைக்கும் தமிழருடைய பழக்க வழக்கங்களுக்கும் காலை 9 மணிக்கு வேலை தொடங்குவது ஒத்து வராது என்று கூறப்படுகிறது. இது பசையற்ற வாதம். காலை 8 மணிக்கே தொழிற்சாலைக்குப் போகும் தொழிலாளிகளைப் பார்க்கிறோமே!

சென்னை நகரிலுள்ள அமெரிக்க—பிரிட்டிஷ் கான்சல் ஜெனரல்கள் அலுவலகங்களிலே காலை 9 மணிக்குத்தான் அலுவல் தொடங்குகிறது. ஆம்; அமெரிக்கா —பிரிட்டன் போன்ற நாடுகளிலுள்ள நடைமுறைப்படி! தமிழகத்தின் தட்ப வெப்ப நிலைக்கு மாறுபட்ட தட்ப வெப்ப நிலையுடைய ஐரோப்பாவில் பிறந்தவர்களால் காலை 9 மணிக்கே அங்கு அலுவல் தொடங்க இயலும் போது, நம்மவர்களால் ஏன் இயலாது?

இலண்டனிலே என் பார்வையில்பட்ட மற்றொன்றையும் நான் இங்கு குறிப்பிட வேண்டும். பறட்டைத் தலை

யும் கன்னங் கரேலெனக் கருத்த உடலும் கொண்ட நீக்ரோக்கள் லண்டன் நகரிலே வாழ்கின்றனர். இவர்களுக்கும், வெள்ளை நிறத்தவருக்கும் இடையே கலப்பு ஏற்பட்டு வருகிறது. இத்தகைய கலப்பிலே பிறந்தவர்கள் அழகாகக்கூட இருக்கின்றனர். கருமை குறைந்து வெண்மையும் கருமையும் கலந்த ஒரு தனி நிறத்துடன் காணப்படுகின்றனர். மூக்கும் முழியும்கூட நன்றாக அமைந்துள்ளன. அமெரிக்க வெள்ளையர்கள் நீக்ரோக்களைக் கொடுமையாக நடத்துவதுபோல் பிரிட்டனிலுள்ளவர்கள் நடத்துவதில்லை என்றறிந்தேன். நீக்ரோக்களுக்கும் லண்டனிலுள்ள இந்தியர்களுக்குமிடையே கூடக் கலப்பு ஏற்பட்டு வருகிறதாம். இந்தக் கலப்பில் பிறந்த ஒன்றிருவரையும் பார்த்தேன். ஆனால் இது மிகவும் அரிதாகவே நிகழ்கின்றதாம்.

நான் லண்டனிலிருந்தபோது பிரிட்டிஷாரின் தேசபக்தி பற்றி நன்கு ஆராய்ந்தேன். அவர்களுக்குத் தங்கள் நாட்டிடமும் மொழியிடமும் எல்லையற்ற பற்று இருக்கிறது. பழமையிலே அவர்களுக்குள்ள பற்றுபோல வேறு யாருக்கும் இருக்குமென்று சொல்ல இயலாது. கட்டிடங்களிலேகூட பழமையைக் காப்பாற்றுகின்றனர். செங்கல்வரிசை கண்ணுக்குத் தெரியும் வகையில் கட்டிடங்களை அமைக்கின்றனர். ஆம்; செங்கற் சுவர்களுக்கு மேல்பூச்சுப் பூசுவதில்லை. லண்டனிலுள்ள மிகப்பெரும்பாலான கட்டிடங்கள் இப்படித்தானிருக்கின்றன. பழக்கவழக்கங்களிலே கூட அவர்கள் பழமை பாராட்டுகின்றனர். இந்தியாவை பிரிட்டிஷார் ஆண்ட காலத்திலே நம் நாட்டினரில் படித்த மக்கள் தங்கள் பழமையைத் துறந்து எடுத்ததற் கெல்லாம் ஐரோப்பிய நாகரிகத்தைக் காப்பியடித்தனர். இந்த அவலம் பிரிட்டிஷ் ஆட்சி அகன்ற பின்னரும் நம் நாட்டைவிட்டு

அகலவில்லை. ஐரோப்பிய நாகரிக மோகம் கல்வி கற்றோர் தொகை வளர வளர அத்துடன் கூடவே சேர்ந்து வளர்கிறது. காரணம், நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் வலுப்பெறுமைதான்.

இலண்டன் மாநகரிலே தெருக்களுக்கும் பூங்காக்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும் ஆங்கில அறிஞர்கள், கவிஞர்கள், விஞ்ஞானிகள், அரசியல் தலைவர்கள் ஆகியோருடைய பெயர்கள் சூட்டப் பட்டுள்ளன. அந்தச் சான்றோர்கள் வாழ்ந்த இடங்கள் —பயன்படுத்திய பொருள்கள் ஆகியவை கூடப் பாது காக்கப்பட்டு வருகின்றன.

நம்நாட்டிலே இந்த நிலை இல்லாததை நினைந்து லண்டன் வீதிகளிலே நடமாடிய நேரங்களில் நான் வேதனையடைந்தேன். இங்கு ஆங்கிலேயர் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் சூட்டப்பட்ட அன்னியப் பெயர்கள்கூட இன்னும் அகற்றப்படவில்லை. அந்தப் பெயர்கள் நீடிப்பது அவமானம் என்றுகூடக் கருதப்படவில்லை.

இலண்டனுக்கு 100 மைல் தொலைவில் பிரபல நாடகக் கவிஞரான ஷேக்ஸ்பியரின் நினைவாலயம் இருப்பதாகக் கேள்விப்பட்டு, அதனைப் பார்க்க விரும்பினேன். நான் ஆங்கில மொழியிலுள்ள ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் படித்தவனல்லன். ஷேக்ஸ்பியரின் அருமை பெருமைகளைப்பற்றி நம்மவரில் ஆங்கிலம் படித்தவர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன். தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ள ஒன்றிரு நாடகங்களைப் படித்திருக்கிறேன். சென்னை நகரிலே அமெரிக்க நாடகக் குழுவினர் நடத்திய இரண்டு நாடகங்களைப் பார்த்திருக்கிறேன்.

உலகப் புகழ்பெற்ற ஒரு நாடகக் கவிஞனின் நினைவாலயத்தைப் பார்க்க—அந்தக் கவிஞனுக்கு அஞ்சலி

செலுத்த—கவிதை இலக்கியத்திலே பற்றுடைய எவரும் விரும்புவது இயற்கை. ஆனல் நான் பிரிட்டனில் இரண்டு நாட்களுக்கு மேல் தங்க இயலாமல் போனதால் ஷேக்ஸ்பியரின் நினைவாலயத்தைப் பார்க்கப் போகவில்லை.

எனது சுற்றுலா பற்றிய 'கதை'யை முடிக்கு முன்பு ஐரோப்பாவின் அரசியல் நிலை பற்றி என் இதயத்தில் பிரதிபலித்த எண்ணங்களை சிறிதளவேனும் கூற வேண்டியது அவசியமாகிறது. நான் ஐரோப்பா சென்றதே சமஷ்டி அரசியல் பற்றி அறிந்து கொள்ளத் தானே!

ஐரோப்பாவின் அரசியல் நிலை

நானும் என் தலைமையில் இயங்கும் தமிழரசுக் கழகத்தைச் சார்ந்தவர்களும் "மத்தியில் சமஷ்டி; மாநிலங்களில் சுயாட்சி" என்னும் கொள்கையுடையவர்களாதலால், இதற்கு ஆதரவான சான்றுகளை ஐரோப்பாவிலிருந்து திரட்டிக்கொண்டுவர முயன்றேன். தாயகத்திலிருந்து புறப்படும்போதே இந்த எண்ணம் எனக்கு இருந்தது. அதனால், ஐரோப்பாக் கண்டத்தின் பூகோளப் படம் ஒன்றையும், ஐரோப்பாவின் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறும் நூல் ஒன்றையும் என்னுடன் எடுத்துச் சென்றேன். விமானப் பயணத்தின்போதும், ஓட்டல்களில் தனித்திருக்க நேர்ந்த போதும் என் கையிலிருந்த பூகோளப் படத்தை அடிக்கடி பார்ப்பதும், ஐரோப்பாவின் வரலாற்றைப் படிப்பதுமாக இருந்தேன்.

'ஐரோப்பா' என்பது இன்றுள்ள அமைப்பில் ஒரு தனி நாடன்று; பல நாடுகள் கொண்ட ஒரு கண்டம். பிரிட்டனைப் போன்ற சில நாடுகள் மலையரணும் கடல் அரணும் சூழ்ந்த தீவுகளாகத் தோன்றுகின்றன. ஆயினும், மொத்தத்தில் ஐரோப்பா முழுவதும்தொடர்ந்தாற் போலுள்ள ஒரே நிலப்பரப்பென்றே சொல்லி விடலாம். அந்தக் கண்டத்தில் வாழும் மக்கள் அனைவருமே வெள்ளை நிறத்தினர். உடையாலும் ஏறக்குறைய ஒரே வகையினர். உண்ணும் உணவாலும் கிட்டத்தட்ட ஒரு

மைப்பாடு உடையவர்களே. உண்ணுகின்ற முறையாலும் அவர்களிடையே ஒருமைப்பாடு உண்டு. கரண்டியும், முள்ளும், கத்தியும் ஐரோப்பியர் அனைவருக்கும் உணவு நேர் ஆயுதங்கள்.

சுருங்கச் சொன்னல், பழக்க வழக்கங்களிலே ஐரோப்பியர் அனைவரிடையேயும் ஒரு பொதுத் தன்மை உண்டு. மதத்தாலும் அவர்கள் அனைவரும் பெரும்பாலும் கிறித்துவர்களே. தட்ப வெப்பத்திலும் கூட ஐரோப்பிய நாடுகளிடையே அதிக வேறுபாடுகள் இல்லை என்றே நான் கருதுகிறேன். இத்தனை விஷயங்களில் ஒருமைப்பாடு இருந்தும் ஐரோப்பாவுக்கென ஒரே அரசு இல்லை. ஒற்றை அரசின் கீழ் ஐரோப்பா இல்லாவிடினும், அங்கு ஒரு சமஷ்டி அரசேனும் உருவாகியிருக்கலாம். அதுகூட இல்லை. ஏன் இந்த நிலை? இந்திய அரசியல் வாதிகள் – குறிப்பாக, தமிழக அரசியல் வாதிகள், இன்றைய ஐரோப்பாவின் அரசியல் நிலையை ஆழ்ந்து சிந்தித்து அதிலிருந்து பாடம் பயில வேண்டும்.

இந்தியாவிலே குமரி முனை தொடங்கி இமய மலை வரை ஒருவர் பிரயாணம் செய்வாரானல், உடையாலும் உணவாலும் இதர பழக்க வழக்கங்களாலும், மதத்தாலும், மொழியாலும் வேறுபட்ட மக்களைக் காணலாம்.

புதிதாக இந்தியாவில் புகும் ஒருவர் எத்தனை வேற்றுமைகள் இந்தியாவிலுண்டோ, அத்தனையையும் பார்த்த அளவிலேயே புரிந்து கொள்ளலாம். அதற்காக, இந்தியாவின் வரலாற்றைப் படித்தறிய வேண்டிய அவசியம்கூட இல்லை. தட்பவெப்ப நிலையிலும் வேறுபாடு உண்டு. இத்தனை வேறுபாடுகளுக்கிடையே இந்தியாவிலுள்ள ஒரே ஒருமைப்பாடு மண் பரப்புதான்.

ஐரோப்பாவில் அப்படி இல்லை. மாஸ்கோவிலுள்ளவர்களைப் பார்த்துவிட்டு, பாரிஸுக்கு வந்தால், மொழி வேறுபாடு தவிர, வேறு எந்த வேறுபாடும் நம் கண்களுக்குத் தெரியவில்லை. பாரிசிலிருந்து லண்டனுக்கு வந்தால், அங்கும் அப்படித்தான். இப்படி, பலவகையாலும் ஐரோப்பாக் கண்டத்தவர்களிடையே ஒருமைப்பாடு இருந்தும், அந்தக் கண்டம் அரசியல் ரீதியில் ஒருமைப்பட்டு இருக்கவில்லையே, அதற்குக் காரணம் என்ன? எனக்குத் தெரிந்த ஒரே காரணம்—வலுவான காரணம்—வரலாற்று ரீதியான காரணம் மொழி வேறுபாடுதான். 'ஒரு மொழிக்கு ஒரு நாடு' என்பது ஐரோப்பாவில் நிலைபெற்றுவிட்ட அரசியல் தத்துவமாகி விட்டது.

ஐரோப்பா முழுவதற்குமாக ஒரு பொது மொழி இல்லை. ஆங்கில மொழி வழங்கும் பிரிட்டனுக்கு அருகிலுள்ள பிரெஞ்சு நாட்டு மக்கள் கூட, ஆங்கிலத்தைப் பொது மொழியாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஐரோப்பாவின் பொது மொழி தங்களது பிரெஞ்சு மொழிதான் என்றுகூட அவர்கள் சொல்லுகின்றனர். ஐரோப்பா முழுவதற்கும் ஒரு பொது மொழியைப் படைக்க முன்னம் பல நேரங்களில் எடுத்துக்கொண்ட முயற்சிகூட வெற்றி பெறவில்லை என்று வரலாறு சொல்லுகிறது.

ஆங்கிலத்தை ஐரோப்பாவின் பொது மொழியாகக் கொள்வது ஓரளவு சாத்தியமென்றே எனக்குத் தோன்றுகிறது. ஆனால், அதைச் சாத்தியப்படுத்தும் மனப்பான்மை ஆங்கிலம் வழங்காத நாடுகளுக்கு இருக்கவில்லை. மக்களுடைய வாழ்க்கையிலே அவரவர் தாய் மொழிக்கு — அந்தந்த நாட்டு மொழிக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பதனை ஐரோப்பாவில் நான் கண்கூடாகக் கண்டேன். தங்கள் மொழிக்

குப் போட்டியாகப் 'பொதுமொழி' என்ற பெயரில் இன்னெரு மொழியை ஏற்க ஐரோப்பாவிலுள்ள எந்த ஒரு நாட்டினரும் விரும்பாததனுல்தான் அந்தக் கண்டத்தில் ஒரு சமஷ்டி அரசு உருவாகவில்லை.

இதே நேரத்தில் மொழி வேறுபாடுடைய பல நாடு கள் சமஷ்டியில் இணைந்து வாழ முடியுமென்பதையும் சோவியத் ருஷ்யாவில் கண்டேன். அங்கு மொழி வேறு பாடுடைய 15 நாடுகள் சம உரிமையுடன் சோவியத் சமஷ்டியில் இணைந்து வாழ்கின்றன. சமஷ்டியிலுள்ள ஒவ்வொரு நாடும் சுய ஆட்சியுள்ள குடியரசுப் பிரதேசமாகும்.

சோவியத் ருஷ்யாவின் அனுபவத்தை நினைவில் கொண்டுபல நாடுகளாகச் சிதறிக் கிடக்கும் ஐரோப் பாவைப் பார்த்தால் ஒரு உண்மை நமக்குப் புலனு கின்றது. அதாவது, ஐரோப்பிய நாடுகளிலே ஒவ் வொன்றும் பூரண சுயாட்சியுடைய சோஷலிசக் குடி யரசுகளாக அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே அந்த கண்டம் ஒரு சமஷ்டியாக அமைய முடியும் என்பதாகும்.

ருஷ்யாவிலே ஒவ்வொரு மாநிலமும் தன் தனக் கெனத் தனியே அரசியல் சட்டத்தை, ராஜ்யக் கொடி யைப் பெற்றிருக்கின்றன. இந்த உரிமைகள் இந்திய மாநிலங்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லையென்பது நினைவில் கொள்ளத்தக்கது.

ருஷ்யா, ஐரோப்பாவின் ஒரு பகுதியையும் ஆசியா வின் ஒரு பகுதியையும் தன்னகத்தே கொண்டு-இந்த இரு வேறு கண்டங்கள் இணைந்த-ஒரு உபகண்டம் போன்றிருப்பினும், அது ஒரு சமஷ்டியாக இயங்க முடிந்திருக்கிறதென்ருல், ருஷ்யா நீங்கலாக உள்ள ஐரோப்பா மட்டும் ஏன் ஒரே சமஷ்டியாக இயங்க முடியாது?'-என்ற வினு என்னுள் எழுந்தது. அதற்குத்

தடையாக இருப்பது மொழி வேறுபாடு மட்டுமல்ல; முதலாளித்துவ சக்தியுமாகும்.

ஐரோப்பா சோஷலிச சித்தாந்தத்தை விஞ்ஞான ரீதியில் ஏற்றுக்கொள்ளுமானால், நாளைக்கே அது ஒரு சமஷ்டியாக இணைய முடியும். மொழி வேறுபாடுடைய பல்வேறு நாடுகளை இணைப்பதற்கான ஒரு வலுவான சக்தி உண்டென்றால், அது சோஷலிசமாகத்தான் இருக்க முடியும். இதற்கு சோவியத் ருஷ்யாதான் சிறந்த சான்று.

மொழி வேறுபாடும் மத வேறுபாடும் கொண்ட பல மாநிலங்களுடைய ஒரு உப கண்டமான இந்தியா ஒரு சமஷ்டியாக இருக்க வேண்டுமானால், அது சோஷலிச அடிப்படையில்தான் சாத்யமாகும். ஆங்கில ஆட்சியிலே இந்தியா ஒரு சமஷ்டி நாடாக இருக்க முடிந்ததென்றால், அதற்குக் காரணம் அன்னிய ஆதிக்கத்தின் கீழ் நாடு அடிமைப்பட்டிருந்ததுதான். வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் மக்களுடைய உரிமை உணர்ச்சி வெளிப்படுவதற்கு வாய்ப்பில்லாமலிருந்ததுதான். ஆகவே, ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் நிலவியது போன்ற ஒருமைப்பாடு எதிர் காலத்திற்கும் நீடிப்பதற்கில்லை. இதனாற்றான், இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்து போக நேரிட்டது. 'எஞ்சிய இந்தியா' வெள்ளையர் வெளியேறிய பின்னர் கால் நூற்றாண்டுக் காலமாக ஒருமைப்பாட்டுடன் இருந்துவர முடிகிறதென்றால், அது மக்களுடைய விருப்பத்தின் பேரில் அல்ல. காஷ்மீரிலும் நாகாலந்திலும் பஞ்சாபிலும் பிரிவினைக் கிளர்ச்சிகள் இன்றளவும் இலை மறை காயென இருந்து வருகின்றன. காஷ்மீரம், இஸ்லாமியர் நிறைந்த மாநிலம். நாகாலந்து, கிறித்துவர் மிகுதியாக உள்ள மாநிலம். பஞ்சாப், சீக்கிய மதத்

தவர் அதிகமாகவுள்ள மாநிலம். இந்த மாநிலங்களிலே பிரிவினைக் கிளர்ச்சி வலுத்து வருவது மத வேறுபாடு களின் விளைவாகும்.

எஞ்சிய மாநிலங்கள் அனைத்திலும் இந்துக்களே மிகுதியாக வாழ்கின்றனர். ஆனால், அவர்களிடையே வேறுபாடே இல்லையென்றும் சாதிப்பதற்கில்லை. மத ஒருமைப்பாடு உள்ள இந்து மாநிலங்களுக்கிடையேயும் மொழி வழிப்பட்ட இன வேறுபாடு இருந்துவரக் காண் கிறோம். அதனால்தான் தமிழகம் போன்ற மாநிலங் களில் மாநில சுயாட்சி உணர்ச்சி வலுப்பெற்று வரக் காண்கிறோம். இந்த நிலை நீடிக்குமானால், இந்தியாவில் இன்று காணப்படும் அரசியல் ஒருமைப்பாடு எதிர் காலத்தில் நீடித்து நிலைத்திருக்குமென்று சொல்வதற் கில்லை.

சோஷலிச சித்தாந்தத்தை இந்தியப் பெருநாடு உறுதியாக ஏற்றுக்கொள்ளுமானால், அந்த அடிப்படை யில் மொழி வழி மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி வழங்கப்படுமானால், இந்தியாவில் இப்போதுள்ள தேசிய ஒருமைப்பாடு மறுமலர்ச்சி பெற்று நிரந்தரமடையும்.

நடைபெற்று முடிந்த மறு தேர்தலிலே அனைத்து மாநிலங்களிலும் மக்கள் ஒரே சீரான தீர்ப்பை வழங்கி யிருப்பதைக் காண்கிறோம். 'காங்கிரஸ்' என்ற போலிப் பெயரால் விளங்கிவந்த சிண்டிகேட் கட்சி, அனைத்து மாநிலங்களிலும் படுதோல்வியடைந்து விட்டது.இதற்கு எதிராக, சோஷலிச சக்தி வெற்றி பெற்றிருக்கிறது. இதி லிருந்து நமக்குக் கிடைத்துள்ள பாடத்தை நினைவிற் கொள்ள வேண்டும். மொழி வேறுபாடுடைய—மத வேறுபாடுடைய மாநிலங்கள் அனைத்தும் தேர்தல் களத் திலே ஒரேவிதமான முடிவுக்கு வர முடிந்ததென்றால், நாடு முழுவதிலும் இந்திரா காங்கிரசும் கம்யூனிஸ்டுக்

கட்சிகளும், தென்னகத்தில் தி. மு. கழகமும் சோஷலிச சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டு, அந்த அடிப்படையில் மக்களுடைய ஆதரவைக் கோரியதுதான். இதனுல், சோஷலிச அடிப்படையில்தான் இந்தியாவில் தேசிய ஒருமைப்பாடு ஏற்பட முடியும் என்பது தெளிவாகி விட்டது. ,

தாயகம் திரும்பினேன் !

ஜூலை 23-ல் லண்டனிலிருந்து தாயகம் புறப்படத் தயாரானேன். அன்று எனக்கிருந்த மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது. ஆம்; 18 நாட்களுக்குப் பின்னர், திரும்பவும் தமிழகத்தைக் காணப் போகிறோம் என்பதுதான் என் மகிழ்ச்சிக்குக் காரணம்!

'சொர்க்கம்' மிக மிகச் சிறந்ததுதான் என்றாலும், அதனினும் சிறந்தது தாயகம் என்கிறார் பாரதியார். இதனை, 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே' என்னும் வரிகளால் அறியலாம்.

லண்டன் வாசம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சோஷலிச பூமியான மாஸ்கோ நகரில் இருந்த நாட்களிலே மனதில் மகிழ்ச்சி இருந்ததென்றாலும், எனக்கு ருஷ்ய மொழி தெரியாததாலும், அங்குள்ளோர் ஆங்கில மொழியில் பேசாததாலும் ருஷ்யர்களின் மத்தியிலே ஊமையாகவே காலங்கழித்தேன். பாரிசிலும் பிரெஞ்சுக்காரர்களைப் பொறுத்தவரையில் அதே நிலைமைதான் பாரிசில் உலகத் தமிழ் மாநாடு நடந்த நாட்களிலே அம்மாநாட்டுப் பிரதிநிதிகளான தமிழர் மத்தியிலே இருந்தேனாதலால், கலகலப்புடன் இருந்தேன். மாநாடு முடிந்த பின் பாரிசில் தங்கிய இரண்டு நாட்கள் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. லண்டன் நகரத்திலே நான் அப்படி இல்லை. லண்டனிலேயே தங்கி வாழும்

தமிழர்களை, தெருக்களில் நடக்கும்போதும், ஓட்டல் களில் உண்ணும்போதும் சாதாரணமாகச் சந்திக்க முடிந்தது. எல்லாவற்றையும்விட, தமிழ் நாட்டு உணவு லண்டனில் கிடைத்ததால் எனக்கு அங்கு உணவுப் பிரச்னையே இல்லை.

ஆங்கிலம் படித்த மேதைகள் சிலர், தாங்கள் லண்டனில் இருந்தபோது தாயகத்திலிருந்தது போன்ற உணர்வு தங்களுக்கு ஏற்பட்டதாக எழுதியிருக்கின் றனர். "உலகம் சுற்றினேன்" என்னும் தமது நூலிலே என் பெருமதிப்புக்குரிய நண்பர் திரு. சி. சுப்பிரமணியம் இப்படித்தான் கூறுகிறார். ஆனால், எனக்கென்னவோ லண்டனிலிருந்த நாட்களிலே, தாயகத்தி லிருப்பது போன்ற உணர்வு ஏற்படவில்லை. ஒருகால் நான் ஆங்கில மொழியில் அதிகப் புலமை பெறாதது காரண மாக இருக்கலாம். ஆனால், ஒரு அயல் மொழியிலே நாம் புலமை பெற்று விடுவதனாலேயே அந்த மொழிக் குரிய நாடு நமக்குத் தாயகமாகி விடுவதில்லை.

ஜூலை 23-ம் தேதியன்று காலை அதுவரை நான் தங்கியிருந்த ஒய். எம். சி. ஏ. ஓட்டலை விட்டுப் புறப் பட்டேன். அங்கு என் சகாக்களாக இருந்த மதுரை கண் மருத்துவர் டாக்டர் வேங்கடசாமி, சென்னை மேரிராணி கல்லூரியின் முன்னாள் முதல்வர் ஐராவதி, டாக்டர் கண்ணப்பன் ஆகியோரிடம் பிரியா விடை பெற்றுக் கொண்டேன். இரண்டு நாள்தான் ஒய். எம். சி. ஏ. ஓட்டலில் தங்கி இருந்தேன் என்றாலும், மேற் சொன்ன மூவரும் என் மனத்தைப் பெரிதும் கவர்ந்து விட்டனர். எனக்கு மிகவும் உதவிகரமாக இருந்தனர். செல்வி ஐராவதி அம்மையார், உயர்தரக் கல்வி கற்று உயர்ந்த அந்தஸ்தில் இருக்கிறார், என்றாலும், எனது

இயலாமையை அறிந்து எனக்குத் துணி வெளுத்துக் கொடுக்கவும் அன்போடு முன்வந்தார்.

ஒருநாள், லண்டனில் ஒரு ஓட்டலில் நான் என் மூக்குக் கண்ணாடியைத் தொலைத்து விட்டேன். இது எனக்கு சகஜம். ஆனால், அயல்நாட்டில் மூக்குக் கண்ணாடியை இழந்து விட்டதால் கண்ணையே இழந்தவன் போலானேன். என் ஓட்டல் சகாவான டாக்டர் வேங்கடசாமி என் கண்களைப் பரீட்சை செய்யாமலே, தானே கண்ணாடிக் கடைக்குச் சென்று, தன்னுடைய சொந்தச் செலவில் எனக்கு மூக்குக் கண்ணாடி வாங்கி வந்து கொடுத்தார். இந்த அன்பரிடமிருந்தும் விடை பெற்றுக்கொண்டேன்.

லண்டனிலுள்ள யாழ்ப்பாணத் தமிழர்கள் சங்கத் தலைவர் சபாபதி பிள்ளை, நான் தங்கி இருந்த ஒய். எம். சி. ஏ. ஓட்டலுக்கு 15 மைல் தொலைவில் குடியிருக்கிறார். அப்படி இருந்தும், என்னை வழியனுப்பி வைக்க அதி காலை 6 மணிக்கே ஒய். எம். சி. ஏ. ஓட்டலுக்கு வந்து விட்டார்.

எல்லா வகையிலும் பாரிசிலிருந்து லண்டன் வரை எனக்கு உதவிகரமாக இருந்து வந்த டாக்டர் ஈ. மீனாட்சிசுந்தரம் எனது பயண ஏற்பாடுகளை யெல் லாம் சரிவரக் கவனித்தார்.

லண்டனிலிருந்து பஸ்ஸில் புறப்பட்டு 15 மைல் தொலைவிலுள்ள விமான நிலையம் போய்ச் சேர்ந்தோம். லண்டனில் டாக்சிகள் நிறைய இருக்கின்றன. டாக்சி போக்கு வரத்து ஏற்பாடும் பிரமாதமான முறையில் அமைந்திருக்கின்றன. ஆயினும், என்போன்ற அயல் நாட்டுப் பயணிகளுக்கு டாக்சிக்குப் பணம் கொடுத்துக் கட்டி வராது. அதனால், லண்டனிலிருந்த நாட்களில்

பெரும்பாலும் பஸ்ஸையும் மின்சார ரயில் வண்டியை யுமே உபயோகித்தேன். சென்னையில் இந்த வண்டிகள் இருந்தும் அவற்றில் சமீப ஆண்டுகளில் நான் பயணம் செய்யவில்லை யல்லவா? அதனால், லண்டனில் பஸ்ஸிலும் மின்சார ரயிலிலும் பயணம் செய்வது இன்பமாகவே இருந்தது.

காலை 9 மணிக்கு லண்டனிலிருந்து விமானம் புறப் படுவதாகத் தகவல் தரப்பட்டதால், 8 மணிக்கெல்லாம் நண்பர்கள் சபாபதிப் பிள்ளை, டாக்டர் மீனாட்சி சுந்தரம் ஆகியோரின் துணையோடு விமான நிலையத்தை அடைந்து விட்டேன்.

லண்டன் விமான நிலையம் மிகவும் பெரியது. ஒரு நாளைக்கு 900 விமானங்கள் போக்கு வரத்து செய் கின்றன. சுமார் 60 ஆயிரம் பிரயாணிகள் போக்கு வரத்து செய்கின்றனர். அதனால், என்போன்ற அயல் நாட்டுப் பயணி ஒருவர் விமானப் பயணத்தில் ஒவ் வொரு விநாடியும் எச்சரிக்கையாக இருந்தா லொழிய பயணத்தில் கோளாறு ஏற்பட்டுவிடும்.

அப்படி, எனக்கெதுவும் ஏற்பட்டு விடாதவாறு பார்த்துக் கொள்வதற்காக, 'ஏர்இந்தியா' விமான அதி காரி திரு கேசவன் அவர்கள், லண்டன் விமான நிலைய அதிகாரிகளிடம் சொல்லி, எனக்குத் தேவைப்படும் உதவிகள் எல்லாம் கிடைக்க ஏற்பாடு செய்து கொடுத் தார்.

காலை 9 மணிக்குப் புறப்படுவதாக இருந்தவிமானம், 'இதோ புறப்படுகிறது, இதோ புறப்படுகிறது' என்று காலம் கடத்திக்கொண்டே வந்து பிற்பகல் மூன்று மணிக்குத்தான் புறப்பட்டது. 6மணி நேரத்தை விமான தளத்திலேயே கழிப்பதென்பது கஷ்டமாக இருந்தது.

நல்லவேளையாக எனது விமானம் புறப்படுகிறவரை டாக்டர் மீனுட்சிசுந்தரம் என்னுடனேயே இருந்ததால் கஷ்டத்தைச் சமாளித்துக் கொள்ள முடிந்தது. விமான நிலைய அதிகாரி, தனது அலுவலக அறையிலே என்னைத் தங்க வைத்து என்னுடைய தேவைகளைக் கவனித்துக் கொள்ள ஆங்கிலப் பணிப் பெண் ஒருத்தியையும் ஏற்பாடு செய்திருந்தார்.

'ஏர் இந்தியா' அதிகாரியின் அலுவலகத்திலிருந்த போது தமிழ் நாட்டுத் தினசரிப் பத்திரிகை ஒன்றின் நான்கு நாள் பிரதிகள் (ஜூலை 18 முதல் 21 வரை) என் கைக்குக் கிடைத்தன. அவற்றைப் பார்த்ததும் எனக்குப் பேரானந்தமாக இருந்தது. அதுவரை நான் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளைப் பார்க்கக்கூட இல்லை. அதனுல், தமிழ் நாட்டின் அரசியலை அறிந்துகொள்ள இயலாதவனுனேன். இத்தனைக்கும் எனக்குக் கிடைத்தது 'இந்து' பத்திரிகையின் பிரதிகளே. மேட்டுக்குடி மக்களின் செய்திகள்தானே அதில் வரும். இந்தப் பிரதிகளைப் படித்தபோதுதான் ராஜாஜி—காமராஜ் திடீர் உறவு பற்றி முதன் முதலாக அறிந்துகொண்டேன். அதனைப் படித்தபோது என்னை யறியாமலே வாய்விட்டுச் சிரித்தேன்.

லண்டன் விமான தளத்திலே தமிழ் எம். ஏ. ஒருவர் எனக்கு நண்பரானுர். அவரது பெயர் திரு. காசி. டென்மார்க் நாட்டில் தமிழாசிரியராக இருந்து வருகிறுர். டென்மார்க் பெண்ணையே மணந்து வாழ்க்கை நடத்தி வருகிறுர். "முற்றிலும் அன்னியச் சூழ்நிலையில் வாழ்வது தமிழ்ப் பண்டிதரான தங்களுக்குப் பிடித்திருக்கிறதா?" என்று நான் அவரைக் கேட்டேன்.

"அயல் நாட்டினருக்குத் தமிழ் கற்றுக் கொடுத்து தாய்மொழிக்குத் தொண்டு செய்கிறேம் என்ற மன

நிறைவோடு காலந் தள்ளுகிறேன்" என்று அவர் கூறினார். இப்படிக் கூறியபோது அவரது முகத்தில் மகிழ்ச்சி வெளிப்படவில்லை. இவரைப் போன்று எத்தனையோ தமிழர்கள் அயல் நாட்டவரை மணந்து மாமியார் நாட்டிலேயே வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்களிலே சிலரை உலகத் தமிழ் மாநாட்டிலே பார்த்தேன்.

தமிழ்ப் பேராசிரியர் காசி அவர்கள், ஆங்கிலம் பயின்றிருப்பதோடு, ஜெர்மன் — பிரெஞ்சு — இத்தலி ஆகிய வேறு மொழிகள் பலவற்றிலும் சரளமாகப் பேசுகிறார். இவரும் நான் வந்த விமானத்திலேயே தாயகம் திரும்பினார். நான் பயணம் செய்த விமானம் சரியாக 3 மணிக்கு லண்டன் மாநகரை விட்டுப் புறப்பட்டது. விமானம் தளத்தை விட்டு மேலே எழுந்து வானத்தில் வட்டமிட்டபோது லண்டன் மாநகரம் முழுவதையும் வான வெளியிலிருந்து என்னால் பார்க்க முடிந்தது. நாகரிகத்தில் தனிசிறந்து விளங்கும் லண்டன் நகர் முழுவதையும் வான வெளியிலிருந்து பார்த்தபோது மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்ததென்றாலும், இரவு நேரத்தில் விளக்கொளியில் பார்த்து மகிழ வாய்ப்பில்லாமல் போய்விட்டதே என்று வருந்தினேன்.

தமிழக அரசு, விமானப் பயணத்துக்கு விசேஷ வகுப்பு டிக்கெட்டை எனக்குத் தந்திருந்ததால், மிகுந்த வசதியோடு பயணம் செய்தேன். முன்னம் பலமுறை மலாசியா, சிங்கப்பூர், பர்மா ஆகிய அயல்நாடுகளுக்குச் சென்று திரும்பியிருக்கிறேன் என்றாலும், விமானத்தில் விசேஷ வகுப்பில் பிரயாணம் செய்வது இதுதான் முதல் முறை. என் உடல் நலனைக் கருதி தமிழக அரசு இந்த வசதியை எனக்கு வழங்கியிருந்தது. விமானம் மேற்கு ஜெர்மனியின் தொழில் நகரமான 'பிராங்க் பர்ட்'டை அடைந்தபோது, அங்கிருந்த கடிகாரக் கடை

யொன்றில் கைக்கடிகாரம் ஒன்றை வாங்கினேன். விலை 5 பவுன். விமான தளத்தில் வாங்கினால் சுங்க வரி இல்லை என்று சொன்னார்கள். அதனால், அங்கு வாங்கினேன். என் ஐரோப்பியச் சுற்றுலாவில் நான் வாங்கி வந்த ஒரே பொருள் இதுதான்.

விமானம் ரோம் நகரை அடைந்தபோது என் மனத்துள் புனிதமான ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. ரோம், கிறித்துவர்களின் புனிதப் பதி அல்லவா! விமான நிலையம் ரோம் நகருக்கு சற்றுத் தள்ளியிருப்பதால் விமானத்திலிருந்தபடி நகரம் முழுவதையும் பார்க்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இருந்தாலும் புனித போப்பாண்டவர் வசிக்கும் வாடிகன் பகுதி தெரிந்தது. விமானம் ஆல்ப்ஸ் மலைமீது பறந்து வந்த போது அம்மலையின் பிரம்மாண்டமான தோற்றத்தைக் கண்டு என் மனம் கவர்ச்சியடைந்தது. டில்லியிலிருந்து மாஸ்கோ சென்றபோது இமய மலைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தேன் என்றாலும், ஆல்ப்ஸ் மலைக்காட்சி தனித் தன்மை வாய்ந்ததாக இருந்தது. ஆம்; அதற்கு இணை அதுதான். விமானம் மலைக்கு மிக அருகில் பறந்ததால் எந்த நேரத்தில் மோதி விடுமோ என்ற பயம்கூட சில நேரங்களில் எனக்கேற்பட்டது. இந்தியாவின் பிரபல விஞ்ஞானியான பாபா என்பவர் ஆல்ப்ஸ் மலைமீது ஏற்பட்ட விமான விபத்தில்தான் மாண்டார்.

எனது விமானத்தில் மத்திய அரசின் துணையமைச்சரும், ஆந்திரருமான மாண்புமிகு கிருஷ்ணா என்பவர் என்னுடன் விசேஷ வகுப்பில் பயணம் செய்தார். ஆந்திரராயினும் நல்ல தமிழில் பேசுகிறார். தாம் ஐதராபாத்தில் வாழ்வதால் அங்குள்ள தமிழர்களோடு

பழகி, தமிழில் நன்றாக உரையாடும் திறமையைப் பெற்றதாக அவர் என்னிடம் கூறினார்.

பிராங்க்பர்ட் நகரில் இவர் எனது விமானத்தில் ஏறினார். அங்கிருந்து லெபனான் தலைநகரான பெய்ரூட் நகரம் வரும் வரை நாங்கள் இந்திய அரசியலைப் பற்றி உரையாடிக் கொண்டு வந்தோம். இந்தியாவின் அரசியல்பற்றி மட்டுமல்லாமல், இந்திராவின் அரசியல் பற்றியும் உரையாடினோம்.

விமானத்தில் சுகபோகம் நிறைந்த விசேஷ வகுப்பில் தான் பிரயாணம் செய்தேன். விமான அதிகாரிகள் நான் படுத்து உறங்குவதற்கேற்ப இடவசதி செய்து தந்தார்கள். இருந்தும், எனக்கென்னவோ அன்று இரவு முழுவதும் 'ஏகாதசி'யாகி விட்டது. ஒரு வினாடி கூடக் கண் உறங்கவில்லை. துக்கம் அதிகப்பட்டால் தூக்கம் வராது. அதுபோல, மகிழ்ச்சி அதிகப்பட்டு விட்டாலும் தூக்கம் வராது. அன்று இரவு எனக்குத் தூக்கம் வராததற்குக் காரணம் தாயகம் திரும்புகிறோம் என்ற மகிழ்ச்சிதான்.

லண்டனிலிருந்து ஒரு இரவு முழுதும் உறக்கமின்றி விமானப் பயணம் செய்த பின்னர், ஜூலை 24 ஆம் தேதி காலை 9 மணிக்கு பம்பாய் விமான நிலையத்தை அடைந்தேன். பம்பாய் 'ஏர் இந்தியா' அதிகாரி ஒருவர் விமானத்துக்குள்ளேயே வந்து என்னை வரவேற்றார். அவருடன் சென்று விமான நிலையத்தில் சுங்கச் சோதனைச் சடங்குகளை முடித்துக் கொண்டேன்.

பம்பாய் விமான நிலையத்தில் சடங்குகள் எல்லாம் முடிந்த பின்னரும் மூன்றரை மணி நேரம் காத்திருந்த பிறகுதான் சென்னை விமானம் புறப்பட்டது. 2 மணி நேரம் பயணம் செய்த பின் விமானம் சென்னையை அடைந்தது.

விமானம் சென்னை மீனம்பாக்கம் நிலையத்திற்கு மேலே வட்டமிட்டுப் பறந்தபோது என் மனத்துள் மகிழ்ச்சி வெள்ளம் அலைமோதியது. அதனை எழுத்தால் வர்ணிக்க என்னுல் இயலவில்லை. அயல் நாட்டில் அதிக நாட்கள் நான் இருக்கவில்லை. பதினுறு நாட்கள்தான் இருந்தேன். ஆயினும், அதிக தூரம் பயணம் செய்தேன். அத்துடன் முற்றிலும் அந்நியத் தன்மை வாய்ந்த நாடுகளில் சுற்றுலாச் செய்தேன். ஆதலால், என் தாயகத்து மண்ணை—தமிழகத்து நிலத்தைக் கண்ணுற்றபோதே என் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கி அலைமோதியது.

வில், புலி, மீன் சின்னங்கள் பொறித்த இருவண்ணக் கொடிகள் நூற்றுக் கணக்கில் காட்சியளித்தன. தமிழரசுக் கழகத் தோழர்களும் தி. மு. க. நண்பர்களும் ஆயிரக் கணக்கில் கூடியிருந்து வாழ்த்தொலி எழுப்பியதைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்து விமானத்தில் இருந்து இறங்கி நடந்தபோது என் தமிழ்த் தாயின் மடியில் தவழ்வது போன்று மகிழ்ச்சி ஏற்பட்டது.

தமிழக முதல்வர் கலைஞர் கருணுநிதி அவர்கள் கொடுத்தனுப்பிய வாழ்த்துச் செய்தியினை சென்னை மாவட்ட தி.மு.க.செயலாளர் நீலநாராயணன்எம்.எல்.சி. அவர்கள் என்னிடம் தந்து, "அமைச்சரவைக் கூட்டம் நடந்துகொண்டிருப்பதால் கலைஞர் நேரில் வந்து வரவேற்க விரும்பியும் இயலவில்லை" என்று கூறினர். நான் தாயகத்திலிருந்து புறப்பட்ட நேரத்தில்—குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் தன்னுடைய தனிச் செயலாளர் மூலம் வாழ்த்துச் செய்தி வழங்கி என்னை வழி அனுப்பினர். ஐரோப்பியச் சுற்றுலாவை வெற்றிகரமாக முடித்து தாய் வீடான தமிழ் நாடு திரும்பிய நாளிலே தமிழக அரசின் முதல்வர் வாழ்த்துச் செய்தி அனுப்பி வரவேற்புக் கூறினர். ஆகவே; எனது

பிரயாணம் முழு அளவில் வெற்றியாக அமைந்தது என்ற மன நிறைவோடு மீனம்பாக்கம் திடலை அடைந்தேன். அங்கு என்னை வரவேற்கக் குழுமியிருந்த உற்சாக மிக்க கூட்டத்தினரிடையே, அவர்களுடைய கோரிக்கைக் கிணங்க ஒரு சிறிய சொற்பொழிவு நிகழ்த்திலேன். அங்கிருந்தவர்களிலே சிலர் சோவியத் நாட்டுச் சுற்றுலாப் பற்றி விவரம் அறிய விரும்பினர். மற்றவர்கள் உலகத் தமிழ் மாநாடு பற்றியும் விவரம் அறிய விரும்பினர்.

என் மனைவி திருமதி. ம. சி. இராஜேசுவரி என் அருகே வந்து உடல் நலத்தை விசாரித்து விட்டு, 'ரொம்ப இளைத்து விட்டீர்களே' என்று மிகுந்த கவலையோடு கேட்டாள். அவளுக்கு சோவியத் சுற்றுலா, உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்புகளை விடவும் என் உடல் இளைத்துவிட்டதுதான் பெரிய விஷயமாக இருந்தது. இது இயற்கைதானே!

விமான நிலையத்திலிருந்து வீடு திரும்பிய பின்னர் என்னுடைய ஒரே மகனும் இரண்டு மகள்களும் என்னுடைய பெட்டியைச் சோதனை போடத் தொடங்கினர் அயல் நாடுகளிலிருந்து விதவிதமான பொருள்களைக் கொண்டு வந்திருப்பேன் என்ற ஆசையுடன் பெட்டி முழுவதையும் சோதனை போட்டுப் பார்த்தனர். மாஸ்கோ, பாரிஸ், லண்டன், டில்லி, பம்பாய் நகரங்களில் கூட சுங்க அதிகாரிகளில் எவரும் என் பெட்டியைத் திறந்து சோதனை போட முயலவில்லை. "பெட்டியில் ஒன்றும் இல்லையே?" என்று கேட்பார்கள். "ஒன்றுமில்லை" என்று நான் சொல்லுவேன். அதனை நம்பிச் சோதனை போடாமல் விட்டுவிடுவார்கள். ஆனால் என் பிள்ளையும் பெண்களும் சுங்க அதிகாரிகளை விடக் கடுமையாக நடந்து கொண்டனர். 'என் பெட்டியில் ஒன்று

மில்லை' என்று சுங்க அதிகாரிகளுக்குச் சொன்னதையே என் மக்களுக்கும் சொன்னேன். சொன்னபோது அவர்கள் முகத்தில் ஏற்பட்ட ஏமாற்ற உணர்ச்சியைக் கண்டு நான் வெட்கப்பட்டேன்.

நான் விரும்பியிருந்தால் சில பொருட்களை ஐரோப்பிய நாடுகளிலிருந்து வாங்கி வந்திருக்க முடியும். ஆனால், என் சுபாவப்படி நான் வெறும் கையுடன் திரும்பினேன். பெட்டியில் ஒன்றுமில்லை என்பது தெரிந்த பின், ''உங்கப்பா உண்மையான ஒரு சந்நியாசி'' என்று தன் மக்களிடம் என் மனைவி நையாண்டியாகக் கூறிய போது, 'அப்படி ஆகும் நாள் வந்தால் அதற்காக நான் மகிழ்ச்சி அடைவேன்' என்று சொன்னேன்.

அயல் நாடுகளிலிருந்து நான் ஒன்றுமே கொண்டு வரவில்லை என்று சொன்னது என் வீட்டைப் பொறுத்த வரையில் உண்மையாகும். ஆனால், நாட்டைப் பொறுத்த வரையில் உண்மையல்ல.

என்னுடைய நாட்டு மக்களுக்கு வழங்க நான் சென்ற ஒவ்வொரு நாட்டிலிருந்தும் ஏராளமான பொருள்களை நானே முயன்று முயன்று சேகரித்துக் கொண்டு வந்தேன். அவைகள் அனைத்தும் சுங்க வரிக்கு அப்பாற்பட்டவை.

அந்தப் பொருள்களையெல்லாம் இந்நூலின் வாயிலாகத் தமிழ் நாட்டு மக்களுக்கு வழங்கி யிருக்கிறேன். ஆம்! என் வீட்டாரை ஏமாற்றினேன்—ஆனால் என்னுடைய நாட்டாரை நான் ஏமாற்றவில்லை.

கொண்டு வந்தவற்றை எல்லாம் வழங்கி முடித்து விட்டேன் என்று நான் சொல்வதற்கில்லை. முடிந்த வரையில் வழங்கியிருக்கிறேன்.